கிருஷ்ண எசுர்வேத

தைத்திரீய சங்கிதை

சோமயாக விகிருதிப் பிரகரணங்கள்

சாயணபாடியக் கருத்து பதவுரைகளுடன் கூடியது

பத்தாம் பகுதி

இது

உயர் திரு.

காசிவாசி சிவானந்த யதீந்திர சுவாமிகளால்

மொழி பெயர்க்கப்பெற்று

திருவொற்றியூரான் அடிமை என்னும்

சென்னை

த. ப. இராமசாமிப் பிள்ளை யவர்களால்

பதிப்பித்து

நன்கொடையாக அளிக்கப்பெற்றது.

விஷு ஸ்ரீ பங்குனித்திங்கள்.

1942

திருவொற்றியூரான்

கிருஷ்ண எசுர்வேதம்

தைத்திரீய சங்கிதை

ஏழாங் காண்டம் பத்தாம் பகுதி

வே. மொ. பெ. கா. வெளியீடு, நெ. 5.

Printed at the EVEREADY PRESS, 34, Hunters Road, Choolai,
Vepery, Madras.

கிருஷ்ண எசுர்வேத தைத்திரீய சங்கிதை

சோமயாக விகிருதி என்னும் ஏழாங் காண்டம்

முதற் பிரபாடக விடயச் சுருக்கம்,

பக்கம்	அநுவாகம்	விடயம்
1		ஏழாங்காண்ட விடயச் சுருக்கம்.
2		முதற் பிரபாடக விடயச் சுருக்கம்
3	1	சோதிட்டோமத்தை விதிக்கும் பிராமணங்கள்.
12	2	ஸ்தோமங்களைப் புகழும் பிராமணங்கள்.
15	3	அதிராத்தில்ரத்தை விதிக்கும் பிராமணங்கள்.
20	4	அங்கிரசத் துவிராத்திரத்தைக் கூறும் பிராமணள்கள்.
25	5	கர்க்கத்திரிராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.
35	3	சகத்திரதமியைக் கூறும் பிராமணங்கள்.
45	7	சகத்திரதமி என்பதன் தானத்தைக் கூறும் பிராமணங்கள்.
50	8	அத்திரிமுனியாற் கண்ட நான்கு சுத்தியாக சுக்களையுடைய சோமயாகத்தைக் கூறும் பிராமணங்கள்.
53	9	சமதக்கினி சதுரார்த்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.
55	10	பஞ்சராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.
60	11	குதிரையைக் கட்டுங் கயிற்றை எடுத்தற்குரிய மந்திரங்கள்.
62	12	குதிரையின் வலதுகாதில் ஓதவேண்டிய மந்திரங்கள்.
64	13	உத்தராவ ஹோம மந்திரங்கள்.
66	14	பூர்வஹோம மந்திரங்கள்.
,,	15	பூர்வதீக்ஷா ஹோமங்கள்.
68	16	பூர்வதீக்ஷா ஹோமங்கள்.
69	17	தீட்சாகுதிகள்,
70	18	மான் தோலின்மீது ஏறுவதற்குரிய மந்திரங்கள்.
73	19	அசுவசரிதஹோம மந்திரங்கள்.
76	20	சாவித்திர ஹோம மந்திரங்கள்.

இரண்டாம் பிரபாடக விடயச் சுருக்கம்.

பக்கம்	அநுவாகம்	விடயம்
78		பிரபாடக விடயச் சுருக்கம்.
79	1	ஷட்ராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.
86	2	சப்தராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.
89	3	அஷ்டராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.
91	4	நவராத்திரத்தைக்கூறும் பிராமணங்கள்.
94	5	தசராத்திரத்தைக்கூறும் பிராமணங்கள்.
104	6	ஏகாதசராத்திரத்தை விதிக்கும் பிராமணங்கள்.
108	7	துவாதசராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.
116	8	வியூடத்தைக் கூறும் பிராமணங்கள்.
126	9	துவாதசாஹத்தின் நாள் விசேடத்தை விதிக்கும் பிராமணங்கள்.
130	10	பன்னிரண்டாவதுநாளை விதிக்கும் பிராமணங்கள்.
136-146	11-20	அன்னஹோம மந்திரங்கள்.

மூன்றும் பிரபாடக விடயச் சுருக்கம்

பக்கம்	அநுவாகம்	விடயம்
147		பிரபாடக விடயச் சுருக்கம்.
148	1	முற்கூறிய துவாதசாஹசேடமாக பத்தாநாளில் சிலவிசேடங்களைக் கூறும் பிராமணங்கள்.
153	2	துவாதசாஹத்தைக் கூறும் பிராமணங்கள்.
155	3	திரயோதசராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்
158	4	சதுர்த்தசராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.
161	5	வேறொரு சதுர்த்தச ராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.
165	6	பஞ்சதசராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.
168	7	மற்றொரு பஞ்சதசராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.
173	8	சப்ததசராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.
175	9	விம்சதிராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்
179	10	ஏகவிம்சதிராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.
186	11	ஆப்தி மந்திரங்கள்.
190	12	பரியாப்தி மந்திரங்கள்.
192	13	ஆபூ மந்திரங்கள்.
194	14	அநுபூ மந்திரங்கள்.
195	15	வைசுவதேவம் என்னும் ஹோம மந்திரங்கள்.
198	16	அங்க ஹோமமந்திரங்கள்.
200	17	அசுவரூப மந்திரங்கள்.
201	19	எஞ்சிய குதிரையின் உருவ மந்திரங்கள்.
203	19	ஓஷதி மந்திரங்கள்.
204	20	வனஸ்பதி மந்திரங்கள்.

நான்காம் பிரபாடக விடயச் சுருக்கம்

பக்கம்	அநுவாகம்	விடயம்
205		பிரபாடக விடயச் சுருக்கம்.
207	1	இருபத்துநான்கு இரவுகள் கொண்டயாகத்தைக் கூறும் பிராமணங்கள்.
210	2	மற்றொரு இருபத்துநான்கு இரவுகளைக் கொண்ட யாகத்தைக் கூறும் பிராமணங்கள்.
218	3	முப்பது இரவுகளைக்கொண்ட யாகத்தைக் கூறும் பிராமணங்கள்.
228	4	முப்பத்திரண்டு இரவுகளைக்கொண்ட யாகத்தைக் கூறும் பிராமணங்கள்.
232	5	முப்பத்துமூன்று இரவுகளைக்கொண்ட எக்ஞத்தைக் கூறும் பிராமணங்கள்.
238	6	முப்பத்தாறு இரவுகள் கொண்ட யாகத்தை விதிக்கும் பிராமணங்கள்.
242	7	நாற்பத்தொன்பது இரவுகளைக் கொண்ட யாகத்தைக் கூறும் பிராமணங்கள்.
247	8	சம்வத்ஸரசத்திர (வருட) யாகத்தின் தீக்ஷாகாலத்தை விதிக்கும் பிராமணங்கள்.
252	9	தீட்சையையும் உபசத்யாகத்தையும் கூறும் பிராமணங்கள்.
254	10	பிராயணீயம் என்னும் முதல் நாளைக் கூறும் பிராமணங்கள்.
257	11	மாதத்தில் உள்ள நாட்களைக் கூறும் பிராமணங்கள்.
262	12	அபாவ்யம் முதலிய மந்திரங்கள்.
264	13	தண்ணீர் ஹோம மந்திரகள்.
265	14	மீந்த தண்ணீர் ஹோமமந்திரங்கள்.
266	15	நாயடித்தல் முதலிய மந்திரங்கள்.
268	16	யவ்ய ஹோம மந்திரங்கள்.
269	17	கவ்யம் என்னும் மந்திரங்கள்.
272	18	பிரமோத்திய மந்திரங்கள்.
275	19	பத்தினிகளின் மந்திரங்கள்.
283	20	குதிரையின் அலங்கார மந்திரங்கள்.
286	21	சந்ததி மந்திரங்கள்.
287	22	பிரமுக்தி மந்திரங்கள்.

ஐந்தாம் பிரபாடக விடயச் சுருக்கம்.

பக்கம்	அநுவாகம்	விடயம்
289		பிரபாடக விடயச் சுருக்கம்
290	1	கவாமயனத்தைக் கூறும் பிராமணங்கள்
300	2	மேற்கூறியதின் விகல்பத்தைக் கூறும் பிராமணங்கள்
303	3	பிருஷ்டிய ஆறுநாளைப் பற்றிய விகற்பங்களைக் கூறும் பிராமணங்கள்.
305	4	உத்தரபக்ஷங்களை விதிக்கும் பிராமணங்கள்
309	5	பொறுமைபாற் செய்யும் கவாமயனத்தை விதிக்கும் பிராமணங்கள்
314	6	உத்சர்க்கங்களை விதிக்கும் பிராமணங்கள்
321	7	முற்கூறிய உத்சர்க்கத்திலேயே சில விசேடங்களைக் கூறும் பிராமணங்கள்
328	8	மஹாவிரதத்தில் உள்ள சாமவிசேடங்களை விதிக்கும் பிராமணங்கள்
336	9	நூறு கம்பிகளையுடைய வீணைவாசித்தல் முதலியதைக் கூறும் பிராமணங்கள்
342	10	தாசி நடிப்பதைக் கூறும் பிராமணங்கள்
343	11	அன்னஹோம மந்திரங்கள்
346	12	மிச்சமுள்ள அன்னஹோம மந்திரங்கள்
348	13	பரிதி மந்திரங்கள்
349	14	சருவபிருஷ்ட இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்
350	15	மேற்கூறிய அவிகளின் உற்பத்தியைக் கூறும் பிராமணங்கள்
354	16	முதல் மகிமை மந்திரங்கள்
355	17	இரண்டாவது மகிமை மந்திரங்கள்
356	18	பிரமவர்ச்சஸ ஹோம மந்திரங்கள்
357	19	குதிரையைப் போற்றும் மந்திரங்கள்
359	20	மிச்சமுள்ள அன்னஹோம மந்திரங்கள்
360	21	பிராயச்சித்த இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்
361	22	பக்கு அவிகளைக் கொண்ட மிருகார இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்.
362	23	சம்நதி மந்திரங்கள்
363	24	எசமானனுக்கு ஒதிவைக்கும் மந்திரங்கள்
365	25	குதிரையின் துதிப்பிராமணங்கள்.

ஏழாங்காண்ட விடயச்சுருக்கம்

முடிந்தது.

கிருஷ்ண எசுர்வேத தைத்திரீய சங்கிதை

ஏழாங்காண்டத்தின் பிழைதிருத்தங்கள்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
4	7	जाये॑	जा॑ये
,,	15	न्यो॑म	न्यो॑म
7	16	சோமபாக	சோமயாக
13	23	வொளியையு	வொளியை
20	5	सु॑व	सु॑व॒
,,	7	द्रि॒रा	द्रि॑रा॒
,,	14	अ॒ह	अह॒
24	4	वँ	वेँ
26	17	नू॒	नू
29	4	याय	याजय
30	24-25	தட்சிணைபாக	தட்சிணையாக
36	7	रु॒ते	रु॒ते
46	3	नाम	नृ॑ग
52	8	3	9
,,	9	மூன்று	ஒன்பது
,,	11	மூன்று	ஒன்பது
56	15	व्या॑व	व्या॑व
57	16	பஞ்சராத்	பஞ்சராத்திர
59	19	இயண்டாவது	இரண்டாவது
64	23	होदू॒द्रु	होदू॒द्रु॑
73	15	स्व॒प	स्वप॒
78	22	பதினொன்றாவது	பதினொன்றாவது முதல்
88	28	மூன்று	மூன்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
92	5	भै॑व	भै॑व॑
94	30	हो	हो॒
95	14	पुरा॒	पु॒रा
96	5	प॒ह	पह॒
100	29	அக்கிளிஷ்டோம	அக்கினிஷ்டோம
109	17	त्यो॑॑	त्यो
119	25	ஐந்திவராயு	ஐந்திரவாயு
121	5	ந்திர	ஐந்திர
123	8	கிருகப்பிராமண	கிரகப்பிராமண
127	3	यु॑ः	यु॑
,,	4	घा	घ
,,	6	ये॑	ये
129	4	எசமான னுக்சு	எசமான னுக்கு
131	10	णीं॑॑	णों॑
133	19	அநுஜாவா	ஆநுஜாவர
140	6	श॑	श
148	17	स्तु॒	स्तु॑
,,	21	तु॒मथ॒न्न-न्ति॒प	तु॒मथ॒न्न-न्ति॒प
153	1	12	2
160	12	மூன் றுருவதாகிய	மூன்றுருவதாகிய
169	4	वा॒	वा
,,	8	न्त॒तेये॒वैयज्ञ॒स्याञ्जसा	न्त्ये॒तेवै॒यज्ञस्या॒ञ्जसा
171	19	தருகந்தாம்	தகுந்தாம்
176	8	लो	लो॒
,,	12	राञ्चो॒॑	रा॑ञ्चो॒

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
180	13	हेयु	हे॑यु
182	24	சாபத்தாலாய	சாமத்தாலாய
183	18	எலும்பு	எலும்பு
,,	19	நடுப்பக்கங்கள்	பக்கங்கள்
184	17	न	य
186	24	र-ष्क	रं-ष्कं
194	5	ब्रह्म	ब्रह्म
198	18-19	रइ	रइ
,,	21	शें	शे
200	10	தந்திரங்கள்	மந்திரங்கள்
,,	19	सा॑य	सा॑य
203	7	हाऽव	हाऽगृहीतेभ्यस्स्वाहाऽव
211	10	नि	नि
,,	16	त्रयः त्रयस्त्रि	त्रयस्त्रि
218	20	धृत-गनां	धृत-मानं
219	5	स्त्रयस्त्रिं ४	स्त्रयस्त्रिं ४
228	18	नँ	गँ
230	19-20	இவைகளைத்தும்	இவைகளைத்தும்
233	1	धिंमुं	धिं मु
242	18	क	कं
243	1	तिगृ	रिंगृ
248	4	मेध्ये॑	मे॑ध्ये
251	18	அநுட்டிக்ரும்	அநுட்டிக்கும்
252	23	இலிங்கத்தின்	இலிங்கத்தின்
258	4	दशा	दशा

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
269	20	री॑रि	रि॑री
281	8	நுழைகின்றேன்	நுழைக்கின்றேன்
284	20	பிரிவுடம்பாகிய	பிரியவுடம்பாகிய
285	5	எசலே	எசசு
288	2	र्व॒न्त	र्व॑न्तं
289	24	உத்சவர்க	உத்சர்க்க
290	26	तेय	यते
294	6	தரையை	கரையை
296	27	பட்டவகளாகும்	பட்டவைகளாகும்
306	3	क्रि॒	क्रि
308	4	இருபத்தொன்பது	இருபத்தொன்று
310	5	वि	वि॒
312	18	இந்திரஸ்யவீர்யாணி	இந்திரஸ்யநுவீர்யாணி
313	15	மற்ஓம்	மற்றும்
327	5	லோகச்திலிருந்து	லோகத்திலிருந்து
329	2	द॒॑घते	द॑घ॒ते
332	22	மாதங்களுடன்	பாங்தங்களுடன்
334	27	இல்வாறு	இவ்வாறு

பிழைத்திருத்தம்

முடிந்தது.

கிருஷ்ண 'எசுர்வேதத் தைத்திரீய சங்கிதை

ஏழாங் காண்டம்

விடயச் சுருக்கம்

एकाहाहीनसत्राणि सोमभेदा इमेत्रयः ।
वर्ण्यन्ते सप्तमे काण्डेमन्त्राः केप्यश्वमेधकाः ॥
ज्योतिष्टोमस्सोमयागः प्रकृतिस्सतुसप्तधा ।
अग्निष्टोमो ज्योतिर्भेदैर्मूलप्रकृतिरादिमः ॥
स्तोमा ज्योतींषि यस्यासौ ज्योतिष्टोमस्सईरितः ।
त्रिवृत्पञ्चदशस्सप्तदशः स्तोमास्त्रयोमताः ॥
तथैकविंश एतानि ज्योतींषीत्यभ्यधाच्छ्रुतिः ।
सोऽयमेतादृशो ज्योतिष्टोमआदौविधीयते ॥

ஏகாஹம், அஹீனம், சத்திரம் எனச் சோமயாகங்களின் பேதங்கள மூன்று. அம்மூன்றுவகைச் சோமயாக விசேடங்களும், அசுவமேதத்தின் சில மந்திரங்களும் இவ்வேழாங் காண்டத்திற் சொல்லப்படுகின்றன. இம்மூவகைச் சோம யாகங்கட்கும், ஜ்யோதிஷ்டோம அக்கினிஷ்டோம யாகங்கள் பிரகிருதிகளாகும். அதாவது, திருவிருத் (ஒன்பது) பஞ்சதச (பதினைந்து) ஸப்ததச (பதினேழு) ஏகவிம்சம் (இருபத்தொன்று) என்னும் ஸ்தோமங் களை உடைய எக்னும் ஜ்யோதிஷ்டோமம் எனப்படும். அத்தகைய பிர கிருதியான ஜ்யோதிஷ்டோமம் முதலில் விதிக்கப்படுகின்றது என்பது,

---

முதற் பிரபாடக விடயச்சுருக்கம்

उच्यन्तेह्यनुवाकार्थास्सप्तमाद्यप्रपाठके ।
अग्निष्टोमविधिस्त्वाद्ये द्वितीये स्तोम संस्तवः ॥ १ ॥

सर्वस्तोमस्तृतीये स्याच्चतुर्थेतु द्विरात्रकः ।
त्रिरात्रः पञ्चमेषष्ठेस्युस्सहस्रतमीगताः ॥ २ ॥
होमाद्यास्सप्तमेदानं चतूरात्रोऽग्रिमेऽष्टमे ।
द्वितीये नवमेपञ्चरात्रो दशमईरितः ॥ ३ ॥
अत ऊर्ध्वंत्वश्वमेधे मन्त्राणां विनियोजनम् ।
उच्यते रशनांदेव गृहीत्वा मन्त्रयेदिमाम् ॥ ४ ॥
अभिधेत्यश्वमाबध्य (श्वंबध्नीयात्) त्रयोमन्त्रा इहेरिताः ।
विभूकर्णेवाचयीत अग्नयेपूर्वहोमगान् ॥ ५ ॥
पञ्चेहपत्सु जुहुयाच्चतुर्भिर्भूरसीत्यतः ।
अश्वमुत्सृजते देवा रत्निभ्योऽश्वंप्रयच्छति ॥ ६ ॥
अनुवाके द्वादशेस्मिन् मन्त्राद्वादशवर्णिताः !
आयनोद्द्रावहोमस्तु तत्रमन्त्रास्त्रयोदश ॥ ७ ॥
अग्नये पूर्वहोमास्युर्मन्त्रा एकादशस्मृताः ।
पृथिव्या इतितेहोमा मन्त्रा अत्रैकविंशतिः ॥ ८ ॥
अग्नये पूर्वदीक्षार्थाहोमा एकादशस्मृताः ।
पृथ्वीत्यपि तथाहोमाद्वाविंशतिरुदीरिताः ॥ ९ ॥
भुव इत्यृतु दीक्षाख्य मन्त्रैश्चर्माधिरोहणे ।
मन्त्रयेदष्टभिः पत्सुजुहुयाद्दशपूर्ववत् ॥ १० ॥
अष्टादशानुवाकेऽस्मिन्मत्राद्वादश वर्णिताः ।
ईमश्वचरितैर्होमाश्चतुरशीतिरीरिताः ॥ ११ ॥
अग्नये सप्तभिर्मन्त्रैर्होमस्सावित्रईरितः

ஈண்டு இவ்வேழாங்காண்ட முதற் பிரபாடக அநுவாகங்களின் விடயங்கள் சுருக்கிச் சொல்லப்படுகின்றன. அவற்றுள் முதலநுவாகத்தில் அக்கினிஷ்டோம விதியும், இரண்டாவதில் ஜ்யோதிஷ்டோமத்தின் துதியும், மூன்றாவதில் எல்லா ஸ்தோமங்களால் செய்யப்படும் அதிராத்ரமும். நான்

காவதில் துவிராத்ரம் என்னும் அஹீனமாகிய சோமயாகமும், ஐந்தாவதில் திரிராத்ரமும், ஆறுவதில் 'ஸஹஸ்ரதமீ' என்னும் தக்ஷிணைப் பசுக்களின் கணக்கையும், ஏழாவதில் ஹோம முதலியவைகளும், எட்டாவதில் முதலாவது சதுராத்ரமும், ஒனபதாவதில் இரண்டாவது சதுராத்ரமும். பத்தாவதில். பஞ்சராத்ரமும், பதினொருவதுமுதல் பிரபாடகம் முடியும வரை அசுவமேத யாக மந்திரங்களுங் கூறப்படுகின்றன. அவ்வற்றுள் பதினொன்றுவதில், குதிரையைக் கட்டுதல் முதலானவைகள் கூறப்படுகின்றன. பன்னிரண்டாவதில், குதிரையின் காதில் ஓதும் ஐந்துமந்திரங்களால் பூர்வ ஹோமம் என்னும் ஐந்து ஹோமங்களைச் செய்தல், நான்கு மந்திரங்களால் குதிரையின் காலடியில் நான்கு ஹோமங்கள் செய்தல், குதிரையை அவிழ்த்து ரத்தினிகளின்பொருட்டுக் கொடுத்துவிடல் என்பவைகள் கூறப்படுகின்றன. பதின்மூன்றுவதின் உத்திராவஹோமங்களைச் செய்யும் வகை சொல்லப்படுகின்றது. இவை பதின்மூன்று ஹோமங்கள்ளாகும். பதினான்காவதில் பதினொரு பூர்வஹோமங்கள் சொல்லப் படுகின்றன. பதினைந்தாவதில் இருபத்தொரு ஹோமங்கள் சொல்லப்படுகின்றன. பதினாறுவதில் பதினொரு "பூர்வதீக்ஷா, எனனும் ஹோமங்கள் சொல்லப்படுகின்றன. பதினேழாவதில இருபத்திரண்டு ஹோமங்கள் சொல்லப்படுகின்றன. பதினெட்டாவதில் எட்டு மந்திரங்களால் மான்தோலின்மேல் ஏறும்போது எசமானனை அபிமந்திரணஞ் செய்தலும், திருதி என்னும் நான்கு ஹோமங்கள் செய்தலுஞ் சொல்லப்படுகின்றன. பத்தொன்பதாவதில், அசுவ சரிதம் என்னும் எண்பத்துநான்கு ஹோமங்களுஞ் சொல்லப்படுகின்றன. இருபதாவதில் சாவித்ரமென்னும் ஏழு ஹோமங்களுங் கூறப்படுகின்றன. இத்துடன் முதற் பிரபாடகம் முடிந்தது என்பதாம்.

ஏழாங் காண்டம் முதற் பிரபாடகம்

முதலாவது அநுவாகம்

ஆறுபஞ்சாதிகட்குமேல் ஒன்பது பதங்களைக் கொண்டது.

சோதிட்டோமத்தை விதிக்கும் பிராமணங்கள்.

प्रजननंज्योतिरग्निर्देवतानां ज्योतिर्विराट्छन्दसां ज्योति-
र्विराड्वाचोऽग्नौ सन्तिष्ठते विराजमभि संपद्यते तस्मात्तज्ज्योतिरुच्यते
द्वौ स्तोमौ प्रातस्सवनं वहतो यथा प्राणश्चापानश्च द्वौ माध्यन्दिनꣳ-
सवनं यथा चक्षुश्च श्रोत्रं च द्वौ तृतीयसवनं यथा वाक्च प्रतिष्ठा च

पुरुषसम्मितोवा एष यज्ञोऽस्थूरिः ॥१॥ यंकामं कामयते तमेतेना-
भ्यश्नुते सर्वश्ह्यस्थूरिणाभ्यश्नुतेऽग्निष्टोमेनवै प्रजापतिः प्रजा असृ-
जतता अग्निष्टोमेनैव पर्यगृह्णात्तासां परिगृहीतानामश्वतरोऽत्य
प्रवत तस्यानुहायरेत आदत्त तद्गर्दभेन्यमार्ट्तस्माद्गर्दभो द्विरेता
अथो आहुर्वडबायान्यमाडिति तस्माद्वडबा द्विरेता अथो आहु रोष-
धीषु ॥२॥ न्यमाडिति तस्मादोषधयोऽनभ्यक्तारेभन्त्यथो आहुः
प्रजासुन्यमाडिति तस्माद्यमौ जायेते तस्मादश्वतरोन प्रजायत आत्त-
रेताहि तस्माद्बर्हिष्यनवक्लृप्तस्सर्व वेदसेवा सहस्रेवावक्लृप्तोऽति-
ह्यप्रवतय एवं विद्वानग्निष्टोमेन यजते प्राजाताः प्रजा जनयति परि
प्रजाताग्गृह्णाति तस्मादाहुर्ज्येष्ठयज्ञ इति ॥ ३ ॥ प्रजापतिर्वाव ज्ये-
ष्ठस्सह्येतेनाग्रेयजत प्रजापति रकामयत प्रजायेयेति समुखतस्त्रि-
वृतन्निरमिमीत तमग्निर्देवतान्व सृज्यत गायत्री छन्दोरथन्तरश्साम
ब्राह्मणो मनुष्याणामजः पशूनान्तस्मात्ते मुख्या मुखतोह्यसृज्यन्तो-
रसो बाहुभ्यां पञ्चदशंनिरमिमीत तमिन्द्रो देवतान्वसृज्यतत्रिष्टु-
छन्दो बृहत् ॥ ४ ॥ साम राजन्यो मनुष्याणामविः पशूनां तस्मा-
त्ते वीर्यावन्तो वीर्याध्यसृज्यन्त मध्यतस्सप्तदशं निरमिमीत तंवि-
श्वेदेवा देवता अन्वसृज्यन्त जगतीछन्दो वैरूपश्साम वैश्यो
मनुष्याणां गावः पशूनां तस्मात्त आद्या अन्नधानाद्ध्यसृज्यन्त
तस्माद्भूयाश्सोऽन्येभ्यो भूयिष्ठा हि देवता अन्वसृज्यन्त पत्त
एकविंशं निरमिमीत तमनुष्टुप्छन्दः ॥५॥ अन्वसृज्यत वैराजश्-

साम शूद्रो मनुष्याणामश्वः पशूनां तस्मात्तौ भूतसंक्रामिणावश्वश्च शूद्रश्च तस्माच्छूद्रो यज्ञेऽनवक्लृप्तो न हि देवता अन्वसृज्यत तस्मात्पादावुप जीवतः पत्तो ह्यसृज्येतां प्राणा वै त्रिवृदर्धमासाः पञ्चदशः प्रजापतिस्सप्तदशस्त्रय इमे लोका असावादित्य एकविंश एतस्मिन्वा एते श्रिता एतस्मिन्प्रतिष्ठिता य एवं वेदैतस्मिन्नेव श्रयत एतस्मिन्प्रति तिष्ठति ॥ ६ ॥

சோதிட்டோமத்தை விதித்தப் போநட்டு மூன்று உவமைகளால் முதலில் அதன் சோதித்தன்மையை விளக்குகின்றது.

பிராமணம் 1

प्रजननंज्योतिरग्निर्देवतानां ज्योतिर्विराट् छन्दसां ज्योतिर्विराड्वाचोऽग्नौ सन्तिष्ठते विराजमभिसंपद्यते तस्मात्तज्ज्योति रुच्यते ।

என்பது

உரை

மனிதர்களுக்குள் பிரசையையுண்டாக்குதல் ஒருவகைச் சோதியாம். என்னை? புத்திரப் பேறில்லாதவருடைய முகம் வாட்டமுற்று இருள் போன் றிருத்தலினென்க. தேவர்களுக்குள் அக்கினி ஒரு சோதியாம். எதனாலெ னின்? ஏனைய தேவர்கட்கு விளக்கு வேண்டப்படுவதுபோல் விளக்கத்திற்கு வேறு விளக்கு வேண்டப்படாமையின் என்க. சந்தங்களுக்குள் "விராட்" என்னுஞ் சந்தம் சோதிவடிவாம். ஏனெனின்? விராட் என்பதில் "ராஜ" என்னும் பகுதி இருத்தலினென்க. இம்மூவகைச் சோதிகளும் சோமயாகத் திற் பொருந்துவனவாம். அஃதாமாறு:="அக்கினிட்டோமத்தால் பிரசாபதி பிரசைகளைப் படைத்தனன் என்பதால் பிரசோற்பத்தி செய்யுந் தன்மையும், இப்போதுகூறப்படும் விராட்டும், அக்கினியும்அதற்கு பொருந்துமாறுணர்க. காலையில் சோமரசம் பிழியும்போது பகிழ்ப்பவமானம் என்னுந் துதியானது மூன்றுமுறைத்துதியாம். அம் மூன்று சூக்தங்களுள் ஒவ்வொன்றிற்கும் மும் மூன்றாக ஒன்பது துதிகள் பெறப்படுகின்றன. மற்றும் அப்போதே நான்கு ஆஜ்யத்துதிகட்கும் பதினைந்து பதினைந்து துதிப்பாடல்களாகும்போது அறுபது துதிப்பாடல் (ஸ்தோமம்)கள் சித்திக்கின்றன. இவ்வாறு இக்காலைச் சவனத்தில் துதிகள் அறுபத்தொன்பதானமை காண்க.

அங்ஙனமே, உச்சியில் சோமரசம் பிழியும்போது பவமானம் என்னுந் துதிக்கு பதினைந்து ஸ்தோமங்களாக பதினைந்து துதிப்பாடல்களாகின்றன. மற்றும். அவ்வுசசிப் போதிலேயே நான்கு பிருஷ்ட ஸ்துதிகளுக்குள் பதினேழு பதினேழு ஸ்தோமங்களாகும்போது அறுபத்தெட்டுத் துதிப்படல்கள் சித்திக்கின்றன. இவ்வாற்றால் மாத்தியந்தின சவனத்தில் துதிகள எண்பத்துமூன்று ஆயினமை காண்க.

இனி, மூன்றாவதுமுறை சோமரசம்பிழியும்போதும், "ஆர்ப்பவ பவமானம்" என்னுந் துதிக்கு, பதினேழு துதிப்பாடல்கள் சித்திக்கின்றன. மற்றும அம்மூன்று முறை பிழயும் போதே, "எக்ஞா எக்ஞீயம்" என்னுந் துதிக்கு இருபத்தொரு ஸ்தோமம் ஆகும்போது இருபத்தொரு துதிப்பாடல்கள சித்திக்கின்றன. இவ்வாற்றால் இம்மூன்றுஞ் சவனத்தில் முப்பத்தெட்டுத்து (ஸ்தோமங்)கள் பெறப்பட்டமை காண்க. மேற்கூறிய முறையில மூன்று சவனங்கட்குஞ் சேர்ந்து நூற்றித் தொண்ணூறு ஸ்தோமங்களாயினமை காண்க. இந்த நூற்றுத்தொண்ணூறை பததால வகுக்கில் பத்தொன்பதாய வந்து அது விராட் சந்தவடிவமாகின்றது. விராட்டைப பகுதத பத்தும் அக்கினியாய் முடிகின்றது என்னை? எக்ஞா எக்ஞீயம் என்னுந துதியில் அக்கினி கூறபபடுதலின அது அக்கினியாம. அது பத்தில் முடிகின்றது. இவவாறு சோமயாகம விராட்டாகவும் அக்கினியாகவும் இருத்தலைக்கணடு கொள்க. இவ்வகைபற்றியே சோமயாகம் சோதி என்று வழங்கப்படுகின்றது என்பது.

சோமயாகத்தைப்பற்றிய சோதிட்டோம யாகம், சோதி, ஸ்தோமம் என இரண்டு சொற்களுடன் கூடியதாம். அவற்றுள், சோதி என்பதன்பொருள் முன்கூறப்பட்டது. இப்போது ஸ்தோமம் என்பதன் பொருள் கூறப்படுகின்றது.

பிராமணம் 2

द्वौ स्तोमौ प्रातस्सवनं वहतोयथा प्राणश्चापानश्चद्वौमाध्यन्दिनꣳ सवनं यथा चक्षुश्चश्रोत्रं चद्वौ तृतीयसवनं यथा वाक्च प्रतिष्ठाच पुरुषसम्मितोवा एष यज्ञोऽस्थूरिः ।

என்பது.

உரை

மும்முறை ஸ்தோமமானது பகிழ்ப்பவமானம் என்னும் ஸ்தோமத்தை யுண்டாக்குகின்றது. பதினைந்து முறைஸ்தோமமானது, நான்கு ஆச்யஸ

தோத்திரங்களையுண்டாக்குகின்றது. இவ்வாற்றால் இரண்டு ஸ்தோமங்கள் காலைச்சவனத்தை வகிக்கின்றவைகளாம். இது, ஒருவனுடைய பிராண அபானன்கள் ஆகின்றது. அதாவது அவனுடைய சீவனத்தை பாதுகாப்பது போன்றதாம்.

இனி, பதினைந்து ஸ்தோமங்கள் மாத்தியந்தின பவமானத் துதியை யுண்டாக்குகின்றது. பதினேழு ஸ்தோமங்களும் நான்கு பிருஷ்டத் துதிகளை யுண்டாக்குகின்றன. இவ்வாற்றால், இரண்டு ஸ்தோமங்கள் மாத்தியந்தின சவனத் (உச்சியில் சோமரசம் பிழிவ)தை வகிக்கின்றனவாம். இது, ஒருவனுடைய கண்ணுஞ் செவியும், உருவத்தைக் காணல் ஒலியைக் கேட்டல் என்னுஞ் செயல்களை வகிக்கின்றது போலவாம்.

இனி, பதினேழு ஸ்தோமங்கள் ஆர்ப்பவமான துதியையுண்டாக்குகின்றன. இருபத்தொரு ஸ்தோமமானது எக்ஞீபத்துதியை யுண்டாக்குகின்றது. இவ்வாற்றால் இரண்டு ஸ்தோமங்கள் மூன்றாவது சவனத்தை வகிக்கின்றனவாம். இது, ஒருவனுடைய வாக்கு பாதம் என்னும் இந்திரியங்கள், பேசல் நடத்தல் என்னுஞ் செயல்களை வகிக்கின்றது போலவாம். இவ்வாறு, ஸ்தோமங்களாலுண்டாகிய சோமயாகம் மனிதன் போன்று எல்லா அவயவங்களையு முடையதாமாதலின் அங்கப்பழுதுடையதன்று. மேற்கூறியவாற்றால் சோதிவடிவ ஸ்தோமங்களிருக்கின்ற யாகம் சோதிட்டோம யாகம் என்பது பெற்றாம் என்பது.

சோதிஷ்டோமம் என்னுங் காரணப் பெயரால் விதிக்கவேண்டிய பொருளைப் புகழ்ந்துவிட்டு, இப்போது அதன் விதியைக் குறிப்பிடுகின்றது.

பிராமணம் 3

यंकामं कामयते तमेतेनाभ्यश्नुते सर्वंह्यस्थूरिणाभ्यश्नुते ।

என்பது.

உரை

கைகால் முதலான எல்லா அவயவங்களையுமுடையவன் அவைகளின் பயன்கள் முழுவதையும் அடைவதுபோல், எல்லா ஸ்தோமங்களும் நிறைந்துள்ள சோதிட்டோம யாகத்தால் எப்பயனையடைய விரும்புகின்றானோ, அப்பயனையடைகின்றான். அதாவது எல்லாப் பயன்களையுமடைகின்றான் என்பதாம்; ஆதலின் சோதிட்டோம யாகஞ் செய்க என்பது.

எல்லாச் சோமயாகங்கட்கும் மூலகாரணமாகிய சோதிட்டோம யாகத்தை விதித்துவிட்டு, அதனுடைய ஏழு சம்ஸ்தைகளுள் முதலாவது சம்ஸ்தையாகிய அக்கினிட்டோமத்தை விதித்தற்பொருட்டு முன்னுரை கூறுகின்றது.

பிராமணம் 4

अग्निष्टोमेनवै प्रजापतिः प्रजा असृजतता अग्निष्टोमेनैव पर्यगृह्णात्तासां परिगृहीतानामश्व तरोऽत्यप्रवत तस्यानुहायरेत आदत्त तद्गर्दभेन्य मार्ट्-तस्माद्गर्दभो द्विरेता अथो आहुर्वडबायान्य मार्डिति तस्माद्वडबा द्विरेता अथो आहु रोषधीषुन्यमार्डित्ति तस्मादोषधयो नभ्यक्तारेभन्त्यथो आहुः प्रजासुन्यमार्डिति तस्माद्यमौ जायेते तस्मादश्वतरोन प्रजायत आत्तरेताहि तस्माद्बर्हिष्यनवक्लृतस्सर्वत्रैं दसैवा सहस्रेऽयावक्लृतोऽत्तिव्यप्रवत ।

என்பது

உரை.

முன் பிரசைகளைப் படைக்க விரும்பிய் பிரமன், அக்கினிஷ்டோமத்தால் பிரசைகளைப் படைத்து அதனாலேயே அவைகளைத் தனது வசப்படுத்திக் கொண்டனன். அவ்வாறு தன்வசப்படுத்திக்கொண்ட பிரசைகளுக்குள், கழுதைக்கும் குதிரைக்கும் பிறந்த அசுவதரம் (கோவேறுகழுதை) என்பது பிரமனுடைய கட்டைக்கடந்து மிகத்தூரம்போய் விட்டது. அப்போது பிரமனும் அதன் பின்றொடர்ந்து போய் அதனுடைய உடம்பின் சாரமாகிய இரேதசை (வீரியத்தை) எடுத்து கழுதையின்உடம்பில் நன்றாய்த் துடைத்துவிட்டனன். இது பற்றியே, கழுதை, அசுவதரம் என்னுமிரு வகைச் சாதிகளையும் உண்டாக்குவதால் கழுதை இருவகை வீரியங்களையுமுடைய தாயிற்று. இனி, பிரமன், பெண் குதிரைமீது தடவினன் ஆதலின், அசுவம், அசுவதரம் என்னும் இருவகைச் சாதிகளையும் குதிரை உண்டாக்குகின்றது என்று சிலர் கூறுகின்றனர். சிலரோ, கொடி செடிகள் இதன் மனிதன்போல் நெய்எண்ணைகளைத் தேய்த்துக் கொள்ளுதலின்றேனும் சாரமிகுதியால் பெருத்தலும், வழவழப்புங் காணப்படுகின்றன என்கின்றனர். மற்றுஞ் சிலர், மனிதர்மீது தடவியதால், ஒருகருப்பத்தில் இரண்டு குழந்தைகள் பிறக்கின்றன என்று கூறுகின்றனர். இத்தகைய அசுவதரமானது, பிரமனால் வீரியங் கவர்ந்து கொள்ளப்பட்டதாமாதலின் ஆண் தன்மையற்றவன்போல் பிரசையை யுண்டாக்க முடியாததாயிற்று. சாரமில்லாததால் எக்ஞத்திற்கும் உரியதன்றாயிற்று. ஆனாலும், எல்லாத் தனங்களையேனும். அல்லது ஆயிரம் பொன்களையேனும் தானமாய்க் கொடுக்கும் ஒரு எக்ஞ விசேடத்தில்

சோதிட்டோம விதி)

தானமாய்க் கொடுப்பதற்கு மாத்திரம் உரியதாம். இது, வீரியமின்றியதாயினும் அளவு கடந்து செல்லும் வல்லமையையுடையதாதலின் தட்சிணைகளைக் கடந்து செய்யும் பிராகிருத தட்சிணைகளையுடைய வேள்விக்குப் பொருத்தமுடையதாம் என்பது.

இப்போது அதை விதிக்கின்றது.

பிராமணம் 5

य एवं विद्वानग्निष्टोमेन यजते प्राजाताः प्रजा जनयति परि प्रजाता गृह्णाति तस्मादाहुर्ज्येष्ठयज्ञ इति प्रजापतिर्वावज्येष्ठस्सह्येनेनाग्रेयजत ।

என்பது.

உரை.

இவ்வாறுணர்ந்து அக்கினிஷ்டோம யாகஞ்செய்கின்றவன் முன்னுண்டாகாத பிரசையை உண்டாக்கவும், உண்டாக்கியவைகளைத் தன்வசப்படுத்தவும் வல்லுநனாகின்றான். ஆகலின், எல்லாத் தேவர்களுக்குள்ளும் சிறந்தவனாகிய பிரமனால் வேட்டதாலும் விரும்பியதாலும் இவ்வக்கினிஷ்டோமம் எல்லா எக்ஞங்கட்குள்ளுஞ் சிறந்ததாம். அதாவது, உத்தியம் முதலான அனைத்திற்கும் மூலகாரணம் என்பதாம். மற்றும் இது, அக்கினியை விடயமாகக் கொண்ட, "எக்ஞா எக்ஞாவோ" என்பது முதலிய மந்திரத்தால் தேடப்பெற்ற இருபத்தொரு ஸ்தோமங்களால் முடிக்கப் பெறுதலின் இது அக்கினிஷ்டோமம் எனப்படுகின்றது என்பது.

அக்கினிஷ்டோமத்தால் பிரமன் பிரசைகளைப் படைத்தான் என்றதை, முகம் முதலான நான்கு இடங்களின் வாயிலாக விரித்துரைப்பதற்கு முதலில் முகத்திலுண்டாகிய படைப்பை விளக்குகின்றது.

பிராமணம் 6

प्रजापतिरकामयत प्रजायेयेति समुखतस्त्रिवृतन्निरमिमीत तमग्निर्देव-तान्वसृज्यत गायत्री छन्दो रथन्तरꣳ साम ब्राह्मणो मनुष्याणामजः पशूनां तस्मात्ते मुख्या मुखतोह्यसृज्यन्त ।

என்பது.

உரை.

படைக்க விருப்புற்ற பிரமன் படைப்பிற்குச் சாதனமாகிய அக்கினிட்டோமத்தை அநுட்டித்து அதன் வலியால் சத்திய சங்கற்பமுடையோனாகி

தனது முகத்திலிருந்து, "திரிவிருத் (ஒன்பதுமுறை பாடும்துதி) முதலாயின உண்டாகுக, என்றெண்ணி உண்டாக்கினன். அதன்பின் தேவர்களுக்குள் அக்கினியையும், அதன்பிறகு சந்தங்களுக்குள் காயத் திரிச்சந்தத்தையும், அதன்பிறகு சாமங்களு (சாமப் பாடல்களு)க்குள் ரதந்தரம் என்னும் ஒரு சாமப் பாடலையும், அதன்பின், மனிதர்களுக்குள் அந்தணனையும். அதன் பின் விலங்குகளுக்குள் வெள்ளாட்டையும் படைத்தனன். இவைகள் முகத்திலிருந்து உண்டாக்கப்பட்டவைகளாதலின் முக்கியங்களாகின்றன. அதாவது, மேற்கூறப்படுபவைகளுக்குட் சிறந்தவைகள் என்பது.

இனி, இரண்டாவது இடத்திலிருந்து உற்பத்தியைக் காட்டுகின்றது.

பிராமணம் 7

उरसो बाहुभ्यां पञ्चदशं निरमिमीत तमिन्द्रो देवतान्वसृज्यत त्रिष्टुप्छन्दो बृहत्साम राजन्यो मनुष्याणामविः पशूनां तस्मात्ते वीर्यावन्तो वीर्याध्यसृज्यन्त ।

என்பது

உரை

வீரியமுடைய தோள்களிலிருந்து பதினைந்துமுறை ஸ்தோமத்தையுண்டாக்கினன். அதன்பின் இந்திர தேவதையையும், பிறகு திரிஷ்டுப் என்னுஞ் சந்தத்தையும், பின்னர் 'பிருகத்' என்னுஞ் சாமப்பாடலையும், பிறகு மனிதர்களுக்குள் அரசனையும், விலங்குகளுக்குள் பள்ளை ஆட்டையும் படைத்தனன். இவைகள், வீரிய மிகுந்த தோள்களிலிருந்து உண்டானவைகளாதலின் வன்மை மிகுந்தவைகள் என்பது.

மூன்றாவதிடத்திலிருந்து வரும் உற்பத்தியைக் காட்டுகின்றது.

பிராமணம் 8

मध्यतस्सप्तदशं निरमिमीत तं विश्वे देवा देवता अन्वसृज्यन्त जगती छन्दो वैरूपꣳ साम वैश्यो मनुष्याणां गावः पशूनां तस्मात्त आद्या अन्नधानादध्यसृज्यन्त तस्माद्भूयाꣳसोऽन्येभ्यो भूयिष्ठा हि देवता अन्वसृज्यन्त ।

என்பது

உரை

உடம்பின் நடுவாகிய வயிற்றிலிருந்து பதினேழு முறை ஸ்தோமத்தைப் படைத்தனன். அதன் பின் விசுவே தேவர்களையும், அதன் பிறகு "சகதி" என்னுஞ் சந்தத்தையும், அதன்பின், "வைரூபம்" என்னுஞ் சாமப்பாடலையும், பிறகு மனிதர்களுக்குள் வணிகரையும, விலங்குகளுக்குள் கோக்களையும் படைத்தனன். இவைகள், உணவுந்தங்குமிடமாகிய வயிற்றிலிருந்து உண்டானவைகளாதலின் முதலாவதான போக்கியங்களாகின்றன. வணிகன், தனத்தைத் தேடுவதாலும், கோக்கள் பால் கொடுத்தலாலும் போக்கியங்களாம். மிகுதியான வைசுவ தேவர்களைத் தொடர்ந்து உண்டானதால் வாணிபஞ் செய்கின்றவர்களும் எண்ணிறந்தோர்களாவர் என்பது.

நான்காமிடத்திலிருந்து வரும் உற்பத்தியைக் காட்டுகின்றது.

பிராமணம் 9

पत्त एकविंशं निरमिमीत तमनुष्टुप्छन्दोऽन्वसृज्यत वैराजं साम शूद्रो मनुष्याणामश्वः पशूनां तस्मात्तौ भूतसंक्रामिणावश्वश्च शूद्रश्च तस्माच्छूद्रो यज्ञेऽनवक्लृप्तो न हि देवता अन्वसृज्यत तस्मात्पादावुप जीवतः पत्तो ह्यसृज्येताम् ।

என்பது.

உரை

காலிலிருந்து இருபத்தொரு முறை ஸ்தோமத்தை உண்டாக்கினன். பிறகு, 'அநுஷ்டுப், என்னுஞ் சந்தத்தையும், 'வைராஜம், என்னுஞ் சாமப் பாடலையும், பிறகு, மனிதர்களுக்குள் சூத்திரரையும், விலங்குகளுக்குள் குதிரையையும் படைத்தனன். சூத்திரரும் குதிரையும் ஒருவருக்கு உட்பட்டிருப்பவைகள். அதாவது, மூவருணத்தார்கட்குப் பணிவிடை செய்வதால் சூத்திரர்களும், தாங்கிச் செல்வதால் குதிரையும் உட்படுகின்றவைகள் என்பதாம். மற்றும், இங்கு மேற்கூறிய விடங்களிலிருந்து தேவதைகள் உண்டானது போல் பிரமனுடைய காலிலிருந்து ஒரு தேவதையும் உண்டாகாமையின் சூத்திரர்கட்கு எக்ஞம் உரியதன்றாம். காலிலிருந்து பிறந்தமை கொண்டே போதல் வருதலாகிய காலின்றொழிலால் சூத்திரரும் குதிரையும் பிழைக்கின்றன என்பது.

இவ்வாறு, படைப்பிற்குச் சாதாரணமாகிய அக்கினிட்டோமத்தைப் புகழ்வ தற்கு படைப்பை விரித்துக்கூறிவிட்டு, அதற்குரிய ஸ்தோமங்களைச் சிறப்பாகப் புகழ்கின்றது.

பிராமணம் 10

प्राणा वै त्रिवृदर्धमासाः पञ्चदशः प्रजापतिस्सप्तदशस्त्रय इमेलोका असा-वादित्य एकविꣳश एतस्मिन्वा एते श्रिता एतस्मिन्प्रतिष्ठिता य एवं वेदैतस्मिन्नेव श्रयत एतस्मिन्प्रति तिष्ठति ।

என்பது

உரை

பகிழ்ப்பவமானத் துதியில் சூக்தம் மூன்றுதலானும், ஒவ்வொரு சூக் தத்தினும் பிரிவுகள் மூன்றாக இருத்தலானும் அதனுடைய துதிமஞ்சரியும் மூன்றானது. இது, பிராண அபானன்கள், மேல் கீழ் நடு என்னும் மூன் றிடங்களிலுமிருத்தலின் பிராணனுக் கொப்பாம். பாதி மாதத் (ஒரு பட்சத்) திற்கு இரவுகள் பதினைந்தாமாதலின் பதினைந்து முறை ஸ்தோமத்திற்கு ஒப் பாம. பிரசாபதி வடிவ, ஆச்ராவய, என்பது முதலானவற்றின் எழுத்துககட்கு ஒப்பு பன்னிரண்டு மாதங்கள் ஐந்து இருதுக்கள் மூன்றுலகங்கள் சூரியன் என்னுமிவைகள். இருபத்தொன்று" என்ற விடதது, இருபததொருமுறை ஸ்தோமத்திற்கு ஒப்பு ஆதிததனுவன். இவ்விருபததொரு முறை ஸ்தாமங் களுள் மும்முறை ஸ்தோமம் முதலாயின அடங்கியவைகளாகின்றன. இரு பததொன்றிற்குமேல் அக்கினிஷ்டோமத்தில அதிகம் ஒன்றுய இல்லை. இப்பெருமையையுணர்ந்தவன் இதிலிருந்து இதில் பெருமையையடைகின் ருன். அதாவது, அக்கினிட்டோமத்தை அநுட்டிக்கவும், அதன் பயனை யடையவும் உரியவனுகின்ருன் என்பதாம்.

முதல் அநுவாகம்
முற்றிற்று.

ஏழாங் காண்டம் முதற் பிரபாடம்
இரண்டாவது அநுவாகம்

ஒரு பஞ்சாதிக்குமேல் பதின்மூன்று பதங்களைக் கொண்டது.

ஸ்தோமங்களைப் புகழும் பிராமணங்கள்.

प्रातस्सवने वै गायत्रेण छन्दसा त्रिवृते स्तोमाय ज्योतिर्दधदेति त्रिवृता ब्रह्मवर्चसेन पञ्चदशाय ज्योतिर्दधदेति पञ्चदशेनौजसा

துதிப்பாடலின் புகழ்)

वीर्येण सप्तदशाय ज्योतिर्दधदेति सप्तदशेन प्राजापत्येन प्रजननेनै-
विꣳशाय ज्योतिर्दधदेति स्तोम एव तत्स्तोमाय ज्योतिर्दधदेत्यथो
स्तोम एव स्तोममभि प्र णयति यावन्तो वै स्तोमास्तावन्तः कामा-
स्तावन्तो लोकास्तावन्ति ज्योतीꣳष्येतावत एव स्तोमानेतावतः
कामानेतावतो लोकानेतावन्ति ज्योतीꣳष्यव रुन्धे ॥ ७ ॥

முதலநுவாகத்தில் சோமயாகமென்னுஞ் சோதிட்டோமமும் அவற்றின் சமஸ்தைகளுள் முதலாவதாகிய அக்கினிஷ்டோமமுங் கூறப்பட்டன. இதில் மேற்கூறியவற்றிற்கு ஸ்தோமங்களே முக்கியங்கள் என்று விளக்குதற் பொருட்டு, ஸ்மோமங்கள் ஒன்று கூடிக் கருமத்தைச் செய்விக்கின்றன என்று முதலில் விளக்குகின்றது.

பிராமணம் 1

प्रातस्सवनेवैगायत्रेण छन्दसा त्रिवृते स्तोमाय ज्योतिर्दधदेति त्रिवृता ब्रह्मवर्चसेन पञ्चदशाय ज्योतिर्दधदेति पञ्चदशेनौजसा वीर्येण सप्तद-शाय ज्योतिर्दधदेति सप्तदशेन प्राजापत्येन प्रजननेनैकविꣳशाय ज्यो-तिर्दधदेति स्तोम एव तत्स्तोमाय ज्योतिर्दधदेत्यथो स्तोम एव स्तोम-मभि प्रणयति ।

என்பது

உரை

முன் பிரமன் அக்கினிட்டோமத்தை அநுட்டித்து காலைச் சவனத்தில் ''உபாஸ்மைகாயத'' என்னு மந்திரத்திலுள்ள காயத்திரிச் சந்தத்தால் களிப் புற்றவனாய், இனி, திருவிருத ஸ்தோமம் சித்தியாதற்பொருட்டு இவ்வாறு செய்தல் வேண்டுமெனனும் எண்ணத்தை மேற்கொண்டிருந்தனன். அது பிரம வொளியைக் கொடுப்பதாமாதலின் சோதிவடிவினதாம். அத்தகைய திரிவிருத் ஸ்தோமத்தை ஏற்படுத்தி அதனால் களிப்படையாதவனாய் பஞ்சதசஸ்தோமம் இவ்வாறு செய்தல வேணடுமெனனும் எண்ணத்தை மேற்கொண்டவனாயிருந்தனன. பதினைந்து ஸ்தோமம உடம்பிற்கும், இந்திரியங்கட்கும் வனமையைக் கொடுப்பதாமாதலின இருவகை வடிவுடையதாம். அதையடைந்தும் நிறையாதவனாய் பதினேழு ஸ்தோமத்தை இவ்வாறு செய்தல் வேண்டுமென்னும் எண்ணத்தை மேறகொண்டிருந்தனன். அது, எண்

ணிக்கையில் 'ஆச்ராவய, என்பது முதலியவற்றின் எழுத்துக்களின் ஒப்பால் அவ்வடிவப் பிரசாபதியைப்பற்றி பிரசையையுண்டாக்குவதற்குக் காரணமாம். அத்தகைய அந்த ஸ்தோமத்தையடைந்தும் நிறையாதவனாய் இருபத்தொரு ஸ்தோமஸ்தை இவ்வாறு செய்தல் வேண்டுமென்னும் எண்ணத்தை மேற்கொண்டிருந்தனன். இவ்வாறு, முற்கூறிய ஸ்தோமங்களின் வடிவிலிருந்தே பின்வரும் ஸ்தோமத்தைச் செய்யும் நோக்குடையனாய்ச் செய்கின்றான் என்பது.

இனி, ஸ்தோமங்களைப் புகழ்கின்றது.

பிராமணம் 2

यावन्तो वै स्तोमास्तावन्तः कामास्तावन्तो लोकास्तावन्ति ज्योतींषि ।

என்பது.

உரை.

ஸ்தோமங்கள் எத்தனைகளோ, அவ்வளவே விரும்பிய பயன்களை உண்டாக்குகின்றன. இவை, திரிவிருதால் பிரமவொளியும், பதினைந்தால் வன்மையும் வீரியமும், பதினேழால் பிரசைகளுக்குத் தலைமையும் பிரசையை யுண்டாக்குந் தன்மையையும் உண்டாகின்றன வென்று முன் குறிக்கபபட்டன. இருபத்தொன்றால் பெருமையுண்டாகுமென்பதும் முன அநுவாகத்தற் குறிப்பிடப்பட்டதேயாம். மற்றும, அபபயன்களையநுபவித்தற்குரிய உடம்புகளும், உலகங்களும் அங்குள்ள அநுவபங்களும் ஸ்தோமங்களின அளவாகவேயுண்டாகின்றன என்பது.

அக்கினிட்டோமஞ் செய்தவனுடைய் பயனைப்புகழ்கின்றது.

பிராமணம் 3

एतावत एव स्तोमानेतावतः कामानेतावतो लोकानेतावन्ति ज्योतीꣳ-
ष्यव रुन्धे ।

என்பது.

உரை

அக்கினிட்டோமஞ் செய்தவனுக்கு, ஸ்தோமத்தினளவாகவே பயன்களும், உலகங்களும், அநுபவங்களும் உண்டாகின்றன என்பது.

இரண்டாமநுவாகம்

முற்றிற்று.

ஏழாங் காண்டம் முதற் பிரபாடகம்

மூன்றாவது அநுவாகம்

இரண்டு பஞ்சாதிக்குமேல் நாற்பத்துநான்கு பதங்களைக் கொண்டது.

அதிராத்திரத்தை விதிக்கும் பிராமணங்கள்.

ब्रह्मवादिनो वदन्ति स त्वै यजेत योऽग्निष्टोमेन यजमानोऽथ सर्वस्तोमेन यजेतेति यस्य त्रिवृतमन्तर्यन्ति प्राणाꣳस्तस्यान्तर्यन्ति प्राणेषु मेऽप्यसदिति खलु वै यज्ञेन यजमानो यजते यस्य पञ्च-दशमन्तर्यन्ति वीर्यं तस्यान्तर्यन्ति वीर्ये मेऽप्यसदिति खलु वै यज्ञेन यजमानो यजते यस्य सप्तदशमन्तर्यन्ति ॥ ८ ॥ प्रजां तस्यान्तर्य-न्ति प्रजायां मेऽप्यसदिति खलु वै यज्ञेन यजमानो यजते यस्यै-कविꣳशमन्तर्यन्ति प्रतिष्ठां तस्यान्तर्यन्ति प्रतिष्ठायां मेऽप्यसदिति खलु वै यज्ञेन यजमानो यजते यस्य त्रिणवमन्तर्यन्त्यृतूꣳश्च तस्य नक्षत्रियां च विराजमन्तर्यन्त्यृतुषु मेऽप्यसन्नक्षत्रियायां च विरा-जीति ॥ ९ ॥ खलु वै यज्ञेन यजमानो यजते यस्य त्रयस्त्रिꣳशम-न्तर्यन्ति देवतास्तस्यान्तर्यन्ति देवतासु मेऽप्यसदिति खलु वै यज्ञेन यजमानो यजते यो वै स्तोमानामवमं परमतां गच्छन्तं वेद परम-तामेव गच्छति त्रिवृद्वै स्तोमानामवमस्त्रिवृत्परमो य एवं वेद पर-मतामेव गच्छति ॥ १० ॥

ஈண்டு, முற்கூறிய அக்கினிட்டோமம்போல், அதிராத்திரமும், வைகல்பிதமாய் முதலாவதாந்தன்மையையுடைய் காமாதலின். இம்மூன்றுமநுவாகத்தில் அதிராத்திரத்திற்குவிதி குறிப்பிக்கப்படுகின்றது.

அதிராத்திரவிதியை ஏற்படுத்தல்.

பிராமணம் 1

ब्रह्मवादिनो वदन्ति स त्वै यजेत योऽग्निष्टोमेन यजमानोऽथ सर्वस्तोमेन यजेतेति ।

என்பது

உரை

அக்கினிட்டோமத்தைச் செய்கின்றவன், மீண்டும் சர்வஸ்தோமம் என்னும் அதிராத்திரத்தையுஞ் செய்வானேல், சிறந்த யாகஞ் செய்தவனாகின்றான் என்று பிரமவாதிகள் கூறுகின்றனர். இங்கு, அக்கினிட்டோமத்தில் திரிவிருத் முதலிய நால்வகை ஸ்தோமங்கள் உள்ளன. அதிராத்திரத்திலோ இருபத்தேழு, முப்பத்துமூன்று என்னும் இருவகை ஸ்தோமங்களும் இருக்கின்றன. ஆதலின் அதிராத்திரம் சர்வ ஸ்தோமமாம். ஆகவே, இதனால் "சர்வ ஸ்தோமம் அநுஷ்டித்தல் வேண்டும்" என்னும் விதியை யூகித்துக் கொள்ளல் வேண்டும் என்பதாம்.

அவற்றுள், உடன்பாட்டாலும் எதிர் மறையாலும் முதலாவது ஸ்தோமத்தைப் புகழ்கின்றது.

பிராமணம் 2

यस्य त्रिवृतमन्तर्यन्ति प्राणाꣳस्तस्यान्तर्यन्ति प्राणेषु मेऽप्यसदिति खलु वै यज्ञेन यजमानो यजते ।

என்பது

உரை

எவ்வேள்வித் தலைவனுடைய இருக்குவிக்குக் (வேள்விச் செயலாளர்) கள், திரிவிருத் என்னும் ஸ்தோமத்தை மறந்துவிடுகின்றார்களோ, அவ்வேள்வித் தலைவனுடைய பிராணன்களை, அவர்கள் விடுவிக்கின்றவர்களாகின்றார்கள். என்னை ? திரிவிருத் ஸ்தோமம் பிராண வடிவாதலினென்க. அது பொருந்தாதென்பதாம். மற்றும், வேள்வித் தலைவன், பிராணன்களிலும் தனக்குப் பாகம் உண்டெனுங் கருத்துக்கொண்டே வேள்வியைச் செய்கின்றான் ஆதலின், திரிவிருத் ஸ்தோமம் நிச்சயமாய் உளதாதல் வேண்டுமென்பது.

இரண்டாவது ஸ்தோமத்தைப் புகழ்கின்றது.

பிராமணம் 3

यस्यपञ्चदशमन्तर्यन्ति वीर्यं तस्यान्तर्यन्ति वीर्ये मेऽप्यसदिति खलु वै यज्ञेन यजमानो यजते ।

என்பது

உரை

எவ்வேள்வித் தலைவனுடைய இருத்துவிக்குக்கள் பதினைந்து ஸ்தோமத்தை மறந்து விட்டுவிடுகின்றார்களோ, அவர்கள், எசமானனுடைய வீரியத்தை விடுவித்தவர்களாகின்றார்கள். ஏனெனின்? பதினைந்து ஸ்தோமம் வீரிய சாதனமாம் ஆதலினென்க. எசமானன் வீரியத்திலும் தனக்குப் பாகமுண்டென்று கருதியே வேள்வியைச் செய்கின்றான் என்பது.

மூன்றாவது ஸ்தோமத்தைப் புகழ்கின்றது.

பிராமணம் 4

यस्य सप्तदशमन्तर्यन्ति प्रजां तस्यान्तर्यन्ति प्रजायां मेऽप्यसदिति खलु वै यज्ञेन यजमानो यजते ।

என்பது

உரை

எவ்வேள்வித் தலைவனுடைய இருத்துவிக்குக்கள், பதினேழு ஸ்தோமத்தை மறந்து விட்டுவிடுகின்றார்களோ, அவர்கள் அவ்வெசமானனுடைய பிரசையை விடுவிக்கின்றவர்களாவார்கள். எதனாலெனின்? பதினேழு ஸ்தோமம் பிரசையின் உற்பத்திக்குச் சாதனமாதலின் என்க. மற்றும், எசமானனும் பிரசையிலும் தனக்குப் பாகமுண்டென்று கருதியே வேள்வியைச் செய்கின்றான் என்பது.

நான்காவது ஸ்தோமத்தைப் புகழ்கின்றது.

பிராமணம் 5

यस्यैकविंशमन्तर्यन्ति प्रतिष्ठां तस्यान्तर्यन्ति प्रतिष्ठायां मेऽप्यसदिति खलु वै यज्ञेन यजमानो यजते ।

என்பது

உரை

எவ்வேள்வித் தலைவனுடைய இருத்துவிக்குக்கள், இருபத்தொரு ஸ்தோமத்தை மறந்து விட்டுவிடுகின்றார்களோ, அவர்கள், அவ்வெசமானனுடைய பெருமையை விடுவிக்கின்றவர்களாவார்கள். எவ்வாற்றாலெனின்? இருபத்தொரு ஸ்தோமத்தால் பெருமை வருதலின் என்க. மற்றும், எசமானன் பெருமையிலும் தனக்குப் பாகம் உண்டென்று கருதியே வேள்வியைச் செய்கின்றான் என்பது.

ஐந்தாவது ஸ்தோமத்தைப் புகழ்கின்றது.

பிராமணம் 6

यस्य त्रिणवमन्तर्यन्त्यृतूंश्च तस्य नक्षत्रियां च विराजमन्तर्यन्त्यृतुषु मेऽप्यसन्नक्षत्रियायां च विराजीति खलु वै यज्ञेन यजमानो यजते ।

என்பது

உரை

எவ்வேள்வித் தலைவனுடைய இருத்துவிக்குக்கள் இருபத்தேழு ஸ்தோமத்தை மறந்து விட்டுவிடுகின்றார்களோ, அவர்கள், அவ்வெசமானனுடைய நக்ஷத்திரேஷ்டியின் பயனாகிய இராச்சிய லாபத்தை இழக்கச் செய்தவர்களாவார்கள். எசமானனும், நக்ஷத்திர இஷ்டியின் பயனில் தனக்கும் பாகம் உண்டென்று கருதியே வேள்வி செய்கின்றான் என்பது.

ஈண்டு, இருபத்தேழு ஸ்தோமத்தை இருதுவாகத் துதித்திருப்பதை வேறு சாகையிற் கண்டுகொள்க.

ஆறவது ஸ்தோமத்தைப் புகழ்கின்றது.

பிராமணம் 7

यस्य त्रयस्त्रिंशमन्तर्यन्ति देवतास्तस्यान्तर्यन्ति देवतासु मेऽप्यसदिति खलु वै यज्ञेन यजमानो यजते ।

என்பது

உரை.

எவ்வேள்வித் தலைவனுடைய இருத்துவிக்குக்கள் முப்பத்துமூன்று ஸ்தோமத்தை மறந்து விட்டுவிடுகின்றார்களோ, அவர்கள், அவ்வெசமானனுடைய தேவர்களை மறந்து விடுவித்தவர்களாவார்கள். ஏனெனின்? ஒவ்வொரு வுலகத்திற்கு பதினொன்று பதினொன்று தேவர்களாக மூவுலகத்திற்கும் முப்பத்துமூன்று தேவர்களாதலின், எண்ணிக்கையால் அது தேவர்களைக் குறிப்பிடுதலினென்க. மற்றும், எசமானன், தேவர்களுள் யாது பயனோ, அதுவும் தனக்குண்டாகுக என்றெண்ணியே வேள்வியைச் செய்கின்றான் என்பது. இவ்வாறு, எல்லா ஸ்தோமங்களும் புகழப்பெற்றன. ஆனால், சில அதிராத்திரங்களில்தான் எல்லாஸ்தோமங்களும் என்பதையுணர்க.

அதிராத்திரத்திலுள்ள விசேடத்தை விதிக்கவிரும்பிப் புகழ்கின்றது.

பிராமணம் 8

यो वै स्तोमानामवमं परमतां गच्छन्तं वेद परमतामेव गच्छति त्रिवृद्वै स्तोमानामवमस्त्रिवृत्परमो य एवं वेद परमतामेव गच्छति ।

என்பது

உரை

எவன், ஸ்தோமங்களுக்குள் குறைந்த எண்ணுடைய திரிவிருத் ஸ்தோமத்தின் உத்தமத்தை, அதாவது முடிவில பிரயோகிக்கப்படுவதை உணர்கின்றானோ, அவன் உத்தமத்தன்மையை யடைகின்றான் என்பது.

ஈண்டு, அதிராத்திரத்தில், திரிவிருத் ஸ்தோமம் முடிவில் பிரயோகிக்கப் படுகின்றது என்பதையுணர்க. ஏனெனின்? "திரிவிருத் ராதந்தர சந்தி' என, ஈற்றிலுள்ள சந்தித் துதியில் விதிக்கப்படுதலின் என்க.

மூன்றும் அநுவாகம்
முற்றிற்று.

ஏழாங் காண்டம் முதற் பிரபாடகம்

நான்காவது அநுவாகம்

மூன்று பஞ்சாதிக்குமேல் இருபத்தொரு பதங்களைக்கொண்டது.

அங்கிரசத் துவிராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.

अङ्गिरसो वै सत्रमासत ते सुवर्गं लोकमायन्तेषाꣳ हविष्माꣳश्च हविष्कृच्चाहीयेतां तावकामयेताꣳ सुवर्गं लोकमियावेति ताविेतं द्विरात्रमपश्यतां तमाऽहरतां ततो वै तौ सुवर्गं लोकमैतां य एवं विद्वान्द्विरात्रेण यजते सुवर्गमेव लोकमेति तावैतां पूर्वेणाह्नाऽगच्छतामुत्तरेण ॥ ११ ॥ अभिप्लवः पूर्वमहर्भवति गतिरुत्तरं ज्योतिष्टोमोऽग्निष्टोमः पूर्वमहर्भवति तेजस्तेनाव रुन्धे सर्वस्तोमोऽतिरात्र उत्तरꣳ सर्वस्यावरुद्ध्यै गायत्रं पूर्वेऽहन्त्साम भवति तेजो वै गायत्री गायत्री ब्रह्मवर्चसं तेज एव ब्रह्मवर्चसमात्मन्धत्ते त्रैष्टुभमुत्तर ओजो वै वीर्यं त्रिष्टुगोज एव वीर्यमात्मन्धत्ते रथंतरं पूर्वे ॥१२॥ अहन्त्साम भवतीयं वै रथंतरमस्यामेव प्रति तिष्ठति बृहदुत्तरेऽसौ वै बृहदमुष्यामेव प्रति तिष्ठति तदाहुः क्व जगती चानुष्टुप्चेति वैखानसं पूर्वेऽहन्त्साम भवति तेन जगत्यै नैति षोडश्युत्तरे तेनानुष्टुभोऽथाऽऽहुर्यत्समाने ऽर्धमासे स्यातामन्यतरस्याह्नो वीर्यमनु पद्येतेत्यमावास्यायां पूर्वमहर्भवत्युत्तरस्मिन्नुत्तरं नानैवार्धमासयोर्भवतो नानावीर्ये भवतो हविष्मन्निधनं पूर्वमहर्भवति हविष्कृन्निधनमुत्तरं प्रतिष्ठित्यै ॥१३॥

மூன்றாமநுவாகத்தில் எல்லா ஸ்தோமங்களையுமுடைய அதிராத்திரம் கூறப்பட்டது. அதுவும் ஒரு நாட்கொண்டதாம். இதனால், ஒரு நாட்கொண்டவைகளனைத்தும் உபலக்ஷிதமாக்கப் பெற்றன.

இனி, 'அஹீனம், என்னும் இரண்டிரவு கொள்ளும் யாக முதலியன முறையாய்க் கூறப்படுகின்றன. ஈண்டு, வ்யுஷ்டி, ஆங்கிரசம், காபிவனம் சைத்ரரதம் என துவிராத்திரங்கள் நால்வகை வேறுபாடுகளையுடையன. அவற்றுள், வ்யுஷ்டி என்னுந் துவிராத்திரங்கள் அரசர்கட்கு விதிக்கப்பட்டன.

இவ்வநுவாகத்தில் அங்கிரசர்களுடைய துவிராத்திரம் என்னும் யாகம் விதிக்கப்படுகின்றது.

அதன் விதி

பிராமணம் 1

अङ्गिरसो वै सत्रमासत तें सुवर्गलोकमायन्तेषाꣳहविष्माꣳश्चहविष्कृच्चा-
हीयेतां तावकामयेताꣳ सुवर्गं लोकमियावेति तावेतं द्विरात्रमपश्यतां
तमाऽहरतां ततो वै तौ सुवर्गं लोकमैतां य एवं विद्वान्द्विरात्रेण
यजते सुवर्गमेव लोकमेति ।

என்பது

உரை

அங்கிரசமகரிஷிகள், சத்திரயாகங்களைச் செய்து சுவர்க்கத்திற்குப்போகும் போது, அவர்களுக்குள், ஹவிஷ்மான், அவிஷ்கிருத் என்னுமிருவரும் அநுட்டானமின்றியவர்களாய்ச் சுவர்க்கத்தையடைய முடியாதவர்களாயினர். பிறகு, அவ்விருவரும் சுவர்க்கத்தையடைய விரும்பி துவிராத்திரம் என்னும்யாகத்தைஅதன் சாதனத்துடன் செய்ய உறுதிபண்ணிக்கொண்டு அதனுடைய சாதனங்களைத் தேடி அதை நன்கு அநுட்டித்து அதனால் சுவர்க்கத்தையடைந்தனர். ஆதலின் ஏனையோரும் சுவர்க்கத்தையடைதற்பொருட்டு இத்துவிராத்ரத்தால் வேட்போர்களாக என்பது.

துவிராத்திரத்திற்கு நாள்விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம் 2

तावैतां पूर्वेणाह्नाऽगच्छतामुत्तरेणाभिप्लवः पूर्वमहर्भवति गतिरुत्तरं।

என்பது.

உரை.

முற்கூறிய ஹவிஷ்மான், ஹவிஷ்கிருத் என்னும் இருடிகளிருவரும், துவிராத்திரத்திலுள்ள முதல்நாள் யாகத்தால் சுவர்க்கத்தை யடைந்தார்கள். என்பது.

ஆறுநாட்கொண்ட 'அபிப்லவம், என்னும் ஒரு யாகவிடேசத்தில், முதல் நாளில்; சோதிட்டோமமாகிய முதலாவது சம்ஸ்த்தை என்னும் அக்கினிட்டோமம் விதிக்கப்பட்டிருக்கின்றது. அதுவே இங்கு அபிப்லவம் என்பதால் உபலட்சிக்கப்பட்டிருக்கின்றது. இது முதலாம் நாளில் அநுட்டிக்கவேண்டியதாம். இரண்டாம் நாளில், சுவர்க்கத்தையடைவிக்கும் 'கதி, என்னும் ஒரு அதிராத்திர யாகவிசேடம் இரண்டாவது தினத்தில் அநுட்டிக்கவேண்டியதாம் என்பது.

கூறிய பேற்றை வெளிப்படை யாக்கும் வாயிலாக ஸ்தோம விசேடங்களை விதிக்கின்றது.

பிராமணம் 3

ज्योतिष्टोमोऽग्निष्टोमः पूर्वमहर्भवति तेजस्तेनाव रुन्धे सर्वस्तोमोऽतिरात्र उत्तरꣳ सर्वस्याऽऽप्त्यै सर्वस्यावरुद्ध्यै ।

என்பது.

உரை

இங்கு, சோதிட்டோமம் என்றது முற்கூறிய அபிப்லவம் என்பதன் உவமையாம். அததகைய சோதிட்டோமத்தில் முற்கூறிய திரிவித் முதலான நான்கு ஸ்தோமங்களுஞ் செய்யப்படுகின்றன, அதையநுட்டித்தலால் தேசசை (ஒளியை) அடைகின்றான். எல்லாஸ்தோமத்தோடு கூடிய அதிராத்ரம் என்பதால் இருபத்தேழு முப்பத்துமூன்று என்னுமிரண்டுடன்கூட எல்லா ஸ்தோமங்களுங் கூறப்பட்டன. அதனால் அடையாதவைகளுமடையப்படுகின்றன. அவை தன்வசமுமாகின்றன. ஈண்டு, பன்னிரண்டு தோத்திரங்களுடன் கூடியது அக்கினிட்டோமமாம். இருபத்தொன்பது தோத்திரங்களுடன் கூடியது அதிராத்ரமாம் எனல் இரண்டபொருள் என்பது.

துவிராத்திரம்)

இனி, ஹோதாவின் துதியில் நாள் வேறுபட்டால் சாம விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம் 4

गायत्रं पूर्वेऽहन्त्साम भवति तेजो वै गायत्री गायत्री ब्रह्मवर्चसं तेज एव ब्रह्मवर्चसमात्मन्धत्ते त्रैष्टुभमुत्तर ओजो वै वीर्यं त्रिष्टुगोज एव वीर्यमात्मन्धत्ते ।

என்பது

உரை

காயத்திரிச் சந்தமுடைய இருக்கில் உண்டாகிய சாமப்பாடல் காயத்திரமாம். இது நேரில் ஹோதா படிக்கவேண்டிய துதியில் பாடல் வேண்டும். இதுவும் முதல் நாளில் செய்தல் வேண்டுமென்பதையுணர்க. காயத்திரியானது; அக்கினியுடன்றோன்றியதால் ஒளியுடையதாம். பிராமணர்களால் அநுட்டிப்படுவதால் பிரமவொளியுடையதாம். இவ்விரண்டும். இச்சாமப்பாடலால் தனக்கு அடையப்படுகின்றன. திரிஷ்டுப் சந்தமுடையதால் தோன்றினமையின் ஒருவகைச் சாமம் த்ரைஷ்டுபம் எனப்படுகின்றது. அது இரண்டாவது தினத்தில் பாடப்படுகின்றது. இதனால், உடம்பிலும்,இந்திரியத்திலும் உறுதிப்பாடு உண்டாகின்றது என்பது,

---

விதியால் வந்த விகற்பத்தை நீக்குவதற்கு, பிருஷ்டத் துதியின் சாம விசேடத்தை நியமஞ் செய்கின்றது.

பிராமணம் 5

रथंतरं पूर्वेऽहन्त्साम भवतीयं वै रथंतरमस्यामेव प्रति तिष्ठति बृहदुत्तरेऽसौ वै बृहदमुष्यामेव प्रति तिष्ठति ।

என்பது.

உரை.

முதல் நாளில் ரதந்தரம் என்னுஞ் சாமம் பாடப்படுகின்றது. இதனால் இவ்வுலகில் பெருமையையடைகின்றான் என்பது.

ஈண்டு, பிருகத் சாமமும் ரதந்தரசாமமும் விருப்பால் விகற்பமாம். இங்கு நாள் வேறுபாட்டால் விகற்பமாம் என்னுமிதுவே நியமம் என்பதையுணர்க.

மீண்டும் நாள் வேறுபாட்டால் பாதுபாடு செய்த மற்றொரு சாமத்தை விதிக்கின்றது.

பிராமணம் 6

तदाहुः क जगती चानुष्टुप्चेति वैखानसं पूर्वेऽहन्त्साम भवति तेन जगत्यै नैति षोडश्युत्तरे तेनानुष्टुभः।

என்பது.

உரை

உள்ள இரண்டு நாட்களிலும், காயத்திரியிற்றோன்றிய சாமம் முதல் நாளிலும், திரிஷ்டுபில்தோன்றிய சாமம் இரண்டாம் நாளிலும் பாடல் வேண்டுமென்பது முடிவு. மூன்றும் நாளும் நான்காம் நாளுமோ, இல்லை. ஆதலின், சந்தங்களுள் சகதியும் அநுஷ்டுபும் மீதியாய் நின்றுவிட்டன என்னும் பிரமவாதிகளின் ஆசங்கைக்கு வேறுசாமத்தை விதிக்கும் வாயிலாக உத்தரங் கூறுகின்றது. இது பிருகதச்சந்தமுடைய இருக்கிற்றோன்றிய வைகாநசம் என்னும் சாமத்தை முதல் நாளில் பாடல் வேண்டும். பிருகத் சந்தமோ, முப்பத்தாறு எழுத்துக்களைக்கொண்டது. அதை நான்கு முறை திருப்பில் 144, ஆகும்போது, மூன்று சகதிச் சந்தங்களாகின்றன. மூன்று சகதிச் சந்தங்கட்கும், நான்கு பிருகதிச் சந்தங்கட்கும், எழுத்து ஒப்புமையிருத்தலின் என்க. ஆதலின் வைகாநச, சாமத்தாற் செய்யப்படும் துவிராத்திரயாகம் சகதிச்சந்தத்தை விட்டுவிடுவதன்றும். சோடசி என்பதால் சோடசித் துதியில் பாடப்படும் 'கௌரிவீதம், என்னுஞ் சாமங் கொள்ளப்படும். அதை, இரண்டாம் நாளிற்பாடவேண்டும். முன்போலவே, இங்கும் அதற்கு ஆதாரமாகிய இருக்கைக் கொண்டு அநுஷ்டுப்சந்தத்தையுந் தேடிக் கொள்ளில் சோடசியென்னுஞ் சாமத்தாற் செய்யப்படும் துவிராத்ரமும் அநுஷ்டுப் சந்தத்தை விட்டு விடமாட்டாது என்பதாம்.

இரண்டு நாட்கட்கும் பட்ச வேறு பாட்டை விதிக்கின்றது.

பிராமணம் 7

अथाहुर्यत्समानेऽर्धमासे स्यातामन्यतरस्याह्नो वीर्यमनु पद्येतेत्यमावास्यायां पूर्वमहर्भवत्युत्तरस्मिन्नुत्तरं नानैवार्धमासयोर्भवतो नानावीर्ये भवतः।

என்பது

கர்க்கத்திரிராத்திரம்)

இரண்டு சுத்தியாகசுக்களையும் ஒரே பட்சத்தில் செய்யில், ஒரு யாகத்திற்குள்ள வீரியம்தான் அடையப்படும். ஆதலின் கிருஷ்ணபட்சத்திற்குங் கடைசித் தினமாகிய அமாவாசைத் தினத்தில் முதலாவது சுத்தியாகசையும், சுக்கிலபட்சத்தின் முதலாவது நாளாகிய பிரதமையன்று இரண்டாவது சுத்தியாகசையுஞ் செய்யில் இரண்டு பட்சங்களானதால் இரண்டு யாகங்களும் வீரியமுடையவைகளாகின்றன என்பது.

நாள் வேறுபாட்டால் நிதன (முடிவு) விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம் 8

हविष्मन्निधनं पूर्वमहर्भवति हविष्कृन्निधनमुत्तरं प्रतिष्ठित्यै।

உரை

என்பது

ஐவகையாய்ப் பிரித்த சாமத்தின் ஐந்தாவது பாகம் நிதனம் எனப்படும் அவற்றுள்ளும் ஹவிஷ்மான் என்னுஞ் சொல்லையுடைய நிதனம் ஹவிழ்மாந் நிதனம் எனப்படும். அதை, முதல் நாளில் பாடல் வேண்டும். இவ்வாறே ஹவிழ்கிருத் என்னுஞ் சொல்லையுடைய நிதனத்தை இரண்டாம் நாளில் பாடல் வேண்டும். இது இரண்டாமாதலின் கால்போன்று நிலைத்திருப்பதற் பொருட்டு உதவுகின்றது என்பது.

நான்காம் அநுவாகம்

முற்றிற்று.

ஏழாங் காண்டம் முதற் பிரபாடகம்

ஐந்தாவது அநுவாகம்

ஆறு பஞ்சாதிக்குமேல் நாற்பத்தேழு பதங்களைக் கொண்டது.

கர்க்கத் திரிராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.

आपो वा इदमग्रे सलिलमासीत्तस्मिन्प्रजापतिर्वायुर्भूत्वाऽचरत्स इमामपश्यत्तां वराहो भूत्वाऽहरत्तां विश्वकर्मा भूत्वा व्यमार्ट्साऽप्रथत सा पृथिव्यभवत्तत्पृथिव्यै पृथिवित्वं तस्यामश्राम्यत्प्रजापतिः

स देवानसृजत वसून्रुद्रानादित्यान्ते देवाः प्रजापतिमब्रुवन्प्र जा-
यामहा इति सोऽब्रवीत् ॥१४॥ यथाऽहं युष्मा᳚स्तपसाऽसृक्ष्येवं
तपसि प्रजननमिच्छध्वमिति तेभ्योऽग्निमायतनं प्रायच्छदेतेनाऽऽ-
यतनेन श्राम्यतेति तेऽग्निनाऽऽयतनेनाश्राम्यन्ते संवत्सर एकां
गामसृजन्त तां वसुभ्यो रुद्रेभ्य आदित्येभ्यः प्रायच्छन्नेता᳚ रक्ष
ध्वमिति तां वसवो रुद्रा आदित्या अरक्षन्त सा वसुभ्यो रुद्रेभ्य
आदित्येभ्यः प्राजायत त्रीणि च ॥१५॥ शतानि त्रयस्त्रि᳚शतं
चाथ सैव सहस्रतम्यभवत्ते देवाः प्रजापतिमब्रुवन्त्सहस्रेण नो या-
जयेति सोऽग्निष्टोमेन वसूनयाजयत्त इमं लोकमजयन्तच्चाददुस्स
उक्थ्येनरुद्रानयाजयन्तेऽन्तरिक्षमजयन्तच्चाददुस्सोऽतिरात्रेणाऽऽदि
त्यानयाजयत्तेऽमुं लोकमजयन्तच्चाददुस्तदन्तरिक्षम् ॥ १६ ॥
व्यवैयत तस्माद्रुद्रा घातुका अनायतना हि तस्मादाहुः शिथिलं
वै मध्यममहस्त्रिरात्रस्य वि हि तदवैयतेति त्रैष्टुभं मध्यमस्याह्न
आज्यं भवति संयानानि सूक्तानि श᳚सति षोडशिन᳚ श᳚सत्यह्नो
धृत्या अशिथिलंभावाय तस्मात्त्रिरात्रस्याग्निष्टोम एव प्रथममहः
स्यादथोक्थ्योऽथातिरात्र एषां लोकानां विधृत्यै त्रीणित्रीणि शता-
न्यनूचीनाहमव्यवच्छिन्नानि ददाति ॥१७॥ एषां लोकानामनु
संतत्यै दशतं न वि च्छिन्द्याद्विराजं नेद्विच्छिनदानीत्यथ या सह-
स्रतम्यासीत्तस्यामिन्द्रश्च विष्णुश्च व्यायच्छेता᳚ स इन्द्रोऽमन्य-
तानया वा इदं विष्णुस्सहस्रं वक्ष्यत इति तस्यामकल्पेतां द्वि-
भाग इन्द्रस्तृतीये विष्णुस्तद्वा एषाभ्यनूच्यत उभा जिग्यथुरिति

तां वा एतामच्छावाकः ॥१८॥ एव शꣳसत्यथ या सहस्रतमी सा होत्रे देयेति होतारं वा अभ्यतिरिच्यते यदतिरिच्यते होताऽनाप्तस्याऽऽपयिताऽथाऽऽहुरुन्नेत्रे देयेत्यतिरिक्ता वा एषा सहस्रस्यातिरिक्त उन्नेतर्त्विजामथाऽऽहुस्सर्वेभ्यस्सदस्येभ्यो देयेत्यथाऽऽहुरुदाकृत्य सा वंशं चरेदित्यथाऽऽहुर्ब्रह्मणे चाग्नीधे च देयेति ॥१९॥ द्विभागं ब्रह्मणे तृतीयमग्नीध ऐन्द्रो वै ब्रह्मा वैष्णवोऽग्नीध्रस्तथैव तावकल्पेतामित्यथाऽऽहुर्या कल्याणी बहुरूपा सा देयेत्यथाऽऽहुर्या द्विरूपोभयतएनी सा देयेति सहस्रस्य परिगृहीत्यै तद्वा एतत्सहस्रस्यायनꣳ सहस्रꣳ स्तोत्रीयास्सहस्रं दक्षिणास्सहस्रसंमितस्सुवर्गो लोकस्सुवर्गस्य लोकस्याभिजित्यै ॥ २० ॥

अग्रवी१ तदन्तरिक्षं ददात्यच्छावाकश्च देयेति सप्तचत्वारिꣳशच्च ।

இதில், கர்க்கத்திரிராத்திரத்தை விதித்தற் பொருட்டு ஒரு கதை கூறுகின்றது. அதில், முதலில் பூமியின் உற்பத்தியை விளக்குகின்றது.

பூமியுற்பத்திவகை

பிராமணம் 1

आपो वा इदमग्रे सलिलमासीत्तस्मिन्प्रजापतिर्वायुर्भूत्वाऽचरत्स इमामपश्यत्तां वराहो भूत्वाऽहरत्तां विश्वकर्मा भूत्वा व्यमार्ट्साऽप्रथत सा पृथिव्यभवत्तत्पृथिव्यै पृथिवित्वम् ।

என்பது

உரை

இப்போது காணப்படும் கடல் ஆறு முதலான உலகம் பூமி உண்டாவதற்கு முன் நீராகவேயிருந்தது. வேறு பூதங்களும் காரியங்களும் இல்லை. அப்போது பிரமனுடைய திருமேனி தங்குவதற்கு இடமின்மையின் வாயுவடிவாய் பிரமன் அந் நீரின்மீது அசைந்துகொண்டிருந்தனன். அவ்வாறிருக்கும்போது நீரிற்குள் அமிழ்ந்துகிடந்த பூமியைக்கண்டு, தான் பன்றி வடிவெடுத்து பன்றியின் பல்லின் நுனியால் அப்பூமியை நீரிற்கு மேலே கொண்டுவந்தனன். பிறகு

பன்றிவடிவை விட்டு விசுவ கருமனாகி அம்மண்ணை நன்றாய்க் கழுவி அதிலுள்ள நெகிழ்ச்சியைப் போக்கிவிட்டு எங்கும் பரப்பிவிட்டனன். அதுவே எல்லா உயிர்கட்கும் ஆதாரமாய்க் காணப்படும் இப்பூமியாம். பரப்பப்பட்டதால் பிருதிவி என்னும் பெயரும் வந்தது என்பது.

தேவசிருட்டியையும் கோசிருட்டியையும் முறையாய்க் கூறுகின்றது

பிராமணம் 2

तस्यामश्राम्यत्प्रजापतिस्स देवानसृजत वसूꣳरुद्रानादित्यान्ते देवाः प्रजापतिमब्रुवन्प्र जायामहा इति सोऽब्रवीद्यथाऽहं युष्माꣳस्तपसाऽसृक्ष्येवं तपसि प्रजननमिच्छध्वमिति तेभ्योऽग्निमायतनं प्रायच्छदेतेनाऽऽयतनेन श्राम्यतेति तेऽग्निनाऽऽयतनेनाश्राम्यन्ते संवत्सर एकां गामसृजन्त तां वसुभ्यो रुद्रेभ्य आदित्येभ्यः प्रायच्छन्नेताꣳ रक्षध्वमिति तां वसवो रुद्रा आदित्या अरक्षन्त सा वसुभ्यो रुद्रेभ्य आदित्येभ्यः प्राजायत त्रीणि च शतानि त्रयस्त्रिꣳशतं चाथ सैव सहस्रतम्यभवत् ।

என்பது.

உரை.

பிரமன், அப்பூமியில் தனது திருமேனியுடனிருந்துகொண்டு சிருட்டி செய்ய விரும்பித் தவஞ் செய்தனன். அத் தவத்தின் வலியால், வசு, உருத்திர ஆதித்ய என்னுங் கணங்கள் மூன்றையும் படைத்தனன். அம்மூவகைக் கணத்தார்களும் பிரசைகளையுண்டாக்கும் உபாயத்தை தெரிவிக்க வேண்டுமென்று பிரமனை வேண்டிக்கொண்டனர். அதைக்கேட்ட பிரமன் என்னைப்போல் தவஞ்செய்த பிறகு நீவிர் சிருட்டிக்க விரும்புவீர்களாக என்று கூறிவிட்டு தவத்திற்கு ஆதாரமாகிய அக்கினியைக் கொடுத்து அவ்வக்கினியால் ஹோமஞ் செய்வதாகிய தவத்தைச் செய்வீர்களாக என்று கூறினன். அவர்கள் அவ்வாறே ஒருவருடம் தவஞ்செய்துவந்து முடிவில் அனைவரும் ஒரு கோவையுண்டாக்கினார்கள். அக்கோவை, பிரமன், பாதுகாப்பின் பொருட்டு வசு முதலானோர்கட்குக் கொடுத்தனன். அக் கோ, பாதுகாக்கப்பெற்று வசுக்களுக்கு முன்னூற்று முப்பத்து மூன்று கோக்களையுண்டாக்கிற்று. இவ்வாறே உருத்திரர்கட்குக் கொடுத்த கோவும் முன்னூற்று முப்பத்துமூன்று கோக்களையுண்டாக்கிற்று, அங்ஙனமே, ஆதித்தர்கட்குக் கொடுத்த கோவும் முன்னூற்றுமுப்பத்துமூன்று கோக்களையுண்டாக்கிற்று. இவ்வாற்றால் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது கோக்கள் பெறப்பட்டன. இது ஒன்று குறைந்திருந்த ஆயிரத்தை நிறைத்துக் காட்டுவது ஆதலின் சகத்திரதமி எனப்படும் என்பது.

கர்க்கத்திரிராத்திரம்)

ஆயிரந்தக்ஷிணைகளையுடைய் திரிராத்திரி யாகத்தால் வேட்டலை விளக்குகின்றது

பிரமாணம் 3

तेदेवाः प्रजापतिमब्रुवन्त्सहस्रेण नो याजयेति सोऽग्निष्टोमेन वसूनया-
जयत्त इमं लोकमजयन्तच्चाददुस्स उक्थ्येन रुद्रानयायत्तेऽन्तरिक्षम-
जयन्तच्चाददुस्सोऽतिरात्रेणाऽऽदित्यानयाजयत्तेऽमुं लोकमजयन्तच्चा-
ददुः ।

என்பது.

உரை

வசு உருத்திர ஆதித்தர்களான அத் தேவர்கள், ஆயிரங் கோக்கள் தக்ஷிணைகளையுடைய யாகத்தைச் செய்து வைத்தல் வேண்டுமென்று பிரமனை வேண்டினர். பிரமன், அக்கினிட்டோமத்தால் வசுக்கட்கு முதல் நாளில் யாகஞ் செய்வித்தனன். வசுக்கள் தம்முடைய முன்னூற்றுமுப்பத்துமூன்று கோக்களையும் இருத்துவிக்குக்கட்குத் தட்சிணையாகக் கொடுத்தனர். அதனால் அவர்கள் இவ்வுலகைவெற்றி பெற்றுக்கொண்டனர். மற்றும், பிரமன், உக்த்தியம் என்பதால் உருத்திரர்கட்கு இரண்டாம் நாள் வேள்வி செய்து வைத்தனன். அவர்கள் தமது முன்னூறறுமுப்பத்துமூன்று கோக்களையும் இருத்துவிக்குகட்குத் தட்சிணையாகக் கொடுத்தனர். இதனால் அவர்கள் அந்தரிட்சவுலகை வெற்றி பெற்றுக் கொண்டனர். பிறகு, பிரமன், அதிராத்திரத்தால் மூன்றுநாள் ஆதித்தர்கட்கு யாகஞ் செய்துவைத்தனன். அவர்கள் தமது முன்னூற்றுமுப்பத்துமூனறு கோக்களையும் இருத்துவிக்குக்கட்குத் தட்சிணையாகக் கொடுத்தனர். அதனால், சுவர்க்க லோகத்தை அவர்கள் வென்று கொண்டனர் என்பது.

உக்த்ய நாளாகிய இரண்டாவது நாளில் சில சம்சனவிசேடங்களை விதிக்கின்றது. சம்சனம் — துதிவிசேடம்.

பிராமணம் 4

तदन्तरिक्षं व्यवैर्यत तस्माद्रुद्रा घातुका अनायतना हि तस्मादाहुश्शि-
थिलं वै मध्यममहस्त्रिरात्रस्य वि हि तदवैर्यतेति त्रैष्टुभं मध्यमस्याह्न
आज्यं भवति संयानानि सूक्तानि शꣳसति षोडशिनꣳ शꣳसत्यह्नो
धृत्या अशिथिलंभावाय ।

என்பது

உரை

यः सप्तदशरात्रोऽय मष्टमेनवमेपुनः ।
भवेद्विंशतिरात्रोऽथदशमे समुदीरिताः ॥ ३ ॥
एकविंशतिरात्रोऽथ मन्त्रास्सर्वेऽश्वमेधकाः ।
अर्वाङिष्टावाप्तिमन्त्रा भूतंपर्याप्तयोनव ॥ ४ ॥
आभूमन्त्रास्त्रयोह्या मे ह्यनुभूमन्त्रकापुनः ।
चतुर्विंशति संख्यास्युरग्निनेत्येवमादयः ॥ ५ ॥
दीक्षाहोममन्त्रास्तु स्वाहा द्वाविंशतिर्मताः ।
ददूभ्योऽङ्गमन्त्राः पञ्चाशदङ्ज्येषड्विंशतिस्तथा ॥ ६ ॥
कृष्णा त्रयोविंशतिः स्युर्मिलित्वा रूपमन्त्रकाः ।
द्वादशौषधिमन्त्राः स्युस्त्रयोविंशतिरीरिताः ॥ ७ ॥
वनस्पतिभ्यो वृक्षाख्यमन्त्रा उक्ताः प्रपाठके ।

இம்மூன்றும்பிரபாடக முதலநுவாகததில் அவிவாக்கியமும், இரண்டாவதில் துவாதசாஹத்தின் துதியும், மூன்றுவதில் திரயோதசராத்திரமும், நான்காவதில் சதுர்த்தசராத்திரமும், ஐந்தாவதில் மற்றெரு சதுர்த்தசராத்திரமும், ஆறுவதிலும் ஏழாவதிலும பஞ்சதசராத்திரங்களும், எட்டாவதில் ஸப்ததசராத்திரமும், ஒன்பதாவதில் விம்சதிராத்திரமும், பத்தாவதில் ஏகவிம்சதிராத்ரமும், பதினென்றுவதிலிருந்து பிரபாடகம் முடியும்வரை அசுவமேதத்தைப் பற்றிய ஹோம மந்திரங்களுங் கூறப்படுகின்றன. அவற்றுள் பதினென்றுவதில் ஆப்தி என்னும் ஹோமமந்திரங்களும், பன்னிரண்டாவதில் பர்யாப்த்தி என்னும் மந்திரங்களும், பதின்மூன்றுவதில் ஆபூ:, என்னும் மந்திரங்களும், பதினன்காவதில் அநுபூ:, என்னும் மந்திரங்களும, பதினைந்தாவதில் வைசுவதேவ ஹோமங்களும், பதினுருவதில் அங்கஹோமங்களும் பதினேழாவது பதினெட்டாவதுகளில் அசுவரூப ஹோமங்களும், பத்தொன்பதாவதில் ஓஷதி ஹோமங்களும், இருபதாவதில் வனஸ்பதி ஹோமமுங் கூறப்படுகின்றன என்பது. அவிவாக்கியம் = மறப்பிலாமற் செய்தல்.

ஏழாங் காண்டம் மூன்றும் பிரபாடகம்

முதலாவது அநுவாகம்

நான்கு பஞ்சாதிகட்குமேல் ஒருபதத்தைக் கொண்டது.

இதில், முற்கூறிய துவாதசாஹ சேடமாக பத்தாநாளில் சில விசேடங்களைக் கூறுகின்ற பிராமணங்கள்.

प्रजवं वा एतेन यन्ति यद्दशममहः पापावहीयं वा एतेन भवन्ति यद्दशममहर्यो वै प्रजवं यतामपथेन प्रतिपद्यते यः स्थाणु२ हन्ति यो भ्रेषं न्येति स हीयते स यो वै दशमेहन्नविवाक्य उपहन्यते स हीयते तस्मै य उपहताय व्याह तमेवान्वारभ्य समश्नुतेऽथ यो व्याह सः ॥ १ ॥ हीयते तस्माद्दशमेऽहन्नविवाक्य उपहताय न व्युच्यमथो खल्वाहुर्यज्ञस्य वै समृद्धेन देवाः सुवर्गं लोकमायन्यज्ञस्य व्यृद्धेनासुरान्पराऽभावयन्निति यत्खलु वै यज्ञस्य समृद्धं तद्यजमानस्य यद्व्यृद्धं तद्भ्रातृव्यस्य स यो वै दशमेऽहन्नविवाक्य उपहन्यते स एवार्तिं रेचयति ते ये बाह्या दृशीकवः ॥ २ ॥ स्युस्ते वि ब्रूयुर्यदि तत्र न विन्देयुरन्तः सदसाद्व्युच्यं यदि तत्र न विन्देयुर्गृहपतिना व्युच्यं तद्व्युच्यमेवाथ वा एतत्सर्पराज्ञिया ऋग्भिः स्तुवन्तीयं वै सर्पतो राज्ञी यद्वा अस्यां किं चार्चन्ति यदानृचुस्तेनेय२ सर्पराज्ञी ते यदेव किं च वाचाऽऽनृचुर्यदतोऽध्यर्चितारः ॥ ३ ॥ तदुभयमाप्त्वाऽवरुध्योत्तिष्ठामेति ताभिर्मनसा स्तुवते न वा इमामश्वरथो नाश्वतरीरथः सद्यः पर्याप्तुमर्हति मनो वा इमा२ सद्यः पर्याप्तुमर्हति मनः परिभवितुमथ ब्रह्म वदन्ति परि-

मिता वा ऋचः परिमितानि सामानि परिमितानि यजूंष्यथैत-
स्यैवान्तो नास्ति यद्ब्रह्म तत्प्रतिगृणत आ चक्षीत स प्रतिगरः
॥ ४ ॥ व्याह स दशीकवोऽचिंतारः स एकं च । ॥ १ ॥

மறதியால் நினைப்பற்றசில அங்கத்தை நினைப்பூட்டுவதற்கு பிறநுடைய வாக்கியங் கூடாதெனக்கூறுகின்றது,

பிராமணம் 1

प्रजवं वा एतेन यन्ति यद्दशममहः पापावहीयं वा एतेन भवन्ति यद्दशम-
महर्यो वै प्रजवं यतामपथेन प्रतिपद्यते यः स्थाणुं हन्ति यो भ्रेषं न्येति
स हीयते स यो वै दशमेऽहन्नविवाक्य उपहन्यते स हीयतेतस्मै य उपह-
ताय व्याह तमेवान्वारभ्य समश्नुतेऽथ यो व्याह स हीयते तस्माद्द-
शमेऽहन्नविवाक्य उपहताय न व्युच्यम् ।

என்பது

உரை

துவாதசராத்திரத்தில் உள்ள பத்தாநாள் பாவத்தைப்போக்குவதாமாதலின் அன்றுமிக வேகமாக அநுட்டானஞ்செய்தல்வேண்டும். அதாவது பிரயாசத்தைப் பொறுத்துக்கொண்டு அநுட்டித்தல் வேண்டும் எனபதாம். அவ்வாறு அநுட்டிக்கும்போது, புலி, கள்வர் முதலியவைகளின் பயத்தால் காட்டில் மிகவேகமாய்ச் செல்கின்றவர்களுள், ஒருவன் தன்னை அறிவாளியென்று எண்ணிக்கொண்டு பெரியவழியைவிட்டு விட்டுச் சிறியதோர்வழி சென்று மற்றையோர்களுக்கு முன்வந்துவிடல் வேண்டுமென்று மிக வேகமாய்ப்போய் எதுவோ ஒருவழியிற் போய்க்கொண்டிருக்கின்றவனும், மற்றொருவன் நேராகவேசென்று வழியிலுள்ளகட்டையில் காலடிபட்டுக் கொள்ளுகின்றவனும், இன்னுமொருவன், முள் வழியிற்போய் பிணிவாய்ப்பட்டு செல்ல முடியாமற்போகின்றவனும் என்னும் இம்மூவரும் பாது காப்பிற்குரிய வழிநடப்போர்களுடைய உதவியை இழந்து விடுகின்றார்கள். இவ்வாறே பத்தாநாள் அங்காநுட்டானத்தை மறந்தவனும் இருத்துவிக்குக்களின் கூட்டத்தை இழந்துவிடுகின்றான். ஏனெனில்? ஏனையயாகங்களில் மறந்துவிடில் பிறர் அறிவித்தல்கூடும், இதிலோ மறந்த அங்கத்தை பிறன் தெரிந்திருக்கினுஞ் சொல்லுதல்கூடாது. மற்றும், மறந்தவனுக்குமற்றொரு இருத்துவிக்கு நீ இதை மறந்துவிட்டனை, என்று

கூறில், அவ் வங்காநுட்டானம் அவ்வாறு கூறியவனைப் பற்றிநடப்பதால் அவன் அநுட்டானத்தில் வல்லுநனாகின்றான். மற்றும், அவ்வாறு சொல்லியவன் இவ்வாறு ஆராய்ச்சி செய்ததாகிய குற்றத்தால் ஏனைய இருத்துவிக்குக்களிலிருந்து விடுபட்டுப்போகின்றான். மறதியைச்சொல்லக்கூடாத பத்தாநாளில்மறந்ததை அநுட்டிக்க வேண்டுமென்று மற்றொருவன் சொல்லுதல் கூடாது என்பது.

அதில் மற்றொரு பக்ஷத்தைக் கூறுகின்றது.

பிராமணம் 2

अथो खल्वाहुर्यज्ञस्य वै समृद्धेन देवाः सुवर्गं लोकमायन्यज्ञस्य व्यृद्धेनासुरान्पराऽभावयन्निति यत्खलु वै यज्ञस्य समृद्धं तद्यजमानस्य यद्व्यृद्धं तद्भ्रातृव्यस्य स यो वै दशमेऽहन्नविवाक्य उपहन्यते स एवाति रेचयति ते ये बाह्या दृशीकवः स्युस्ते विब्रूयुः ।

என்பது.

உரை.

முழுதும் பழுதுபடாத எக்ஞாநுட்டானத்தால் தேவர்கள் சுவர்க்கத்தையடைந்தனர். முழுப்பயன் எசமானனைச்சேரும், குறைந்தபயன் பகைவனைச்சேரும். இவ்வாற்றால், பத்தாநாள் சிறிது அநுட்டானத்தை மறந்துவிட்டவன் சாத்திரவழியைத்தாண்டினவனாவன், தாண்டவே பயன் குறையும் குறைந்தபோது பகைவனையுண்டாக்கும் அக்குற்றத்தைநீக்குவதற்கு யாதேனும் ஒரு பிரயாச்சித்தஞ்சொல்லல்வேண்டும். அதாவது இருத்துவிக்குக்கள் மறந்ததைக் கூறில் குற்றமாகுமாதலின் என்க, எக்ஞத்தைப் பார்க்கவந்தவர்களுள் விடயந்தெரிந்தவர் சொல்லுதல்கூடும் அதனால் குற்றம் இல்லை என்பது.

மற்றொரு பக்ஷத்தை விதிக்கின்றது.

பிரமாணம் 3

यदि तत्र न विन्देयुरन्तः सदसाद्व्युच्यम् ।

என்பது

உரை

எக்ஞத்தைப் பார்க்கவந்தவர்களுள் பிரயோகஉணர்ச்சியுடையவர் ஒருவருங்கிடைத்தல் இன்றெனின், எக்ஞத்திற்குள்ளிருக்கின்றவர்களுள் யாராகினுமொருவர்மறந்து விட்டதைக்கூறலாம் என்பது.

மீண்டும் மற்றொரு பக்ஷத்தைக் கூறுகின்றது.

பிராமணம் 4

यदि तत्र न विन्देयुर्गृहपतिना व्युच्यम्।

என்பது.

உரை

மேற்கூறியபடி எக்குத்திலுள்ளார்களுள் ஒருவரும் அத்தகையவுணர்ச்சியுடையார் கிடைக்காவிடின் வேள்வித்தலைவனே மறந்துவிட்டதைக்கூறலாம் என்பது.

எல்லாப் பக்ஷங்களின் கருத்தையும் நியமஞ் செய்கின்றது.

பிராமணம் 5

तद्व्युच्यमेव।

என்பது

உரை

விரிப்பதிலென்? பார்க்கவந்தவரேனும், அல்லது இருத்துவிக்கேனும், அல்லது எசமானனாகிலும் மறந்துவிட்ட அநுட்டானத்தை எடுத்துக்சொல்லல் வேண்டும். அற்றேல்? மறந்ததைச் சொல்லாதநாள் என்பது மாறுபடாதோ எனின்? மாறுபடாது. என்னை? மறந்ததைச்சொல்லல் என்பதே அத்தினத்தில் வரக்கூடாது. அதாவது அன்றுமறந்துவிடில் பிராயச்சித்தமின்மையின் மறதியில்லாமலே அநுட்டானஞ்செய்தல் வேணடுமென்பது பொருள்என்பதாம்.

இப் பத்தாநாளில், மனதிற்குள் மந்திரத்தை ஓதிக்கொண்டு சோமரசத்தைப் பிடிக்கும்போது செய்யவேண்டிய துதிவிசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம் 6

अथवा एतत्सर्पराज्ञिया ऋग्भिः स्तुवन्तीयं वै सर्पतो राज्ञी यद्वा अस्यां किं चार्चन्ति यदानृचुस्तेनेयꣳ सर्पराज्ञी ते यदेव किं च वाचाऽऽनृचुर्यदतोऽध्यर्चितारस्तदुभयमाप्त्वाऽवरुध्योत्तिष्ठामेति।

என்பது

உரை

இந்நாளில் சர்ப்பராக்ஞீ என்னும் பூமியின் துதிசெய்தல்வேண்டும். இப்பூமி, சஞ்சரிக்கும் எல்லாப்பிராணிகட்கும் தலைமையானதால் சர்ப்பராக்ஞி எனப்படுகின்றது. மற்றும், பூசிப்போர் பூசிக்கப்பெறுவோர் என்னும் இரு வகைப் பிராணிகட்கும் இப்பூமி ஆதாரமாயிருத்தலின் சர்ப்பராக்ஞி எனல் அமையும். இவ்வாற்றுல் சர்ப்பராக்ஞியென்னும் பூமியின்சம்பந்தமான இருக்குக்களாம், அதாவது, "பூமிர்பூம்நா,, என்பது முதலியவைகளாகின்றது. இதனுல் "பூமிர்பூம்நா,, என்பது முதலியமந்திரங்களால் இத்தினத்தில் துதிசெய்தல் வேண்டுமென்பதாம். இத்துதிசெய்வதன் கருத்தோ, இப்பூமியில், அர்ச்சிப்போர் அர்ச்சிக்கப்படுவோர் என்னுமிருவகையாரும் யாமேயாகி அவற்றை தம்வயப்படுத்திக்கொண்டு துதிக்கின்றவர்களாக யாம் பிறகு எழுவோமாக என்பதாம்.

வேறு துதிகளினின்று இதற்கு ஒருவிசேடத்தைவிதிக்கின்றது.

பிராமணம் 7

तामिर्मनसा स्तुवते न वा इमामश्वरथो नाश्वतरीरथः सद्यः पर्याप्तुमर्हति मनो वा इमाꣳ सद्यः पर्याप्तुमर्हति मनः परिभवितुम् ।

என்பது

உரை

ஏனையதுதிகள் வாக்கால்துதிக்கப்படுகின்றன. இதுவோ மனதால் செய்யப் படுகின்றது. ஏனெனின்? மிகுந்தவன்மையுள்ள ஆண்குதிரைகள் பூட்டிய தேரும், பெண்குதிரைகள் பூட்டியதேரும் ஒருநாளில் இப்பூமியைப்பரவியோடல் முடியாது. ஓவேகணத்தில் மனம் இப்பூமியைச்சுற்றிக்கொண்டுவந்துவிடும் ஆதலின் மனதால் துதித்தல்வேண்டும் என்பது.

சூத்திரப்படி, ஹோதாவானவன் சதுர்ஹோதாமந்திரங்களை ஓதல்வேண்டும் என்பதை விதிக்கின்றது.

பிராமணம் 8

अथ ब्रह्म वदन्ति परिमिता वा ऋचः परिमितानि सामानि परिमितानि यजूꣳष्यथैतस्यैवान्तो नास्ति यद्ब्रह्म तत्प्रतिगृणत आ चक्षीत स प्रतिगरः ।

என்பது

உரை

முற்கூறியஇருக்குக்களால் துதிக்கும்போது எங்கு எங்கு அத்வரியு பிரதிகரஞ் சொல்கின்றானோ, அங்கு அங்கு பிரதிகரஞ்சொல்லப்படும் போது பிரமம் என்னும் சதுர்ஹோதா மந்திரங்களை ஹோதா கூறல் வேண்டும். சதுர் ஹோதாமந்திரம் பிரமம் என்பதை வேறிடத்திற் காண்க. அது, "பிருதிவீஹோதா" என்பது முதலிய ஆரணியகாண்ட மந்திரமாம். பிரதிகரம் என்பது துதிப்போனை உற்சாகப் படுத்துவதற்கு ஓம் என்பதாற் கூறல். இதனால், பத்து ஹோதா மந்திரங்களையும் ஓதல்வேண்டும் என்பது பெற்றாம். இருக்கு எசுர், சாம மந்திரங்களுக்கு அளவுண்டு எனெனின்? அவைகட்கு சிலவிடங்களில்மாத்திரம் பிரயோகமானதால் என்க. இதுவோ, எல்லாவிடங்களிலும் பிரயோகிக்கப் படுதலின் அளவில்லை. ஆதலின் இது பிரமம் எனப்பட்டது. ஹோதா, மந்திரங்களை ஓதுகின்றான். பிரதிகரஞ் சொல்வதன் பொருட்டு எழுந்த அத்துவர்யுவின் பொருட்டு ஹோதா ஓதல்வேண்டும். இதனால், இதுபிரதிகரம் எனப்பட்டது என்பது.

முதலநுவாகம்

முற்றிற்று.

ஏழாங் காண்டம் மூன்றும் பிரபாடகம்

இரண்டாவது அநுவாகம்

ஒரு பஞ்சாதிக்குமேல் நாற்பத்தொரு பதங்களைக் கொண்டது.

துவாதசாஹத்தைக் கூறும் பிராமணங்கள்.

ब्रह्मवादिनो वदन्ति किं द्वादशाहस्य प्रथमेनाह्नर्त्विजां यजमानो वृङ्क्त इति तेज इन्द्रियमिति किं द्वितीयेनेति प्राणानन्नाद्यमिति किं तृतीयेनेति त्रीनिमाँल्लोकानिति किं चतुर्थेनेति चतुष्पदः पशू-निति किं पञ्चमेनेति पञ्चाक्षरां पङ्क्तिमिति किꣳ षष्ठेनेति षडृ-तूनिति किꣳ सप्तमेनेति सप्तपदाꣳ शक्करीमिति ॥ ५ ॥ किमष्टमे-नेत्यष्टाक्षरां गायत्रीमिति किं नवमेनेति त्रिवृतꣳ स्तोममिति किं दशमेनेति दशाक्षरां विराजमिति किमेकादशेनेत्येकादशाक्षरां त्रि-

(பன்னிருநாள்

ष्टुभमिति किं द्वादशेनेति द्वादशाक्षरां जगतीमित्येतावद्वा अस्ति यावदेतद्यावदेवास्ति तदेषां वृङ्क्ते ॥ ६ ॥ शक्करीमित्येकचत्वारिꣳशच्च ।॥ २ ॥

இதில், வினாவிடைகளால் அஹீனமாகிய துவாதசாஹங் கூறப்படுகின்றது.

இருத்துவிக்கைப் பழிக்கும்வாயிலாக அதைச் செய்யும் எசமானனைப் புகழ்கின்றது.

பிராமணம் 1

ब्रह्मवादिनो वदन्ति किं द्वादशाहस्य प्रथमेनाहर्त्विजां यजमानो वृङ्क्त इति तेज इन्द्रियमिति किं द्वितीयेनेति प्राणानन्नाद्यमिति किं तृतीयेनेति त्रीनिमाँल्लोकानिति किं चतुर्थेनेति चतुष्पदः पशूनिति किं पञ्चमेनेति पञ्चाक्षरां पङ्क्तिमिति किꣳ षष्ठेनेति षडृतूनिति किꣳ सप्तमेनेति सप्तपदाꣳ शक्करीमिति किमष्टमेनेत्यष्टाक्षरां गायत्रीमिति किं नवमेनेति त्रिवृतꣳ स्तोममिति किं दशमेनेति दशाक्षरां विराजमिति किमेकादशेनेत्येकादशाक्षरां त्रिष्टुभमिति किं द्वादशेनेति द्वादशाक्षरां जगतीमित्येतावद्वा अस्ति यावदेतद्यावदेवास्ति तदेषां वृङ्क्ते ।

என்பது.

உரை

துவாதசாஹத்தில் ஒவ்வொரு நாளிலும் இருத்துவிக்களுக்குள் எசமானன் என்ன பயனையடைகின்றான்? என்று பிரமவாதிகள் வினவுகின்றனர். அதற்கு, முதல்நாள் தேசையும் இந்திரிய வன்மையையும், இரண்டாம்நாள் பிராணனையும் உணவுப் பொருளையும், மூன்றாநாள் மூன்று லோகங்களையும், நான்காம்நாள் நாற்கால் பிராணிகளான பசுக்களையும், ஐந்தாநாள் ஐந்து எழுத்துக்களைக் கொண்ட பந்திச்சந்தத்தையும், ஏழாநாள் ஏழு பாதங்களையுடைய சக்வரி என்னுஞ் சந்தத்தையும், எட்டாநாள் எட்டெழுத்துக்களைக் கொண்ட காயத்திரியையும், ஒன்பதாநாள் மும்மூன்றாகும் ஸ்துதி ஸ்தோமத்தையும், பத்தாநாள் பத்து எழுத்துக்களைக் கொண்ட விராட் என்னுஞ் சந்தத்தையும், பதினோராநாள் பதினொரு எழுத்துக்களைக் கொண்ட திருஷ்டுப் என்னுஞ் சந்தத்தையும், பன்னிரண்டாநாள் பன்னிரண்டு எழுத்துக்களைக் கொண்ட சகதிச் சந்தத்தையும் அடைகின்றான் என்பது விடையாம். அதா

பதின்மூன்றுநாள்)

வது மேற்கூறப்பட்ட பன்னிரண்டு நாட்களிலுமுள்ள பயன்களே இருத்துவிக்குக்களின் பயன்களாம். இவற்றையெல்லாம் எசமானனே அடைகின்றான் என்பதாம்.

இரண்டாமநுவாகம்
முற்றிற்று.

மூன்றாவது அநுவாகம்

ஒரு பஞ்சாதிக்குமேல் நாற்பத்துமூன்று பதங்களைக் கொண்டது.

திரயோதசராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.

एष वा आप्तो द्वादशाहो यत्त्रयोदशरात्रः समानꣳ ह्येतदहर्यत्प्रायणीयश्चोदयनीयश्च त्र्यतिरात्रो भवति त्रय इमे लोका एषां लोकानामाप्त्यै प्राणो वै प्रथमोऽतिरात्रो व्यानो द्वितीयोऽपानस्तृतीयः प्राणापानोदानेष्वेवान्नाद्ये प्रति तिष्ठन्ति सर्वमायुर्यन्ति य एवं विद्वाꣳसस्त्रयोदशरात्रमासते तदाहुर्वाग्वा एषा वितता॥७॥ यद्द्वादशाहस्तां विच्छिन्द्युर्यन्मध्येऽतिरात्रं कुर्युरुपदासुका गृहपतेर्वाक्स्यादुपरिष्टाच्छन्दोमानां महाव्रतं कुर्वन्ति संततामेव वाचमव रुन्धतेऽनुपदासुका गृहपतेर्वाग्भवति पशवो वै छन्दोमा अन्नं महाव्रतं यदुपरिष्टाच्छन्दोमानां महाव्रतं कुर्वन्ति पशुषु चैवान्नाद्ये च प्रति तिष्ठन्ति ॥ ८ ॥ वितता त्रिचत्वारिꣳशच्च । ॥ ३ ॥

இதில் பதின்மூன்று இரவு கொண்ட யாகம் கூறப்படுகின்றது.

அதைக்கூறுகின்றது.

பிராமணம் 1

एष वा आप्तो द्वादशाहो यत्त्रयोदशरात्रः समानꣳ ह्येतदहर्यत्प्रायणीयश्चोदयनीयश्च ।

என்பது

உரை

விதிக்கப்படும் இப்பதின்மூன்று நாட்கொண்ட யாகம் துவாதசாஹமே யாகும். இதில் ஒரு நாள் மிகுதியாதலின் இதுவே நிறைந்த பன்னிரு நாளாகும் என்க. நாள் மிகுதியாயிருத்தலின் இது எவ்வாறு துவாதசாஹத்திற்கு ஒப்பாகும் எனின்? துவாதசாஹத்திற் செய்வதுபோன்றே இதிலும் உதயனீயம் பிராணீயம் என்னும் இரண்டு அதிராத்திரங்களுமாம் ஆதலின் ஒப்பாம் என்பது.

இனி, இதன் விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம் 2

त्र्यतिरात्रो भवति त्रय इमे लोका एषां लोकानामाप्त्यै ।

என்பது

உரை

துவாதசாஹத்தில் பிராணீயம், உதனீயம் என்னும் இரண்டே அதிராத்திரங்களாம். இதில், மூன்று அதிராத்ரங்களுள்ளன; இவைகளால் மூவுலகத்தையுமடைகின்றான் என்பது.

திரயோதசத்தை (பதின்மூன்றுநாளை) விதிக்கின்றது

பிராமணம் 3

**प्राणो वै प्रथमोऽतिरात्रो व्यानो द्वितीयोऽपानस्तृतीयः प्राणापानोदाने-
ष्वेवान्नाद्ये प्रति तिष्ठन्ति सर्वमायुर्यन्ति य एवं विद्वाꣳसस्त्रयोदशरात्र-
मासते ।**

என்பது

உரை

முதலாவது அதிராத்திரம் பிராணனும், இரண்டாவது அதிராத்திரம் வியானனும், மூன்றுவது அதிராத்திரம் அபானனும், இம்மூன்றும் அன்ன முதலியவற்றில் நிலைக்கின்றன. இவ்வாறுணர்ந்து திரயோதசராத்திரம் என்னும் யாகத்தைச் செய்கின்றவன் முழு ஆயுளையுமடைகின்றான் என்பது.

பதின்மூன்றுநாள்)

முற்கூறியமத்திய (நடுவிலுள்ள) அதிராத்திரத்தை சந்தோமங்கட்கு முன்செய்தல் வேண்டுமென்பதை மறுத்து சந்தோமங்கட்கு பின்செய்யவேண்டுமென்று விதிக்கின்றது.

பிரமாணம் 4

तदाहुर्वाग्वा एषा वितता यद्द्वादशाहस्तां वि च्छिन्द्युर्यन्मध्येऽतिरात्रं कुर्युरुपदासुका गृहपतेर्वाक्स्यादुपरिष्टाच्छन्दोमानां महाव्रतं कुर्वन्ति संततामेव वाचमव रुन्धतेऽनुपदासुका गृहपतेर्वाग्भवति ।

என்பது.

உரை

துவாதசஹமானது விரிந்தவாக்குவடிவாம் அங்குள்ள ஸ்தோமங்கள் விடுபடல்கூடாதென்று பிரகிருதியில் உறுதியானதால் ஷடஹசந்தோமங்களுக்கு நடுவில் சர்வஸ்தோமாகிய அதிராத்திரத்தையநுட்டிக்கில் துவாதசாஹத்திற் கூறிய வாக்குத்தொடர்பை விட்டுவிடுகின்றான். அதனால், எசமானுடைய வாக்குப்பழுதுபடும். ஆதலின், சந்தோமங்கட்குமேல் துவாதசாத்திலுள்ள அவிவாக்கிய (மறந்ததைச்சொல்லாத) நாளை, சர்வஸ்த்தோம அதிராத்திரமாகச் செய்தல்வேண்டும். அதில் மகாவிரதத்தின் தர்மங்களிருப்பதாகக் கூறுங்கருத்துக்கொண்டு அதுமகா விரதமெனப்படுகின்றது. இவ்வாறு மேல் அநுட்டிக்கில் வாக்குத் தொடர்ச்சியுமாகிறது எசமானனுடைய வாக்குங் கெடாது என்பதாம்.

அத்தகைய மேலநுட்டானத்தையே மற்றேநவகையால் புகழ்கின்றது,

பிராமணம் 5

पशवो वै छन्दोमा अन्नं महाव्रतं यदुपरिष्टाच्छन्दोमानां महाव्रतं कुर्वन्ति पशुषु चैवान्नाद्ये च प्रति तिष्ठन्ति ।

என்பது

உரை

சந்தோமங்கள் கோக்களாம். மகாவிரதம், அதாவது சந்தோமங்கட்கு பின் அநுட்டிக்கப்படுவது அன்னமாம் என்பதுபொருந்தும். ஆதலின், அன்னமாகிய மகாவிரததர்மங்களை அதிராத்ரத்திற்குப்பிறகு செய்தல் வேண்டுமென்பது நியாயமாம். கோக்களிருக்கில் பால்முதலியன உண்டாமாதலின் என்க.

மூன்றுமநுவாகம்

முற்றிற்று

ஏழாங் காண்டம் மூன்றாம் பிரபாடகம்

நான்காவது அநுவாகம்

ஒரு பஞ்சாதிக்குமேல் முப்பத்துநான்கு பதங்களைக் கொண்டது.

சதுர்த்தசராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.

आदित्या अकामयन्तोभयोर्लोकयोर्ऋध्नुयामेति त एतं चतुर्दशरात्रमपश्यन्तमाऽहरन्तेनायजन्त ततो वै त उभयोर्लोकयोरार्ध्नुवन्नस्मिꣳश्चामुष्मिꣳश्च य एवं विद्वाꣳसश्चतुर्दशरात्रमासत उभयोरेव लोकयोर्ऋध्नुवन्त्यस्मिꣳश्चामुष्मिꣳश्च चतुर्दशरात्रो भवति सप्तग्राम्या ओषधयः सप्ताऽऽरण्या उभयीषामवरुद्ध्यै यत्पराचीनानि पृष्ठानि ॥ ९ ॥ भवन्त्यमुमेव तैर्लोकमभि जयन्ति यत्प्रतीचीनानि पृष्ठानि भवन्तीममेव तैर्लोकमभि जयन्ति त्रयस्त्रिꣳशौ मध्यतः स्तोमौ भवतः साम्राज्यमेव गच्छन्त्यधिराजौ भवतोऽधिराजा एव समानानां भवन्त्यतिरात्रावभितो भवतः परिगृहीत्यै ॥ १० ॥

पृष्ठानि चतुस्त्रिꣳशच्च । ॥ ४ ॥

இதில், பதினான்கு இரவுகள் கொண்ட யாகம் கூறப்படுகின்றது.

அதை விதித்தல்.

பிராமணம் 1

आदित्या अकामयन्तोभयोर्लोकयोर्ऋध्नुयामेति त एतं चतुर्दशरात्रमपश्यन्तमाऽहरन्तेनायजन्त ततो वै त उभयोर्लोकयोरार्ध्नुवन्नस्मिꣳश्चामुष्मिꣳश्च य एवं विद्वाꣳसश्चतुर्दशरात्रमासत उभयोरेव लोकयोर्ऋध्नुवन्त्यस्मिꣳश्चामुष्मिꣳश्च ।

என்பது.

பதினைந்துநாள்)

உரை

ஆதித்தர்கள் இவ்வுலக பரவுலகங்களின் சம்பத்தைவிரும்பி இச்சதுர்த்தசராத்திர யாகத்தைக் கண்டுபிடித்துத் தேடிச்செய்து இருவித வுலகச் சம்பத்துக்களை யடைந்தனர். இவ்வாறுணர்ந்து இச்சதுர்த்தசராத்திரயாகத்தைச் செய்கின்றவன் இவ் வுலக பரவுரகங்களின் சம்பத்தையடைகின்றான் என்பது.

இதன் நாளின் எண்ணைப் புகழ்கின்றது.

பிராமணம் 2

चतुर्दशरात्रो भवति सप्त ग्राम्या ओषधयस्सप्ताऽऽरण्या उभयीषामवरुध्यै ।

என்பது

உரை

பதினான்கு இரவுயாகமானது ஏழு கிராமத்திலுள்ள பசுக்கள், ஏழு அரணியத்திலுள்ள பசுக்கள் ஆதலின் இது இருவகைப்பசுக்களையும் அடைதற் பொருட்டாம் என்பது.

பிராயணீய உதயனீயமென்னும் இரண்டிற்கும் நடுவிலுள்ள பன்னிரண்டு நாட்களை விதிக்கின்றது.

பிராமணம் 3

यत्पराचीनानि पृष्ठानि भवन्त्यमुमेव तैर्लोकमभि जयन्ति यत्प्रतीचीनानि पृष्ठानि भवन्तीममेव तैर्लोकमभि जयन्ति ।

என்பது

உரை

ரதந்தரம், பிருகத், வைரூபம்; வைராசம், சாக்வரம், ரைவதம் என்னும் முறையாய் பிருஷ்டத் துதிகளுடன்கூடிய ஆறு நாட்களாலும் பரலோகமடையப்படுகின்றது. மாறுபட்ட இந்த பிருஷ்டத் துதிகளுடன் கூடிய ஆறுநாட்களாலும் இவ்வுலகம் அடையப்படுகின்றது என்பது.

இந்த ஆரோகணம் அவரோகணம் என்னு முறைகளையே மீண்டும் புகழ்கின்றது.

பிராமணம் 4

त्रयस्त्रिंशौ मध्यतः स्तोमौ भवतः साम्राज्यमेव गच्छन्त्यधिराजौ भवतोऽधिराजा एव समानानां भवन्ति ।

என்பது.

உரை

மும்முறைதிருப்புதலால், பதினைந்து, பதினேழு, இருபத்தொன்று, இருபத்தேழு, முப்பத்து மூன்றுஎன்னும் இம்முறை ஆறுஸ்தோமங்கள் ஆரோகமுறையாம். முப்பத்துமூன்று, இருபத்தேழு, இருபத்தொன்று, பதினேழு, பதினைந்து, திரிவிருத் (9) என்னும் இம்முறை அவரோகமுறையாம். இவ்வாற்றால் பன்னிருநாட்களுள், ஆறுவது ஏழாவதுநாட்களில் இடையின்றி முப்பத்துமூன்றுருவதாகிய இரண்டு ஸ்தோமங்களும் அமைகின்றன. அதனால் எசமானன் சாம்ராச்சியத்தை யடைகின்றான் இவ்விரண்டும் ஏனைய ஸ்தோமங்களுக்கு அதிராசனும் அதில் நம்போன்றார்கள் அதிலடங்கியிருத்தலின் என்க. இவ்வாற்றால் எசமானனும் எல்லா அரசர்கட்கும் மேலாகிய அரசனாகின்றான் என்பது.

பிராயணீய, உதயனீயம்என்னும் விசேடநாட்களிரண்டையும் விதிக்கின்றது.

பிராமணம் 5

अतिरात्रावभितो भवतः परिगृहीत्यै ।

என்பது

உரை

முன்னும் பின்னும் இரண்டு அதிராத்திரங்களாகின்றன இது பரிக்கிரகத்தின் பொருட்டாம் என்பது.

நான்காமநுவாகம்

முற்றிற்று.

ஏழாங் காண்டம் மூன்றாம் பிரபாடகம்

ஐந்தாவது அநுவாகம்

மூன்று பஞ்சாதிக்குமேல் முப்பத்தொருபதங்களைக் கொண்டது.

வேறொரு சதுர்த்தசராத்திரத்தைக்கூறும் பிராமணங்கள்

प्रजापतिस्सुवर्गं लोकमैत्तं देवा अन्वायन्तानादित्याश्च पशव-
श्चान्वायन्ते देवा अब्रुवन्यान्पशूनुपाजीविष्म त इमेऽन्वाग्मन्निति
तेभ्य एतं चतुर्दशरात्रं प्रत्यौहन्त आदित्याः पृष्ठैस्सुवर्गं लोकमा-
रोहन्त्र्यहाभ्यामस्मिँल्लोके पशून्प्रत्यौहन्पृष्ठैरादित्या अमुष्मिँल्लोक
आर्ध्नुवन्त्र्यहाभ्यामस्मिन् ॥ ११ ॥ लोके पशवो य एवं विद्वाꣳ-
सश्चतुर्दशरात्रमासत उभयोरेव लोकयोर्ऋध्नुवन्त्यस्मिꣳश्चामुष्मिꣳश्च
पृष्ठैरेवामुष्मिँल्लोक ऋध्नुवन्ति त्र्यहाभ्यामस्मिँल्लोके ज्योतिर्गौरायु-
रिति त्र्यहो भवतीयं वाव ज्योतिरन्तरिक्षं गौरसावायुरिमानेव लो-
कानभ्यारोहन्ति यदन्यतः पृष्ठानि स्युर्विविवधꣳ स्यान्मध्ये पृष्ठा-
नि भवन्ति सविवधत्वाय ॥ १२ ॥ ओजो वै वीर्यं पृष्ठान्योज
एव वीर्यं मध्यतो दधते बृहद्रथंतराभ्यां यन्तीयं वाव रथंतरमसौ
बृहदाभ्यामेव यन्त्यथो अनयोरेव प्रति तिष्ठन्त्येते वै यज्ञस्याञ्ज-
सायनी सुती ताभ्यामेव सुवर्गं लोकं यन्ति पराञ्चो वा एते
सुवर्गं लोकमभ्यारोहन्ति ये पराचीनानि पृष्ठान्युपयन्ति प्रत्यङ्त्र्यहो
भवति प्रत्यवरूढ्या अथो प्रतिष्ठित्या उभयोर्लोकयोर्ऋद्ध्वोत्तिष्ठ-
न्ति चतुर्दशैतास्तासां या दश दशाक्षरा विराडन्नं विराड्विराजै-
वान्नाद्यमव रुन्धते याश्चतस्रश्चतस्रो दिशो दिक्ष्वेव प्रति तिष्ठन्त्य-

(மற்றொரு பதினான்குநாள்

तिरात्रावभितो भातः परिगृहीत्यै ॥ १२ ॥ आर्ध्नुवन्त्यहाभ्याम-
स्मिन्त्संविवधत्वाय प्रतिष्ठित्या एकत्रिꣳशच्च । ॥ ५ ॥

இதில், வேறொரு சதுர்த்தசராத்திரம் கூறப்படுகின்றது.

அதைவிதிப்பதற்கு முன்னுரை கூறுகின்றது,

பிராமணம் 1

प्रजापतिस्सुवर्गं लोकमैत्तं देवा अन्वायन्तानादित्याश्च पशवश्चान्वायन्ते देवा अब्रुवन्यान्पशूनुपाजीविष्म त इमेऽन्वाग्मन्निति तेभ्य एतं चतुर्दशरात्रं प्रत्यौहन्त आदित्याः पृष्ठैस्सुवर्गं लोकमारोहन्त्र्यहाभ्यामस्मिँल्लोके पशून्प्रत्यौहन्पृष्ठैरादित्या अमुष्मिँल्लोक आर्ध्नुवन्त्र्यहाभ्यामस्मिन् लोके पशवः ।

என்பது

உரை

பிரசாபதி சுவர்க்கத்திற்குச் சென்றபோது பிரசாபதியைப்பின்பற்றி எல்லாத்தேவர்களும்போனார்கள். அத்தேவர்களைப்பின்பற்றி ஆதித்தர்களும் பசுக்களுஞ்சென்றன. ஆதித்தர்களையும் பசுக்களையுங்கண்டு, மனிதர்களும் யாமும் எப்பசுக்களையடைந்து பிழைப்போமோ, அப்பசுக்களும் நம்பின்னால் வந்துவிட்டன ஆதித்தர்கள் பசுக்கள் என்னுமிருவகையில் ஆதித்தர்கள் சுவர்க்கத்திற்கு ஏறுவார்களாக. பசுக்கள்மீண்டும் பூமிக்குப்போதல்வேண்டும் இதற்கு உபாயம் யாதென ஆராய்ந்து சதுர்த்தசராத்திர யாகத்தைக்கண்டு பிடித்து முறையாய் தேவர்கள் அநுட்டித்தனர். அதில், முதலாவது ஒரு அதிராத்திரம், பிறகு, சோதி, கௌ, ஆயுள் என்னும் ஆரோகணமாகிய மூன்று ராத்திரம். பிறகு, பிருஷ்டிய ஷடஹம், பிறகு, ஆயுர், கௌ, சோதி என்னும் அவரோகண மூன்றுராத்திரம். பிறகு, அதிராத்திரம் என்பன நாட்களாம் என்றிவ்வாறு அநுட்டிக்கும்போது பிருஷ்டம் என்னும் ஆறு நாட்களில் ஆதித்தர்கள் சுவர்க்கத்தையடைந்தனர். பிரத்தியா விருத்தியுடன்கூடிய மூன்று நாளில் தேவர்களும் பசுக்களும் இவ்வுலகத்திற்குத் திரும்பி வந்து விட்டனர். அவற்றுள், ஆதித்தர்கள் பிருஷ்டங்களால் சுவர்க்கத்தையடைந்து அங்கு நல்ல சம்பத்தையடைந்தனர். பசுக்கள் மூன்று நாளில் இவ்வுலகில் நல்ல சம்பத்தையடைந்தன என்பது. பிரத்தியாவிருத்தி = மீண்டுந்திரும்பல்.

அதை இப்போது விதிக்கின்றது

பிராமணம் 2

य एवं विद्वाꣳसश्चतुर्दशरात्रमासत उभयोरेव लोकयोर्ऋध्नुवन्त्यस्मिꣳश्चा-
मुष्मिꣳश्च पृष्ठैरेवामुष्मिँल्लोक ऋध्नुवन्ति त्र्यहाभ्यामस्मिँल्लोके ।

என்பது

உரை

இவ்வாறுணர்ந்து சதுர்த்தசராத்திரம் என்னும் யாகத்தைச் செய்கின்றவன், இவ்வுலக பரஉலக சம்பதநுக்களையடைகின்றான். அதாவது பிருஷ்டத்துதி நாள்களால் பரஉலகை சம்பத்தையும், மூன்று நாட்களால் இவ்வுலக சம்பத்தையுமடைகின்றான் என்பது.

ஆரோகணமாகிய முதலாவது மூன்று நாளை விதிக்கின்றது.

பிராமணம் 3

ज्योतिर्गौरायुरिति त्र्यहो भवतीयं वाव ज्योतिरन्तरिक्षं गौरसावायुरिमा-
नेव लोकानभ्यारोहन्ति ।

என்பது.

உரை

சோதிட்டோமம், கோஷ்டோமம், ஆயுஷ்டோமம் என்பன மூன்று நாட்களாம். இவைகளால் மூன்றுலகங்களையுமடைகின்றான் என்பது.

ஆறு நாட்களின் கிரம விசேடங்களை விதிக்கின்றது.

பிராமணம் 4

यदन्यतः पृष्ठानि स्युर्विविवधꣳ स्यान्मध्ये पृष्ठानि भवन्ति सविवधत्वा-
यौजो वै वीर्यं पृष्ठान्योज एव वीर्यं मध्यतो दधते ।

என்பது

உரை

பிருஷ்ட நாட்கள் இரண்டுபக்கங்களிலும் இருக்கின் இருதுனிகளிலுஞ் சுமை கட்டும் தடிபோலாகும் இக்கருமம். ஆகலின், அதைப்போன்றிருப்பதற்கு நடுவில் பிருஷ்டநாட்களிருக்தல் வேண்டும். இப்பிருஷ்டம்,

உடம்பின் வன்மைக்கும் இந்திரியவன்மைக்கும் காரணமாதலின் நடுவில் அநுட்டிக்கில் நடுவில் வீரியத்தையும் வன்மையையும் வைத்ததாகின்றது என்பது.

அந்நாட்களில், விதியால்வந்த வைரூப வைராச முதலான சாமப்பாடல்களை விலக்குதற் பொருட்டு விதிக்கின்றது.

பிராமணம் 5

बृहद्रथंतराभ्यां यन्तीयं वाव रथंतरमसौ बृहदाभ्यामेव यन्त्यथो अनयोः रेव प्रति तिष्ठन्त्येते वै यज्ञस्याञ्जसायनी स्रुती ताभ्यामेव सुवर्गं लोकं यन्ति ।

என்பது.

உரை

முதலாவது, மூன்றாவது, ஐந்தாவது நாட்களில் ரதந்தரம் என்னும் பிருஷ்டத்துதி செய்தல் வேண்டும். இரண்டாவது, நான்காவது, ஆறாவது நாட்களில் பிருகத் சாமம் என்னும் பிருஷ்டத் துதிகளைச் செய்தல் வேண்டும். ஏனையவற்றிற்கு உரை கூறப்பட்டது என்பது.

அபிரோகணமாகிய மூன்று நாளை விதிக்கின்றது.

பிராமணம் 6

पराञ्चो वा एते सुवर्गं लोकमभ्यारोहन्ति ये पराचीनानि पृष्ठान्युपयन्ति प्रत्यङ्त्र्यहो भवति प्रत्यवरूढ्या अथो प्रतिष्ठित्या उभयोर्लोकयोर्ऋद्ध्वोत्तिष्ठन्ति ।

என்பது

உரை

முறை மாறிச் செய்யும் பிருஷ்டநாளை அநுட்டிக்கின்ற எசமானர்கள் மீண்டும் வராத சுவர்க்கத்தையடைகின்றனர். ஆதலின், சுவர்க்கத்திலிருந்து இறங்காதிருத்தற் பொருட்டு, ஆயுள், கோ, சோதியென மாறிச் செய்யப்படுகின்றன. மற்றும், இம்மூன்றுநாளும் இவ்வுலகப் பெருமையை யடைதற் பொருட்டுமாகின்றன. ஆதலின், இரண்டுலகப் பெருமைகளையுமடைந்து பெருமையுடனிருக்கின்றான் என்பது.

நாட்கள்கொண்ட எண் புகழப்படுகின்றது.

பிராமணம் 7

चतुर्दशैतास्तासां या दश दशाक्षरा विराडन्नं विराड्विराजैवान्नाद्यमव रुन्धते याश्चतस्रश्चतस्रो दिशोदिक्ष्वेव प्रति तिष्ठन्ति ।

என்பது

சதுர்த்தச நாட்களுள் பதினான்கு இரவுகளிருக்கின்றன. அவ்விரவுகளுள், பத்து இரவுகள் பத்து எழுத்துக்கள் கொண்ட விராட் சந்தவாயிலாக உணவுப் பொருளைக் கொடுக்கின்றன. மேலேயுள்ள நான்கு இரவுகளும் எண் ஒப்பால் நான்கு திக்குக்களிலும் பெருமையை யுண்டாக்குகின்றன என்பது.

பிராயணீய உதயனீயங்களை விதிக்கின்றது.

·பிராமணம் 8

अतिरात्रावभितो भवतः परिगृहीत्यै ।

என்பது.

உரை

இரண்டு பக்கங்களிலுமுள்ள அதிராத்திரங்களிரண்டும் பரிக்கிரகணத்தின் பொருட்டு ஆகின்றன என்பது.

ஐந்தாம் அநுவாகம்
முற்றிற்று

ஏழாங் காண்டம் மூன்றும் பிரபாடகம்

ஆறுவது அநுவாகம்

இரண்டு பஞ்சாதிக்குமேல் ஒரு பதத்தைக் கொண்டது.

பஞ்சதசராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.

इन्द्रो वै सदृङ्देवताभिरासीत्स न व्यावृतमगच्छत्स प्रजापति-मुपाधावत्तस्मा एतं पञ्चदशरात्रं प्रायच्छत्तमाऽहरत्तेनायजत ततो वै सोऽन्याभिर्देवताभिर्व्यावृतमगच्छद्य एवं विद्वांसः पञ्चदश-

रात्रमासते व्यावृतमेव पाप्मना भ्रातृव्येण गच्छन्ति ज्योतिर्गौरायु-
रिति त्र्यहो भवतीयं वाव ज्योतिरन्तरिक्षम् ॥ १४ ॥ गौरसावायु-
रेष्वेव लोकेषु प्रति तिष्ठन्त्यसत्रं वा एतद्यदछन्दोमं यच्छन्दोमा
भवन्ति तेन सत्रं देवता एव पृष्ठैरव रुन्धते पशूञ्छन्दोमैरोजो वै
वीर्यं पृष्ठानि पशवश्छन्दोमा ओजस्येव वीर्ये पशुषु प्रति तिष्ठन्ति
पञ्चदशरात्रो भवति पञ्चदशो वज्रो वज्रमेव भ्रातृव्येभ्यः प्र हर-
न्त्यतिरात्रावभितो भवत इन्द्रियस्य परिगृहीत्यै ॥ १५ ॥ अन्त-
रिक्षमिन्द्रियस्यैकं च । ॥ ६ ॥

இதில் பதினைந்து நாள் கொண்டயாகங் கூறப்படுகின்றது.

அதை விதித்தல்.

பிராமணம் 1

इन्द्रो वै सदृङ्देवताभिरासीत्स न व्यावृतमगच्छत्स प्रजापतिमुपाधाव-त्तस्मा एतं पञ्चदशरात्रं प्रायच्छत्तमाऽहरत्तेनायजत ततो वै सोऽन्या-भिर्देवताभिर्व्यावृतमगच्छद्य एवं विद्वाꣳसः पञ्चदशरात्रमासते व्या-वृतमेव पाप्मना भ्रातृव्येण गच्छन्ति ।

என்பது.

உரை

இந்திரன், தேவர்கட்கு இறைவனாயிருந்தும் எல்லாத் தேவர்களைப் போன்று இருந்தனனேயல்லாது அவர்களினும் வேறாய் தனிப் பெருமை யுடையோனாயிருந்திலன். பிறகு, பிரமனையடைந்து அவன்பால் உபதேசம் பெற்று பதினைந்து இரவுகள் கொண்ட யாகஞ் செய்து தேவர்களினின்று தனிப்பெருமையை யடைந்தனன். அவ்வாறே, இத்தன்மையை யுணர்ந்து செய்கின்றவர்களும், பாவத்தினின்றும் பகைவனிலிருந்தும் விடுபட்டிருக் கின்றார்கள் என்பது.

அதில், ஒரு மூன்று நாளை விதிக்கின்றது.

பிராமணம் 2

ज्योतिर्गौरायुरिति ऽयह्नो भवतीयं वाव ज्योतिरन्तरिक्षं गौरसावायुरेष्वेव लोकेषु प्रति तिष्ठन्ति ।

என்பது

உரை

சோதி, கௌ, ஆயுள் என்பன மூன்றுநாள். இவைகளால் முறையே மூன்றுலகங்களிலும் பெருமையை யடைகின்றார்கள் என்பது.

நான்கு சந்தங்களையுடைய பிருஷ்டியத்தையும், ஷடஹத்தையும் விதிக்கின்றது

பிராமணம் 3

असत्रं वा एतद्यदच्छन्दोमं यच्छन्दोमा भवन्ति तेन सत्रं देवता एव पृष्ठैरव रुन्धते पशूञ्छन्दोमैरोजो वै वीर्यं पृष्ठानि पशवश्छन्दोमा ओजस्येववीर्ये पशुषु प्रति तिष्ठन्ति ।

என்பது

உரை

இங்கு, சந்தஸ்தோமங்களின்றிய சத்திரத்தைப் பழிப்பதில் கருத்தில்லை மற்றோ, சந்தோமங்களையுடையவைகளைப் புகழ்வதில் கருத்தாம். சந்தோமமின்றியது சத்திரமாகாது சந்தோமமுடையதே சத்திரமாம். மற்றும், பிருஷ்டமென்னும் நாட்களால் தேவதைகளையடைகின்றார்கள். சந்தோம நான்கால் பசுக்களையடைகின்றார்கள். பிருஷ்டம் ஆறுநாளும் வன்மை வீரியவடிவமாதலால், அவ்விரண்டின் அநுட்டானத்தால் வீரியம் வன்மை முதலானவைகளையடைகின்றான். ஆதலின், பிருஷ்டிய ஆறு, சந்தோம நாட்களும் அநுட்டிக்கத் தக்கவைகள் என்பது.

கிருதுவிலுள்ள நாளின் எண்ணைப் புகழ்கின்றது.

பிராமணம் 4

पञ्चदशरात्रो भवति पञ्चदशो वज्रो वज्रमेव भ्रातृव्येभ्यः प्रहरन्ति ।

என்பது

உரை

பதினைந்து இரவுகளாகின்றன. பதினைந்து ஸ்தோமமும் துன்பகாரணமாதலின் வச்சிரமாம. இவ்வாற்றல் இதை அநுட்டிக்கின்றவன் பகைவர்களின் பொருட்டு வச்சிராயுதத்தை ஏவுகின்றவனுகின்ருன என்பது.

பிராயணீய உதயனீயங்களை விதிக்கின்றது.

பிராமணம் 5

अतिरात्रावभितो भवत इन्द्रियस्य परिगृहीत्यै ।

என்பது

உரை

இருபுறங்களும் அதிராத்திரங்களாகின்றன. இது இந்திரியத்தைக் கிரகித்தற் பொருட்டாம் என்பது.

ஆருவது அநுவாகம்
முற்றிற்று

ஏழாங் காண்டம் மூன்றும் பிரபாடகம்

ஏழாவது அநுவாகம்

நான்கு பஞ்சாதிக்குமேல் இரண்டு பதங்களைக்கொண்டது.

மற்ருெரு பஞ்சதசராத்திரத்தைக்கூறும் பிராமணங்கள்

इन्द्रो वै शिथिल इवाप्रतिष्ठित आसीत्सोऽसुरेभ्योऽबिभेत्स प्र-
जापतिमुपाधावत्तस्मा एतं पञ्चदशरात्रं वज्रं प्रायच्छत्तेनासुरान्परा-
भाव्य विजित्य श्रियमगच्छदग्निष्टुता पाप्मानं निरदहत पञ्चदश-
रात्रेणौजो बलमिन्द्रियं वीर्यमात्मन्नधत्त य एवं विद्वाꣳसः पञ्च-
दशरात्रमासते भ्रातृव्यानेव पराभाव्य विजित्य श्रियं गच्छन्त्यग्नि-
ष्टुता पाप्मानं निः ॥ १६ ॥ दहन्ते पञ्चदशरात्रेणौजो बलमिन्द्रियं
वीर्यमात्मन्दधत एता एव पशव्याः पञ्चदश वा अर्धमासस्य रात्र-

योऽर्धमासशस्संवत्सर आप्यते संवत्सरं पशवोऽनु प्र जायन्ते तस्मा-
त्पशव्या एता एव सुवर्ग्याः पञ्चदश वा अर्धमासस्य रात्रयोऽर्ध-
मासशस्संवत्सर आप्यते संवत्सरस्सुवर्गो लोकस्तस्मात्सुवर्ग्या ज्यो-
तिर्गौरायुरिति त्र्यहो भवतीयं वाव ज्योतिरन्तरिक्षम् ॥ १७ ॥
गौरसावायुरिमानेव लोकानभ्यारोहन्ति यदन्यतः पृष्ठानि स्युर्विवि-
वधः स्यान्मध्ये पृष्ठानि भवन्ति सविवधत्वायौजो वै वीर्यं मध्यतो
दधते बृहद्रथंतराभ्यां यन्तीयं वाव रथंतरमसौ बृहदाभ्यामेव यन्त्य-
थो अनयोरेव प्रति तिष्ठन्त एते वै यज्ञस्याञ्जसा यनी स्रुती ता-
भ्यामेव सुवर्गं लोकम् ॥ १८ ॥ यन्ति पराञ्चो वा एते सुवर्गं
लोकमभ्यारोहन्ति ये पराचीनानि पृष्ठान्युपयन्ति प्रत्यङ्त्र्यहो भव-
ति प्रत्यवरूढ्या अथो प्रतिष्ठित्या उभयोर्लोकयोर्ऋद्ध्वोत्तिष्ठन्ति
पञ्चदशैतास्तासां या दश दशाक्षरा विराडन्नं विराड्विराजैवान्नाद्य-
मव रुन्धते याः पञ्च पञ्च दिशो दिक्ष्वेव प्रति तिष्ठन्त्यतिरात्राव-
भितो भवत इन्द्रियस्य वीर्यस्य प्रजात्यै पशूनां परिगृहीत्यै ॥१९॥
गच्छन्त्यग्निष्टुता पाप्मानं निरन्तरिक्षं लोक प्रजात्यै द्वे च । ॥७॥

இதில், மற்றொரு பஞ்சதசராத்திரம் கூறப்படுகின்றது.

அதைவிதிக்கின்றது

பிராமணம் 1

इन्द्रो वै शिथिल इवाप्रतिष्ठित आसीत्सोऽसुरेभ्योऽबिभेत्स प्रजापतिमुपा-
धावत्तस्मा एतं पञ्चदशरात्रं वज्रं प्रायच्छत्तेनासुरान्पराभाव्य विजित्य
श्रियमगच्छदग्निष्टुता पाप्मानं निरदहत पञ्चदशरात्रेणौजो बलमिन्द्रियं
वीर्यमात्मन्नधत्त ।

என்பது.

உரை.

ஒருக்கால் இந்திரன் வன்மைகுன்றியவனுய் போரிடமுடியாமல் தனித்தொருவனுயும் வறுமையுடையவனுயும் உட்காருதற்கு ஓரிடமுமின்றியிருந்தனன். பிறகு, அவன், அசுரர்கட்குப்பயந்து கொண்டு பிரசாபதியின் உபதேசத்தால்மேல்வரும் பஞ்சதசராத்திர யாகத்தைச் செய்து அசுரர்களைத் தோற்கடித்து சம்பத்தையடைந்தனன். மற்றும்இவ்வேள்வியின் 'அக்கினிஷ்டுத், என்னும் இரண்டாவது நாளால் இளைத்துப் போனதற்குக் காரணமாகிய பாவமுழுதையும் போக்கினன். எஞ்சிய பஞ்சதசராத்திரத்தால் வன்மைக்குக் காரணமாகிய ஏழாந்தாதுவையும், உடம்பின்வன்மையையும் இந்திரியங்களின் வன்மையையும் போரில்உற்சாகதனையுந் தேடிக்கொண்டனன் என்பது.

இதையுணர்ந்தவர்களைப் புகழ்கின்றது

பிராமணம் 2

य एवं विद्वाꣳसः पञ्चदशरात्रमासते भ्रातृव्यानेव पराभाव्य विजित्य
श्रियं गच्छन्त्यग्निष्टुता पाप्मानं निर्दहन्ते पञ्चदशरात्रेणौजो बलमि-
न्द्रियं वीर्यमात्मन्दधते ।

என்பது

உரை

இத்தன்மையை யுணர்ந்து பஞ்சதசராத்திரயாகத்தைச் செய்கின்றவர்கள் பகைவனைவென்று சம்பத்தையடைகின்றார்கள். எவ்வாற்றாலெனின்? அக்கினிஷ்டுத் என்னும் இரண்டாம் நாளால் பாவமுழுதையும் போக்குகின்றார்கள். எஞ்சிய பஞ்சதசராத்திரத்தால் வீரியம் வன்மை முதலியவைகளை யடைகின்றார்கள் என்பது.

இவ்வேள்வியிலுள்ள பதினைந்து இரவுகளைப் புகழ்கின்றது,

பிராமணம் 3

एता एव पशव्याः पञ्चदश वा अर्धमासस्य रात्रयोऽर्धमासशस्संवत्सर
आप्यते संवत्सरं पशवोऽनुप्रजायन्ते तस्मा पशव्याः ।

என்பது.

பதினைந்து நாள்)

உரை

இவ்வேள்வியிலுள்ள இரவுகள் பசுக்கட்கு இனியவைகள், பசுக்களை யடையக் காரணமாதலின்என்க. என்னை? ஒருமாதத்தின் பாதிக்குப தினைந்து இரவுகள் அப்பாதி மாதமும் முறை ஒருவருடமாய் விடுகின்றது பசுக்களும் ஒருவருடம் கருப்பத்திலிருந்து பிறக்கின்றன. ஆதலின் எண்ணிக்கைவாயி லாக இரவுகள் பசுக்கட்குக் காரணங்களாகின்றன என்பது.

மீண்டும் மற்றொருவகையால் புகழ்கின்றது,

பிராமணம் 4

एता एव सुवर्ग्याः पञ्चदश वा अर्धमासस्य रात्रयोऽर्धमासशस्संवत्सर आप्यते संवत्सरस्सुवर्गो लोकस्तस्मात्सुवर्ग्याः ।

என்பது.

உரை

இப் பதினைந்து இரவுகளும் சுவர்க்கத்திற்கு அநுகூலங்கள் பாதிமாதத் தின் பதினைந்து இரவுகள் முறையாய் எண்வாயிலாக வருடமாகும்போது அவ்வருடம் வசந்தகாலசோதிட்டோம அநுட்டானவாயிலாக சுவர்க்கத்தை யடைவதற்குக்காரணமாம். ஆதலின், இவ்விரவுகள் சுவர்க்கத்தின்பொருட்டு நல்லவைகளாகின்றன என்பது.

இனி நாள்விசேடங்களை விதித்தல்வேண்டும்; அதில், அக்கினிஷ்டுத், என்னு மொருநாளானது துதிகொண்டு விதியையூகித்துக்கொள்ளத்தகுந்ததாம் அதன்விஷ யம் முன்கூறப்பட்டது. அதற்குமேல் மூன்றுநாட்கள் விதிக்கப்படுகின்றன.

பிராமணம் 5

ज्योतिर्गौरायुरिति त्र्यहो भवतीयं वाव ज्योतिरन्तरिक्षं गौरसावायुरिमानेव लोकानभ्यारोहन्ति ।

என்பது.

உரை

சோதி, கௌ, ஆயுள் என்பன மூன்று நாட்கள் இவைகளால் மூன்றுல கங்களும் அடையப்படுகின்றனஎன்பது.

பிருஷ்டிய ஆறுநாட்களின்தினங்களை விதிக்கின்றது,

பிராமணம் 6

यदन्यतः पृष्ठानि स्युर्विविवधꣳस्यान्मध्ये पृष्ठानि भवन्ति सविवधत्वायौ-
जो वै वीर्यं पृष्ठान्योज एव वीर्यं मध्यतो दधते बृहद्रथंतराभ्यां यन्तीयं
वाव रथंतरमसौ बृहदाभ्यामेव यन्त्यथो अनयोरेव प्रति तिष्ठन्त्येते वै
यज्ञस्याञ्जसायनी स्रुती ताभ्यामेव सुवर्गं लोकं यन्ति ।

என்பது.

உரை

இதன் உரையை முன்மந்திரம்போல் உரைத்துக்கொள்க. அதாவது ஐந்தாமநுவாகத்தின் நான்காம் பிராமாணத்தின் உரைபோன்றது என்பது.

ஆரோகணமாகிய மூன்றுநாட்கள்விதிக்கப்பட்டன. இப்போது அவரோகணமாகிய மூன்றுநாட்கள் விதிக்கப்படுகின்றன.

பிராமணம் 7

पराञ्चो वा एते सुवर्गं लोकमभ्यारोहन्ति ये पराचीनानि पृष्ठान्युपयन्ति
प्रत्यङ्त्र्यहो भवति प्रत्यवरूढ्या अथो प्रतिष्ठित्या उभयोर्लोकयोर्ऋ-
द्ध्वोत्तिष्ठन्ति ।

என்பது.

உரை

இதன்உரையும் ஐந்தாம்அநுவாகத்தின் ஆறுவது பிராமணத்தின் உரைபோன்றது என்பது.

வேள்வியிலுள்ள இரவுகளின் எண்ணைப் புகழ்கின்றது.

பிரமரணம் 8

पञ्चदशैतास्तासां या दश दशाक्षरा विराडन्नं विराड्विराजैवान्नाद्यमव
रुन्धते याः पञ्च पञ्च दिशो दिक्ष्वेव प्रति तिष्ठन्त्यतिरात्रावभितो
भवत इन्द्रियस्य वीर्यस्य प्रजायै पशूनां परिगृहीत्यै ।

என்பது.

பதினேழுநாள்)

உரை

மேல்திசையுடன் திசைகள் ஐந்து. இதன் உரையை முன்போல் உரைத்துக் கொள்க என்பது.

ஏழாமநுவாகம்
முற்றிற்று

ஏழாங் காண்டம் மூன்றும் பிரபாடகம்

எட்டாவது அநுவாகம்

ஒருபஞ்சாதிக்குமேல் முப்பத்தேழு பதங்களைக் கொண்டது

சப்ததசராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.

प्रजापतिरकामयतान्नादस्स्यामिति स एतꣳ सप्तदशरात्रमप-
श्यत्तमाऽहरत्तेनायजत ततो वै सोऽन्नादोऽभवद्य एवं विद्वाꣳसः
सप्तदशरात्रमासतेऽन्नादा एव भवन्ति पञ्चाहो भवति पञ्च वा
ऋतवस्संवत्सर ऋतुष्वेव संवत्सरे प्रति तिष्ठन्त्यथो पञ्चाक्षरा पङ्-
क्तिः पाङ्क्तो यज्ञो यज्ञमेवाव रुन्धतेऽसत्रं वा एतत् ॥ २० ॥ यद-
छन्दोमं यच्छन्दोमा भवन्ति तेन सत्रं देवता एव पृष्ठैरव रुन्धते
पशूञ्छन्दोमैरोजो वै वीर्यं पृष्ठानि पशवश्छन्दोमा ओजस्येव वीर्ये
पशुषु प्रति तिष्ठन्ति सप्तदशरात्रो भवति सप्तदशः प्रजापतिः प्रजाप-
तेराप्त्या अतिरात्रावभितो भवतोऽन्नाद्यस्य परिगृहीत्यै ॥ २१ ॥
एतत्सप्तत्रिꣳशच्च । ॥ ८ ॥

இதில் பதினேழு நாள் யாகங் கூறப்படுகின்றது.

அதைவிதிக்கின்றது

பிராமணம் 1

प्रजापतिरकामयतान्नादस्स्यामिति स एतꣳ सप्तदशरात्रमपश्यत्तमाऽह-
रत्तेनायजत ततो वै सोऽन्नादोऽभवद्य एवं विद्वाꣳसस्सप्तदशरात्रमा-
सतेऽन्नादा एव भवन्ति ।

என்பது

பிராசபதி, அன்னத்தை நன்கு அருந்தல் வேண்டுமென்று விரும்பி இப்பதினேழு இரவுகள் கொண்டயாகத்தைக் கண்டுபிடித்துத் தேடிச்செய்து நன்கு அன்னமருந்து கின்றவனாயினன். அதுபோல் பதினேழு இரவுகள் கொண்டயாகத்தைச் செய்கின்றவனும் இனிது மிகுந்த உணவருந்துகின்றவனாகின்றான் என்பது.

இந்நாட்களுள், சோதி, கௌ, ஆயுள் என்பது போன்ற ஐந்து நாட்களை விதிக்கின்றது

பிராமணம் 2

पञ्चाहो भवति पञ्च वा ऋतवस्संवत्सर ऋतुष्वेव संवत्सरे प्रति तिष्ठन्त्य-थो पञ्चाक्षरा पङ्क्तिः पाङ्क्तो यज्ञो यज्ञमेवाव रुन्धते ।

என்பது.

உரை

சோதி, கௌ, ஆயுள் என்பதை இரண்டு பங்காக்கில் ஆறுகின்றன ஆறில் இரண்டாவதாகிய சோதியை விட்டுவிடில் ஐந்து நாளாகின்றன. இவ்வாறே பனிக்காலத்தையும் குளிர்காலத்தையும் ஒன்றுபடுத்தில் இருதுக்களும் ஐந்தாகின்றன. இருதுக்கள்வருடத்திலும் வருடம்இருதுக்களிலும் நிலைக்கின்றன. இவ்வாற்றால் ஐந்தெழுத்துக்களைகொண்டது பந்திச் சந்தமாம் எக்ஞம் பாந்தமாம் ஆதலின் இதனால் எக்ஞத்தையடைகின்றான் என்பது.

பிருஷ்டிய ஆறுநாளையும், சந்தோமநான்குநாளையும் விதிக்கின்றது

பிராமணம் 3

असत्रं वा एतद्यदच्छन्दोमं यच्छन्दोमा भवन्ति तेन सत्रं देवता एव पृष्ठैरव रुन्धते पशूञ्छन्दोमैरोजो वै वीर्यं पृष्ठानि पशवश्छन्दोमा ओ-जस्येव वीर्ये पशुषु प्रति तिष्ठन्ति ।

என்பது.

உரை.

இதன், உரையை முன்போல் உரைத்துக் கொள்க என்பது.

வேள்வியிலுள்ள இரவிகளின் எண்புகழப்படுகின்றது

பிராமணம் 4

सप्तदशरात्रो भवति सप्तदशः प्रजापतिः प्रजापतेराप्त्यै ।

என்பது.

உரை

பதினேழு இரகளாகின்றன. ஆசிராவய, என்பது முதலியதும் பதினேழு எழுத்துக்களாமாதலின் அவவெழுத்துவடிவமாகிய பிரசாபதியை அடைதற்கு இது காரணம் என்பது.

பிராயணீய உதயனீய மென்னும் முதல் கடை வேள்விகளிரண்டையும் விதிக்கின்றது.

பிரமாணம் 5

अतिरात्रावभितोभवतोऽन्नाद्यस्य परिगृहीत्यै ।

என்பது

உரை

முன் பின் செய்யப்படும் அதிராத்திரங்களிரண்டும் அன்னமுதலியவற்றைக் கொள்வதற்குக் காரணமாம் என்பது.

எட்டாமநுவாகம்
முற்றிற்று.

ஏழாங் காண்டம் மூன்றும் பிரபாடகம்

ஒன்பதாவது அநுவாகம்

மூன்று பஞ்சாதிக்குமேல் இருபத்துமூன்று பதங்களைக் கொண்டது.

விம்சதிராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.

सा विराड्विक्रम्यातिष्ठद्ब्रह्मणा देवेष्वन्नेनासुरेषु ते देवा अका-
मयन्तोभयꣳ सं वृञ्जीमहि ब्रह्म चान्नं चेति त एता विꣳशतिꣳ-

रात्रीरपश्यन्ततो वै त उभयꣳ समवृञ्जत ब्रह्म चान्नं च ब्रह्मवर्चसिनोऽन्नादा अभवन्य एवं विद्वाꣳस एता आसत उभयमेव सं वृञ्जते ब्रह्म चान्नं च ॥ २२ ॥ ब्रह्मवर्चसिनोऽन्नादा भवन्ति द्वे वा एते विराजौ तयोरेव नाना प्रति तिष्ठन्ति विꣳशो वै पुरुषो दश हस्त्या अङ्गुलयो दश पद्या यावानेव पुरुषस्तमाप्त्वोत्तिष्ठन्ति ज्योतिर्गौरायुरिति त्र्यहा भवन्तीयं वाव ज्योतिरन्तरिक्षं गौरसावायुरिमानेव लोकानभ्यारोहन्त्यभिपूर्वं त्र्यहा भवन्त्यभिपूर्वमेव सुवर्गं ॥ २३ ॥ लोकमभ्यारोहन्ति यदन्यतः पृष्ठानि स्युर्विविवधꣳ स्यान्मध्ये पृष्ठानि भवन्ति सविवधत्वायौजो वै वीर्यं पृष्ठान्योज एव वीर्यं मध्यतो दधते बृहद्रथंतराभ्यां यन्तीयं वाव रथंतरमसौ बृहदाभ्यामेव यन्त्यथो अनयोरेव प्रति तिष्ठन्त्येते वै यज्ञस्याञ्जसायनी स्रुती ताभ्यामेव सुवर्गं लोकं यन्ति पराञ्चो वा एते सुवर्गं लोकमभ्यारोहन्ति ये पराचीनानि पृष्ठान्युपयन्ति प्रत्यङ्त्र्यहो भवति प्रत्यवरूढ्या अथो प्रतिष्ठित्या उभयोर्लोकयोर्ऋद्ध्वोत्तिष्ठन्त्यतिरात्रावभितो भवतो ब्रह्मवर्चसस्यान्नाद्यस्य परिगृहीत्यै ॥ २४ ॥ वृञ्जते ब्रह्म चान्नं च सुवर्गमेते सुवर्गं त्रयोविꣳशतिश्च । ॥ ९ ॥

இதில் இருபது இரவுகள்கொண்டயாகங் கூறப்படுகின்றது.

இருபதுநாள்)

அதை விதிக்கின்றது

பிராமணம் 1

सा विराड्विक्रम्यातिष्ठद्ब्रह्मणा देवेष्वन्नेनासुरेषु ते देवा अकामयन्तोभयꣳ सं वृञ्जीमहि ब्रह्म चान्नं चेति त एता विꣳशतिꣳ रात्रीरपश्यन्ततो वै त उभयꣳ समवृञ्जत ब्रह्म चान्नं च ब्रह्मवर्चसिनोऽन्नादा अभवन्य एवं विद्वाꣳस एता आसत उभयमेव सं वृञ्जते ब्रह्मचान्नंच ब्रह्मवर्चसिनो-ऽन्नादा भवन्ति ।

என்பது

உரை

தசராத்திராபிமானியாகிய 'விராட்' என்னுந் தேவதை தேவர்களிடத்தில் பிரமவொளியாகவும், அசுரர்களிடத்தில்உணவுப்பொருள் முதலானவடிவமாக வுமிருக்கின்றது.தேவர்கள், அவ்விருவகைகளையும் யாமே அடைதல் வேண்டு மென விரும்பி மேல்வரும் இருபது இரவுகள் கொண்ட யாகத்தைக்கண்டு பிடித்துச் செய்து அசுரர்களிடத்திலிருந்ததையும் பிடுங்கிக்கொண்டு இவர்க ளே, பிரமவொளி, உணவுப்பொருள் என்னுமிரண்டையுமடைந்தனர். இவ்வா றுணர்ந்து அதைச் செய்கின்றவன் அவ்விருவகைப் பயன்களையுமடைகின் றான். மற்றும், உணவு மிக்கருந்துகின்றவனுமாகின்றான் என்பது. பன்மை பிரமவொளியாகிய வேள்வி நாள்களைப்பற்றியது. ஒருமை வேள்வியைப்பற்றி யது என்பது.

வேள்வியிலுள்ள இருபது இரவுகளைப்புகழ்கின்றது

பிராமணம் 2

द्वे वा एते विराजौ तयोरेव नाना प्रति तिष्ठन्ति विꣳशो वै पुरुषो दश हस्त्या अङ्गुलयो दश पद्या यावानेव पुरुषस्तमाप्त्वोत्तिष्ठन्ति ।

என்பது

உரை

இருபதை இரண்டாய்ப் பிரிக்கில் பத்தாகிறது ஆகவே இரண்டு விராட் ஆகின்றன. அவ்விரண்டு பத்தும் தனித்தனி நின்று பிரமவொளியையும், உணவுப் பொருள் முதலியவற்றையுங் கொடுப்பதால் நிறைந்த சம்பத்தை யடைகின்றான். அல்லது, அறிஞர்கழகத்தும், வணிகர் கழகத்தும் பெருண்மை

யைக் கொடுக்கின்றன. மற்றும், ஒருவனுடைய கைகால்களில் இருபது விரல்களிருக்கின்றன. இதனுல் ஒருவனுக்கு எவ்வளவு வேண்டுமோ, அவ்வளவு குணங்களேயுமடைகின்ருன் என்பது.

இனி, அதில், ஒன்பது நாளே விதிக்கின்றது.

பிராமணம் 3

ज्योतिर्गौरायुरिति त्र्यहा भवन्तीयं वाव ज्योतिरन्तरिक्षं गौरसावायुरिमानेव लोकानभ्यारोहन्त्यभिपूर्वं त्र्यहा भवन्त्यभिपूर्वमेव सुवर्गं लोकमभ्यारोहन्ति ।

என்பது

உரை

சோதி, கௌ, ஆயுள் என்னு முதல் மூன்று நாட்களேப்போலவே மற்றைய இரண்டு மூன்று நாட்களும், சோதி கௌ, ஆயுள் என்னும் மூன்றையுமே முறையாய்க் கொண்டவைகளேயன்றி மாறுபாடடைந்தில. ஆதலின் மூன்றுலகங்களே யடைவதுடன் முறையாய்ச் சுவர்க்கத்திலும் ஏறுகின்றனன் என்பது.

இந்த மும்மைநாட்களுக்கும் மேல் கூறப்போதும் மூன்றுநாட்களுக்கும் இடையில் பிருஷ்டத்தை விதிக்கின்றது.

பிராமணம் 4

यदन्यतः पृष्ठानि स्युर्विविवधꣳ स्यान्मध्ये पृष्ठानि भवन्ति सविवधत्वायौजो वै वीर्यं पृष्ठान्योज एव वीर्यं मध्यतो दधते बृहद्रथंतराभ्यां यन्तीयं वाव रथंतरमसौ बृहदाभ्यामेव यन्त्यथो अनयोरेव प्रति तिष्ठन्त्येते वै यज्ञस्याञ्जसायनी स्रुती ताभ्यामेव सुवर्गं लोकं यन्ति ।

என்பது.

உரை

முற்கூறிய மூன்று நாட்களுக்குள் முடிவிலுள்ள மூன்றுநாட்கும், மேல்வரும் மூன்று நாட்களுக்கும் நடுவில் பிருஷ்டங்களிருத்தலின் இருபுறத்தும் உறிக்கட்டிச் சுமை எடுக்கும் தடிபோலாயிற்று. மற்றவை முன்போன்றன என்பதாம்.

அவரோகணமாகிய மூன்று நாளை விதிக்கின்றது

பிராமணம் 5

पराञ्चो वा एते सुवर्गं लोकमभ्यारोहन्ति ये पराचीनानि पृष्ठान्युपयन्ति प्रत्यङ्त्र्यहो भवति प्रत्यवरूढ्या अथो प्रतिष्ठित्या उभयोर्लोकयोर्ऋद्ध्वोत्तिष्ठन्ति ।

என்பது

உரை

இதன் உரை முன்போல் உரைத்துக் கொள்க என்பது.

பிராயணீய உதயனீயங்களை விதிக்கின்றது.

பிராமணம் 6

अतिरात्रावभितो भवतो ब्रह्मवर्चसस्यान्नाद्यस्य परिगृहीत्यै ।

என்பது.

உரை

இதன் உரையையும் முன்போல் உரைத்துக் கொள்க.

ஒன்பதாமநுவாகம்
முற்றிற்று.

ஏழாங் காண்டம் மூன்றும் பிரபாடகம்

பத்தாவது அநுவாகம்

ஐந்து பஞ்சாதிக்குமேல் இருபத்தொரு பதங்களைக் கொண்டது.

ஏகவிம்சதிராத்திரத்தைக் கூறும் பிராமணங்கள்.

असावादित्योऽस्मिँल्लोक आसीत्तं देवाः पृष्ठैः परिगृह्य सुवर्गं लोकमगमयन्परैरवस्तात्पर्यगृह्णन्दिवाकीर्त्येन सुवर्गे लोके प्रत्यस्थापयन्परैः परस्तात्पर्यगृह्णन्पृष्ठैरुपावारोहन्त्स वा असावादित्योऽ-

मुष्मिँल्लोके परैरुभयतः परिगृहीतो यत्पृष्ठानि भवन्ति सुवर्गमेव
तैर्लोकं यजमाना यन्ति परैरवस्तात्परि गृह्णन्ति दिवाकीर्त्येन ॥२५॥
सुवर्गे लोके प्रति तिष्ठन्ति परैः परस्तात्परि गृह्णन्ति पृष्ठैरुपावरोह-
न्ति यत्परे परस्तान्न स्युः पराञ्चस्सुवर्गाल्लोकान्निष्पद्येरन्यदवस्तान्न
स्युः प्रजा निर्दहेयुरभितो दिवाकीर्त्यं परस्सामानो भवन्ति सुवर्ग
एवैनाँल्लोक उभयतः परि गृह्णन्ति यजमाना वै दिवाकीर्त्यꣳ संव-
त्सरः परस्सामानोऽभितो दिवाकीर्त्यं परस्सामानो भवन्ति संवत्सर
एवोभयतः ॥ २६ ॥ प्रति तिष्ठन्ति पृष्ठं वै दिवाकीर्त्यं पार्श्वे परः
सामानोऽभितो दिवाकीर्त्यं परस्सामानो भवन्ति तस्मादभितः पृष्ठं
पार्श्वे भूयिष्ठा ग्रहा गृह्यन्ते भूयिष्ठꣳ शस्यते यज्ञस्यैव तन्मध्यतो
ग्रन्थिं ग्रथ्नन्त्यविस्रꣳसाय सप्त गृह्यन्ते सप्त वै शीर्षण्याः प्राणाः
प्राणानेव यजमानेषु दधति यत्पराचीनानि पृष्ठानि भवन्त्यमुमेव
तैर्लोकमभ्यारोहन्ति यदिमं लोकं न ॥ २७ ॥ प्रत्यवरोहेयुरुद्वा
माद्येयुर्यजमानाः प्र वा मीयेरन्यत्प्रतीचीनानि पृष्ठानि भवन्तीममेव
तैर्लोकं प्रत्यवरोहन्त्यथो अस्मिन्नेव लोके प्रति तिष्ठन्त्यनुन्मादाये-
न्द्रो वा अप्रतिष्ठित आसीत्स प्रजापतिमुपाधावत्तस्मा एतमेकविꣳ-
शतिरात्रं प्रायच्छत्तमाऽहरत्तेनायजत ततो वै स प्रत्यतिष्ठद्ये बहु-
याजिनोऽप्रतिष्ठिताः ॥ २८ ॥ स्युस्त एकविꣳशतिरात्रमासीरन्द्वा-
दश मासाः पञ्चर्तवस्त्रय इमे लोका असावादित्य एकविꣳश एता-
वन्तो वै देवलोकास्तेष्वेव यथापूर्वं प्रति तिष्ठन्त्यसावादित्यो न

व्यरोचत स प्रजापतिमुपाधावत्तस्मा एतमेकविꣳशतिरात्रं प्राय-
च्छत्तमाऽहरत्तेनायजत ततो वै सोऽरोचत य एवं विद्वाꣳस एक-
विꣳशतिरात्रमासते रोचन्त एवैकविꣳशतिरात्रो भवति रुग्वा एक-
विꣳशो रुचमेव गच्छन्त्यथो प्रतिष्ठामेव प्रतिष्ठा ह्येकविꣳशोऽति-
रात्रावभितो भवतो ब्रह्मवर्चसस्य परिगृहीत्यै ॥ २९ ॥ गृह्णन्ति
दिवाकीर्त्यैनैवोभयतो नाप्रतिष्ठिता आसत एकविꣳशतिश्च ।॥१०॥

இதில், இருபத்தொரு இரவுகள்கொண்ட யாகங் கூறப்படுகின்றது. அதில், முதலில் அதிராத்திரம், பிறகு பிருஷ்டிய நாட்கள், ஸ்வராசமான மூன்று விசேட நாட்கள், திவாகீர்த்தியம் என்பது ஒருநாள். மீண்டும், ஸ்வராசமான மூன்றுநாட்கள், மீண்டும் பிருஷ்டிய ஷட்நாட்கள், பிறகு அதிராத்திரம் என்பது நாட்களின் முறையாம்.

அதை விதிப்பதற்கு முன்னுரை கூறுகின்றது.

பிராமணம் 1

असावादित्योऽस्मिँल्लोक आसीत्तं देवाः पृष्ठैः परिगृह्य सुवर्गं लोकमगमय-
न्परैरवस्तात्पर्यगृह्णन्दिवाकीर्त्येन सुवर्गे लोके प्रत्यस्थापयन्परैः परस्तात्प-
र्यगृह्णन्पृष्ठैरुपावारोहन्त्स वा असावादित्योऽमुष्मिँल्लोके परैरुभयतः परि-
गृहीतः।

என்பது

உரை

சுவர்க்கத்தில் காணப்படும் சூரியன் முன்னர் பூலோகத்திலிருந்தனன் அச்சூரியனை, தேவர்கள் அச்சூரியனை எடுத்து பிருஷ்டம் என்னும் ஆறுநாட்களாலும் சுவர்க்கத்தில் நிறுவினார்கள். அங்கு, பரம் என்னும் சாமவிசேடத்தாலாய நாள்விசேடங்களாலும் சுவர்க்கத்திலேயே பாடத்தககது. (திவாகீர்த்தனம்.) சாமத்தாலாய நாள் விசேடங்களாலும கீழேவராதபடி தடை செய்துவிட்டனர் என்பதாம். பிறகு, அநுட்டித்த பரா என்னும் அந்நாட்களால் சூரியன் அதற்கு மேல் போகாதபடி தடை செய்துவிட்டனர். இவ்வாறு அச்சூரியன் இரண்டிடத்துந் தடை செய்யப்பட்டதமையின் கீழும் மேலும் போகாமல் அங்கேயே யிருக்கும்படி பிருஷ்ட ஆறுநாட்களால் செய்துவிட்டனர் என்பது.

அந்த நாட்களை விதிக்கின்றது.

பிராமணம் 2

यत्पृष्ठानि भवन्ति सुवर्गमेव तैर्लोकं यजमाना यन्ति पैरेवस्मात्परिगृह्ण-
न्ति दिवाकीर्त्येन सुवर्गे लोके प्रति तिष्ठन्ति पैरः परस्तात्परि गृह्णन्ति
पृष्ठैरुपावरोहन्ति ।

என்பது

உரை

இவ் வேள்வியைச் செய்த எசமானனும் சூரியனைப் போலவே வடிவை அடைகின்றான். ஆதலின் சூரியனுக்குரைத்ததுபோல் உரைத்துக்கொள்க என்பது.

திவாகீர்த்தியம் என்னுநாளுக்கு முன்னும் பின்னும் அநுட்டிக்க வேண்டிய பரா என்னும் நாட்களை எதிர்மறை முகத்தால் புகழ்கின்றது

பிராமணம் 3

यत्परे परस्तान्न स्युःपराञ्चः सुवर्गाल्लोकान्निष्पद्येरन्यदवस्तान्नस्युःप्रजा
निर्दहेयुरभितो दिवाकीर्त्यं परस्सामानो भवन्ति सुवर्ग एवैनाँल्लोक उभ-
यतः परि गृह्णन्ति ।

என்பது

உரை

மேலேயுள்ள பரா என்னும் நாட்கள் இல்லையேல், சுவர்க்கத்தையடைந்த எசமானனைத் தடைப்படுத்துவது ஒன்றும் இல்லாமையால் சுவர்க்கத்திற்கு மேலேயுஞ் செல்வன், கீழேயும் பரா என்னும் நாட்கள் இல்லாவிடில் தடையொன்றுமின்மையின் ஆதித்தவடிவர்களான எசமானர்களனைவரும பூமியிலுள்ள பிரசைகளனைத்தையும் ஒரு கணத்தில் எரித்துவிடுவார்கள். ஆதலின், திவாகீர்த்தி என்னு நாளுக்கு முன்னும் பின்னும் பரா என்னுஞ் சாமத்தாலாய பரா என்னு நாட்கள் அநுட்டிக்க வேண்டியவைகள் என்பது.

இருபத்தொருநாள்)

மற்றெருவகையால், திவாகீர்த்தியம் என்னும் நாளையும், பராஎன்னும் சாம நாளையும் புகழ்கின்றது

பிரமாணம் 4

यजमाना वै दिवाकीर्त्यꣳ संवत्सरः परस्सामानोऽभितो दिवाकीर्त्यं परः सामानो भवन्ति संवत्सर एवोभयतः प्रति तिष्ठन्ति ।

என்பது.

உரை

திவாகீர்த்தியம் எசமானனும், பரா என்னும் சாமம் வருடமாம். ஆத லின், இருபக்கமும் அவற்றை அநுட்டானஞ் செய்யில் எசமானர்கள் மேலும் கீழும் வருட தேவதையில் நிலைத்திருக்கின்றார்கள் என்பது.

மீண்டும் மற்றெருவகையாற் புகழ்கின்றது

பிராமணம் 5

पृष्ठं वै दिवाकीर्त्यं पार्श्वे परस्सामानोऽभितो दिवाकीर्त्यं परस्सामानो भवन्ति तस्मादभितः पृष्ठं पार्श्वे भूयिष्ठा ग्रहा गृह्यन्ते भूयिष्ठꣳ शस्यते यज्ञस्यैव तन्मध्यतो ग्रन्थिं ग्रथ्नन्त्यविस्रꣳसाय ।

என்பது

உரை

ஒரு மனிதனுடைய பின்புறத்தில், நடு எலும்பு இருபுறமும் இருப்பது போல் திவாகீர்த்தியம் பின்புறமாம். பர சாமாக்கள் இரண்டும் நடுப் பக்கங் கள் போன்றதாம். மற்றும், இந்த பரசாமாவில் அதிக்கிராகியக் கிரகங்களும் மிகுதியாகக் கிரகிக்கப்படுகின்றன. மற்றும், திவாகீர்த்தியமும் பரசாமாகும் கவாமயனத்தில் உண்டானவைகள். அதில், விதிவாக்கியத்தால் வந்த அதிக் கிராகியங்களை விட மூன்று அதிக்கிராகியங்கள் மிகுதியாக மூன்றாங் காண் டத்தில் 'அத்ப்ய:, என்பது முதலிய மந்திரத்தால் விதிக்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய விகிருதியாமாதலின இங்கும் அதிக்கிராகியங்கள் கிரகிக்கப்படு கின்றன. இதனால், சஸ்திரங்களும் அதிகமாய்ப்பாடப்படுகின்றன. இவ் வாறு மிகுந்த அநுட்டானத்தால் இருபத்தொரு இரவுகொண்ட எக்ஞம் உறுதியாக்கப்படுகின்றது. இதுவும், எக்ஞம் நழுகிவிடாதிருத்தற் பொருட்டு என்பது.

மீண்டும் திவாகீர்த்தியத்தில் விசேடத்தை விளக்குகின்றது

பிராமணம் 6

सप्त गृह्यन्ते सप्त वै शीर्षण्याः प्राणाः प्राणानेव यजमानेषु दधति ।

என்பது

உரை

திவாகீர்த்தியத்திற்கு முந்திய நாட்களில் ஒவ்வொரு அதிக்கிராகியங்கள் முறையாய் மூன்று கிரகிக்கப்படுகின்றன. பிந்திய தினங்களில் அவைகளை அவரோகணமாய்க் கிரகிக்கப்படுகின்றன. இவ்வாறு திவாகீர்த்தியதினத்தில் ஆறு கிரகிக்கப்படுகின்றன. அவற்றின் நடுவில், "உதுத்யம், என்பது முதலிய மந்திரத்தால் ஏழாவதுங்கிரகிக்கப்படுகின்றது. இவ்வாறு அத்தினத்தில் ஏழு அதிக்கிரகங்களாகின்றன. அவ்வேழும் தலையின் ஏழு துளைகளிலும் உள்ள பிராணன்கள் போன்றவைகள். ஆதலின் இதை அநுட்டித்தால் எசமானர்களிடத்தில் பிராணன்களை நிறுவுகின்றார்கள். இவ்வாற்றால் திவாகீர்த்தியமமானது பெருமையுடையதாம் என்பது.

அவரோகணமாகிய பிருஷ்டிய ஆறுதாளை விதிக்கின்றது

பிராமணம் 7

नत्पराचीनानि पृष्ठानि भवन्त्यमुमेव तैर्लोकमभ्यारोहन्ति यदिमं लोकं न प्रत्यवरोहेयुरुद्वा माद्येयुर्यजमानाः प्र वा मीयेरन्यत्प्रतीचीनानि पृष्ठानि भवन्तीममेव तैर्लोकं प्रत्यवरोहन्त्यथो अस्मिन्नेव लोके प्रति तिष्ठन्त्यनुन्मादाय ।

என்பது.

உரை

திவாகீர்த்தியங்கட்கு ஒப்பான பரசாமங்கட்குமுன் அநுட்டிக்கப்படும் ஆரோகணமான பிருஷ்டசாம நாட்களால் எசமானர்கள் சுவர்க்கத்திலேறுகின்றார்கள். அதற்குமேல், அவரோகண நாட்கள் அநுட்டிக்கவில்லையேல் இவ்வுலகை மறந்து பைத்தியங் கொள்வர். அல்லது இறப்பார். ஆதலின் அவரோகணமான பிருஷ்ட நாள்கள் அநுட்டித்தக்கவைகள். இவைகளால் இவ்வுலகிற்கு இறங்குகின்றார்கள். இவ்வுலகிலும் பெருமையுடையவர்களும் பைத்திய மற்றவர்களுமாகின்றார்கள் என்பது.

முன், சுவர்க்கத்தின் பொருட்டு இவ்வேள்வி விதிக்கப்பட்டது. இப்போது பெரு மையின் பொருட்டு விதிக்கப்படுகின்றது.

பிராமணம் 8

इन्द्रो वा अप्रतिष्ठित आसीत्स प्रजापतिमुपाधावत्तस्मा एतमेकविंशति-रात्रं प्रायच्छत्तमाऽहरत्तेनायजत ततो वै स प्रत्यतिष्ठद्ये बहुयाजिनोऽ-प्रतिष्ठितास्स्युस्त एकविंशतिरात्रमासीरन्द्वादश मासाः पञ्चर्तवस्त्रय इमे लोका असावादित्य एकविंश एतावन्तो वै देवलोकास्तेष्वेव यथापूर्वं प्रति तिष्ठन्ति ।

என்பது.

உரை

இருபத்தொரு ஸ்தோமங்கள் பதினன்கா நாளாம். இதனல், பெருமையும் ஆன்ம வொளியும் உண்டாகின்றன என்பது.

பதினைந்தாவது நாளை விதிக்கின்றது

பிராமணம் 12

चतुर्विꣳशो भवति चतुर्विꣳशतिरर्धमासाः संवत्सरः संवत्सरः सुवर्गो लोकः संवत्सर एव सुवर्गे लोके प्रति तिष्ठन्त्यथो एष वै विषूवान्विषूवन्तो भवन्ति य एवं विद्वाꣳस एता आसते ।

என்பது

உரை

இருபத்துநான்கு ஸ்தோமங்கள் பதினைந்தா நாளாம். இவ்வொப்பால், வருடவாயிலாக சுவர்க்கத்தில் நிலையுண்டாகின்றது. மற்றும், இந்நாள் பல்வகைப் பயன்களுண்டாவதற்குக் காரணமா மாதலின் இவ்வாறுணர்ந்து அநுட்டிக்கின்றவர்கட்கும் பல்வகையான பயன்கள் உண்டாகின்றன என்பது.

பதினறவது நாளிலிருந்து இருபத்தோருநாள்வரையுள்ள ஆறுநாட்களை விதிக்கின்றது

பிராமணம் 13

चतुर्विꣳशात्पृष्ठान्युप यन्ति संवत्सर एव प्रतिष्ठाय देवता अभ्यारोहन्ति ।

என்பது.

உரை

இருபத்துநான்கு ஸ்தோம நாளிலிருந்து மேல் நாளில் பிருஷ்டியங்கள் ஆறும் ஆறுநாளில் அநுட்டிக்கப் படுகின்றன. இதனல், முதல் வருடத்தில் பெருமையடைந்து பிந்திய ஆறுநாட்களாலும் மென்மேலுந் தேவதைகள் அடையப் படுகின்றன என்பது.

இருபத்திரண்டாம் நாளை விதிக்கின்றது

பிராமணம் 14

त्रयस्त्रिꣳशद्वै देवता देवतास्वेव प्रति तिष्ठन्ति ।

என்பது.

உரை

பிருஷ்டிய ஆறு நாட்களின் முடிவு நாளில் முப்பத்துமூன்று ஸ்தோமமாம். ஆதலின் அதற்குமேலும் மீண்டும் முப்பத்துமூன்று ஸ்தோமங்கள் அநுட்டிக்கப்படுகின்றன. அநுட்டிக்கில், முப்பத்துமூன்று எண் கொண்ட தேவர்களிடத்தில் நிலைக்கின்றார்கள் என்பது.

இருபத்துமூன்றாவது நாளை விதிக்கின்றது

பிராமணம் 15

त्रिणवो भवतीमे वै लोकास्त्रिणव एष्वेव लोकेषु प्रति तिष्ठन्ति ।

என்பது

உரை

இருபத்தேழு ஸ்தோமங்கள் இருபத்துமூன்றாநாளாம். இருபத்தேழு என்பது மூன்று ஒன்பது கொண்டதாமாதலின் மூன்றுலகங்களிலும் பெருமையை யடைகின்றார்கள் என்பது.

இருபத்துநான்கு இருபத்தைந்தாவது தினங்களை விதிக்கின்றது.

பிராமணம் 16

द्वावेकविꣳशौ भवतः प्रतिष्ठित्याअथो रुचमेवाऽऽमन्दधते ।

என்பது

உரை

இரண்டு நாட்களிலும் இருபத்தொன்றும், இது பிரதிட்டையின் பொருட்டாம். ஆதலின் இதனால் பெருமையும் ஆன்மவொளியும் உண்டாகின்றன என்பது.

(முப்பது நாள்

இருபத்தைந்தாநாள் முதல், இருபத்தொன்பதாநாள் வரை யுள்ள ஐந்துநாளை விதிக்கின்றது.

பிராமணம் 17

बहव: षोडशिनो भवन्ति तस्माद्बहव: प्रजासु वृषाण: ।

என்பது

உரை

சோடசி யென்னும் துதிகளுடன் கூடியநாள் சோடசிகள். அவைகளை இங்கு இடைவிடாமல் ஐந்துநாள் அநுட்டித்தல் வேண்டும். சோடசி என்பது புத்திரோற்பத்திக்குக் காரணமாதலின் பல ஆண்களுள் சிலர்கள் ஆண் தன்மையுடையவர்களாக இருக்கின்றார்கள் என்பது.

இச் சோடசிகட்கு கீழ் அநுட்டிக்கப்பட்ட ஒன்றற்கொன்று மாறுபட்டுள்ள ஸ்தோமங்களைப் புகழ்கின்றது.

பிராமணம் 18

यदेते स्तोमा व्यतिषक्ता भवन्ति तस्मादियमोषधीभिर्वनस्पतिभिर्व्यतिष-क्ता ।

என்பது

உரை

இந்த ஸ்தோமங்கள் குறைவு மிகுதிகளையுடையனவைகளாய் ஒன்றற்கொன்று கலந்துகிடக்கின்றன. ஆதலின், பூமியும் நியமமின்றி கொடி செடி வநஸ்பதிகளுடன் கலந்துகொண்டிருக்கின்றது என்பது.

ஸ்தோமங்களின் ஒன்றற்கொன்றுள்ள மாறுபாட்டை யுணர்ந்தவனைப் புகழ்கின்றது

பிராமணம் 19

व्यतिषज्यन्ते प्रजया पशुभिर्य एवं विद्वा ꣳस एता आसते ।

என்பது.

உரை.

இவ்வாறுணர்ந்து முப்பது இரவுகள் கொண்ட இவ்வேள்வியை அநுட்டிக்கின்றவர்களுள் இவனுக்குப் பிரசைகள், இவனுக்குப் பசுக்கள் என்னும் பாகுபாடு இல்லாததால் அனைவரும் பசுக்களையும் பிரசைகளையு மடைகின்றார்கள் என்பது

முப்பது நாள்)

ஷோடசிதினங்களில் உள்ள ஒரேவிதமானஸ்தோமங்களைப் புகழ்கின்றது.

பிராமணம் 20

**अकॢप्ता वा एते सुवर्गं लोकं यन्त्युच्चावचान्हि स्तोमानुपयन्ति यदेत ऊ-
र्ध्वाः कॢप्ताः स्तोमा भवन्ति कॢप्ता एव सुवर्गं लोकं यन्त्युभयोरेभ्यो
लोकयोः कल्पते ।**

என்பது

உரை

பூர்வ தினங்களில் ஒன்றற் கொன்று குறைவு நிறைவால் விலக்ஷண மாகிய ஸ்தோமங்களை யநுட்டிக்கின்ற எசமானர்கள், இவ்வளவு உனக்கு புசிக்கத்தக்கது என்னும் உறுதிப்பாடு இல்லாமல் சுவர்க்க முழுதையு மடைகின்றார்கள். இதற்குமேல் உறுதிப்பட்ட இருவகைகளை யுமநுட்டிக்கின்றவர் களுக்கு இரண்டுலகங்களிலும் போக்கியம் நியதமாகவே உண்டாகும் என்பது.

இவ்வேள்வியினுடைய தினங்களின் எண்புகழப்படுகின்றது.

பிராமணம் 21

त्रिꣳशदेतास्त्रिꣳशदक्षरा विराडन्नं विराड्विराजैवान्नाद्यमव रुन्धते ।

என்பது

உரை

இதனால், முப்பது எழுத்துக்கள் கொண்ட விராட் சந்த மென்னும் உணவுப் பொருளை யடைகின்றார்கள் என்பது.

முடிவாதந்தினத்தை விதிக்கின்றது

பிராமணம் 22

अतिरात्रावभितो भवतोऽन्नाद्यस्य परिगृहीत्यै ।

என்பது

உரை

கடைசிநாள் உதயனீய மென்னும் அதிராத்திரமாம். இதனால் உணவுப் பொருள் முதலியவற்றை யடைகின்றார்கள் என்பது

ஈண்டு, பிராயணீயத்துடன் சேர்த்துக் கூறுவதன் பொருட்டு இருமைச் சொல்.

மூன்றாவது அநுவாகம்

முற்றிற்று.

ஏழாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

நான்காவது அநுவாகம்

மூன்று பஞ்சாதிக்குமேல் இருபத்திரண்டு பதங்களைக் கொண்டது.

முப்பத்திரண்டு இரவுகளைக்கொண்ட யாகத்தை விதிக்கும் பிராமணங்கள்

प्रजापतिः सुवर्गं लोकमैत्तं देवा येनयेन छन्दसाऽनु प्रायुञ्जत
तेन नाऽऽप्नुवन्त एता द्वात्रिꣳशतꣳ रात्रीरपश्यन्द्वात्रिꣳशदक्षराऽ-
नुष्टुगानुष्टुभः प्रजापतिः स्वेनैव छन्दसा प्रजापतिमाप्त्वाऽभ्यारुह्य
सुवर्गं लोकमायन्य एवं विद्वाꣳस एता आसते द्वात्रिꣳशदेता द्वा-
त्रिꣳशदक्षराऽनुष्टुगानुष्टुभः प्रजापतिः स्वेनैव छन्दसा प्रजापतिमा-
प्त्वा श्रियं गच्छन्ति ॥ १५ ॥ श्रीर्हि मनुष्यस्य सुवर्गो लोको
द्वात्रिꣳशदेता द्वात्रिꣳशदक्षराऽनुष्टुग्वागनुष्टुप्सर्वामेव वाचमाप्नुवन्ति
सर्वे वाचो वदितारो भवन्ति सर्वे हि श्रियं गच्छन्ति ज्योतिर्गौरा-
युरिति त्र्यहा भवन्तीयं वाव ज्योतिरन्तरिक्षं गौरसावायुरिमानेव
लोकानभ्यारोहन्त्यभिपूर्वं त्र्यहा भवन्त्यभिपूर्वमेव सुवर्गं लोकम-
भ्यारोहन्ति बृहद्रथंतराभ्यां यन्ति ॥ १६ ॥ इयं वाव रथंतरमसौ
बृहदाभ्यामेव यन्त्यथो अनयोरेव प्रति तिष्ठन्त्येते वै यज्ञस्याञ्ज-
सायनी स्रुती ताभ्यामेव सुवर्गं लोकं यन्ति पराञ्चो वा एते
सुवर्गं लोकमभ्यारोहन्ति ये पराचस्त्र्यहानुपयन्ति प्रत्यङ्त्र्यहो
भवति प्रत्यवरूढ्या अथो प्रतिष्ठित्या उभयोर्लोकयोर्ऋद्ध्वोत्तिष्ठन्ति
द्वात्रिꣳशदेतास्तासां यास्त्रिꣳशत्त्रिꣳशदक्षरा विराडन्नं विराड्विराजैवा-
न्नाद्यमव रुन्धते ये द्वे अहोरात्रे एव ते उभाभ्याꣳ रूपाभ्याꣳ

முப்பத்திரண்டு நாள்)

सुवर्गं लोकं यन्त्यतिरात्रावभितो भवतः परिगृहीत्यै ॥ १७ ॥

गच्छन्ति यन्ति त्रिꣳशदक्षरा द्वाविꣳशतिश्च । ॥ ४ ॥

இதில், முப்பத்திரண்டு நாட்கள் கொண்ட யாகம் கூறப்படுகின்றது.

அதைவிதிக்கின்றது

பிராமணம் 1

प्रजापतिः सुवर्गं लोकमैत्तं देवा येनयेन छन्दसाऽनु प्रायुञ्जत तेन नाऽऽ-
प्नुवन्त एता द्वात्रिꣳशतꣳ रात्रीरपश्यन्द्वात्रिꣳशदक्षराऽनुष्टुगानुष्टुभः
प्रजापतिः स्वेनैव छन्दसा प्रजापतिमाप्त्वाऽभ्यारुह्य सुवर्गं लोकमाय-
न्य एवं विद्वाꣳस एता आसते द्वात्रिꣳशदेता द्वात्रिꣳशदक्षराऽनुष्टुगा
नुष्टुभः प्रजापतिः स्वेनैव छन्दसा प्रजापतिमाप्त्वा श्रियं गच्छन्ति श्री-
र्हि मनुष्यस्य सुवर्गो लोकः ।

என்பது

உரை

தேவர்கள், பிரசாபதியானவர் சுவர்க்கத்தை யடையும்போது அவரைப் பற்றிக் கொண்டுதாமும் சுவர்க்கமடைய எண்ணி எவ்வெச் சந்தங்களுடன் எக்ருத்தை யநுட்டித்தார்களோ, அவ்வனைத்தாலும் சுவர்க்கம் அடையமுடிய வில்லை. பிறகு அததேவர்கள், முப்பத்திரண்டு இரவுகள்கொண்ட இவ்வேள் வியைக் கண்டுபிடித்து அதற்கு வேண்டியவற்றைத் தேடிச் செய்தனர். அவ்வெண் அநுஷ்டுப் சந்தத்திலிருத்தலானும் பிரசாபதியும் அநுஷ்டுபா மாதலானும் அவருடைய சந்தததால அவரையடைந்து அவருடன் சுவர்க் கத்தையுமடைந்து இனிய போகத்தைப் பெற்றுக்கொண்டனர். அவ்வாறே, ஏனையோர்களும் இதை அநுட்டிக்கில பிரசாபதியின் அருளால் செல்வத்தை யடைவார்கள். ஈண்டு மனிதரின் செல்வ மிகுதியே சுவர்க்கமாம் ஆதலின் சுவர்க்கத்தை யடைவார்கள் என்பது.

இவ் வேள்வியின் நாட்களின் எண் புகழப்படுகின்றது

பராமணம் 2

द्वात्रिꣳशदेता द्वात्रिꣳशदक्षराऽनुष्टुग्वागनुष्टुप्सर्वामेव वाचमाप्नुवन्ति सर्वे
वाचो वदितारोभवन्ति सर्वे हि श्रियं गच्छन्ति ।

என்பது.

உரை

இவ்வெக்ஞத்தின் நாட்கள் முப்பத்திரண்டாம். அநுஷ்டுப் சந்தமும் முப்பத்திரண்டு எழுத்துக்களைக் கொண்டதாம். ஆகவே, அநுஷ்டுப் என்பது வாக்விசேடமாதலின் வாக்கேயாம். ஆதலின், இதை அநுட்டித்தலால் மறைகள்சாத்திரங்கள் முதலான எல்லா வாக்குக்களையு மடைகின்றார்கள். அதாவது, எசமானர்களனைவரும் சபையில் பிரமிக்கும்படி பேசும் வன்மையையடைகின்றார்கள் என்பதாம். அத்தகைய சொற்பொழிவால் எல்லாரும் வழிபடுவதாகிய செல்வத்தையு மடைகின்றார்கள் என்பது.

இனி; தினங்களைவிதிக்கின்றது.

பிராமணம் 3

ज्योतिर्गौरायुरिति त्र्यहा भवन्तीयं वाव ज्योतिरन्तरिक्षं गौरसावायुरिमा-
नेव लोकानभ्यारोहन्त्यभिपूर्वं त्र्यहा भवन्त्यभिपूर्वमेव सुवर्गं लोकम-
भ्यारोहन्ति ।

என்பது.

உரை

சோதி, கௌ, ஆயுள் என்பன மூன்று நாட்கள். அவற்றுள் சோதி-இவ்வுலகம், அந்தரிக்ஷம் - கௌ, ஆயுள் - சுவர்க்கம் என்பனவாதலின் மூன்றுலகங்களையு மடைகின்றார்கள். மூன்று நாட்கள் என்பதால் ஒன்பதுநாள் இவைகளை யநுட்டித்தல் வேண்டும்என்க. இது எண்ணின் படியாம். இவைகளைத்தும் நேர்முறையாகவே அநுட்டித்தல் வேண்டும். இதனால் நேர்முறையாகவே சுவர்க்கத்திலேறுகின்றார்கள் என்பது.

இனி, எஞ்சிய இருபத்தொரு நாட்களிலும் பிருஷ்டத் துதிகளின் பொருட்டு இரண்டு சாமப்பாடல்களாம் என்றுங் கருத்துக்கொண்டு விதிக்கின்றது.

பிராமணம் 4

बृहद्रथंतराभ्यां यन्तीयं वाव रथंतरमसौ बृहदाभ्यामेव यन्त्यथो अन-
योरेव प्रति तिष्ठन्त्येते वै यज्ञस्याञ्जसायनी स्रुती ताभ्यामेव सुवर्गं
लोकं यन्ति ।

என்பது.

உரை

இதன் உரையை முன்போல் உரைத்துக்கொள்க என்பது.

முப்பத்திரண்டு நாள்)

இனி, தலைகீழாக அநுட்டிக்கவேண்டிய ஒரு மூன்றுநாளை விதிக்கின்றது

பிராமணம் 5

पराञ्चो वा एते सुवर्गं लोकमभ्यारोहन्ति ये पराचस्त्र्यहानुपयन्ति प्रत्यङ्-
त्र्यहो भवति प्रत्यवरूढ्या अथो प्रतिष्ठित्या उभयोर्लोकयोर्ऋद्ध्वोत्तिष्ठ-
न्ति ।

என்பது

உரை

இதன் உரையையும் முன்போல் உரைத்துக் கொள்க என்பது.

முன், கூட்டமாய்ப் புகழப்பெற்றது, இனி பிரித்துப் புகழ்கின்றது

பிராமணம் 6

द्वात्रिꣳशदेतास्तासां यास्त्रिꣳशत्त्रिꣳशदक्षरा विराडन्नं विराड्विराजैवान्नाद्य-
मव रुन्धते ये द्वे अहोरात्रे एव ते उभाभ्याꣳ रूपाभ्याꣳ सुवर्गं लोकं
यन्ति ।

என்பது

உரை

இதில், முப்பது எண்ணிருத்தலால் முப்பது எழுத்துக் கொண்ட விராட் வாயிலாக உணவு கிடைக்கின்றது. மேலேயுள்ள இரண்டால் பகலிரவுகள் இரண்டாமாதலின், அவ்விரண்டின் வடிவால் சுவர்க்க லோகத்தை யடைகின்றார்கள் என்பது.

பிராயணீய உதயனீயமிரண்டையும் விதிக்கின்றது.

பிராமணம் 7

अतिरात्रावभितो भवतः परिगृहीत्यै ।

என்பது.

உரை

அதிராத்திரங்களிரண்டும் எல்லாவகையானும் ஏற்றுக் கொள்ளுதற் பொருட்டாம் என்பது.

நான்காம் அநுவாகம்

முற்றிற்று.

ஏழாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

ஐந்தாவது அநுவாகம்

நான்கு பஞ்சாதிக்குமேல் பதினேழு பதங்களைக் கொண்டது.

முப்பத்துமூன்று இரவுகளைக்கொண்டு எக்ஞத்தை விதிக்கும் பிராமணங்கள்

द्वे वाव देवसत्रे द्वादशाहश्चैव त्रयस्त्रिꣳशदहश्च य एवं विद्वाꣳस-
स्त्रयस्त्रिꣳशदहमासते साक्षादेव देवता अभ्यारोहन्ति यथा खलु
वै श्रेयानभ्यारूढः कामयते तथा करोति यद्यवविध्यति पापीया-
न्भवति यदि नावविध्यति सदृङ्य एवं विद्वाꣳसस्त्रयस्त्रिꣳशदह
मासते वि पाप्मना भ्रातृव्येणाऽऽवर्तन्तेऽहर्भाजो वा एता देवा
अग्र आऽहरन् ॥ १८ ॥ अहरेकोऽभजताहरेकस्ताभिर्वै ते प्रबाहु-
गार्ध्नुवन्य एवं विद्वाꣳसस्त्रयस्त्रिꣳशदहमासते सर्व एव प्रबाहु-
गृध्नुवन्ति सर्वे ग्रामणीयं प्राऽऽप्नुवन्ति पञ्चाहा भवन्ति पञ्च वा
ऋतवः संवत्सर ऋतुष्वेव संवत्सरे प्रति तिष्ठन्त्यथो पञ्चाक्षरा
पङ्क्तिः पाङ्क्तो यज्ञो यज्ञमेवाव रुन्धते त्रीण्याश्विनानि भवन्ति
त्रय इमे लोका एषु ॥ १९ ॥ एव लोकेषु प्रति तिष्ठन्त्यथो त्रीणि
वै यज्ञस्येन्द्रियाणि तान्येवाव रुन्धते विश्वजिद्भवत्यन्नाद्यस्याव
रुद्ध्यै सर्वपृष्ठो भवति सर्वस्याभिजित्यै वाग्वै द्वादशाहो यत्पुरस्ता-
द्द्वादशाहमुपेयुरनाप्तां वाचमुपेयुरुपदासुकैषां वाक्स्यादुपरिष्टाद्द्वा-
दशाहमुप यन्त्याप्तामेव वाचमुप यन्ति तस्मादुपरिष्टाद्वाचा वदामो
ऽवान्तरम् ॥ २० ॥ वै दशरात्रेण प्रजापतिः प्रजा असृजत यद्द
शरात्रो भवति प्रजा एव तद्यजमानाः सृजन्त एताꣳह वा उदङ्कः

शैल्बायनः सत्रस्यर्धिमुवाच यद्दशरात्रो यद्दशरात्रो भवति सत्रस्य-
र्ध्यांअथ यदेव पूर्वेष्वहःसु विलोमक्रियते तस्यैवैषा शान्तिर्द्व्यनीकावा
एता रात्रयो यजमाना विश्वजित्सहातिरात्रेण पूर्वाः षोडश सहा-
तिरात्रेणोत्तराः षोडश य एवं विद्वाꣳसस्त्रयस्त्रिꣳशदहमासत ऐषां
द्व्यनीका प्रजा जायतेऽतिरात्रावभितो भवतः परिगृहीत्यै ॥२१॥
अहरन्तेष्ववान्तरꣳ षोडश सह सप्तदश च ॥

இதில், முப்பத்துமூன்று இரவுகள் கொண்ட யாகங் கூறப்படுகின்றது.

அதைவிதிக்கின்றது

பிராமணம் ।

द्वे वाव देवसत्रे द्वादशाहश्चैव त्रयस्त्रिꣳशदहश्च य एवं विद्वाꣳसस्त्रयस्त्रिꣳ-
शदहमासते साक्षादेव देवता अभ्यारोहन्ति यथा खलु वै श्रेयानभ्या-
रूढः कामयते तथा करोति यद्यवविध्यति पापीयान्भवति यदि नाव-
विध्यति सदृङ्य एवं विद्वाꣳसस्त्रयस्त्रिꣳशदहमासते वि पाप्मना
भ्रातृव्येणाऽऽवर्तन्त ।

என்பது

உரை

தேவர்கட்கு மிகப் பிரியமானது பன்னிருநாள் யாகம் முப்பத்து மூன்று நாள் யாகம் என்னும் இரண்டேயாம். இத்தன்மையை யுணர்ந்து முப்பத்து மூன்று நாள் யாகத்தைச் செய்கின்றவன் உடனே தேவர்களை யடைகின்றான். மற்றும், இதனால் பாவமும் நீங்குகின்றது. அதற்கு எதிர் மறையாகிய உவமை வருமாறு:— மந்திரி முதலானவர்களுடன் அரசசிம்மா சனத்திலமர்ந்தவன், நால்வகை யுபாயங்களாலும் அவ்விராச்சியம் பெருமை யாய் விளங்கும்படி செய்கின்றான். அதில் மயக்கமுடையனுவனேல்; பாவியா கின்றான். இன்றேனில் முன்னிருந்த பெருமையையே யடைகின்றான் மிகுந்த பெருமையை யடையான். இங்கு, உண்மையையுணர்ந்து முப்பத்து மூன்று நாட்களைக் கொண்ட இவ்வேள்வியைச் செய்தவன், தேவர்களை யடைவதுடன், அதன் தடையும் நீங்கி பகைவனுடன் வேறுபட்டவனாய் முன்னிருந்த தெய்வத்தன்மையைவிட மிகுதியாகி தன்மையையடைகின்றான் என்பதாம்.

அதுவே, மீண்டும் மற்றொருவகையால் புகழப்படுகின்றது.

பிராமணம் 2

अहर्भाजो वा एता देवा अग्र आऽहन्नहरेकोऽभजताहरेकस्ताभिर्वै ते प्रबाहुगार्ध्नुवन्य एवं विद्वाꣳसस्त्रयस्त्रिꣳशदहमासते सर्व एव प्रबाहुगृध्नुवन्ति सर्वे ग्रामणीयं प्राऽऽप्नुवन्ति ।

என்பது.

உரை

வேள்விநாட்களை அநுட்டிக்கின்ற தேவர்கள், முதல் நாள் ஒருவர், மற்றொருநாள் மற்றொருவர் என்றிவ்வாறு முப்பத்துமூன்று தேவர்களும் முப்பத்துமூன்று நாட்களையும் அநுட்டித்தனர். இவ்வாறு அநுட்டித்ததால் எல்லாத் தேவர்களுமே சமமாகச் சம்பத்தை யடைந்தார்கள். இவ்வாறு, இம் முப்பத்துமூன்று நாட்கள் கொண்ட யாகத்தைச் செய்கின்ற எசமானர்கள் எல்லாச் சம்பத்தையு மடைகின்றார்கள்; அதாவது கிராமங்கட்குத் தலைவரா கின்றார்கள் என்பது.

இனி, தினங்களை விதிக்கின்றது

பிராமணம் 3

पञ्चाहा भवन्ति पञ्च वा ऋतवः संवत्सर ऋतुष्वेव संवत्सरे प्रति तिष्ठन्त्यथो पञ्चाक्षरा पङ्क्तिः पाङ्क्तो यज्ञो यज्ञमेवाव रुन्धते ।

என்பது

உரை

சோதி, கௌ, ஆயுள் என்னும் மூன்றையும் இரண்டாய்ப்பெருக்கில் ஆறும். அவற்றுள், இரண்டாவது சோதியை விட்டுவிடில் ஐந்தாகின்றது அவ்வாறுள்ள ஐந்துநாளினும் இங்கு எவ்வளவு வேண்டுமோ, அவ்வளவு அதாவது நாலுகு நாள் அநுட்டித்தல் வேண்டும் இது கொண்டு எண் நிரம்புகின்றது. ஆதலின் நான்கே விதிக்கப்படுகின்றன. குளிர்காலம் பனிக்காலத்தை ஒன்று படுத்தில் இருதுக்கள் ஐந்தாகின்றன. இவற்றால் வருடத்தில் நிலைத்திருக்கின்றார்கள். மற்றும் ஐந்தென்றதால் ஐந்தெழுத்துக்களைக் கொண்ட பந்திச் சந்தவாயிலாக பாங்தம் என்னும் எக்ஞத்தையு மடைகின்றார்கள் என்பது.

முப்பத்துமூன்றுநாள்)

பிராணீயம் உதயனீயம் என்னும் அதிராத்திரங்கட்கும், இடையிலுள்ள அதிராத்ரத்திற்கும் சஸ்திரங்கள் இன்ன வென்று விதிக்கின்றது.

பிராமணம் 4

त्रीण्याश्विनानि भवन्ति त्रय इमे लोका एष्वेव लोकेषु प्रति तिष्ठन्त्यथो त्रीणि वै यज्ञस्येन्द्रियाणि तान्येवाव रुन्धते ।

என்பது

உரை

ஆசுவினம் என்பதால் உபலக்ஷிதமாய்க் கொள்ளப்பட்ட மூன்று சஸ்திரங் (துதிப்பாடல் விசேடங்)களை அநுட்டிக்கும் மூன்று நாட்களையும் அநுட்டிப்பதால் உலக மூன்றிலும் பெருமையுடையவராகின்றார்கள். மற்றும், எக்ஞத்திற்கு இந்திரியங்கள் போன்ற மூன்று சவனங்களையு மடைகின்றார்கள் என்பது.

மற்றொருநாளை விதிக்கின்றது

பிராமணம் 5

विश्वजिद्भवत्यन्नाद्यस्यावरुद्ध्यै ।

என்பது.

உரை

இது விசுவசித் என்பதாம். இது விசுவ வெற்றிக்குக் காரணமாம். இதனால், உணவுப் பொருள் முதலானவைகள் கிடைக்கின்றன என்பது.

மேற்கூறிய விசுவசித் என்பதையே விசேடித்துக்கூறுகின்றது.

பிராமணம் 6

सर्वपृष्ठो भवति सर्वस्याभिजित्यै ।

என்பது

உரை

இது, இரதந்தரம் முதலிய ஆறு பிருஷ்டத் துதிகளையு முடையதாம். இதனால் எல்லாப் பயன்களுங் கிடைக்கின்றன என்பது.

ஏனையநாட்களை விதிக்கின்றது

பிராமணம் 7

वाग्वै द्वादशाहो यत्पुरस्ताद्द्वादशाहमुपेयुरनाप्तां वाचमुपेयुरुपदासुकैषां वाक्स्यादुपरिष्टाद्द्वादशाहमुप यन्त्याप्तामेव वाचमुप यन्ति तस्मादुपरिष्टा-द्वाचा वदामः ।

என்பது.

உரை

பன்னிரண்டாவது நாள் பல்வகைத் துதிகளையும் சஸ்திரங்களையு முடையதாமாதலின் வாக்கு வடிவாம். அத்தகைய நாளை, கூறிய நாட்களுக்கு முன்னர் அநுட்டிக்கில், அங்கு, துதி சஸ்திரங்கள் ஒன்றுங் கூறப்படாமையின் வாக்கு நிறையமாட்டாது. அவ்வேள்வித் தலைவர்கட்கும் வாக்குக் குறைவுபடும். ஆதலின், கூறிய நாட்களுக்குப் பிறகு அநுட்டிக்கில் கிடைக்க உரித்தாகிய முழுவாக்கையும் அடைகின்றார்கள். ஆதலின், பன்னிரண்டாம் நாளின் அநுட்டானம் பிற்பாகத்திலாம். இதுபற்றியே, நாபியின் மேல்பக்கமாய் வாக்கால் யாம் பேசுகின்றோம் என்பது.

இங்கு, பன்னிரண்டுநாள் என்பதால் பிராயணீய உதயனீய மென்னும் இரண்டு நாட்களையும் விட்டுவிட்டு பத்துஇரவுகளே கொள்ளப்படுகின்றன என்னுங்குறிப்பை விளக்குகின்றது.

பிராமணம் 8

अवान्तरं वै दशरात्रेण प्रजापतिः प्रजा असृजत यद्दशरात्रो भवति प्रजा एव तद्यजमानास्सृजन्ते ।

என்பது

உரை

பன்னிரண்டு நாட்களின் அவயவமாகிய பத்து நாட்களாலேயே முன்னர் பிரசாபதி உலகைப் படைத்தனன். ஆதலின், இங்குப் பத்து ராத்திரங்கள் அநுட்டிக்கப் பெறின், எசமானர்கள் பிரசைகளை யுண்டாக்குகின்றார்கள் என்பது.

அப் பத்துராத்திரிகளையே மீண்டும் புகழ்கின்றது

பிராமணம் 9

एतां ह वा उदङ्कः शौल्बायनस्सत्रस्यर्धिमुवाच यद्दशरात्रो यद्दशरात्रो भवति सत्रस्यर्ध्या अथो यदेव पूर्वेष्वहस्सु विलोम क्रियते तस्यैवैषा शान्तिः ।

என்பது

உரை

சுல்பருடைய புத்திரராகிய உதங்கர், முப்பதது இரவுகொண்ட சத்ர யாக அங்கத்தை யநுட்டிக்கில் எல்லாச் சத்திர யாகங்களின் பயன்முழுதும் கிடைக்குமென்று கூறியுள்ளார். ஆதலின், முப்பத்துமூன்று இரவுகளை யநுட்டிக்கின் எல்லாச் சம்பத்துக்களுங் கிடைக்கின்றன. மற்றும், முன் தினங்களில் ஏதாவது அங்கம் குறைவுபட்டிருக்கில் அதுவும் இதனால் சாந்தமாகின்றது என்பதாம்.

விதித்த, விசுவசித், சநுவபிநஷ்டநாளை விதிக்கின்றது.

பிராமணம் 10

द्व्यनीका वा एता रात्रयो यजमाना विश्वजित्सहातिरात्रेण पूर्वाष्षोडश सहातिरात्रेणोत्तराः षोडश य एवं विद्वांस्सत्रयस्त्रिंशदहमासत एषां द्व्यनीका प्रजा जायते ।

என்பது.

உரை

இருவகையான சேனைகள் போன்ற இரவுகளைக்கொண்டதாம். அதாவது, பிராயணீய மென்னும் அதிராத்திரத்துடன் மூன்று ஐந்துநாட் (பதினைந்து நாட்)கள் முன்னுள்ள சேனையாம். உதயனீய மென்னும் அதிராத்ரததுடன் ஒரு ஐந்துநாள், பத்து இரவுகள் என்னும் பதினாறும் நாட்கள் பின்னுள்ள சேனையாம், விசுவசித், என்பது எசமானனைப் போன்றதாமாதலின், இருபுறத்துமுள்ள சேனைகட்கு நடுவில் பதினேழாவதாக நடுநாளில் அநுட்டிக்கத்தக்கதாம். இவ்வாறுணர்ந்து இதை அநுட்டிக்கும் எசமானர்கள், அநேகம் ஆண் குழந்தைகளும பெண் குழந்தைகளும் பிறக்கின்றன என்பது.

பிராயுணீய உதயனீயங்களை விதிக்கின்றது

பிராமணம் 11

अतिरात्राबभितो भवतः परिगृहीत्यै ।

என்பது

உரை

இவ்விரண்டு அதிராத்திரங்களும் வேள்வியை ஏற்றுக் கொள்ளுதற் பொருட்டாம் என்பது.

ஐந்தாமநுவாகம்

முற்றிற்று

ஏழாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

ஆறுவது அநுவாகம்

இரண்டு பஞ்சாதிக்குமேல் முப்பத்தாறு பதங்களைக் கொண்டது.

முப்பத்தாறு இரவுகள்கொண்டயாகத்தை விதிக்கும் பிராமணங்கள்.

आदित्या अकामयन्त सुवर्गं लोकमियामेति ते सुवर्गं लोकं न प्राजानन्न सुवर्गं लोकमायन्त एतꣳषट्त्रिꣳशद्रात्रमपश्यन्तमाऽह-रन्तेनायजन्त ततो वै ते सुवर्गं लोकं प्राजानन्त्सुवर्गं लोकमायन्य एवं विद्वाꣳसः षट्त्रिꣳशद्रात्रमासते सुवर्गमेव लोकं प्र जानन्ति सुवर्गं लोकं यन्ति ज्योतिरतिरात्रः ॥ २२ ॥ भवति ज्योतिरेव पुरस्ताद्दधते सुवर्गस्य लोकस्यानुख्यात्यै षडहा भवन्ति षड्वा ऋतव ऋतुष्वेव प्रति तिष्ठन्ति चत्वारो भवन्ति चतस्रो दिशो दिक्ष्वेव प्रति तिष्ठन्त्यसत्रं वा एतद्यदछन्दोमं यच्छन्दोमा भवन्ति तेन सत्रं देवता एव पृष्ठैरव रुन्धते पशूञ्छन्दोमैरोजो वै वीर्यं पृष्ठानि पशवश्छन्दोमा ओजस्येव ॥ २३ ॥ वीर्ये पशुषु प्रति तिष्ठन्ति षट्-

त्रिꣳशद्रात्रो भवति षट्त्रिꣳशदक्षरा बृहती बार्हताः पशवो बृहत्यैव पशूनव रुन्धते बृहती छन्दसाꣳ स्वाराज्यमाश्नुताश्नुवते स्वाराज्यं य एवं विद्वाꣳसः षट्त्रिꣳशद्रात्रमासते सुवर्गमेव लोकं यन्त्यतिरात्रा अभितो भवतः सुवर्गस्य लोकस्य परिगृहीत्यै ॥ २४ ॥ अतिरात्र ओजस्येव षट्त्रिꣳशच्च । ॥ ६ ॥

இதில் முப்பத்தாறு நாட்கள் கொண்ட யாகம் கூறப்படுகின்றது.

அதைவிதிக்கின்றது

பிராமணம் 1

आदित्या अकामयन्त सुवर्गं लोकमियामेति ते सुवर्गं लोकं न प्रजानन्न सुवर्गं लोकमायन्त एतꣳ षट्त्रिꣳशद्रात्रमपश्यन्तमाऽहरन्तेनायजन्त ततो वै ते सुवर्गं लोकं प्राजानन्त्सुवर्गं लोकमायन्य एवं विद्वाꣳसः षट्त्रिꣳशद्रात्रमासते सुवर्गमेव लोकं प्र जानन्ति सुवर्गं लोकं यन्ति ।

என்பது

உரை

ஒருக்கால், ஆதித்தர்கள் சுவர்க்கத்தை யடைய விரும்பி அதன்வழியுங் கூடத்தெரியாமல் அதை அடையாமலிருந்தனர். பிறகு, முப்பத்தாறு நாட்கள் கொண்ட யாகத்தைக் கண்டுபிடித்து அதன் உபகரணங்களைத் தேடிச் செய்து சுவர்க்கத்தையடையு மார்க்கத்தை யுணர்ந்து சுவர்க்கத்தை யடைந்தனர். அங்ஙனமே இதை யுணர்ந்து செய்கின்றவர்களும் சுவர்க்கத்தின் மார்க்கத்தைபுணர்ந்து சுவர்க்கத்தை யடைவார்கள் என்பது.

பிராயணீய ஆரம்ப) நாளை விதிக்கின்றது.

பிராமணம் 2

ज्योतिरतिरात्रो भवति ज्योतिरेव पुरस्ताद्दधते सुवर्गस्य लोकस्यानुख्यात्यै ।

என்பது.

உரை.

சோதியே அதிராத்திர மென்னும் பிராணீய நாளாம். சுவர்க்கலோக விளக்கத்தின் பொருட்டு முதலில் சோதி ஏற்றுக்கொள்ளப் படுகின்றது என்பது.

இனி, மேலேயுள்ளநாட்களுள் சிலவற்றை விதிக்கின்றது

பிராமணம் 3

षडहा भवन्ति षड्वा ऋतव ऋतुष्वेव प्रति तिष्ठन्ति ।

என்பது

உரை

சோதி கௌ ஆயுள், ஆயுள், சோதி, கௌ என்பது ஒரு ஆறுநாட்களாம். இருதுக்களும் ஆறும். இதனால், இருதுக்களில் நிலைக்கின்றார்கள் என்பது.

அவைகளின் எண் விதிக்கப்படுகின்றது

பிராமணம் 4

चत्वारो भवन्ति चतस्रो दिशो दिक्ष्वेव प्रति तिष्ठन्ति ।

என்பது.

உரை

இங்கு நான்கு ஆறு நாட்களாகின்றன. இவைகளால் நான்கு திசைகளிலும் பெருமையை யடைகின்றார்கள் என்பது

இனி, பிநஷ்டிய ஆறுநாள், சந்தோமநான்குநாள் என்னும் பன்னிநநாட்களுள் பத்து இரவுகளை விதிக்கின்றது

பிராமணம் 5

असत्रं वा एतद्यदछन्दोमं यच्छन्दोमा भवन्ति तेन सत्रं देवता एव पृष्ठैरव रुन्धते पशूञ्छन्दोमैरोजो वै वीर्यं पृष्ठानि पशवश्छन्दोमा ओजस्येव वीर्ये पशुषु प्रति तिष्ठन्ति ।

என்பது

உரை

இதற்கு உரை முன்போல் உரைத்துக்கொள்க என்பது.

இவ்வேள்வியிலுள்ள நாட்களின் எண் புகழப்படுகின்றது

பிராமணம் 6

षट्त्रिꣳशद्रात्रो भवति षट्त्रिꣳशदक्षरा बृहती बार्हताः पशवो बृहत्यैव पशूनव रुन्धते बृहती छन्दसाꣳ स्वाराज्यमाश्नुताऽश्नुवते स्वाराज्यं य एवं विद्वाꣳसः षट्त्रिꣳशद्रात्रमासते सुवर्गमेव लोकं यन्ति ।

என்பது.

உரை

இதற்கு முப்பத்தாறு இரவுகளாகின்றன. முப்பத்தாறு எழுத்துக்களைக் கொண்டது பிருகதிச் சந்தமாம். பிருகதியிலிருந்து பசுக்களுண்டானதால் பசுக்கள் பிருகதிச்சம்பந்த முடையவை (பார்ஹதி)கள் எனப்படுகின்றன. ஆதலின் இதனால் பசுக்களை யடைகின்றார்கள் மற்றும், சந்தங்களுள் பிருகதியானது சுவாராச்சியமுடையது ஆதலின் இதை யநுட்டிக்கின்றவர்கள் இங்கு சுவாராச்சியத்தை யடைகின்றார்கள் அங்குஞ் சுவர்க்கத்தை யடைகின்றார்கள் என்பது.

உதயனீய நாளை விதிக்கின்றது

பிராமணம் 7

अतिरात्रावभितो भवतः सुवर्गस्य लोकस्य परिगृहीत्यै ।

என்பது

உரை

உதயனீய மென்னும் அதிராத்திரம் சுவர்க்கலோகத்தைக் கொள்வதற்குக் காரணமாம் என்பது.

ஆறாமநுவாகம்

முற்றிற்று

ஏழாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

ஏழாவது அநுவாகம்

மூன்று பஞ்சாதிக்குமேல் இருபத்திரண்டு பதங்களைக் கொண்டது.

நாற்பத்தொன்பது இரவுகளைக் கொண்ட யாகத்தைக் கூறும் பிராமணங்கள்.

वसिष्ठो हतपुत्रोऽकामयत विन्देय प्रजामभि सौदासान्भवेयमिति स एतमेकस्मान्नपञ्चाशमपश्यत्तमाऽहरत्तेनायजत ततो वै सोऽविन्दत प्रजामभि सौदासानभवद्य एवं विद्वाꣳस एकस्मान्नपञ्चाशमासते विन्दन्ते प्रजामभि भ्रातृव्यान्भवन्ति त्रयस्त्रिवृतोऽग्निष्टोमा भवन्ति वज्रस्यैवमुखꣳ सꣳश्यन्तिदश पञ्चदशा भवन्ति पञ्चदशो वज्रः ॥ २५ ॥ वज्रमेव भ्रातृव्येभ्यः प्र हरन्ति षोडशिमद्दशममहर्भवति वज्र एव वीर्यं दधति द्वादश सप्तदशा भवन्त्यन्नाद्यस्यावरुद्ध्या अथो प्रैव तैर्जायन्ते पृष्ठ्यः षडहो भवति षड्वा ऋतवष्षट्पृष्ठानि पृष्ठैरेवर्तूनन्वारोहन्त्यृतुभिः संवत्सरं ते संवत्सर एव प्रति तिष्ठन्ति द्वादशैकविꣳशा भवन्ति प्रतिष्ठित्या अथो रुचमेवाऽऽत्मन् ॥ २६ ॥ दधते बहवः षोडशिनो भवन्ति विजित्यै षडाश्विनानि भवन्ति षड्वा ऋतव ऋतुष्वेव प्रति तिष्ठन्त्यूनातिरिक्ता वा एता रात्रय ऊनास्तद्यदेकस्यै न पञ्चाशदतिरिक्तास्तद्यद्भूयसीरष्टाचत्वारिꣳशत ऊनाच्च खलु वा अतिरिक्ताच्च प्रजापतिः प्राजायत ये प्रजाकामाः पशुकामाः स्युस्त एता आसीरन्प्रैव जायन्ते प्रजया पशुभिर्वैराजो वा एष यज्ञो यदेकस्मान्नपञ्चाशो य एवं विद्वाꣳस एकस्मान्नपञ्चाशमासते विराजमेव गच्छ-

न्त्यन्नादा भवन्त्यतिरात्रावभितो भवतोऽन्नाद्यस्य परिगृहीत्यै॥२७॥

वज्रं आत्मन्प्रजया द्वात्रिंशतिश्च ॥

இதில்நாற்பத்தொன்பதுநாட்களைக் கொண்ட யாகங் கூறப்படுகின்றது.

அதைவிதிக்கின்றது

பிராமணம் 1

वसिष्ठो हतपुत्रोऽकामयत विन्देय प्रजामभि सौदासान्भवेयमिति स एत-मेकस्मान्नपञ्चाशमपश्यत्तमाऽहरत्तेनायजत ततो वै सोऽविन्दत प्रजा-मभि सौदासानभवद्य एवं विद्वा᳚ꣳस एकस्मान्नपञ्चाशमासते विन्दन्ते प्रजामभि भ्रातृव्यान्भवन्ति ।

என்பது.

உரை

விசுவாமித்திரருடைய சாபத்தால் வசிஷ்டருடைய புத்திரர்களிறந்து போனதால், வசிஷ்டர் புத்திரப் பேற்றையும், பகை யொழிதலையும் விரும்பி நாற்பத்தொன்பது நாள் யாகத்தைக் கண்டுபிடித்து அதன் உபகரணந் தேடிச் செய்து புத்திரப்பேற்றையும், சௌதாஸா என்னுஞ் சத்துருக்களின வெற்றி யையும் பெற்றார். அவ்வாறே தெரிந்துகொண்டு நாற்பத்தொன்பது நாட் கள்கொண்ட யாகத்தைக் செய்கின்றவர்களும் புத்திரப்பேற்றையும் பகைவ ரின் வெற்றியையும் அடைகின்றார்கள் என்பது.

இனி, நாட்களை விதிக்கின்றது

பிராமணம் 2

त्रयस्त्रिवृतोऽग्निष्टोमा भवन्ति वज्रस्यैव मुखꣳ सꣳ श्यन्ति ।

என்பது

உரை

இதில் திரிவிருத் ஸ்தோமங்களைக்கொண்ட அக்கினிஷ்டோம மென்னு நாள் மூன்று அநுட்டிக்கத்தக்கன. இதனால், திரிவிருத் வடிவாகிய வச்சிரா யுதத்தின் வாய் கூராக்கப்படுகின்றது. இதை பிறகுருயிற் காண்க என்பது.

வேறுசில நாளை விதிக்கின்றது

பிரமாணம் 3

दश पञ्चदशा भवन्ति पञ्चदशो वज्रो वज्रमेव भ्रातृव्येभ्यः प्र हरन्ति ।

என்பது

உரை

பதினைந்து ஸ்தோமங்களையுடைய நாள் பத்தையும் அநுட்டித்தல் வேண்டும். இது, கொல்லும் வச்சிரமெனக் கூறப்பட்டிருத்தலின் வச்சிரமாம். இதனால் பகைவர்களைக் கொல்கின்றார்கள் என்பது.

மற்றும், வேறுசில நாட்களை விதிக்கின்றது

பிரமாணம் 4

षोडशिमद्दशममहर्भवति वज्र एव वीर्यं दधति ।

என்பது

உரை

பதினாறு துதிகளையுடைய பத்து இரவுகளுள் பத்தாவதாகிய பதில் சொல்லாத ஒருநாளை அநுட்டித்தல் வேண்டும். இதனால், முற்கூறிய வச்சிரத்தினிடத்தில் வீரியத்தை நிறுவுகின்றார்கள் என்பது. பதில் சொல்லாதது முன்கூறப்பட்டது.

வேறுசில நாட்களை விதிக்கின்றது

பிரமாணம் 5

द्वादश सप्तदशा भवन्त्यन्नाद्यस्यावरुद्ध्या अथो प्रैव तैर्जायन्ते ।

என்பது.

உரை

பதினேழு ஸ்தோமங்களையுடைய நாட்கள் பன்னிரண்டையும் அநுட்டித்தல்வேண்டும். இது, வயிற்றின் கூறிலிருந்து உண்டானதால் உணவுப் பொருட்குக் காரணமாம். மற்றும், இது பதினேழு எழுத்துக்களின் வடிவ பிரசாபதியாமாதலின் பிரசைகளின் உற்பத்திக்குங் காரணமாம் என்பது.

நாற்பத்தொன்பது நாள்)

ஆறு நாள் விதிக்கப்படுகின்றது

பிராமணம் 6

पृष्ठ्यः षडहो भवति षड्वा ऋतवः षट्पृष्ठानि पृष्ठैरेवर्तूनन्वा रोहन्त्यृतुभिः संवत्सरं ते संवत्सर एव प्रति तिष्ठन्ति ।

என்பது.

உரை

பிருஷ்டியத் துதிகளைக் கொண்ட ஆறு நாளும் அநுட்டிக்கத் தக்கதாம் இருதுக்களும் ஆறும் ஆகலின் இதனால் இருதுக்கள் வாயிலாக வருடத்தை யடைந்து வருடத்தில் நிலைக்கின்றார்கள் என்பது.

மற்றும்சில நாட்களை விதிக்கின்றது

பிராமணம் 7

द्वादशैकविंशा भवन्ति प्रतिष्ठित्या अथो रुचमेवाऽऽत्मन् दधते

என்பது

உரை

இருபத்தொரு ஸ்தோமங்களைக் கொண்ட நாட்கள் பன்னிரண்டையும் அநுட்டித்தல் வேண்டும். இதனால், பெருமையும் ஒளியும் அடையப்படுகின்றன என்பது.

மற்றும் சில நாட்களை விதிக்கின்றது.

பிராமணம் 8

बह्वः षोडशिनो भवन्ति विजित्यै ।

என்பது

உரை

சோடசி ஸ்துதிகளைக் கொண்ட நாட்கள் எவ்வளவோ, அவ்வளவையும் அநுட்டித்தல் வேண்டும். ஆனால் இங்கு, மூன்றுநாள் வேண்டியிருத்தலின் மூன்றையே அநுட்டித்தல் வேண்டும். இது, வெற்றியின் பொருட்டாம் என்பது.

இவ்வேள்வியில் ஆறுநாள் ஆசுவினசஸ்திரம் என்பதை விதிக்கின்றது

பிராமணம் 9

षडाश्विनानि भवन्ति षड्वा ऋतव ऋतुष्वेव प्रति तिष्ठन्ति ।

என்பது.

உரை

இதனால் இருதுக்களில் நிலைக்கின்றார்கள் என்பது.

நாற்பத்தொன்பதாகிய எண்ணைப் புகழ்கின்றது

பிராமணம் 10

ऊनानिरिक्ता वा एता रात्रय ऊनास्तद्यदेकस्यै न पञ्चाशदतिरिक्तास्तद्यद्भूयसीरष्टाचत्वारिꣳशत ऊनाच्च खलु वा अतिरिक्ताच्च प्रजापतिः प्राजायत ।

என்பது.

உரை

இவ்வேள்வியிலுள்ள நாட்கள் குறைவும் வேறுமாகின்றன. என்னை? ஒன்று குறைந்த ஐம்பதாம். ஆனால் இது நாற்பத்தெட்டினின்றும் வேறானதாம். முன், பிரசாபதி, குறைந்த எண்ணால் உறுதியான உடம்புகளைக் கொண்ட உயிர்களைப் படைத்தனன். வேறாகிய எண் மிகுதியால் வான் முதலானவைகளை மென்மேலும் குறைவிலாதனவாகப் படைத்தனன். ஆதலின், குறைவு, மிகுதி என்னும் நாட்களைக் கொண்ட இவ்வேள்வி பெருமையுடையதாம் என்பது.

முன் விதியிற்கூறிய பயனைமுடிக்கின்றது

பிராமணங்கள் 11

ये प्रजाकामाः पशुकामाः स्युस्त एता आसीरन्प्रैव जायन्ते प्रजया पशुभिः

என்பது

உரை

பிரசையையும், பசுக்களையும் விரும்பினவர்கள்; இதனால், பிரசைகளையும் பசுக்களையும் அடைகின்றார்கள் என்பது.

வருடசத்திரயாகம்)

இவ்வேள்வியிலுள்ள நாட்களின் எண்புகழப்படுகின்றது

பிராமணம் 12

वैराजो वा एष यज्ञो यदेकस्मान्नपञ्चाशो य एवं विद्वा२ँस एकस्मान्नपञ्चाशमासते विराजमेव गच्छन्त्यन्नादा भवन्ति ।

என்பது.

உரை

இந்த நாற்பத்தொன்பதில், ஐந்து பத்துக்களிருக்கின்றன. அவற்றுள் நான்கு பத்தனுள் பத்து இருத்தலால் விராட் சந்தமாம். ஐந்தாம் பத்தில் ஒன்று குறைந்திருப்பினும் உபசாரமாக விராடாம். ஆதலின், விராட் அன்னமாதலின் இதை யநுட்டிக்கின்றவர்கள் உணவுப் பொருளை யடைகின்றார்கள் என்பது.

பிராயணீய உதயனீயங்களை விதிக்கின்றது

பிராமணம் 13

अतिरात्रावभितो भवतोऽन्नाद्यस्य परिगृहीत्यै ।

என்பது

பிராயணீய உதயனீய அதிராத்திரங்களால் உணவுப் பொருள்கள் அடையப்படுகின்றன என்பது.

ஏழாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

எட்டாவது அநுவாகம்

இரண்டு பஞ்சாதிக்குமேல் முப்பத்து நான்கு பதங்களைக் கொண்டது.

சம்வத்ஸர சத்திரயாகத்தின் தீக்ஷாகாலத்தை விதிக்கும் பிரமாணங்கள்

संवत्सराय दीक्षिष्यमाणा एकाष्टकायां दीक्षेरन्नेषा वै संवत्सरस्य पत्नी यदेकाष्टकैतस्यां वा एष एता२ँ रात्रिं वसति साक्षादेव संवत्सरमारभ्य दीक्षन्त आर्तं वा एते संवत्सरस्याभि दीक्षन्ते य एकाष्टकायां दीक्षन्तेऽन्तनामानावृतू भवतो व्यस्तं वा एते संवत्सर-

स्याभि दीक्षन्ते य एकाष्टकायां दीक्षन्तेऽन्तनामानावृतू भवतः फल्गुनीपूर्णमासे दीक्षेरन्मुखं वा एतत् ॥ २८ ॥ संवत्सरस्य यत्फल्गुनीपूर्णमासो मुखत एव संवत्सरमारभ्य दीक्षन्ते तस्यैकैव निर्या यत्सांमेघ्ये विषूवान्त्संपद्यते चित्रापूर्णमासे दीक्षेरन्मुखं वा एतत्संवत्सरस्य यच्चित्रापूर्णमासो मुखत एव संवत्सरमारभ्य दीक्षन्ते तस्य न का चन निर्या भवति चतुरहे पुरस्तात्पौर्णमास्यै दीक्षेरन्तेषामेकाष्टकायां क्रयः सं पद्यते तेनैकाष्टकां न छम्बट्कुर्वन्ति तेषाम् ॥ २९ ॥ पूर्वपक्षे सुत्या सं पद्यते पूर्वपक्षं मासा अभि सं पद्यन्ते ते पूर्वपक्ष उत्तिष्ठन्ति तानुत्तिष्ठत ओषधयो वनस्पतयोऽनूत्तिष्ठन्ति तान्कल्याणी कीर्तिरनूत्तिष्ठत्यरात्सुरिमे यजमाना इति तदनु सर्वे राध्नुवन्ति ॥ ३० ॥ एतच्छम्बट्कुर्वन्ति तेषां चतुस्त्रिꣳशच ॥ ८ ॥

இதுமுதல் நான்கு அநுவாகங்களில் வருடசத்திரயாகம் கூறப்படுகின்றது. அதிலும், இவ்வநுவாகத்தில் வருடசத்திரயாகத்தின் தீக்ஷைக் காலத்தை விதிக்கின்றது.

அக்காலத்தை விதிக்கின்றது

பிராமணம் 1

संवत्सराय दीक्षिष्यमाणा एकाष्टकायां दीक्षेरन्नेषा वै संवत्सरस्य पत्नी यदेकाष्टकैतस्यां वा एष एताꣳ रात्रिं वसति साक्षादेव संवत्सरमारभ्य दीक्षन्ते ।

உரை

வருடத்திற் செய்யும் சத்திரயாகத்தின் பொருட்டு தீட்சை பண்ணிக் கொள்ளும் எசமானர்கள் மாசிமாத கிருஷ்ண பக்ஷ அஷ்டமியிற் செய்து கொள்ளல் வேண்டும். ஏனெனின்? இந்நாளின் அபிமானி தேவதையானது வருடாபிமானி தேவதையின் மனைவியாம் ஆதலின் என்க. மற்றும், மாசிமாத கிருஷ்ணபக்ஷ அஷ்டமியின் அபிமானி தேவதையிடத்தில் இந்நாளின் இரவு முழுதும் வருடாபிமானி தேவதை வசிக்கின்றது. ஆதலின், இதில் தீட்சை செய்து கொண்டவர்கள் வருடத் தொடக்கத்திற் செய்துகொண்டவராகின்றார் கள் என்பது. மாசி = மாகம்.

இப்பக்ஷத்தைப் பழித்துவிட்டு மற்றொரு பக்ஷத்தை விதிக்கின்றது

பிரமாணம் 2

आर्तं वा एते संवत्सरस्याभि दीक्षन्ते य एकाष्टकायां दीक्षन्तेऽन्तनामाना-वृतू भवतो व्यस्तं वा एते संवत्सरस्याभि दीक्षन्ते य एकाष्टकायां दीक्षन्तेऽन्तनामानावृतू भवतः फल्गुनीपूर्णमासे दीक्षेरन्मुखं वा एतत् संवत्सरस्य यत्फल्गुनीपूर्णमासो मुखत एव संवत्सरमारभ्य दीक्षन्ते ।

என்பது

உரை

மாசிமாதக் கிருஷ்ணபட்ச அஷ்டமியில் தீட்சை பண்ணிக்கொள்கின்ற வர்கள் வருட சத்திரயாகத்தின் நாசத்தைக் குறித்துச் செய்து கொள்கின்றார் கள். ஏனெனின்? தையும் மாசியும், இருதின் அவயவங்கள் எனவும், வருடத் தின் முடிவுகளெனவும் பெயர்களை யுடையவைகள். என்னை ? அவ்விரண்டும் குளிர்கால மாதலின் என்க. அந்த இருதுவால் முன்வருடம் முடிவாகிறபடி யால் தைமாதப் பௌர்ணமி தொடங்கி பங்குனியின் பௌர்ணமி வரை முன் காலம் வருடத்தின் முடிவுகாலமாம். மற்றும், மாசிமாத கிருஷ்ணபக்ஷமியின் அஷ்டமியில் தீட்சை செய்து கொண்டவர்கள் வருட சத்திரயாகத்தின் விப ரீதத்தைக் குறித்துச் செய்து கொண்டவர்களாகின்றார்கள். முதலில் தீட்சை செய்து கொள்ளல் வேண்டும் இதுவோ, அந்தமா(முடிவா)ம். மேற்கூறிய படி அந்தம் என்னும் பெயரைக் கொண்டுள்ளமையின் என்க. ஆதலின், பங்குனிமாதப் பௌர்ணமியில் தீட்சை செய்துகொள்ளல் வேண்டும். இந் நாளே மேல் வரும் வருடத்தின் தொடக்கத்தைக் கொண்டதாம ஆதலின் வருடத் தொடக்கத்தில் தீட்சை செய்து கொண்டது போலாகின்றது என்பது.

இப்பக்ஷத்தையும் பழித்துவிட்டு மற்றொரு பக்ஷத்தை விதிக்கின்றது

பிராமணம் 3

तस्यैकैव निर्यायत्सांमेघ्ये विषूवान्त्संपद्यते चित्रापूर्णमासे दीक्षेरन्मुखं वा एतत्संवत्सरस्य यच्चित्रापूर्णमासो मुखत एव संवत्सरमारभ्य दीक्षन्ते तस्य न का चन निर्या भवति ।

என்பது

உரை

பங்குனிமாதப் பௌர்ணமியில் தீட்சை செய்து கொள்ளல் வேண்டும் என்னும் பட்சமும் மிகுந்த மழை காலத்தில் வரும "விஷூவான்", என்னும் ஒருநாளை யுடையதாகிய ஒரு குற்றமுடையதாம். எவ்வாறெனின்? முன்னாறு மாதம் பின்னாறு மாதம் எனனும்இரண்டிற்கு நடுவில் ஒருநாள் விசேடமே விழுவான் எனப்படும். இங்கு, பங்குனிமாத பௌர்ணமியிலிருந்து பன்னிரண்டு உபசத்துக்களும் அநுட்டிகதுவிட்டு முதல் மாதந் தொடங்கல் வேண்டும். தொடங்கும்போது சித்திரைமாத சுக்கிலபட்சநவமியில் தொடங்கியதாகின்றது. அப்பிகை மாதச் சுக்கில அஷ்டமியில் ஆறுமாதங்களை முடித்துவிட்டு நவமியில் விழுவான் என்னும் நாள கொள்ளப்படும். கொள்ளும்போது அது மழைக் காலததில் வருகின்றது. என்னை? புரட்டாசி மாதப் பௌர்ணமியில் மழைகாலம் முடிந்தபோது பின்வரும் மாதபாயிருத்தலினென்க. ஆதலின், மழைக் காலத்திற் கருகில விழுவததினத்தின் பரிஹாரத்தின் பொருட்டு சித்திரை நட்சத்திரங்கூடிய பௌர்ணமியில் தீட்சை செய்து கொள்ளல் வேண்டும். அதுவும் வசந்தரிதுவின் நடுவிலிருக்கின்றதால் வருடத் தொடக்கமேயாகும். இதனால்முகத்திலிருந்தே தொடங்கப்பட்டதாகும். இவ்வாற்றால் கார்த்திகை மாதச் சுக்கில பட்ச நவமியில் விழுவான் வருகிறது. அது மழைக்காலத்திற்குத் தூரமாம். ஆதலின் மழை பெய்யுமென்னும் ஐயப்பாடு மின்மையின் விரிவாய் அநுட்டிக்கல் கூடுமாதலின் இப்பட்சத்தில் ஒரு குற்றமும் இல்லை என்பதாம்.

குணவிசேடத்தைக்கண்டு மற்றொருபக்ஷத்தை விதிக்கின்றது

பிராமணம் 4

चतुरहे पुरस्तात्पौर्णमास्यै दीक्षेरन्तेषामेकाष्टकायां क्रयस्सं पद्यते तेनैकाष्टकां न छम्बट्कुर्वन्ति ।

என்பது

வருடசத்திரயாகம்)

உரை

மாசிமாதப் பௌர்ணமிக்கு நான்குநாள் முன்னர் சுக்கிலபட்ச ஏகாதசியில் தீட்சைசெய்து கொள்ளல் வேண்டும், செய்துகொள்ளில் மாசிமாதக் கிருஷ்ணபக்ஷ சப்தமியில் பன்னிரண்டு தீட்சைகளும் முடிந்துவிடுவதால் அதன் பின்வரும் கிருஷ்ணபட்ச அஷ்டமியில் சோமத்தை விலைக்கு வாங்குதல் அமையும்; அமையவே, மாசிமாதக் கிருஷ்ணபக்ஷ அஷ்டமியும் உபயோகப்பட்டதால் வருடதேவதையின் மனைவியாகிய முக்கியத்தன்மையும் வீணாகவில்லை. ஆதலின் வருடத்தின் மனைவியைப் பெருமைப்படுத்தியதும் ஒரு குணமாம் என்பது

மற்றொருதணத்தை விதிக்கின்றது

பிராமணம் 5

तेषां पूर्वपक्षे सुत्या सं पद्यते पूर्वपक्षं मासा अभि सं पद्यन्ते ते पूर्वपक्ष उत्तिष्ठन्ति तानुत्तिष्ठत ओषधयो वनस्पतयोऽनूत्तिष्ठन्ति तान्कल्याणी कीर्तिरनूत्तिष्ठत्यरात्सुरिमे यजमाना इति तदनु सर्वे राध्नुवन्ति ।

என்பது.

உரை

மாசிமாதக் கிருஷ்ணபக்ஷ அஷ்டமியில் சோமக்கிரயத்தை அநுட்டிக்கில் அநுட்டிக்கின்ற எசமானர்களுக்கு அந்நாள் முதல் அநுட்டிக்கும் உபசத்துக்கள் சித்திரைமாதச் சுக்கிலபட்சச் சதுர்த்தியிலமைகின்றன. அதன் பின் செய்யப்படும் சோமாசம்பிழிதலும் சுக்கிலபட்சதிதியிலேயே கொடங்கப்பெற்றதாகும். அதிலிருந்து எல்லாமாதங்களும் சுக்கிலபட்சத்தைக் கொண்டே முடியும். அவ்வாறு முடியும்போது சத்ரயாகங்களைச் செய்தவர்களும் சுக்கிலபட்சத்திலேயே சத்திரங்களிலிருந்து எழுகின்றார்கள். அவர்களைப்பற்றி பூமியின்மேல் கொடிசெடிகளும் நல்ல கருமாநுட்டான வன்மையுடன் எழுகின்றன. அவ்வாறு எழுந்தபோது, இவ்வெசமானர்கள் உடனே நல்ல சம்பத்தை யடைந்தார்கள் என்னும் நல்லவாக்கும் எழுகின்றது. அதைப்பற்றி எல்லா வுயிர்களும் நலமடைகின்றன. ஏனெனின்? இவ்வேள்வி செய்ததால் பூமியில் பயிர்கள் நன்கு வளர்ந்தமையின் என்க. ஆதலின், இத்தகைய நற்குணங்களையுடைய மாசிமாதச் சுக்கிலபட்ச ஏகாதசியில் தீட்சைசெய்து கொள்ளல் வேண்டுமென்பதே முக்கிய பட்சமாம் என்பது.

எட்டாமநுவாகம்

முற்றிற்று.

ஏழாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

ஒன்பதாவது அநுவாகம்

ஐம்பது பதங்களைக் கொண்டது.

தீட்சையையும் உபசத்யாகத்தையுங் கூறும் பிராமணங்கள்.

सुवर्गं वा एते लोकं यन्ति ये सत्रमुपयन्त्यभीन्धत एव दीक्षा-
भिरात्मानꣳ श्रपयन्त उपसद्भिर्द्वाभ्यां लोमाव द्यन्ति द्वाभ्यां
त्वचंद्वाभ्यामसृग्द्वाभ्यां माꣳसं द्वाभ्यामस्थि द्वाभ्यां मज्जानमात्म-
दक्षिणं वै सत्रमात्मानमेव दक्षिणां नीत्वा सुवर्गं लोकं यन्ति-
शिखामनु प्र वपन्त ऋद्ध्या अथो रघीयाꣳसः सुवर्गं लोकमया-
मेति ॥ ३१ ॥ सुवर्गं पञ्चाशत् ॥

இதில், தீட்சையும் உபசத்யாகமுங் கூறப்படுகின்றன.

அவ்விரண்டையும் விதிக்கின்றது

பிராமணம் 1

सुवर्गं वा एते लोकं यन्ति ये सत्रमुपयन्त्यभीन्धत एव दीक्षाभिरात्मानꣳ श्रपयन्त उपसद्भिः ।

என்பது

உரை

சத்திரயாகத்தை அநுட்டிக்கின்றவர்கள் சுவர்க்கத்தையடைகிறார்கள். ஆதலின், அதற்குத் தகுதியாதற்பொருட்டு தீட்சைகளால் தமது உடம்புகளைத் தகிக்கின்றார்கள். உபசத்யாகங்களால் தமது தேகங்களைச் சமைக்கின்றார்கள். ஆகையால் தீட்சையும் உபசத்தும் செய்யத்தக்கன என்னுமிதையே விதியாய் யூகித்துக்கொள்க. துவாதசநாளின் விகிருதியாதலானும் இவை பெறப்பட்டன. ஆயினும், விகிருதி இலிங்கத்தின் பொருட்டு, அல்லது துதியின்பொருட்டு இது மீண்டுங் கூறப்பட்டது என்பது.

உபசத்தும்)

அவ்விரண்டையும் பிரித்துப்புகழ்ந்து அவ்விரண்டும் பன்னிரண்டு பன்னிரண்டென்பதை வெளிப்படுத்துகின்றது,

பிராமணம் 2

द्वाभ्यां लोमाव घ्नन्ति द्वाभ्यां त्वचं द्वाभ्यामसृग्द्वाभ्यां माꣳसं द्वाभ्यामस्थि द्वाभ्यां मज्जानमात्मदक्षिणं वै सत्रमात्मानमेव दक्षिणां नीत्वा सुवर्गं लोकं यन्ति ।

என்பது

உரை

இரண்டு நாட்களில் அநுட்டிக்கப்படும் தீட்சை உபசத் என்னுமிரண்டாலும் அவியின் பொருட்டு தமது மயிர்களையும், தோலையும், நாடிகளையும், மாமிசங்களையும், எலும்புகளையும், மூளைகளையும் அறுத்தெடுக்கின்றார்கள். இச் சத்திரயாகம் தேகத்தையே தட்சிணையாகவுடைத்து. ஆதலின் தமது தேகங்களையே தட்சிணையாகக் கொடுத்துவிட்டு சுவர்க்கத்தையடைகின்றார்கள் என்பது.

தலைமயிரைக்கழித்தல் வேண்டுமென்று விதிக்கின்றது

பிராமணம் 3

शिखामनु प्र वपन्त ऋद्ध्या अथो रघीयाꣳसः सुवर्गं लोकमयामेति ।

என்பது

உரை

குடுமியுடன் நன்றாய் மொட்டையடித்தல் வேணடும். இறந்ததோலாகிய மயிரைக் கழித்தல் சம்பத்தின் பொருட்டாகின்றது. மற்றும், தலைமயிரின் கனத்தைக் குறைத்துவிட்டு இலேசாகி சுவர்க்கத்தையடைவோமாக என்னுங் கருத்தால் மொட்டையடித்தல் வேண்டும் எனபது.

ஒன்பதாமநுவாகம்

முற்றிற்று

ஏழாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

பத்தாவது அநுவாகம்

ஒரு பஞ்சாதிக்குமேல் நாற்பத்தொன்பது பதங்களைக் கொண்டது.

பிராயணீயம் என்னும் முதல்நாளைக் கூறும் பிராமணங்கள்

ब्रह्मवादिनो वदन्त्यतिरात्रः परमो यज्ञक्रतूनां कस्मात्तं प्रथम-
मुप यन्तीत्येतद्वा अग्निष्टोमं प्रथममुप यन्त्यथोक्थ्यमथ षोडशिन-
मथातिरात्रमनुपूर्वमेवैतद्यज्ञक्रतूनुपेत्य तानालभ्य परिगृह्य सोममेवै-
तत्पिबन्त आसते ज्योतिष्टोमं प्रथममुप यन्ति ज्योतिष्टोमो वै
स्तोमानां मुखं मुखत एवस्तोमान्प्र युञ्जते तें ॥ ३२ ॥ सꣳस्तुता
विराजमभि सं पद्यन्ते द्वे चर्चावति रिच्येते एकया गौरतिरिक्त
एकयाऽऽयुरूनः सुवर्गो वै लोको ज्योतिरूग्विराट्त्सुवर्गमेव तेन
लोकं यन्ति रथंतरं दिवा भवति रथंतरं नक्तमित्याहुर्ब्रह्मवादिनः
केन तदजामीति सौभरं तृतीयसवने ब्रह्मसामं बृहत्तन्मध्यतो
दधति विधृत्यै तेनाजामि ॥ ३३ ॥ त एकान्न पञ्चाशच्च ॥

இதில், பிராயணீயமென்னும் முதலநாள் கூறப்படுகின்றது.

அதைவிதிக்கின்றது

பிராமணம் 1

ब्रह्मवादिनो वदन्त्यतिरात्रः परमो यज्ञक्रतूनां कस्मात्तं प्रथममुप यन्तीत्ये-
तद्वा अग्निष्टोमं प्रथममुप यन्त्यथोक्थ्यमथ षोडशिनमथातिरात्रमनुपूर्व-
मेवैतद्यज्ञक्रतूनुपेत्य तानालभ्य परिगृह्य सोममेवैतत्पिबन्त आसते
ज्योतिष्टोमं प्रथममुप यन्ति ज्योतिष्टोमो वै स्तोमानां मुखं मुखत एव
स्तोमान्प्र युञ्जते ।

என்பது.

உரை.

இவ் வதிராத்திர மென்னும் யாகம் சோமயாகமாகிய யாகங்களுள் ஈற்றிலுள்ளதாம். அக்கினிட்டோமம் உக்த்யம், சோடசி அதிராத்திர மென்னும் இதன் முறையாமாதலின் அக்கினிஷ்டோமம் முதலாவதாம். இது, ப்ரஜனனம், என்னும் அநுவாகத்திற் கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறுகுமிடத்து, முதலாவதாகிய அக்கினிஷ்டோமத்தை விட்டுவிட்டு கடையாகிய அதிராத்திரம் எவ்வாறு சத்திரத்தில் முதலில் அநுட்டிக்கப்படுகின்றது? என்று பிரமவாதிகள், வினவுகின்றார்கள், அதற்குரிய அறிஞர்கள் இதில் அக்கினிட்டோமம் விடுபடவில்லை என்கின்றனர். என்னை? இதில், அக்கினிட்டோமம், உக்த்யம், சோடசி, அதிராத்திரம் என்பவைகளுள் பின் பின் வருகின்றதற்கு முன் முன் உள்ளது கருப்பமாயிருத்தலினென்க. அதுவருமாறு :— பன்னிரண்டு துதிகளாகிய அக்கினிட்டோமத்தைஉள்ளடக்கிக் கொண்டே மீண்டும மூன்று துதிகள் மிகுதியாகும்போது உக்த்யமாகின்றது. அங்ஙனமே, அதையு முள்ளடக்கிக்கொணடு ஒரு துதி அதிகமாகும்போது சோடசியாகின்றது, அதையு முள்ளடக்கிக்கொண்டு மீண்டும் பதின்மூன்று துதிகள் மிகுதியாகும்போது அதிராத்திரமாகின்றது என்பது. இவ்வாற்றால் சத்திரயாகத்தை அநுட்டிக்கின்றவர் சோமாநுட்டானத்தின் முதலில் அக்கினிட்டோமத்தை அநுட்டிக்கின்றார்கள். பிறகு உக்த்யம், பிறகு சோடசி, பிறகு அதிராத்திரம் என்னுமிம்முறையைக் கொண்ட யாகங்களைச் செய்வதற்கு உறுதி பண்ணிக்கொண்டு முழு பக்ஷங்களையும் ஏற்று எங்கும் சோமநதை அருந்தினவர்களாக இருக்கின்றார்கள். ஆதலின், முதலில் சோதிட்டோமத்தை அநுட்டித்தல் வேண்டும். அது, சோதி, கௌ, ஆயுள் என்பவைகட்கு முகமாகின்றது. ஆதலின், முகத்திலிருந்து தொடங்கியே சத்திரயாகஞ் செய்கின்றவர்களாய் ஸ்தோமங்களையும் கிருதுக்களையும் பிரயோகஞ் செய்கின்றார்கள் என்பது.

மற்றும், கோஷ்டோமம் ஆயுட்டோமம் என்னுமிரண்டிற்கும் முதலாவது சோதிட்டோமமாம் என்பதை மற்றோராற்றற் புகழ்கின்றது.

பிராமணம் 2

तेसꣳस्तुता विराजमभि सं पद्यन्ते द्वे चर्चावति रिच्येते एकया गौरतिरिक्त एकयाऽऽयुरूनस्सुवर्गो वै लोको ज्योतिरूर्ग्विराट्त्सुवर्गमेव तेन लोकं यन्ति ।

என்பது

உரை

சோதிட்டோமத்தின் துதியிலுள்ள இருக்கு விசேடங்கள் துதிக்கப் பெற்ற விராட்டாகிய பக்தேயாகின்றன. குறைவும் மிகுதியுமாவதில்லை. கோட்டோம ஆயுட்டோமங்களிரண்டுகளிலும் அவ்வாறில்லை. மற்றோ, அவற்றுள், கோஷ்டோமத்தில் ஒன்று மிகுதியாம். ஆயுட்டோமத்தில் ஒன்று குறைவாம். இவ்வாற்றால் விராட் வடிவத்தன்மை சோதிட்டோமப் புகழுக்குக் காரணமாம். விளக்குந் தன்மையினும் சோதிட்டோமம் சுவர்க்கவடிவ விராட்டாம். இவ்வாறு இருவகையானும் பெருமைவுடைய சோதிடடோமத் தால் சுவர்க்கத்தை யடைகின்றார்கள் என்பது.

இனி, சோதிட்டோமமாகிய அதிராத்திரப்பிரிவிந்த சாமவிசேடத்தை விதிக்கின்றது

பிராமணம் 3

रथंतरं दिवा भवति रथंतरं नक्तमित्याहुर्ब्रह्मवादिनः केन तदजामीति सौ-
भरं तृतीयसवने ब्रह्मसाम बृहत्तन्मध्यतो दधति विधृत्यै तेनाजामि ।

என்பது.

உரை

பகலில் செய்யப்படும் பிருஷ்டத்துதியில் ரதந்தர மென்பது பாடப்படு கின்றது. இரவுமுறைகளிலும் ரதந்தரம் பாடப்படுகின்றது. அப்போது சோம்பலுண்டாகின்றது. அச்சோம்பல் எந்தச் சாமப்பாடலால் நீங்குமென்று? பிரமவாதிகள் வினவுகின்றனர். அறிஞர்கள், சௌபரம் என்னும் வேறொரு சாமப்பாடல் இருக்கின்றது அதை, மூன்றாஞ் சவனத்தில் பிரமசாமமாகப் பாடில் ஆலசியம் நீங்கும் என்று விடை கூறுகின்றனர். அப்பாடல், பிருகத் ப்ரௌடம்என்பதாம். இது, பிருகத் ரதந்தரங்களிரண்டிற்கும் நடுவில் நிறுவப்படுகின்றது. இது, எகனும் நிலைத்தற் பொருட்டாகின்றது என்பது.

பத்தாமநுவாகம்

முற்றிற்று

மாதநாட்கள்)

ஏழாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

பதினோராவது அநுவாகம்

நான்கு பஞ்சாதிக்குமேல் எட்டுப்பதங்களை கொண்டது.

மாதத்தில் உள்ள நாட்களைக் கூறும் பிராமணங்கள்.

ज्योतिष्टोमं प्रथममुप यन्त्यस्मिन्नेव तेन लोकेप्रति तिष्ठन्ति गोष्टोमं द्वितीयमुप यन्त्यन्तरिक्ष एव तेन प्रति तिष्ठन्त्यायुष्टोमं तृतीयमुप यन्त्यमुष्मिन्नेव तेन लोके प्रति तिष्ठन्तीयं वाव ज्योतिरन्तरिक्षं गौरसावायुर्यदेतान्त्स्तोमानुपयन्त्येष्वेव तल्लोकेषु सत्रिणः प्रतितिष्ठन्तो यन्ति ते सꣳस्तुता विराजम् ॥ ३४ ॥ अभि सं पद्यन्ते द्वे चर्चावति रिच्येते एकया गौरतिरिक्त एकयाऽऽयुरूनः सुवर्गो वै लोको ज्योतिरूर्ग्विराडूर्जमेवाव रुन्धते ते न क्षुधाऽऽर्तिमार्छन्त्यक्षोधुका भवन्ति क्षुत्संबाधा इव हि सत्रिणोऽग्निष्टोमावभितः प्रधी तावुक्थ्या मध्ये नभ्यं तत्तदेतत्परियद्देवचक्रं यदेतेन ॥ ३५ ॥ षडहेन यन्ति देवचक्रमेव समारोहन्त्यरिष्ट्यै ते स्वस्ति समश्नुवते षडहेन यन्ति षड्वा ऋतव ऋतुष्वेव प्रति तिष्ठन्त्युभयतोज्योतिषा यन्त्युभयत एव सुवर्गे लोके प्रतितिष्ठन्तो यन्ति द्वौ षडहौ भवतस्तानि द्वादशाहानि सं पद्यन्ते द्वादशो वै पुरुषो द्वे सक्थ्यौ द्वौबाहू आत्मा च शिरश्च चत्वार्यङ्गानि स्तनौद्वादशौ ॥ ३६ ॥ तत्पुरुषमनु पर्यावर्तन्ते त्रयः षडहाभवन्ति तान्यष्टादशाहानि सं पद्यन्ते नवान्यानि नवान्यानि नव वै पुरुषे प्राणास्तत्प्राणाननु पर्यावर्तन्ते चत्वारः षडहा भवन्ति तानि

चतुर्विंशतिरहानि सं पद्यन्ते चतुर्विंशतिरर्धमासाः संवत्सरस्त- त्संवत्सरमनु पर्यावर्तन्तेऽप्रतिष्ठितः संवत्सर इतिखलु वा आहुर्वर्षी- यान्प्रतिष्ठाया इत्येतावद्वै संवत्सरस्य ब्राह्मणं यावन्मासो मासि- मास्येव प्रतितिष्ठन्तो यन्ति ॥ ३७ ॥ विराजमेतेन द्वादशावेतावद्वा अष्टौ च ॥

இதில், மாதங்களிலுள்ள நாட்கள் கூறப்படுகின்றன.

முதலில், அவற்றுள் மூன்றுநாட்களை விதிக்கின்றது

பிராமணம் I

ज्योतिष्टोमं प्रथममुप यन्त्यस्मिन्नेव तेन लोके प्रति तिष्ठन्ति गोष्टोमं द्विती- यमुप यन्त्यन्तरिक्ष एव तेन प्रति तिष्ठन्त्यायुष्टोमं तृतीयमुप यन्त्य- मुष्मिन्नेव तेन लोके प्रति तिष्ठन्तीयं वाव ज्योतिरन्तरिक्षं गौरसावायु- र्यदेतानुपयन्त्येष्वेव तल्लोकेषु सत्रिणः प्रतितिष्ठन्तो यन्ति ।

என்பது

உரை

சோதி, கோள, ஆயுள் என்பது நாள் விசேடங்கள். இவற்றை நேராகவும் மாறாகவுங் கொள்ளில் ஆறுநாளாகின்றன. அவ்விரண்டனுள் முதலாவதாகிய நேர்முறையை இங்கு அநுட்டித்தல் வேண்டும். அதாவது, சோதிட்டோமம் முதலாம் நாளாம் இதனால் இவ்வுலகில் பெருமையை யடைகின்றார்கள். கோஷ்டோமம் இரண்டாநாளாம் இதனால் அந்தரிக்க லோகத்தை யடைகின்றார்கள். ஆயுட்டோமம் மூன்றுநாளாம் இதனால் சுவர்க்கலோகத்தை யடைகின்றார்கள். இம்மூன்றும் மூவுலக வடிவங்களாதலின், சத்திரயாகஞ் செய்கின்றவர்கள் மூவுலகிலும் நலம்பட வாழ்கின்றவர்களாவார்கள். முன், பிராயணீயமென்னும் அதிராத்திரமாகிய சோதிட்டோமம் விதிக்கப்பட்டது. இப்போதோ, மூன்றுநாள் அநுட்டிக்கத்தக்கது இங்கு அக்கினிட்டோமமாகிய சோதிட்டோமங் கூறப்படுகின்றது மாத்திரம் விசேடம் என்பது.

மாதநாட்கள்)

இவ்வக்கினிட்டோமத்திற்கு, முற்கூறிய அதிராத்திரம்போல் சோதிட்டோமம் முதலாவதாம் என்று கூறுகின்றது

பிராமணம் 2

ते सꣳस्तुता विराजमभि सं पद्यन्ते द्वे चर्चावति रिच्येते एकया गौरतिरिक्त एकयाऽऽयुरूनः सुवर्गो वै लोको ज्योतिरूर्ग्विराडूर्जमेवाव रुन्धते ते न क्षुधाऽऽर्तिमार्छन्त्यक्षोधुका भवन्ति क्षुत्संबाधा इव हि सत्रिणः ।

என்பது

உரை

சோதிட்டோமம் துதியின் எண்ணல் விராட்டாம். விராட் இரசவடிவா மாதலின் சத்திரயாகஞ்செய்தவர்கள் பசியுடையவர்களாகார்கள். மற்றிரண்டும் இருக்கின் குறைவுகள் மிகுதிகளால் விராட் ஆகா. இரசம் உணவுப்பொருளாத லின் அதனால் பசிநிவர்த்தியாம். அதாவது, எப்போதும் பசியில்லாதவர் களாகவே இருக்கின்றார்கள் என்பதாம். சத்திரயாகஞ் செய்கின்றவர்களோ, அநுட்டான மிகுதியால் மிகக்களைப்புண்டாதலின் பசிநோயடைந்தவர்களைப் போலிருக்கின்றனர் ஆதலின், பசிநீக்குதற் பொருட்டு விராட்டாகிய இரச சம்பத்தை யடைதற்பொருட்டு சோதிட்டோமம் முதலில் அநுட்டித்தல் வேண்டுமென்பது.

இப்போது, கூறியசோதிமுதலான மூன்றையும் நேராகவும் மாறாகவும் அநுட்டிக்கில் உண்டாகும் அபிப்லவமென்னும் ஆறுநாளையும் தேரின்சக்கரகற் பனையாக விதிக்கின்றது.

பிராமணம் 3

अग्निष्टोमावभितः प्रधी तावुक्थ्या मध्ये नभ्यं तत्तदेतत्परियद्देवचक्रं यदेतेन षडहेन यन्ति देवचक्रमेव समारोहन्त्यरिष्ट्यै ते स्वस्ति समश्नुवते ।

என்பது

உரை.

உலகில் இரதத்தின் சக்கரம் மூன்று பலகைகளால் இணைக்கப்படு கின்றது. அவற்றுள், பக்கத்திலுள்ள இரண்டு பலகைகளும் பிரதீ எனப் படுகின்றன. அதாவது நடுப்பலகையைப் பிடித்துக் கொண்டிருப்பவைகள் என்பதாம். நடுப்பலகை நப்யம் எனப்படுகின்றது. அதாவது நாபிபோன்ற தாம் என்பது. இங்கு, முதலிலும் இடையிலும் அநுட்டிக்கும் அக்கினிஷ்

டோமங்கள் பிரதியாம் அதாவது பக்சப் பலகைகள் போன்றன. கௌ ஆயுள் ஆயுள் கௌ, உக்த்யமாகிய நான்கு கிருதுக்களுஞ் சேர்ந்து நடுப்பலகை போன்றதாம். இது, அபிப்லவ ஆறுநாள் மீண்டு மீண்டுஞ் சுற்றும் ஆதலின் தேவசக்கரம் எனப்படுகின்றது. இதைச் செய்யும் எசமானர் தேவச்சக்கரத்தின்மீது ஏறுகின்றார்கள் அது துன்பிலாமைக்குக் காரணமாம். அதுவும், நலமடைதற் பொருட்டாகின்றது என்பது.

மீண்டும், அவ்வாறுநாளையே விதிக்கின்றது

பிராமணம் 4

षडहेन यन्ति षड्वा ऋतव ऋतुष्वेव प्रति तिष्ठन्ति ।

என்பது

உரை

ஆறுநாட்களாலும் ஆறு இருதுக்களிலும் நிலைத்திருக்கின்றார்கள் என்பது.

அவ் வாறுநாளின், நேர்முறை மாறுமுறைகளில் மூன்றுநாளை விதிக்கின்றது

பிராமணம் 5

अभयतोज्योतिषा यन्त्युभयत एव सुवर्गे लोके प्रतितिष्ठन्तो यन्ति ।

என்பது

உரை

சோதி, கௌ, ஆயுள் என்பதை மாறிக்கொள்ளில், ஆயுள், கௌ, சோதி எனவருதலின் இருபக்கத்திலும் சோதிகளையுடைய ஆறுநாளை யநுட்டிக்கின்றதால் சோதியால் சுவர்க்கத்தையடைந்து அவமதிப்பின்றி பெருமையுடனிருக்கின்றார்கள் என்பது.

அவ் வாறுநாளையும் இரட்டைப்படுத்துவதை விதிக்கின்றது.

பிராமணம் 6

द्वौ षडहौ भवतस्तानि द्वादशाहानि सं पद्यन्ते द्वादशो वै पुरुषो द्वे सक्थ्यौ द्वौ बाहू आत्मा च शिरश्च चत्वार्यङ्गानिस्तनौ द्वादशौ तत्पुरुषमनुपर्यावर्तन्ते ।

என்பது.

உரை

அவ்வாறு நாட்களையும் இரட்டைப்படுத்தின் பன்னிரண்டு நாட்களாகின்றன. ஒருமனிதனுக்கும், கால்கள், கைகள், உடல், தலை, முள்ளெலும்பு இரண்டு, தோட்கள், முலைகள் எனப் பன்னிரண்டு அவயவங்களிருக்கின்றன வாதலின் மனிதனைத் தழுவி ஆவிருத்தியாகின்றது என்பது.

இனி, மூன்றுவதாவிருத்தியை விதிக்கின்றது

பிராமணம் 7

त्रयः षडहा भवन्ति तान्यष्टादशाहानि सं पद्यन्ते नवान्यानि नवान्यानि नव वै पुरुषे प्राणास्तत्प्राणाननु पर्यावर्तन्ते ।

என்பது

உரை

ஆறுநாட்களை மூவகையாய்ப் பெருக்கின் பதினெட்டு நாட்கள் ஆகின்றன. அவற்றை இரண்டு பங்காக்கின் ஒன்பதாகின்றன. மனிதனுடைய தலையில் ஒன்பது துளைகளுள் ஒன்பது பிராணன் இருக்கின்றன. இதைத் தழுவியே ஆவிருத்தி யாகின்றன என்பது.

ஆசங்கைவிடைகளால் எல்லாமாதங்களின் அநுட்டானத்தையும் விதிக்கின்றது

பிராமணம் 8

चत्वारः षडहा भवन्ति तानि चतुर्विंशतिरहानि सं पद्यन्ते चतुर्विंशतिरर्धमासाः संवत्सरस्तत्संवत्सरमनु पर्यावर्तन्ते ।

என்பது.

உரை

நான்கு ஆறுநாளாகின்றன. அவை இருபத்துநான்கு நாட்கள். பாதி பாதி மாதங்களாகக் கொள்ளில் மாதங்களும் இருபத்துநான்கு ஆகின்றன. ஆதலின், வருடத்தைத் தழுவி ஆவிருத்தியாகின்றன. இங்கு, மாதம் நிறைவதன் பொருட்டு பிருஷ்டிய ஆறுநாளையுஞ் சேர்த்துக் கொள்ளல் வேண்டுமென்பதை உணர்க என்பது.

நான்காவது ஆவிருத்தியை விதிக்கின்றது

பிராமணம் 9

अप्रतिष्ठितः संवत्सर इति खलु वा आहुर्वर्षीयान्प्रतिष्ठाया इत्येतावद्वै संवत्सरस्य ब्राह्मणं यावन्मासो मासिमास्येव प्रतितिष्ठन्तो यन्ति ।

என்பது.

உரை

மேற்கூறிய வகையால் மாதங்களில் நிலைக்கப்படுமேயன்றி வருடத்தி லன்று. வருடத்திற்கு அதிகமாதம் வேண்டியதால் என்று வினவுகின்றனர். அதற்கு, மாதத்தைக் கூறும் பிராமண வாக்கின்படி வருடமும் கூறப்பட்டதே யாகும் அதன் பொருட்டு புதிது ஒன்றுமில்லை. இவ்வாறு ஒவ்வொரு மாத மும் அநுட்டிக்கின்ற எசமானர்கள் அந்த அந்தமாதத்தில் பிரதிட்டை யுடையவர்களாய் முடிவில் வருடத்தில் நிலைக்கின்றார்கள் என்பது.

பதினோராவது அநுவாகம்

முற்றிற்று.

ஏழாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

பன்னிரண்டாவது அநுவாகம்

முப்பத்தாறு பதங்களைக் கொண்டது.

அபாவ்யம் முதலிய மந்திரங்கள்,

मेषस्त्वा पचतैरवतु लोहितग्रीवश्छागैः शल्मलिर्वृद्ध्या पर्णो ब्रह्मणा प्लक्षो मेधेन न्यग्रोधश्चमसैरुदुम्बर ऊर्जा गायत्री छन्दोभि स्त्रिवृत्स्तोमैरवन्तीः स्थावन्तीस्त्वाऽवन्तु प्रियं त्वा प्रियाणां वर्षिष्ठ-माप्यानां निधीनां त्वा [illegible] पतिꣳ हवामहे वसो मम ॥ ३८ ॥
मेषः षट्त्रिꣳशत् ॥

இனி, இதுமுதல் எஞ்சின அநுவாகங்களில் அசுவமேத மந்திரங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள், இப்பதினோராமநுவாகத்தில், அபாவ்யங்கள் (பாதுகாப்புக்கள்) என்னும் ஹோமமந்திரங்கள் கூறப்படுகின்றன.

அபாரிய முதலாயின)

மந்திரங்கள் 1–9

मेषस्त्वा पचतैरवतु लोहितग्रीवश्छागैः शल्मलिर्वृद्ध्या पर्णो ब्रह्मणा प्लक्षो
मेधेन न्यग्रोधश्चमसैरुदुम्बर ऊर्जा गायत्री छन्दोभिस्त्रिवृत्स्तोमैः ।

என்பது

உரை

குதிரையே! உன்னை, ஆடுகளுக்குட் சிறந்த கடாவானது, சிறிய அவி விசேடங்களுடன் கூட பாதுகாக்க. அவ்வாறே, பள்ளாட்டுக்கடாவும் பள்ளாட்டுக்களுடன்கூட பாதுகாக்க. சல்மலி என்னும் மிகவுயர்ந்த மரமும் தனது வளர்ச்சியுடன் கூட பாதுகாக்க. புரசை மரமும் தன் அபிமானி மந்திரத்துடன், அல்லது, பிரமனுடன்கூட பாதுகாக்க. கல் ஆலன் அத்தி மரம் எக்ஞத்துடன்கூட பாதுகாக்க. ஆலமரம் தன்னுற் செய்யப்படும் சமசங்களுடன் பாதுகாக்க. அத்திமரம் தனது பழத்துடன் பாதுகாக்க. அவ்வாறே காயத்திரிச் சந்தமும் ஏனைய சந்தங்களுடன்கூட பாதுகாக்க. அவ்வாறே திரிவிருத்ஸ்தோமமும் ஏனைய ஸ்தோமங்களுடன் கூட பாதுகாக்க. இம்மந்திரங்கள் ஒன்பதாலும் கொள்ளியால் குதிரையைச் சுற்றும்போது ஒன்பது ஹோமங்கள் செய்தல் வேண்டுமென்பதாம்.

அரசனுடைய மனைவிகள், இறந்துபோன குதிரைக்குச்செய்யும் உபசாரமந்திரம்

மந்திரம் 10

अवन्तीः स्थावन्तीस्त्वाऽवन्तु प्रियं त्वा प्रियाणां वर्षिष्ठमाप्यानां निधी-
नां त्वा निधिपतिꣳ हवामहे वसो मम ।

என்பது

உரை

அரசனுடைய மனைவிகளே! நீவிர் குதிரையைப்பாதுகாக்கிறவர்களாக இருக்கின்றீர்கள். குதிரையே! உன்னை, பாதுகாப்பாளராகிய பத்தினிகள் பாதுகாப்பார்களாக. என்னை வாழ்விக்கும் குதிரையே! விருப்பமுடைய உன்னை அழைக்கின்றோம். வேண்டியவற்றை அளிப்பவைகளுள் மிகுந்த பெருமையையுடையோய்! உன்னை அழைக்கின்றோம். நிதிகளுக்குள் மிகுந்த நிதியுடையோய் உன்னை அழைக்கின்றோம் என்பது.

பன்னிரண்டாமநுவாகம்

முற்றிற்று

ஏழாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

பதின்மூன்றுவது அநுவாகம்

நாற்பது பதங்களைக்கொண்டது.

தண்ணீர் ஹோமமந்திரங்கள்

कूप्याभ्यः स्वाहा कूल्याभ्यः स्वाहा विकर्याभ्यः स्वाहाऽवट्याभ्यः स्वाहा खन्याभ्यः स्वाहा ह्रद्याभ्यः स्वाहा सूद्याभ्यः स्वाहा सरस्याभ्यः स्वाहा वैशन्तीभ्यः स्वाहा पल्वल्याभ्यः स्वाहा वर्ष्याभ्यः स्वाहाऽवर्ष्याभ्यः स्वाहा ह्रादुनीभ्यः स्वाहा पृष्वाभ्यः स्वाहा स्यन्दमानाभ्यः स्वाहा स्थावराभ्यः स्वाहा नादेयीभ्यः स्वाहा सैन्धवीभ्यः स्वाहा समुद्रियाभ्यः स्वाहा सर्वाभ्यः स्वाहा ३९ ॥

कूप्याभ्यश्चत्वारिंशत् ॥ १३ ॥

இதில், தண்ணீரின் ஹோமமந்திரங்கள் கூறப்படுகின்றன.

ஈண்டு, தண்ணீர் ஹோமங்களைக்கூறும் இரண்டு அநுவாகங்களுள் முதலநுவாக மந்திரங்கள்.

மந்திரம் 1-20

कूप्याभ्यः स्वाहा कूल्याभ्यः स्वाहा विकर्याभ्यः स्वाहाऽवट्याभ्यः स्वाहा खन्याभ्यः स्वाहा ह्रद्याभ्यः स्वाहा सूद्याभ्यः स्वाहा सरस्याभ्यः स्वाहा वैशन्तीभ्यः स्वाहा पल्वल्याभ्यः स्वाहा वर्ष्याभ्यः स्वाहाऽवर्ष्याभ्यः स्वाहा ह्रादुनीभ्यः स्वाहा पृष्वाभ्यः स्वाहा स्थावराभ्यः स्वाहा नादेयीभ्यः स्वाहा सैन्धवीभ्यः स्वाहा समुद्रियाभ्यः स्वाहा सर्वाभ्यः स्वाहा ।

என்பது

உரை

கிணற்றிலூறும் நீருக்கும், நதிக்கரையிலூறும் நீருக்கும், பூமிவெடுப்பிலூறும் நீருக்கும், பள்ளத்திலூறும் நீருக்கும், கெல்லுவதிலூறும் நீருக்கும், மடுவிலூறும் நீருக்கும், சேற்றிலூறும் நீருக்கும், ஏரியிலூறும் நீருக்கும், குட்டையிலூறும் நீருக்கும், கால்வாயிலூறும் நீருக்கும், மழை நீருக்கும், பூமியிலுள்ள நீருக்கும், இரைந்தோடும் நீருக்கும், அவசியமாய்த் தோன்று

எஞ்சிய தண்ணீர் ஹோமம்)

நீருக்கும், ஒழுகும் நீருக்கும், இடைநிருக்கும், ஆற்று நீருக்கும், பெரிய நதி நீருக்கும், கடல் நீருக்கும், மற்றும் எல்லா நீர்கட்கும் இது அர்ப்பணமாகுக என்பது.

பன்னிரண்டாமநுவாகம்

முற்றிற்று

ஏழாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

பதினான்காவது அநுவாகம்

இருபத்தொன்பது பதங்களைக் கொண்டது.

மீந்த தண்ணீர் ஹோம மந்திரம்

अद्भ्यः स्वाहा वहन्तीभ्यः स्वाहा परिवहन्तीभ्यःस्वाहा समन्तं वहन्तीभ्यः स्वाहा शीघ्रं वहन्तीभ्यः स्वाहा शीभं वहन्तीभ्यः स्वाहोग्रं वहन्तीभ्यः स्वाहा भीमं वहन्तीभ्यः स्वाहाऽम्भोभ्यः स्वाहा नभोभ्यः स्वाहा महोभ्यः स्वाहा सर्वस्मै स्वाहा ॥ ४० ॥

अद्भ्य एकान्न त्रिꣳशत् । ॥ १४ ॥

இதில், மீந்ததண்ணீரின் ஹோமமந்திரங்கள் கூறப்படுகின்றன

மந்திரம் 1 - 12

अद्भ्यः स्वाहा वहन्तीभ्यः स्वाहा परिवहन्तीभ्यः स्वाहा समन्तं वहन्तीभ्यः स्वाहा शीघ्रं वहन्तीभ्यः स्वाहा शीभं वहन्तीभ्यः स्वाहोग्रं वहन्तीभ्यः स्वाहा भीमं वहन्तीभ्यः स्वाहाऽम्भोभ्यः स्वाहा नभोभ्यः स्वाहा महोभ्यः स्वाहा सर्वस्मै स्वाहा ।

என்பது.

உரை

தண்ணீருக்கும், ஓடுநீருக்கும், சுழலும் தண்ணீருக்கும், எங்கும் வழியு நீருக்கும், பள்ளத்திலிறங்கு நீருக்கும், சிறிது பள்ளத்தில் அழகாய் இறங்கு நீருக்கும். மலையின் உச்சியிலிருந்து இறங்கு நீருக்கும், காணப்படும் மகர மீன் முதலான பயங்கர உயிர்களுடன்கூடிய நீருக்கும், மற்றும் மூன்றுல நீர்களுக்கும் இது அர்ப்பணமாகுக என்பது.

முன் அநுவாக மந்திரங்களிருபது. இதிலுள்ளவை பன்னிரண்டு ஆக முப்பத்திரண்டு மந்திரங்களாலும் இரவில் அன்னஹோமங்கள் செய்தல் வேண்டும். அம் மந்திரங்களுடன் கூடியவைகட்கே அபாம் ஹோமங்கள் எனப்பெயர் என்பதையுணர்க.

பதினான்காமநுவாகம்
முற்றிற்று.

ஏழாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

பதினைந்தாவது அநுவாகம்

ஒருபஞ்சாதிக்குமேல் இரண்டு பதங்களைக் கொண்டது.

நாயடித்தல் முதலிய மந்திரங்கள்

यो अर्वन्तं जिघांसति तमभ्यमीति वरुणः । परो मर्तः परः श्वा । अहं च त्वं च वृत्रहन्त्सं बभूव सनिभ्य आ । अरातीवा चिदद्रिवोऽनु नौ शूर मंसतै भद्रा इन्द्रस्य रातयः । अभि क्रत्वेन्द्र भूरध ज्मन्न ते विव्यङ्महिमानं रजांसि । स्वेना हि वृत्रं शवसा जघन्थ न शत्रुरन्तं विविदद्युधा ते ॥ ४१ ॥ विविदद्द्वे च ॥१५॥

இதில் நாயை அடித்துக் கொல்லும்வகை கூறப்படுகின்றது.

தாசி புத்திரன் நாயைக் கொல்லுதல் கூறப்படுகின்றது.

மந்திரம் 1

य अर्वन्तं जिघांसति तमभ्यमीति वरुणः ।

என்பது.

உரை

நீரிலிறங்கி நீராடுகின்ற எமது குதிரையைக் கொல்வதற்கு விரும்பி நீரிலிறங்கும் நாயை நீருக்கிறைவனாகிய வருணன் எல்லாவகையானும் பிணியுறும்படி செய்வானாக என்பது.

இம் மந்திரத்தால் நாயை அடித்துக் கொல்லல் வேண்டுமென்பதாம்.

நாயை அடித்தல் முதலாயின)

அடித்தநாயை, குதிரையின் காலின்கீழ்ப் போடுதல்

மந்திரம் 2

परो मर्तः परः श्वा ।

என்பது

உரை

குதிரைக்கு பகைவனாகிய மனிதனும், பகையிற் பெரிதாகிய இந்த நாயும் தூரத்திறபோய் இறக்குக. இவ்விரண்டாலும் நாயைக் கொல்லுதலுமுண்டு என்பது.

பிரமன் என்னும் இருத்துவிக்கு எசமானனுடைய கையைப்பிடித்துக் கொள்ளல்.

மந்திரம் 3

अहं च त्वं च वृत्रहन्त्सं बभूव सनिभ्य आ । अरातीवा चिदद्रिवोऽनु नौ शूर मꣳसतै भद्रा इन्द्रस्य रातयः ।

என்பது

உரை

பகைவரைக் கொல்லுதலில் இந்திரனுக்கொப்பாகிய எசமான! நீயும், பிரமனாகிய யானும், பல்வகைத் தனலாபத்தின் பொருட்டு இனிது கூடுவோமாக. மலைபோன்ற வச்சிராயுதத்தையுடைய இந்திரனைப் போன்றோய்! நாமிருவரும், அவித்தானம் இல்லாதவர்களாவோம். அங்ஙனமாயினும், நமக்கு இந்திரனுடைய மங்களமான பயனின் தானங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதாகுக என்பது

அத்வரியு எசமானனுக்குப் படிப்பிக்கவேண்டிய மந்திரம்

மந்திரம் 4

अभि क्रत्वेन्द्र भूरध ज्मन्न ते विव्यङ्महिमानꣳ रजाꣳसि । स्वेना हि वृत्रꣳ शवसा जघन्थ न शत्रुरन्तं विविदद्युधा ते ।

என்பது.

உரை

மிகுந்த ஐசுவரியமுடைய எசமான! நீ, இவ்வேள்வியால் பகைவரை யடக்கினவனாக இருக்கின்றாய் உன்னுடைய அதிசய மகிமை இப்பூமியில் ஒருவராலும் அறியமுடியாததாயிருக்கின்றது நீ, தனது வலியால் விருத்திரனைக் கொன்றிருக்கின்றாய். அவன், போரிடுவதில் உன்னைக் கொல்ல முடியாதவனாயினன் என்பது.

பதினைந்தாமநுவாகம்

முற்றிற்று.

ஏழாங்காண்டம் நான்காம் பிரபாடகம்

பதினாறுவது அநுவாகம்

இருபத்தொன்பது பதங்களைக் கொண்டது.

யவ்யஹோம மந்திரங்கள்

नमो राज्ञे नमो वरुणाय नमोऽश्वाय नमः प्रजापतये नमोऽधिपतयेऽधिपतिरस्यधिपतिं मा कुर्वधिपतिरहं प्रजानां भूयासं मां धेहि मयि धेह्युपाकृताय स्वाहाऽऽलब्धाय स्वाहा हुताय स्वाहा ॥ ४२ ॥ नम एकान्नत्रिंशत् ॥ १६ ॥

இதில், யவ்யம் என்னும் ஹோமமந்திரங்கள் கூறப்படுகின்றன.

மந்திரம் 1-9

नमो राज्ञे नमो वरुणाय नमोऽश्वाय नमः प्रजापतये नमोऽधिपतयेऽधि-पतिरस्यधिपतिं मा कुर्वधिपतिरहं प्रजानां भूयासं मां धेहिमयि धेह्यु-पाकृताय स्वाहाऽऽलब्धाय स्वाहा हुताय स्वाहा ।

என்பது

உரை

சோமராசன் பொருட்டும், வருணன், குதிரை பிரசாபதி, தர்மதேவதை என்பவைகளின் பொருட்டும வணக்கம். தர்மதேவதையே! நீ, எம்மையும் அதிபதியாக்குவாயாக. உனது கிருபையால் யான் பிரசைகட்கு அதிபதியாகின்றேன். பிரசைகட்கு அதிபதியாகிய ஸ்தானத்தில் அமர்த்துவாயாக. அப்பிரசைகளை எம்மிடத்து பாதுகாக்குந் தன்மையால் வைப்பாயாக. கொல்வதற்கும் கொல்லப்படுவதற்கும் அவியாய் ஹோமஞ் செய்வதற்கும் இது அர்ப்பணமாகுக என்பது.

பதினாறாமநுவாகம்
முற்றிற்று.

ஏழாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

பதினேழாவது அநுவாகம்

ஒருபஞ்சாதிக்குமேல் முப்பத்தெட்டுப் பதங்களைக் கொண்டது.

கவ்யம் என்னும் மந்திரங்கள்

मयोभूर्वातो अभि वातूस्रा ऊर्जस्वतीरोषधीराऽरिशन्ताम् । पीवस्वतीर्जीवधन्याः पिबन्त्ववसायपद्वते रुद्र मृड । याः सरूपा विरूपा एकरूपा यासामग्निरिष्टया नामानि वेद । या अङ्गिरसस्तपसेह चक्रुस्ताभ्यः पर्जन्य महि शर्म यच्छ । या देवेषु तनुवमैरयन्त यासाꣳ सोमो विश्वा रूपाणि वेद । ता अस्मभ्यं पयसा पिन्वमानाः प्रजावतीरिन्द्र ॥ ४३ ॥ गोष्ठे रीरिहि । प्रजापतिर्मह्यमेता रराणो विश्वैर्देवैः पितृभिः संविदानः । शिवाः सतीरुप नो गोष्ठमाऽकस्तासां वयं प्रजयासꣳ सदेम । इह धृतिः स्वाहेह विधृतिः स्वाहेहरन्तिः स्वाहेह रमतिः स्वाहा महीमू षु सुत्रामाणम् ॥ ४४ ॥ इन्द्राष्टात्रिꣳशच्च ॥ १७ ॥

இதில், கவ்யம் என்னும் ஹோமங்கள் கூறப்படுகின்றன. கோக்களைப் பற்றியது கவ்யம்.

முதலாவது மந்திரம்

मयोभूर्वातो अभि वातूस्रा ऊर्जस्वतीरोषधीरारिशन्ताम्। पीवस्वतीर्जीवधन्याः पिबन्त्ववसाय पद्वते रुद्र मृड।

என்பது

உரை

சுகத்தையுண்டாக்கும் காற்று கோக்களைக்குறித்து நேர்முகமாய் அசைக. அதாவது புயல்காற்றால் பீடை கொடுக்காததாகுக என்பது. நலந்தருங் காற்றால் நலமளிக்க என்பது பொருள். இக்கோக்கள், இரசமுடைய கொடி செடிகளையருந்துக. எல்லாவுயிர்களும் விரும்புவதும், குடித்தலால் வன்மையுடன் பெருக்கின்றதுமாகிய நீரை கோக்களருந்துக. உருத்திர! நீ பாது காத்தருள்வதற்குரிய நாற்காற் பிராணிகளான பசுக்கட்கு சுகத்தைக் கொடுப்பாயாக என்பது.

இரண்டாவது மந்திரம்

याः सरूपा विरूपा एकरूपा यासामग्निरिष्ट्या नामानि वेद। या अङ्गिरसस्तपसेह चक्रुस्ताभ्यः पर्जन्य महि शर्म यच्छ।

என்பது.

உரை

ஒத்த அளவுள்ள உடம்புகளையுடையதும், வேறுபட்ட நிறங்களையுடையதும், ஒரே சாதியோடு கூடியவைகளும், ஆகவனீய முதலிய இஷ்டி நிமித்தமாக, விசுவாயு, விசுவய்வசா, விசுவகர்மா, இடா, அதிதா என்பவை முதலான நாமங்களையுடையதுமான கோக்களை நீ அறிவாயாக. அங்கிரசமகரிஷிகள் தமது தவவலியால் பூமிக்குக் கொண்டுவந்தவைகளான கோக்கட்கு மழைத் தேவதையே! நீ சுகங்கொடுப்பாயாக என்பது.

மூன்றாவது மந்திரம்

या देवेषु तनुवमैरयन्त यासाꣳ सोमो विश्वा रूपाणि वेद। ता अस्मभ्यं पयसा पिन्वमानाः प्रजावतीरिन्द्र गोष्ठे रीरिहि।

என்பது.

உரை

தேவர்களின் பொருட்டு தமது உடம்புகளைப் பூமியிற் செலுத்தியவைக ளும், கறுப்பு சிவப்பு முதலான எல்லாநிறங்களும், குறைந்த பால் மிகுதியா கிய பால் என்பது முதலானவைகளைச் சோமதேவனலறியப் பெற்றவைகளும், தமது பால்களால் எல்லாவுயிர்களையும் பிரியப்படுத்துகின்றவைகளும், மிகுந்த கன்றுகளையுடையவைகளுமாகிய கோக்களை, இந்திர ! நீ எமது கோசாலையை யடையும்படி செய்வாயாக என்பது.

நான்காவது மந்திரம்

प्रजापतिर्मह्यमेता रराणो विश्वैर्देवैः पितृभिः संविदानः। शिवाः सतीरुप नो गोष्ठमाऽकस्तासां वयं प्रजया स२ सदेम ।

என்பது

உரை.

பிரசாபதி, எசமானனுகிய எனக்கு மேற்கூறிய இலங்கணங்களுடன் கூடின கோக்களைக் கொடுப்பானுக. எல்லாத் தேவர்களுடனும், பிதிர்க்க ளுடனும ஒன்றுபட்டு, மிகுந்த பால்கொடுத்தல் முதலானவைகளால் மங்கள வடிவமுடைய இக்கோக்கள் எமது கோசாலையை யடைக. யாம் அவைகளின் கன்றுகளுடன் சேர்ந்திருப்போமாக என்பது.

ஐந்து ஆறு ஏழு எட்டாவது மந்திரங்கள்

इह धृतिः स्वाहेह विधृतिः स्वाहेह रन्तिः स्वाहेहरमतिः स्वाहा ।

என்பது

உரை

இது குதிரைகளின் கால்களைப்பற்றியதாம். இதற்கு உரை, "விபூர் மாத்ரா" என்னும் அநுவாகத்திற் கூறப்பட்டுள்ளது என்பது.

இரண்டு இருக்குக்களின் தலைப்புச் சொற்கள் கூறப்படுகின்றன.

ஒன்பதாவது பத்தாவது மந்திரங்கள்

महीमू षु सुत्रामाणम् ।

என்பது.

உரை

இவ்விரண்டிற்கும், "வைசுவானரோ ந ஊத்யா" என்னுமிடத்து உரை கூறப்பட்டிருக்கின்றது. இப் பத்து மந்திரங்களாலும் கவ்ய ஹோமங்களைச் செய்தல் வேண்டும் என்பது.

பதினேழாம் அநுவாகம்

முற்றிற்று.

ஏழாங்காண்டம் நான்காம் பிரபாடகம்

பதினெட்டாவது அநுவாகம்

பிரமோத்திய மந்திரங்கள்

ஒரு பஞ்சாதிக்குமேல் நாற்பத்தாறு பதங்களைக்கொண்டது.

किꣳ स्विदासीत्पूर्वचित्तिः किꣳस्विदासीद्बृहद्वयः । किꣳ स्विदासीत्पिशङ्गिला किꣳस्विदासीत्पिलिप्पिला । द्यौरासीत्पूर्वचित्तिरश्व आसीद्बृहद्वयः । रात्रिरासीत्पिशङ्गिलाऽवि रासीत्पिलिप्पिला । कः स्विदेकाकी चरति क उंस्विज्जायते पुनः। किꣳस्विद्धिमस्य भेषजं किꣳ स्विदावपनंमहत् । सूर्य एकाकी चरति ॥४५॥ चन्द्रमा जायते पुनः। अग्निर्हिमस्य भेषजं भूमिरावपनं महत्। पृच्छामि त्वा परमन्तं पृथिव्याः पृच्छामि त्वा भुवनस्य नाभिम् । पृच्छामि त्वा वृष्णो अश्वस्य रेतः पृच्छामि वाचः परमं व्योम । वेदिमाहुः परमन्तं पृथिव्या यज्ञमाहुर्भुवनस्य नाभिम् । सोममाहुर्वृष्णो अश्वस्य रेतो

ब्रह्मैव वाचः परमं व्योम ॥ ४६ ॥ सूर्य एकाकी चरति षट्‌चत्वारिंशच्च ॥ १८ ॥

இதில், பிரமனும் ஹோதாவும், அக்கினிஷ்டம் என்னும் நடுயூபத்தின் இருபுறத்துமிருந்து கொண்டு செய்யும் வினுவிடைகள் கூறப்படுகின்றன.

வினு, இநக்துக் கூறப்படுகின்றது

மந்திரம் 1

किꣳ स्विदासीत्पूर्वचित्तिः किꣳ स्विदासीद्बृहद्वयः । किꣳ स्विदासीत्पिशंगिला किꣳ स्विदासीत्पिलिप्पिला ।

என்பது.

உரை

பிரமனே! பூர்வஞானமுடையது எது? மனதைக்கவரும் அழகுடையது எது? கலப்பு நிறம் எது? மிகுந்தவண்மை ஒளியுடையது எது? என்பது. இவை ஹோதாவின் வினுக்கள்.

விடை, மந்திரம்

மந்திரம் 2

द्यौरासीत्पूर्वचित्तिरश्व आसीद्बृहद्वयः । रात्रिरासीत्पिशङ्गिलाऽविरासीत्पिलिप्पिला ।

என்பது.

உரை

தேவர்கள் முற்பிறப்பிலுள்ள ஞானமுடையவர்களாதலின் சுவர்க்கம் பூர்வ ஞானமுடையதாம். மிகுந்த அழகுடையது குதிரையாம். இருளும் நட்சத்திரவொளியுங் கலந்திருத்தலின் இரவே கலப்பு நிறமுடையதாம். சம்பத்தே மிகுந்த ஒளியுடையதாம் என்பது. இவை பிரமனுடைய விடைகள்.

வினு, மந்திரம்

மந்திரம் 3

कः स्विदेकाकी चरति क उ स्विज्जायते पुनः । किꣳ स्विद्धिमस्य भेषजं किꣳ स्विदावपनं महत् ।

என்பது

உரை

உதவியில்லாமல் தனியாய் சோம்பலின்றி எப்போதும் நடந்துகொண்டிருப்பது எது? மீண்டும் மீண்டும் உதிப்பது எது? குளிருக்கு மருந்து எது? பல்வேறுவகை விதைகளை விதைப்பதற்குரியதும் விசாலமுடையதும் எது? என்பது. இவை ஹோதாவின் வினாக்கள்.

விடை மந்திரம்

மந்திரம் 4

सूर्य एकाकी चरति चन्द्रमा जायते पुनः। अग्निर्हिमस्य भेषजं भूमिरावपनं महत्।

என்பது

உரை

சூரியனே ஒருவனாகச் சென்று கொண்டேயிருக்கின்றவன். சந்திரனே மீண்டும் மீண்டும் உதிப்பவன். குளிருக்குமருந்து தீயாம். எல்லா விதைகளையும் ஊன்றுவதற்கு இடம் பூமியாம் என்பது. இவை பிரமனுடைய விடைகள்.

வினா, மந்திரம்

மந்திரம் 5

पृच्छामि त्वा परमन्तं पृथिव्याः पृच्छामि त्वा भुवनस्य नाभिम्। पृच्छामि त्वा वृष्णो अश्वस्य रेतः पृच्छामि वाचः परमं व्योम।

என்பது

உரை

பிரமனே! உன்னை, பூமியில் மிகுந்த சிறப்புடைய இடம் எது! எனக் கேட்கின்றேன். புவனத்தின் நாபி எது? எனக் கேட்கின்றேன். ஆண் தன்மை மிகுந்த குதிரையின் வீரிய முடையது எது? எனக் கேட்கின்றேன். எழுத்தாகிய வாக்கின் பாதுகாப்புடையது எது? என்று கேட்கின்றேன் என்பது. இவை ஹோதாவின் வினாக்கள்.

விடை, மந்திரம்

மந்திரம் 6

वेदिमाहुः परमन्तं पृथिव्या यज्ञमाहुर्भुवनस्य नाभिम्। सोममाहुर्वृष्णो अश्वस्य रेतो ब्रह्मैव वाचः परमं व्योम।

என்பது

உரை

யாகத்திற் செய்யும் வேதிகையே பூமியில் சிறந்ததோர் இடமாம் என் கின்றார்கள் யாகஞ் செய்வோர்கள், இதை, சோமப் பிரகரணத்திற் காண்க. எல்லாவுலகங்களின் நடக்கைகள் எக்ஞத்தைப் பற்றியவைகளாமாதலின் எக்ஞம் புவனங்களின் நாபியாம. குதிரையின் சாரமுடையத சோமமாம். எழுத்துக்களின் பாதுகாப்பிடம் அசுவமேத யாகத்திற்குரிய மந்திரத் தொகுதியாம் என்பது. இவை பிரமனுடைய விடைகள்.

பதினெட்டாமநுவாகம்

முற்றிற்று.

ஏழாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

பத்தொன்பதாவது அநுவாகம்

நான்கு பஞ்சாதிக்குமேல் நான்கு பதங்களைக் கொண்டது.

பத்தினிகளின் மந்திரங்கள்

अम्बे अम्बाल्यम्बिके न मा नयति कश्चन। ससस्त्यश्वकः। सुभगे काम्पीलवासिनि सुवर्गे लोके सं प्रोर्ण्वाथाम्। आऽहमजानि गर्भधमात्वमजासि गर्भधम्। तौ सह चतुरः पदः सं प्रसारयावहै। वृषा वाᳲ रेतोधा रेतो दधातूत्सक्थ्योर्गृदं धेह्यञ्जिमुदञ्जिमन्वज। यस्स्त्रीणां जीवभोजनो य आसाम्॥ ४७॥ बिलधावनः। प्रियः स्त्रीणामपीच्यः। य आसां कृष्णे लक्ष्मणि सर्दिगृदिं परावधीत्। अम्बे अम्बाल्यम्बिके न मा यभति कश्चन। ससस्त्यश्वकः। ऊर्ध्वा

मेनामुच्छ्रयताद्वेणुभारं गिराविव । अथास्या मध्यमेधताꣳ शीते वाते पुनन्निव । अम्बे अम्बाल्यम्बिके न मा यभति कश्चन । ससस्त्यश्वकः । यद्धरिणी यवमत्ति न ॥ ४८ ॥ पुष्टं पशु मन्यते । शूद्रा यदर्य जारा न पोषायधनायति । अम्बे अम्बाल्यम्बिके न मा यभति कश्चन । ससस्त्यश्वकः । इयं यका शकुन्तिकाऽऽहलमिति सर्पति । आहतं गभे पसो नि जल्गुलीति धाणिका । अम्बे अम्बाल्यम्बिके नमा यभति कश्चन । ससस्त्यश्वकः । माता च ते पिता च तेऽग्रं वृक्षस्य रोहतः । ॥४९॥ प्र सुलामीति ते पिता गभे मुष्टिमतꣳसयत् । दधिक्राव्णो अकारिषं जिष्णोरश्वस्य वाजिनः । सुरभि नो मुखा करत्प्रण आयूꣳषि तारिषत् । आपो हि ष्ठा मयोभुवस्ता न ऊर्जे दधातन । महे रणाय चक्षसे । यो वः शिवतमो रसस्तस्य भाजयतेह नः । उशतीरिव मातरः । तस्मा अरं गमाम वो यस्य क्षयाय जिन्वथ । आपो जनयथा च नः ॥ ५० ॥ आसामत्ति न रोहतो जिन्वथ चत्वारि च ॥ १९ ॥

இதில், அரசனுடைய மனைவிகளின் லீலையாகிற, இறந்த குதிரையின் உபசாரங் கூறப்படுகின்றது.

பிரதிப்பிரஸ்தாதா என்பவன், அரசனுடைய மனைவிகளை யழைத்துக் கொண்டுவருதல்

மந்திரம் 1

अम्बे अम्बाल्यम्बिके न मा नयति कश्चन । ससस्त्यश्वकः ।

என்பது

உரை

உத்தமி, மத்யமி, அதமி என்னும் மூவகையான அரசன் மனைவிகளை, அன்னையென்னும் பொருள்தருஞ் சொற்களால் அழைக்கின்றான். அதா

வது, அமபே! அம்பாலி! அம்பிகே! என ப்ரதிப்ரஸ்தாதா கூப்பிடுகின்றான் என்பதாம். அதற்கு, அம்மூவர்களுள் சிறந்த பட்டத்து ராணி, போகத்தின பொருட்டு ஒருவனும் என்னை இரகசியமாகிய இடத்திற்கு அழைத்திலன். குதிரையும் தூங்குகின்றது அதாவது அருவருப்புடையது என்று கூறுகின்றாள் என்பது.

குதிரையையும் இராணியையும் பட்டாடையால் மூடுதல்

மந்திரம் 2

सुभगे काम्पीलवासिनि सुवर्गे लोके सं प्रोर्ण्वाथाम्। आऽहमजानि गर्भधमा त्वमजासि गर्भधम्।

என்பது

உரை

அழகிய அல்குலையுடையோய்! சிறந்த சேலையைத் தரித்தோய்! நீயும் குதிரையும் சுவர்க்கம் போன்ற இந்த இடத்தில் பட்டு ஆடையால் மூடிக் கொள்வீர்களாக. மூடிக்கொண்டு, கர்ப்பந்தரும் குதிரையே! கருப்பந் தங்கும் இராணீயாகிய நான் உனக்கு நேர் முகமாய் வந்திருக்கின்றேன் நீயும் எனக்கு நேர்முகமாய் இருந்துகொள்வாயாக என்று கூறுவாயாக என்பது.

இராணியும் குதிரையும் கால்களை விரித்துக்கொள்ளுதல்

மந்திரம் 3

तौ सह चतुरः पदः सं प्र सारयावहै।

என்பது

உரை

குதிரையே! நீயும் நானும், என்கால்களிரண்டும் உனது பின்னங் கால்களின் மேலும், மற்றும் இவ்வாறே நான்கு கால்களும் ஒன்றன்மேலொன்று பொருந்தும்படி விரித்துக் கொள்வோம் என்பது.

போற்றுதல்

மந்திரம் 4

वृषा वां रेतोधा रेतो दधातु।

என்பது

நம்மிருவருக்குள்ளும், வீரியத்தைத் தாங்கும் இராணி சுக்கிலத்தை ஏற்றுக் கொள்வாளாக என்பது.

குதிரையின் ஆண்குறியை, ராணியின் பெண்குறியில் வைத்தல்

மந்திரம் 5

उत्सक्थ्योर्गृदं धेह्यञ्जिमुदञ्जिमन्वज । यस्स्त्रीणां जीवभोजनो य आसां बिलधावनः । प्रियस्स्त्रीणामपीच्यः । य आसां कृष्णे लक्ष्मणि सर्दिगृदिं परावधीत् ।

என்பது.

உரை

குதிரையே! உனது அடித்தொடைகளை, ராணியின் அடித்தொடைகளின் மீது வைப்பாயாக. அங்ஙனமே, எல்லாவற்றிலும் உயர்ந்ததாகிய ராணியின் யோனியில், பெண்களின் சீவனுக்கு இன்பாநுபவத்தைக் கொடுப்பதும், பெண்களின் யோனிக்குழியில் போவதும், உள் நுழைதலால் மிகப்பிரியத்தை யளிப்பதுமாகிய உனது ஆண்குறியை உள்ளேவிடுவாயாக. உள்ளேவிட்டு, கறுப்பாகிய நடுவில் மலர்போன்றதை ஆண்குறி நுனியால் அடிப்பாயாக என்பது.

ஈண்டு, பெண்களின் யோனி, உபஸ்தம், யோனி மத்யமம் என மூவகைபடும். இவை, வெளி, நடு, உள் என்பன. இவற்றுள் மத்தியமத்தில், ஆண்குறியைவிட்டு இழுத்தடிக்கில் சுக்கிலங்கலிதமாய் கருப்பந்தரிக்கும் என்பது.

இராணி, குதிரையைப் பழித்தல்

மந்திரம் 6

अम्बे अम्बाल्यम्बिके न मा यभति कश्चन । ससस्त्यश्वकः ।

என்பது

உரை

இராணி, புணர்ச்சியின்பம் இலாமையால் வாட்டமுற்றுப் புலம்புகின்றாள். அத்துன்பத்தை, அம்பே! அம்பாலி, அம்பிகே! எனத் தனது அன்னையைக் கூப்பிட்டு, என்னை ஒருவரும் புணரவில்லை குதிரையோ, தூங்குகின்றது என்று அன்னையார்க்குத் தெரிவிக்கின்றாள் என்பது.

(பத்தினி மந்திரம்)

வெளியிலிருந்த அரசனுடைய மனைவிகளிருவரும் களிப்புண்டாக்கல்

மந்திரம் 7

ऊर्ध्वामेनामुच्छ्रयताद्वेणुभारं गिराविव । अथास्या मध्यमेधताꣳ शीते वाते पुनन्निव ।

என்பது

உரை

இராணியே! உனது யோனியை, மலையில் வெட்டிவந்த விறகுக்கட்டையை பூமியில் நிமிர்த்துவைப்பதுபோல் மேலே நோக்காய்த் தூக்கிவைத்துக் கொள்வாயாக. மற்றும், பிறகு, யோனியின் நடுவில் தனக்கு வேண்டியதையடைந்து தால் களிப்படைவாயாக. எதைப்போலெனின்! நெல்லின் சுணைகள் படிந்து உடம்பு அயர்ந்தவள் குளிர்காற்றுப்பட்டவுடன் களிப்படைவதுபோலென்க என்பதாம்.

அரசனுடைய மனைவிகள் மூவரும் மேல்வரும் இருக்குக்களால் குதிரையைப் பழிக்கின்றார்கள். பிறகு மூவருங் களிப்புண்டாக்குகின்றார்கள்.

மந்திரம் 8

अम्बे अम्बाल्यम्बिके न मा यभति कश्चन । ससस्त्यश्वकः ।

என்பது

உரை

இதற்கு, முன்போல் உரை கூறிக்கொள்க என்பது.

களிப்புண்டாக்கும் முதல் மந்திரம்

மந்திரம் 9

यद्धरिणी यवमत्ति न पुष्टं पशु मन्यते । शूद्रा यदर्यजारा न पोषाय धनायति ।

என்பது.

உரை

மகிஷி(ராணி)யே! பெண்மான் இரவில் பயிர்களை அருந்திவிட்டு மீண்டும் அரண்யத்தை யடைந்தபோது வன்மைமிக்கதாய் ஆகியும் பயிரிட்டவன் அதை அறியாததுபோல், தேவதையாக வந்து உன்னைப் புணர்ந்து மறைந்த குதிரையை நீயும் உணரவில்லை, உனக்குப் போகம் உண்டாயிற்று மற்றும்,

ஒரு அடியாள், தனது கள்ளப்புருடனைக் கலந்து களிப்புறுகின்றாளே அவள் அவனிடத்தில் பணத்தைவிரும்பிலள் என்னை? கள்ளப்புருடனுடன் கலந்ததே தனமென்று கொண்டதாலென்க. அதுபோல் மனிதவுடம்பையுடைய நீயும், தேவதையாகிற குதிரையைப்புணர்ந்த மாத்திரத்தால் களிப்படைவாயாக. அற்பமாகிய மனிதபோகத்தை வெறுப்பாயாக என்பது.

இரண்டாவது பழிப்பு இருக்கு மந்திரம்

மந்திரம் 10

अम्बे अम्बाल्यम्बिके न मा यभति कश्चन । ससस्त्यश्वकः ।

என்பது

உரை

இதற்கும் முன்போல் உரை கூறிக்கொள்க என்பது.

களிப்புண்டாக்கும் இரண்டாவது மந்திரம்

மந்திரம் 11

इयं यका शकुन्तिकाऽऽहलमिति सर्पति । आहतं गभे पसो नि जल्गुलीति धाणिका ।

என்பது.

உரை

காணப்படும் இப்பெண் பறவை ஆஹல என்று கத்திக்கொண்டு ஆண் பறவைக்குப் பின்றொடர்ந்து போய்க்கொண்டேயிருக்கிறதேயொழிய போதுமென நின்றதில்லை. அவ்வாறே, இராணியே! நீயும் திருப்தியடைந்திலாய். இது உசிதமன்றென்பது கருத்து. மற்றும், கருப்பத்தைத் தாங்கும் பெண், புணர்ச்சியால் யோனியிலிருந்து வரும் சோணிதத்தை உள்ளே வைத்துக் கொண்டு களிப்புறுகின்றாள். நீயும் அவ்வாறே களிப்புறுவாயாக என்பது கருத்து.

மூன்றாவது பழிப்பு மந்திரம்

மந்திரம் 12

अम्बे अम्बाल्यम्बिके न मा यभति कश्चन । ससस्त्यश्वकः ।

என்பது

உரை

இதற்கும் முன்போல் உரை கூறிக்கொள்க என்பது.

களிப்புண்டாக்கும் மூன்றாவது மந்திரம்

மந்திரம் 13

माता च ते पिता च तेऽग्रं वृक्षस्य रोहतः । प्र सुलामीति ते पिता गभे मुष्टिमतंꣳसयत् ।

என்பது

உரை

இராணியே! உனது தந்தையும் தாயும் கொம்புகளாற் செய்த மாடிப் படுக்கையிலேறிப் படுத்திருக்கும்போது உனது தந்தை, உள்ளே நுழைகின்றேன் என்று, யோனியில் ஆண்குறியை உள்ளே விடுகின்றானன்றோ, அது போல் இக்குதிரையுஞ் செய்தது. நீ எழுந்திருப்பாயாக என்பது கருத்து என்பது

சேபிக்க வேண்டிய சுரபி நறுமண) மந்திரம்

மந்திரம் 14

दधिक्राव्णो अकारिषं जिष्णोरश्वस्य वाजिनः । सुरभि नो मुखा करत्प्रण आयूꣳषि तारिषत् ।

என்பது.

உரை

ததிக்ராவா என்னும் தயிரில் பிரியமுடைய தேவதையின் கருமத்தை யான் செய்து கொண்டிருக்கின்றேன். அத் தேவதை எத்தன்மையதெனின்? குதிரையின் உணவுப்பொருளையுடையதாம் என்க. அத் தேவதை, எமது முகங்களை, கற்பூர முதலியவைகளைப் பூசுவதால் நறுமணமுண்டாம்படி செய்க. மற்றும், எமது ஆயுளையும் வளர்க்குக என்பது.

தண்ணீர் தெளித்துக்கொள்ளுள் மந்திரங்களுள் முதலாவது மந்திரம்

மந்திரம் 15

आपो हि ष्ठा मयोभुवस्ता न ऊर्जे दधातन । महे रणाय चक्षसे ।

என்பது

உரை

தண்ணீரே! நீ சுகத்தை யுண்டாக்குவதா யிருக்கின்றாய். அத்தகைய நீ உனது இரசத்தையநுவிப்பதன் பொருட்டு எம்மை நிறுவுவாயாக. மற்றும், எம்மை, நல்ல காட்சியின் பொருட்டும் நிறுத்துவாயாக. அதாவது பரம் பொருளை உள்ளவாறு காணும்படி செய்தருள்வாயாக என்பது.

இரண்டாவது மந்திரம்

மந்திரம் 16

यो वश्शिवतमो रसस्तस्य भाजयतेह नः । उशतीरिव मातरः ।

என்பது

உரை

தண்ணீராகிய தேவியே! நீ, மிக மங்களமாகிய உன்னுடைய இனிய இரசத்தை, அன்புமிக்க தாய்மார்கள் தமது முலைப்பால இரசத்தை குழந்தைகட்கு அருத்துவதுபோல்' இக்கருமத்தில் யாம் அடையுமாறு செய்வாயாக என்பது.

மூன்றுமந்திரம்

மந்திரம் 17

तस्मा अरं गमाम वो यस्य क्षयाय जिन्वथ । आपो जनयथा च नः ।

என்பது

உரை

எந்த இரசமிருத்தலால் நீ பிரியமாகின்றாயோ, அந்த இரசத்தின பொருட்டு உன்னை எப்போதும் யாம் அடைவோமாக. மற்றும், தண்ணீராகிய தேவியே! நீ, எமக்குப் புத்திரப்பேற்றை யுண்டாக்குவாயாக என்பது. தமிழைப்பற்றி ஒருமை.

பத்தோன்பதாமநுவாகம்

முற்றிற்று.

ஏழாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

இருபதாவது அநுவாகம்

ஒரு பஞ்சாதிக்குமேல் இருபத்தைந்து பதங்களைக் கொண்டது.

குதிரையின் அலங்கார மந்திரங்கள்

भूर्भुवः सुवर्वसवस्त्वाऽञ्जन्तु गायत्रेण छन्दसारुद्रास्त्वाऽञ्जन्तु त्रैष्टुभेन छन्दसाऽऽदित्यास्त्वाऽञ्जन्तु जागतेन छन्दसा यद्वातो अपो अगमदिन्द्रस्य तनुवं प्रियाम्। एतᳲ स्तोतरेतेन पथा पुनरश्वमा वर्तयासि नः। लाजी३ञ्छाची३न्यशो ममा३म्। यव्यायै गव्याया एतदेवा अन्नमत्तैतदन्नमद्धि प्रजापते। युञ्जन्ति ब्रध्नम रुषं चरन्तं परि तस्थुषः। रोचन्ते रोचना दिवि। युञ्जन्त्यस्य काम्या हरी विपक्षसारथे। शोणा धृष्णू नृवाहसा। केतुं कृण्वन्न- केतवे पेशो मर्या अपेशसे। समुषद्भिरजायथाः॥ ५१ ॥

ब्रध्नं पञ्चविᳲंशतिश्च ॥ २० ॥

இதில், கொல்லப்படுமுன் குதிரைக்குச் செய்யவேண்டிய உபசாரங்கள் கூறப்படுகின்றன.

அரசனுடைய மனைவிகள் மூவரும் குதிரையை அலங்கரித்தல்

மந்திரங்கள் 1 - 3

भूर्भुवः सुवः।

என்பது

உரை

பூ:, புவ:, சுவ: என்னும் மந்திரங்களால் பத்தினிகள் மூவரும் முறையே குதிரையின் மயிர்களில், பொன் மணிகள், வெள்ளி மணிகள், சங்கு மணிகள் என்பவைகளைக் கட்டித்தொங்கவிடல் வேண்டும் என்பது.

மூவரும் குதிரைக்கு எண்ணெயிடல்

மந்திரங்கள் 4 – 6

वसवस्त्वाऽऽजन्तु गायत्रेण छन्दसा रुद्रास्त्वाऽऽजन्तु त्रैष्टुभेन छन्दसाऽऽ-
दित्यास्त्वाऽऽजन्तु जागतेन छन्दसा ।

என்பது

உரை

குதிரையே! எட்டுவசுக்களும், காயத்திரிச் சந்தத்துடன் கூடவே குல் குலுத்தைலத்தை குதிரையின் முகத்தில் தடவுவார்களாக. அவ்வாறே, பதினொரு உருத்திரர்களும் குசும்பாப்பூத்தைலத்தை திரிஷ்டுப் சந்தத்துடன் நடுவுடம்பில் தடவுவார்களாக. பன்னிரண்டு ஆதித்தர்களும், சகதிச் சந்தத்துடன் முஸ்தாவேரின் தைலத்தை குதிரையின் பின்புறத்தில் தடவுவார்களாக என்பது. இம்மந்திரங்கள் மூன்றாலும் மூன்று பத்தினிகளும் குதிரையின் மூன்றிடங்களிலும் எண்ணெயைத் தடவுவார்களாக என்பது.

வலம் வருதல்

மந்திரம் 7

यद्वातो अपो अगमदिन्द्रस्य तनुवं प्रियाम् । एतꣳ स्तोतरेतेन पथा पुन-
रश्वमा वर्तयासि नः ।

என்பது.

உரை

முன் எம்மார்க்கத்தால் வாயு நீர் இந்திரனுடைய பிரிவுடம்பாகிய மழையையடைந்ததோ, துதியாளா? நீயும், குதிரையைச் செலுத்துவதற்கு சத்தமிட்டுக்கொண்டு முந்திய அம் மார்க்கத்தால் எம்மைக் குறித்து குதிரையைச் செலுத்துவாயாக என்பது.

பத்தினிகள், ஹோமஞ்செய்து மீந்த அன்னங்களை குதிரை முகர்ந்துபார்க்கும்படி செய்தல்.

மந்தியம் 8

लाजी३ञ्छाची३न्यशो ममा३म् । यव्यायै गव्याया एतद्देवा अन्नमत्तैतद-
न्नमद्धि प्रजापते ।

என்பது.

உரை

இரவில் ஹோமஞ் செய்து மீந்த பொரியும், மற்றும் குதிரையருந்தும் உணவுப் பொருள்களும் இருக்கின்றன. மற்றும், யசசு (பெருமை) எசமானனுக்குத் தேடுகின்றது ஆதலின் அதைக்குறித்து யசசு அதன் பெயராகக் கூறப்பட்டிருக்கின்றது. லாசீ, சாசீ, எசலீ என்னும் மூன்று பெயர்களாலும் மூன்று பத்தினிகளும் குதிரையைக் கூப்பிட்டு, குதிரையின்பால் உள்ள தேவர்களைக்குறித்து, தேவர்காள் ? யாங்கள் அளித்ததை குதிரை வடிவால் அருந்துவீர்ளாக. பிரசாபதியே ! நீயும், இவ்வன்னத்தை பருந்துவாயாக என்னல் வேண்டும் என்பது.

குதிரையை இரதத்திற்பூட்டுதல்

மந்திரம் 9

युञ्जन्ति ब्रध्नमरुषं चरन्तं परि तस्थुषः । रोचन्ते रोचना दिवि ।

என்பது

உரை

சூரியனாகவும், அக்கினியாகவும், வாயு வடிவாகவுமுள்ள இக்குதிரையையும், அங்ஙனமே நாற்புறமும் பரந்திருக்கும் மூன்றுநிறங்களான இக்குதிரையின் உருவங்களையும் எல்லாத் தேவர்களும் இரதத்தில் பூட்டுகின்றார்கள். விண்ணுலகிலுள்ள நட்சத்திரங்களும் இக்குதிரையை விளக்குகின்றன என்பது.

உதவியாக மற்றிரண்டு குதிரைகளையும் பூட்டுதல்

மந்திரம் 10

युञ्जन्त्यस्य काम्या हरी विपक्षसा रथे । शोणा धृष्णू नृवाहसा ।

என்பது.

உரை

அழகுடையவைகளும், இரதத்தின் பக்கங்களில் இருக்கின்றவைகளும், சிவந்த நிறமுடையவைகளும், பகைவரைப் பயமுறுத்துகின்றவைகளும், மனிதரைத் தூக்கிக்கொண்டு போகின்றவைகளுமான மற்றிரண்டு குதிரைகளையும் இரதத்திற் பூட்டுகின்றார்கள் என்பது.

இரதத்தின் மீது கொடியை மாட்டுதல்

மந்திரம் 11

केतुं कृण्वन्नकेतवे पेशो मर्या अपेशसे । समुषद्भिरजायथाः ।

என்பது.

உரை

மனிதர்கள் கொடியில்லாத இரதத்திற்குக் கொடிக்கட்டுகின்றார்கள். பொன்னலங்காரமின்றியதற்கு பொன்னலங்காரஞ் செய்கின்றார்கள். இரதமே! நீயும், சுவாலை போன்ற பொறகிரணங்களுடன் கூடியிருக்கின்றாய் என்பது.

இருபதாமநுவாகம்

முற்றிற்று

ஏழாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

இருபத்தோராவது அநுவாகம்

இருபத்தெட்டுப் பதங்களைக்கொண்டது.

சந்ததி மந்திரங்கள்

प्राणाय स्वाहा व्यानाय स्वाहाऽपानाय स्वाहा स्नावभ्यस्स्वाहा सन्तानेभ्यस्स्वाहा परिसन्तानेभ्यः स्वाहा पर्वभ्यः स्वाहा संधानेभ्यः स्वाहा शरीरेभ्यः स्वाहा यज्ञाय स्वाहा दक्षिणाभ्यः स्वाहा सुवर्गाय स्वाहा लोकाय स्वाहा सर्वस्मै स्वाहा ॥ ५२ ॥ प्राणायाष्टाविंशतिः ॥ २१ ॥

இதில் 'சந்ததி, என்னும் அன்னஹோம விசேடங் கூறப்படுகின்றது.

மந்திரங்கள் 1-14

प्राणाय स्वाहा व्यानाय स्वाहाऽपानाय स्वाहा स्नावभ्यस्स्वाहा सन्तानेभ्यस्स्वाहा परिसन्तानेभ्यः स्वाहा पर्वभ्यः स्वाहा शरीरेभ्यः स्वाहा यज्ञाय स्वाहा दक्षिणाभ्यः स्वाहा सुवर्गाय स्वाहा लोकाय स्वाहा सर्वस्मै स्वाहा ।

என்பது

பிரமுக்தி மந்திரம்)

உரை

பிராணன், வியானன், அபானன், நாடிகள், அதிலுண்டான சந்தான நாடிகள், அவற்றிலுண்டான உபசாகை நாடிகள், கணுக்கள், மூட்டுக்கள், உடம்பு, எக்ஞம், தக்ஷிணை, சுவர்க்கம், லோகம், மற்றும் எல்லாவற்றிற்கும் அர்ப்பணமாகுக. இப்பதிநான்கு மந்திரங்களாலும் ஹோமங்கள் செய்தல் வேண்டும் என்பது.

இருபத்தோராமநுவாகம்

முற்றிற்று.

ஏழாங் காண்டம் நான்காம் பிரபாடகம்

இருபத்திரண்டாவது அநுவாகம்

முப்பத்தெட்டுப் பதங்களைக் கொண்டது.

பிரமுக்தி மந்திரங்கள்

सिताय स्वाहाऽसिताय स्वाहाऽभिहिताय स्वाहाऽनभिहिताय स्वाहा युक्ताय स्वाहाऽयुक्ताय स्वाहा सुयुक्ताय स्वाहोद्युक्ताय स्वाहा विमुक्ताय स्वाहा प्रमुक्ताय स्वाहा वञ्चते स्वाहा परिवञ्चते स्वाहा संवञ्चते स्वाहाऽनुवञ्चते स्वाहोद्वञ्चते स्वाहा यते स्वाहा धावते स्वाहा तिष्ठते स्वाहा सर्वस्मै स्वाहा ॥ ५३ ॥ सिताया-ष्टात्रिꣳशत् ॥ २२ ॥

இப்பிரபாடகத்திலுள்ள அநுவாக எண்ணைக்காட்டுந் தலைப்புச் சொற்கள்:-

बृहस्पतिः अग्रथा वा ऋक्षा वै प्रजापतिर्येनयेन द्वे वावाऽदित्या वसिष्ठः संवत्सराय सुवर्गं ब्रह्मवादिनो ज्योतिष्टोमं मेषः कूप्याभ्यो-ऽद्भ्यो यो अर्वन्तं नमोराज्ञेमयोभूः किꣳ स्विदम्बे भूः प्राणाय सिताय द्वाविꣳशतिः ॥ २२ ॥

பஞ்சாதிகளின் எண்ணைக்காட்டுந் தலைப்புச் சொற்கள் :-

बृहस्पतिः प्रति तिष्ठन्ति वै दशरात्रेण सुवर्गं यो अर्वन्तं भूम्ने

पञ्चाशत् ॥ ५२ ॥

இதில் பிரமுக்தி என்னும் மந்திரங்கள் கூறப்படுகின்றன.

மந்திரங்கள் 1 - 19

सिताय स्वाहाऽसिताय स्वाहाऽभिहिताय स्वाहाऽनभिहिताय स्वाहा युक्ताय
स्वाहाऽयुक्ताय स्वाहा सुयुक्ताय स्वाहोद्युक्ताय स्वाहा विमुक्ताय स्वाहा
प्रमुक्ताय स्वाहा वञ्चते स्वाहा परिवञ्चते स्वाहा संवञ्चते स्वाहाऽनु-
वञ्चते स्वाहोद्वञ्चते स्वाहा यते स्वाहा धावते स्वाहा सर्वस्मै स्वाहा ।

என்பது

உரை

ஏறும்போது கட்டுவதும் கட்டாததுமாகிய இரண்டு கயிறுகட்கும், குதிரையைக் கட்டுவதுங் கட்டாததுமான இரண்டு கயிறுகட்கும், பூட்டல், பூட்டாமை நன்றாய்ப் பூட்டல், மேலே பூட்டல் என்பவைகட்கும், அவிழ்க்தல் நன்றாயவிழ்த்தல்கட்கும், நடை, இனிய நடை, நேர் நடை, மேல் நடை, சுற்றிய நடை என்பவைகட்கும், மனம்போல் தாவுதல், நிற்றல், மற்றும் எல்லாச் செய்கைகட்கும் அர்ப்பணமாகுக என்பது. இப்பத்தொன்பது மந்திரங்களாலும் ஹோமங்கள் செய்தல் வேண்டும் என்பதாம்.

இருபத்திரண்டாவது அநுவாகம்

முற்றிற்று.

நான்காம் பிரபாடகம் முடிந்தது

சுப்ரமண்யோம். சுப்ரமண்யோம். சுப்ரமண்யோம்.

ஐந்தாம் பிரபாடக விடயச்சுருக்கம்

विहितं पञ्चमस्याऽऽद्ये गवामयन सत्रकम् ।
तद्वैविध्यं द्वितीयेस्यात्तृतीये पृष्ठनिर्णयः ॥ १ ॥
चतुर्थेव्यत्ययः पूर्व पक्षस्यान्त्यस्यपक्षसि ।
पञ्चमे संसवष्षष्ठे भवेदुत्सर्ग सत्रकम् ॥ २ ॥
तन्मीमांसा सप्तमेस्यादष्टमेतु महाव्रतम् ।
सामानि नवमेप्रोक्ता वीणाद्या दशमेपुनः ॥ ३ ॥
दासीनृत्यं ततस्तूर्ध्वं मन्त्राअन्येऽश्वमेधगाः ।
पृथ्व्यन्नहोमाः पञ्चाशदेक पञ्चाशदीरिताः ॥ ४ ॥
दत्वते परिधीनान्तु कस्त्वामन्त्रत्रयं भवेत् ।
अग्नये सर्वपृष्ठेष्टिः प्रयोगोऽनन्तरेश्रुतः ॥ ५ ॥
यः प्राणतोय आत्मेति तावुभौ महिमग्रहौ ।
आब्रह्मन्दशभिर्मन्त्रैर्ब्रह्मवर्चसहोमकः ॥ ६ ॥
आक्रानश्वं मन्त्रयेत जज्ञीति (पञ्च) दशभिर्हुतिः
आग्नेनैमित्तिकायागा मृगारेष्टिरथाग्नये ॥ ७ ॥
अग्न संनतिहोमास्युर्दशमे स्वामिवाचनम् ।
नमस्त्रिभिरुपस्थानं योवै विधिरुपासने ॥ ८ ॥
क्रतुराडश्वमेधोऽयं विराड्ध्यानमुपास्तिराट् ।
ताभ्यामुत्पद्यतेज्ञानं कृतकृत्यं भवत्यतः ॥ ९ ॥

இவ்வைந்தாம் பிரபாடக முதலநுவாகத்தில் கவாமயன மென்னுஞ் சத்திரயாகஞ் சொல்லப்படுகிறது. இரண்டாவதில் அதன் விகல்பமும், மூன்ருவதில் பிருஷ்டியஷடஹமும், நான்காவதில் முற்கூறியதின் உத்திர பக்ஷத்தில் உள்ளவிசேஷமும், ஐந்தாவதில் விரோதத்தால் செய்யும் கவாமயனமும், ஆருவதில் உத்சவர்க சத்திரமும், ஏழாவதில் மேற்கூறியதின் சில விசேடங்களும், எட்டாவதில் சாம விசேடங்களும், ஒன்பதாவதில் நாறு கம்பிகள் உள்ள வீணைவாசித்தல் முதலியவைகளும், பத்தாவதில் தாசிகளுடைய நிருத்தியங்களும், பதினொன்ருவது முதல் பிரபாடகம் முடியும்வரை

அசுவமேத மந்திரங்களுமாகக் கூறப்படுகின்றன. அவற்றுள் பதினொன்றாவது பன்னிரண்டாவது அநுவாகங்களில அன்னஹோம மந்திரங்களும், பதின்மூன்றுவதில் பரிதிகளைப்போடும் மந்திரங்களும், பதினான்காவதில் சருவப்பிருஷ்ட இஷ்டியின் அவிகளின் விதியும், பதினைந்தாவதில் மேற்கூறிய அவிகளின் பிராமணமும், பதினாறுவது பதினேழாவதுகளில் 'மஹிமா' என்னும் இரண்டு கிரகங்களை ஹோமஞ்செய்யும் மந்திரங்களும், பதினெட்டாவதில் 'பிரமவர்ச்சம், என்னும் ஹோமமந்திரங்களும், பத்தொன்பதாவதில் அசுவத்தை அபிமந்திரணம் செய்யும் மந்திரமும், இருபதாவதில் சிலஹோமமந்திரங்களும், இருபத் தொன்றுவதில் சில இஷ்டிகளின் விதியும் இருபத்திரண்டாவதில் மிருகாரம் என்னும் இஷ்டியின விதியும், இருபத்துமூன்றுவதில் 'சன்னதி, என்னும் ஹோமமந்திரங்களும், இருபத்து நான்காவதில் அத்துவ யூஎசமானனை ஓதுவிக்கும் மந்திரங்களும், இருபத்தைந்தாவதில் குதிரையின் துதியும் கூறப்படுகின்றன. இத்துடன் எசுர்வேத சங்கிதை முடிகின்றது.

ஏழாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

முதலாவது அநுவாகம்

ஆறு பஞ்சாதிக்குமேல் பதின்மூன்று பதங்களைக் கொண்டது.

கவாமயனத்தைக் கூறும் பிராமணங்கள்

गावो वा एतत्सत्रमासताशृङ्गाः सतीः शृङ्गाणिनो जायन्ता इति कामेन तासां दश मासा निषण्णा आसन्नथ शृङ्गाण्यजायन्त ता उदतिष्ठन्नरात्स्मेत्यथ यासां नाजायन्त ताः संवत्सरमाप्त्वोदतिष्ठ-न्नरात्स्मेति यासां चाजायन्त यासां च न ता उभयीरुदतिष्ठन्नरा-स्स्मेति गोसत्रं वै ॥ १ ॥ संवत्सरो य एवं विद्वाꣳसः संवत्सर-मुपयन्त्यृध्नुवन्त्येव तस्मात्तूपरा वार्षिकौ मासौ पत्वा चरति सत्राभिजितꣳह्यस्यै तस्मात्संवत्सरसदो यत्किं च गृहे क्रियते तदाप्तमवरुद्धमभिजितं क्रि तेयसमुद्रं वा एते प्र प्लवन्ते ये संव-त्सरमुपयन्ति यो वै समुद्रस्य पारं न पश्यति न वै स तत उदेति

संवत्सरः ॥ २ ॥ वै समुद्रस्तस्यैतत्पारं यदतिरात्रौ य एवं विद्वाꣳसः संवत्सरमुपयन्त्यनार्ता एवोदृचं गच्छन्तीयं वै पूर्वोऽतिरात्रोऽसावुत्तरो मनः पूर्वो वागुत्तरः प्राणः पूर्वोऽपान उत्तरः प्ररोधनं पूर्वं उदयनमुत्तरो ज्योतिष्टोमो वैश्वानरोऽतिरात्रो भवति ज्योतिरेव पुरस्ताद्दधते सुवर्गस्य लोकस्यानुख्यात्यै चतुर्विꣳशः प्रायणीयो भवति चतुर्विꣳशतिरर्धमासाः ॥ ३ ॥ संवत्सरः प्रयन्त एव संवत्सरे प्रतितिष्ठन्ति तस्य त्रीणि च शतानि षष्टिश्च स्तोत्रीयास्तावतीः संवत्सरस्य रात्रय उभे एव संवत्सरस्य रूपे आप्नुवन्ति ते सꣳस्थित्या अरिष्ट्या उत्तरैरहोभिश्चरन्ति षडहा भवन्ति षड्वा ऋतवः संवत्सरऋतुष्वेव संवत्सरे प्रति तिष्ठन्ति गौश्चाऽऽयुश्च मध्यतः स्तोमौ भवतः संवत्सरस्यैव तन्मिथुनं मध्यतः ॥ ४ ॥ दधति प्रजननाय ज्योतिरभितो भवति विमोचनमेव तच्छन्दाꣳस्येव तद्विमोकं यन्त्यथो उभयतोज्योतिषैव षडहेन सुवर्गं लोकं यन्ति ब्रह्मवादिनो वदन्त्यासते केन यन्तीति देवयानेन पथेति ब्रूयाच्छन्दाꣳसि वै देवयानः पन्था गायत्री त्रिष्टुब्जगती ज्योतिर्वै गायत्री गौस्त्रिष्टुगायुर्जगती यदेते स्तोमा भवन्ति देवयानेनैव ॥ ५ ॥ तत्पथा यन्ति समानꣳसाम भवति देवलोको वै साम देवलोकादेव न यन्त्यन्याअन्या ऋचो भवन्ति मनुष्यलोको वा ऋचो मनुष्यलोकादेवान्यमन्यं देवलोकमभ्यारोहन्तो यन्त्यभिवर्तो ब्रह्मसामं भवति सुवर्गस्य लोकस्याभिवृत्त्या अभिजिद्भवति सुवर्गस्य लोकस्याभिजित्यै विश्वजिद्भवति विश्वस्य जित्यै मासिमासि पृष्ठान्युप यन्ति मासिमा-

स्यतिग्राह्या गृह्यन्ते मासिमास्येव वीर्यं दधाति मासां प्रतिष्ठित्या
उपरिष्टान्मासां पृष्ठान्युप यन्ति तस्मादुपरिष्टादोषधयः फलं गृह्णन्ति
॥ ६ ॥ गोसत्रं वा एति संवत्सरोऽर्धमासा मिथुनं मध्यतो देवया-
नेनैव वीर्यं त्रयोदश च ॥ १ ॥

இவ்வநுவாகத்தில் வருடசத்திரயாகம் விதிக்கப்படுகின்றது. இதுவே, வாமயன மெனப்படுவதாம்.

அதன் விதி

பிராமணம் 1

गावो वा एतत्सत्रमासताशृङ्गाः सतीः शृङ्गाणि नो जायन्ता इति कामेन तासां दश मासा निषण्णा आसन्नथ शृङ्गाण्यजायन्त ता उदतिष्ठन्नरात्स्मेत्यथ यासां नाजायन्त ताः संवत्सरमाप्त्वोदतिष्ठन्नरात्स्मेति यासां चाजायन्त यासां च न ता उभयीरुदतिष्ठन्नरात्स्मेति गोसत्रं वै संवत्सरो य एवं विद्वांसः संवत्सरमुपयन्त्यृध्नुवन्त्येव ।

என்பது

உரை

ஈண்டுக் கோக்கள் விலங்குகளாதலின் கருமங்கட்கு அதிகாரம் இல்லை. ஆயினும், அவற்றின் அபிமானி தேவதையைக் கொண்டு விவகாரஞ் செய்யப் படுகின்றது. கோக்கள் கொம்பிலாதவைகளாயிருந்து கொம்பை விரும்பி வருடசத்திரஞ் செய்ய தீட்சை பண்ணிக்கொண்டு செய்யும்போது பத்துமாதங்களில் கொம்புகள் முளைத்தன. அப்போது கோக்கள் வேண்டிய பயனை யடைந்துவிட்டோ மென்று சத்திரயாகத்திலிருந்தும் எழும்பின. இதுபற்றியே, சிலகோக்கட்கு கொம்புகள் இல்லை. அவைகள், மீண்டும் இரண்டு மாதம் சத்திரயாகத்தைச் செய்து ஒருவருடம் நிரம்புதலால் வேண்டிய பயனை இனி தடைந்தன. கொம்புடையவைகளும் கொம்பில்லாதவைகளுமான இருவகைகளும் ஒன்றுசேர்ந்து நாம் வேண்டியபயனையடைந்தனம் என்று யாகத்தை முடித்துவிட்டெழுந்தன. இவ்வாறு கோக்களால் அநுட்டிக்கப்பட்டதால் இவ்வருட சத்திரயாகம் கோசத்திரம் எனவும் வழங்கப்படுகின்றது. இவ்வுண்மையையுணர்ந்து இதைச் செய்கின்றவன் எல்லாச் சம்பத்தையு மடைகின்றான் என்பது.

கவாமனயம்)

கொம்பு முளைத்தவைகளும், முளைக்காதவைகளும் பயனையடைந்தன என்று முன் கூறப்பட்டது. அதில், கொம்பு முளையாதவைகட்கு ப்யன் எவ்வாறும்? என்றுசங்கித்துக் கூறுகின்றது.

பிராமணம் 2

तस्मात्तूपरा वार्षिकौ मासौ पत्वा चरति सत्राभिजितꣳ ह्यस्यै ।

என்பது.

உரை

சத்திரயாகத்தில் சம்பத்தை யடைந்ததனாலன்றோ, மொட்டையான கோக்கள் மழைக்காலமாகிய இரண்டு மாதங்களிலும் மகிழ்வோடு வனத்தில் இனிது திரிந்துவருகின்றன என்னை? நீண்டகொம்புகளுள்ள கோக்கள் மழையில் தலையைக் கீழே தொங்கவிட்டுக்கொண்டு கொம்புகளால் அடித்துக் கொள்ளுகின்றன. மொட்டைகள் இத்தகைய பீடைகளை யடைவதில்லை. இது தலைமழித்துக்கொண்டவனைப்போ லென்க. இவ்வாற்றால் மொட்டையான கோக்கள் மழையில் களிப்புடனிருப்பதே சத்திரயாக அநுட்டான பயனும் என்பது.

மற்றொரு வகையால் சத்திரயாகத்தைப் புகழ்கின்றது.

பிராமணம் 3

तस्मात्संवत्सरसदो यत्किं च गृहे क्रियते तदाप्तमवरुद्धमभिजितं क्रियते ।

என்பது

உரை

சத்திரயாகம் பெருமை யுடையதாமாதலின் வருடசத்திரயாகஞ் செய்தவனுடைய வீட்டில் அங்கக் குறைவுடன் அக்கினி ஹோத்திர முதலானவைகள் செய்யினும் அது நிறைந்த அங்கமுடையதாகின்றன. காலமாறிச் செய்யினும் தனது காலத்தில் செய்ததாகின்றது. பயனை விரும்பாவிடினும் பயன் கிடைக்கின்றது என்பது.

அச் சத்திரயாகத்தின் பிரா பணீய உதயனீய நாட்களை விதிக்கின்றது.

பிரமாணம் 4

समुद्रं वा एते प्र प्लवन्ते ये संवत्सरमुपयन्ति यो वै समुद्रस्य पारं न पश्य-
ति न वै स तत उदेति संवत्सरो वै समुद्रस्तस्यैतत्पारं यदतिरात्रौ य
एवं विद्वाꣳसः संवत्सरमुपयन्त्यनार्ता एवोदृचं गच्छन्ति ।

என்பது.

உரை.

வருடசத்திர யாகத்தைத் தொடங்குகின்றவர்கள், கடலைக் கையால் நீந்த எழுந்தவர்களாவர். என்னை? வருடசத்திர யாகம் கடல்போல் பரந்திருத்தலி னென்க. ஆதலின், கடலின் கரையைக் காணுதவன் கடலை நீந்திக் கடக்க முடியாதவனவன் அதுபோல் வருடசத்திர யாகம் கடல்போன்றதாமாதலின், அதன் தரையைத் தெரிந்துகொள்ளல் வேண்டும். ஆதலின் வருடசத்திரத்தின் பிராயணீய உதயனீயம் (தொடக்கத்திலும் முடிவிலுஞ் செய்யும் இஷ்டிகள்) என்னும் இரண்டு அதிராத்திரங்களும் கரைகளாம். அவற்றை யறியாவிடில் சத்திரயாகத்தில் உற்சாகம் எழாது. ஆதலின் பிராயணீயம் உதயனீயம் என்னும் அதிராத்திரங்கள் முதலிலும் கடையிலும் அநுட்டித்தற்குரியன என்பது.

அவ்விரண்டு அதிராத்திரங்களையும் பல்வகையாகப் புகழ்கின்றது.

பிராமணம் 5

इयं वै पूर्वोऽतिरात्रोऽसावुत्तरो मनः पूर्वो वागुत्तरः प्राणः पूर्वोऽपान उत्तरः प्ररोधनं पूर्व उदयनमुत्तरः ।

என்பது

உரை

முதலில் பிராயணீய மென்னும் அதிராத்திரமாம். ஆதலின், அது முதலாவதாந் தன்மையால் மண் முதலிய வடிவமாம். உதயனீய மென்னும் அதிராத்திரம் கடையாம் ஆதலின் அது விண் முதலான வடிவமாம். மனம் முன், வாக்குபின், பிராணன்முன், அபானம் பின், உலகியல் வைதிகவியற் செயல்களின் தொடக்கம் முதலாம் என்பது.

பொதுவகையாற் கூறப்பட்ட அவ்விரண்டு அதிராத்திரங்களையும், சிறப்பாக அவற்றின் வடிவங்களையும் விதிக்கின்றது.

பிராமணம் 6

ज्योतिष्टोमो वैश्वानरोऽतिरात्रो भवति ज्योतिरेव पुरस्ताद्दधते सुवर्गस्य लोकस्यानुख्यात्यै ।

என்பது.

உரை

இவ்வதிராத்திரம் சோதிட்டோமமாம். அதுவும் வைசுவா நரனால் காணப்பட்டது. அதை அநுட்டித்தலால் சுவர்க்கத்திற்குப் போகும் வழியில் விளக்கொளி வைத்ததாகின்றது. அது சுவர்க்கத்தை விளக்குதற் பொருட்டாம் என்பது.

கவாமயனம்)

பிராயணீயமாகிய அதிராத்திரத்தை விட்டுவிட்டு, இருபத்துநான்கு ஸ்தோமங்கள் கொண்ட உக்த்ய ஆரம்பணீயத்தை விதிக்கின்றது.

பிராமணம் 7

चतुर्विंशः प्रायणीयो भवति चतुर्विंशतिरर्धमासाः संवत्सरः प्रयन्त एव संवत्सरे प्रति तिष्ठन्ति तस्य त्रीणि च शतानि षष्टिश्च स्तोत्रीयास्तावतीः संवत्सरस्य रात्रय उभे एव संवत्सरस्य रूपे आप्नुवन्ति ।

என்பது

உரை

ஆரம்பணீயம் என்னும் நாள் முற்கூறிய அதிராத்திரத்திற்கு பிறகு உண்டாவதாமாயினும் மேலே கூறப்படும் அபிப்லவ ஆறு நாளின் ஆவிருத்தி மாதங்கட்கு முன்னும் ஆதலின் பிராயணீய மெனப்படுகின்றது. அந்நாளை இருபத்துநான்கு ஸ்தோமங்களுடன் அநுட்டித்தல் வேண்டும். அநுட்டிக்கில், ஒருவருடத்திற்கு பாதி மாதங்கள் இருபத்துநான்காமாதலின் அதன் ஒப்பால் அவற்றின்வாயிலாக வருடத்தை யடைகின்றனர். அடையத்தொடங்கிய வருடசத்திரயாகத்தில் நிலையுள்ளவராகின்றனர். மற்றும், இந்நாள் உக்த்ய வடிவாமாதலின், உக்த்தியத்திற்கும் பதினைந்து துதிகளாகின்றன. ஒவ்வொரு துதிக்கும் இருபத்துநான்கு இருக்குக்களில் துதிக்கும்போது முந்நூற்றறுபது துதிகளாகின்றன. இவ்வாறு, இருபத்துநான்கு பாதி மாதங்கள், முன்னூற்றறுபது நாட்கள் என்னும் இருவகையானும் ஒப்பிருத்தலின் வருடமடையப்படுகின்றது என்பது.

மேல்வரும் நாட்களை விதிக்கின்றது.

பிராமணம் 8

तेसंस्थित्या अरिष्ट्या उत्तरैरहोभिश्चरन्ति ।

என்பது

உரை

பிராயணீயம், ஆரம்பணீய மென்னும் இரண்டு நாளையும் அநுட்டித்த பிறகு யாகம் இனிது முடிதற் பொருட்டு மேல் சோதி முதலிய நாட்களால் அநுட்டிப்பார்களாக என்பது.

சோதி முதலான அபிப்லவ ஆறுநாட்களை விதிக்கின்றது.

பிராமணம் 9

षडहा भवन्ति षड्वा ऋतवः संवत्सर ऋतुष्वेव संवत्सरे प्रति तिष्ठन्ति ।

என்பது.

உரை

சோதி, கௌ, ஆயுள். ஆயுள், கௌ, சோதி என்பது ஆறுநாட்களாம். இருதுக்களும் ஆறுமாதலின் ஆறு இருதுக்கள் வருடமாதலின் வருடத்தில் நிலைக்கின்றான் என்பது.

கூறிய ஆறுநாட்களின் நடுவிலுள்ள இரண்டு நாட்களைப் புகழ்கின்றது.

பிராமணம் 10

गौश्चाऽऽयुश्च मध्यतः स्तोमौ भवतः संवत्सरस्यैव तन्मिथुनं मध्यतो द-धति प्रजननाय ।

என்பது

உரை

கௌ, ஆயுள் என்னும் இரண்டு நாளையும் ஆறுநாட்களின் நடுவில் அநுட்டிக்கிறபடியால் வருட சக்கிரயாகத்தின் நடுவில் புணர்ச்சியையுண்டாக்குகின்றது. இதனால் பிறப்பு உண்டாகின்றது என்பது.

ஆறுநாட்களின் முன்னாள் பின்னாள் இரண்டையும் புகழ்கின்றது

பிராமணங்கள் 11

ज्योतिरभितो भवति विमोचनमेव तच्छन्दाꣳस्येव तद्विमोकं यन्त्यथो उभयतोज्योतिषैव षडहेन सुवर्गं लोकं यन्ति ।

என்பது

உரை

ஆறுநாளின் முதலுங்கடையும் செய்தல் வேண்டும். செய்யில், முதலில் சோதிட்டோமத்தை அநுட்டித்து மீண்டும் முடிவில் அதை அநுட்டிக்கில் தொடங்கியதை விட்டது போலாகும். அதனால், சோதி முதலிய மூன்று காயத்திரி முதலிய சந்தங்களே விடுபட்டவைகளாகும். மற்றும், இரண்டு பக்கங்களிலும் சோதியுடன் கூடியதால் ஆறுநாளால் விளக்கப் பெற்ற சுவர்க்கம் இனிது அடையப்படுகின்றது என்பது.

விறுவிடைகளால் சோதி முதலியவைகளைப் புகழ்கின்றது.

பிராமணம் 12

ब्रह्मवादिनो वदन्त्यासते केन यन्तीति देवयानेन पथेति ब्रूयाच्छन्दाꣳसि वै देवयानः पन्था गायत्री त्रिष्टुब्जगती ज्योतिर्वै गायत्री गौस्त्रिष्टुगायुर्जगती यदेते स्तोमा भवन्ति देवयानेनैव तत्पथा यन्ति ।

என்பது.

உரை

சத்திரயாகத்தைச் செய்கின்றவர்கள் எம்மார்க்கத்தால் சுவர்க்கத்தை யடைகின்றார்கள் ? என்று பிரமவாதிகள் வினவுகின்றனர். அதற்கு, தேவயான வழியாகச் செல்கின்றார்கள் என்று உத்தரங்கூறுகிறார்கள் சில அறிஞர் என்பது. என்னை ? இங்கு, காயத்திரி திரிஷ்டுப் சகதி என்னுஞ் சந்தங்களே வழியில் உதவிபுரிவதால் அது தேவர்கள் செல்லும் மார்க்கம் எனப்படுகின்றது. இதிலோ, சோதிட்டோம முதலியவைகளே காயத்திரி முதலியவைகளாகின்றன. ஆதலின், இதை அநுட்டித்தலால் அம்மார்க்கத்தினாலேயே சுவர்க்கத்தை அடைகின்றார்கள் என்பது.

எல்லா நாட்களிலும் பிருஷ்டத் துதிகளில் சாமம் ஒன்றேன விதிக்கின்றது.

பிராமணம் 13

समानꣳ साम भवति देवलोको वै साम देवलोकादेव न यन्ति ।

என்பது

உரை

பிருகத், அல்லது, ரதந்தரம் என்னும் ஒரு சாமமே எல்லா நாட்களிலும் பிருஷ்டத் துதி இருத்தல் வேண்டும். தேவலோகம் பட்சபாதமின்மையின் சமமாதலால் சாமவடிவாம். ஒரு சாமத்தால் ஒருபோதும் தேவலோகத்திலிருந்தும் மாறமாட்டான். உறுதியாய்த் தேவலோகத்தையே அடைவான் என்பது.

அச் சாமத்திற்கு ஆதாரமாகிய இருக்குக்களுக்கு இந்நாட்களில் பேதம் உள்ளது என விதிக்கின்றது.

பிராமணம் 14

अन्या अन्या ऋचो भवन्ति मनुष्यलोको वा ऋचो मनुष्यलोकादेवान्यमन्यं देवलोकमभ्यारोहन्तो यन्ति ।

என்பது

உரை

இருக்குக்கள் 'மனிதலோக வடிவங்கள், ஏனெனின்? சாமங்கட்கு ஆதாரமாயிருக்கலினென்க. இது கருமாநுட்டான வாயிலாக தேவலோகத்திற்கு ஆதாரமாகிய மனிதவுலகம்போல் என்பதாம். எசமானர்கள் இருக்குவடிவ வெவ்வேறு மனிதவுலகங்களிலிருந்து தேவலோகத்திற்கு ஏறுகின்றார்கள் சுகத்தையுமடைகின்றார்கள். மனிதலோகம் பல்வகைக் கருமங்கட்கு ஆதாரமாதலின் பல்வேறு வகைப்பட்டதாம் என்பது.

பிரகிருதியிலுள்ள சாமத்தை நீக்குதற்பொருட்டு மற்றொரு சாமத்தை விதிக்கின்றது.

பிராமணம் 15

अभिवर्तो ब्रह्मसामं भवति सुवर्गस्य लोकस्याभिवृत्त्यै ।

என்பது

உரை

பிராமணாச்சம்சியின் சம்பந்தமுடைய சாமம் அபிவர்த்த சாமமெனப்படும். அதுவே இங்குப் பாடல்வேண்டும். அது, சுவர்க்கலோகத்தை நன்கு அடைதற்பொருட்டாம் என்பது.

வேறுநாளை விதிக்கின்றது

பிராமணம் 16

अभिजिद्भवति सुवर्गस्य लोकस्याभिजित्यै ।

என்பது

உரை

'விஷுவத், என்னும் முக்கியமாகிய நாளுக்கு முன், ஸ்வரசாமங்கள் என்னும் மூன்றுநாள் விசேடங்கள் உள. அவைகட்கும் முன் 'அபிசித், என்னும் ஒருநாள் அநுட்டித்தல் வேண்டும். இதனால் சுவர்க்கலோகம் வெற்றியாகிறது என்பது.

மீண்டும் மற்றொரு நாளை விதிக்கின்றது.

பிராமணம் 17

विश्वजिद्भवति विश्वस्य जित्यै ।

என்பது

கவாமயனம்)

உரை

விஷுவத் என்னும் நாளுக்குமேல் அநுட்டிக்கத்தக்க ஸ்வரசாமங்களென்னும் மூன்று நாள்விசேடங்களுக்குமேல் விசுவஜித் என்னும் நாள் அநுட்டிக்கத்தக்கது. இதனால் விசுவ (உலக)ம் வெற்றியாகின்றது என்பது.

ஒவ்வொரு மாதமுமுள்ள அபிப்லவ ஆறுநாளுக்குமேல் பிருஷ்டிய ஆறுநாளையும் அதிக்கிராகிய நியமத்தையும் விதிக்கின்றது.

பிராமணம் 18

मासिमासि पृष्ठान्युप यन्ति मासिमास्यतिग्राह्या गृह्यन्ते मासिमास्येव वीर्यं दधति मासां प्रतिष्ठित्यै ।

என்பது.

உரை

ஒவ்வொரு மாதத்திலும் பிருஷ்டிய ஆறுநாளும் அநுட்டித்தல் வேண்டும். அதிக்கிராகிய மென்னும் கிரகத்தையுங் கிரகித்தல் வேண்டும். இதனால், ஒவ்வொருமாதத்திலும் வீரியமுண்டாகின்றது என்பது.

பிருஷ்டிய ஆறுநாட்கு, மாதங்களின் முதற்பாகம் இடமென விதிக்கின்றது.

பிராமணம் 19

उपरिष्टान्मासां पृष्ठान्युप यन्ति तस्मादुपरिष्टादोषधयः फलं गृह्णन्ति ।

என்பது

உரை

மாதங்களின் முன்பாகத்தில் பிருஷ்டியங்கள் அநுட்டிக்கப்படுகின்றன. இதனால், கொடி செடிகள் மேல்பாகத்தில் பயனுடையவைகளாகின்றன என்பது.

முதலநுவாகம்

முற்றிற்று

ஏழாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

இரண்டாவது அநுவாகம்

இரண்டு பஞ்சாதிக்குமேல் இரண்டு பதங்களைக் கொண்டது.

மேற்கூறியதின் விகல்பத்தைக்கூறும் பிராமணங்கள்

गावो वा एतत्सत्रमासताशृङ्गाः सतीः शृङ्गाणि सिषासन्तीस्तासां
दश मासा निषण्णा आसन्नथ शृङ्गाण्यजायन्त ता अब्रुवन्नरात्स्मो-
त्तिष्ठामाव तं काममरुत्स्महि येन कामेन न्यषदामेति तासामुत्वा
अब्रुवन्नर्धा वा यावतीर्वाऽऽसामहा एवेमौ द्वादशौ मासौ संवत्सरꣳ
संपाद्योत्तिष्ठामेति तासाम् ॥ ७ ॥ द्वादशे मासि शृङ्गाणि प्रावर्तन्त
श्रद्धया वाऽश्रद्धया वा ता इमा यास्तूपरा उभय्यो वाव ता आर्ध्नु
वन्याश्च शृङ्गाण्यसन्वन्याश्चोर्जमवारुन्धतर्ध्नोति दशसु मास्सूत्तिष्ठन्नृ-
ध्नोति द्वादशसु य एवं वेद पदेन खलु वा एते यन्ति विन्दति खलु
वै पदेन यन्तद्वा एतदृद्धमयनं तस्मादेतद्गो सनि ॥ ८ ॥ तिष्ठामेति
तासां तस्मादद्वे च ॥ २ ॥

ஈண்டுச் சோமயாகம், ஆஹிநக்கி அநாஹிநக்கியென இருவகைத்தாம். அவற்றுள், ஆஹிநக்கியும் அஹீனம் சத்திரமென இருவகைத்தாம். அதாவது, இரண்டு இரவுகள்முதல் பன்னிரண்டு இரவுகள்வரை உள்ளது அஹீனமாம். துவாதசராத்திரமும் அஹீனம் சத்திரம் என இருவகைத்தாம். அதாவது பதின்மூன்று இரவுகட்குமேல் உள்ளவைகள் சத்திரங்கள். அதுவும், இராத்திரிச்சத்திரம் அயனசத்திரம் என இருவகைத்தாம். அவற்றுள், நூறு இரவுகள்வரையுள்ளவை ராத்திரிச் சத்திரங்கள் வருடசத்திர முதற்கொண்டு மேலேயுள்ளவைகள் அயன சத்திரங்கள் இவை அனைத்திற்கும் மூலகாரணமானதோ, கவாமயனமாகிய இதுவேயாம். அதிலும் ஒருவருடகால சாத்தியமானது முன் அநுவாகத்திற் கூறியதாம், இவ்விரண்டாமநுவாகத்தில் பத்து மாதங்களில் சாத்தியமாவது விகற்பமாய்க் கூறப்படுகின்றது.

கவாமயன விகற்பம்)

அதை விதிப்பதற்கு முற்கூறிய அர்த்தவாதத்தையே ஒரு விசேடத்தால் மீண்டும் ஓதுகின்றது

பிராமணம் 1

गावो वा एतत्सत्रमासताश्रृङ्गाः सतीः श्रृङ्गाणि सिषासन्तीस्तासां दश मासा निषण्णा आसन्नथ श्रृङ्गाण्यजायन्त ता अब्रुवन्नरात्स्मोत्तिष्ठामाव तं काममरुत्समहि येन कामेन न्यषदामेति ।

என்பது

உரை

முன்னர் கொம்பின்றியவைகளாயிருந்த கோக்கள் கொம்பைவிரும்பி இச் சத்திரயாகத்தை பத்துமாதம் அநுட்டித்தன. அப்போது கொம்புகள் முளைத்தன. கொம்பு முளைத்துள்ளகோக்கள் தம்முள் ஒன்றற்கொன்று யாம் கொம்புவேண்டுமென்று ஒன்றுகூடி சத்திரயாகஞ்செய்தோம் அது கிடைத்து விட்டது என்றும் சில கோக்கள் செய்த பயன் வந்தது என்றும் சத்திரத்தி லிருந்து எழுந்தன என்பது முன் அர்த்தவாதத்திற்கூறப்படுகின்றது. மற்றும், கொம்புகள் முளைக்காத கோக்கள் ஒருவருடம் வரை சத்திரயாகத் தை முடித்து பிறகு எழுந்தன என்பது.

அவற்றுள், குறித்த விசேடத்தை விளக்குகின்றது

பிராமணம் 2

तासामु त्वा अब्रुवन्नर्घा वा यावतीर्वाऽऽसामहा एवेमौ द्वादशौ मासौ संवत्सरं संपाद्योत्तिष्ठामेति तासां द्वादशे मासि श्रृङ्गाणि प्रावर्तन्त श्रद्धया वाऽश्रद्धया वा ता इमा यास्तूपरा उभय्यो वाव ता आर्ध्नुव-न्याश्च श्रृङ्गाण्यसन्वन्याश्चोर्जमवारुन्धत ।

என்பது

உரை

அவ்வாறு எழும்பாமல் இருந்த கோக்களும், இருவகையாய் சில கொம்பு களையே விரும்பின, சில இரசத்தை விரும்பின. இவ்விருவகைக் கோக்க ளும் ஒன்றுகூடி ஒருவருடத்தில் பாக்கியாயுள்ள இரண்டு மாதங்களிலும் அநுட்டித்து வருடத்தை நிறைவாக்குவோம் என்று பேசிக்கொண்டு சத்திரத் ரத்தை அநுட்டித்தன. அவற்றுள், கொம்பைவிரும்பினவைகள் கொம்புகளை யடைந்தன. கொம்பில் விருப்பமில்லாதவைகட்கு கொம்புகள் முளைக்கவில்லை.

ஆனால், அவைகளும் தாம் விரும்பிய இரசத்தையடைந்தன. இவ்வாறு, இச்சத்திரயாகத்தை பத்துமாதங்கள் அநுட்டிக்கில் கொம்புகள் மாத்திரம் முளைக்கும். ஒருவருட மநுட்டிக்கில், அழகிய கொம்புகளும் இரசங்களுங் கிடைக்கும் என்பது.

முற்கூறிய இரண்டு பக்ஷங்களையும் விதிக்கின்றது

பிராமணம் 3

ऋध्नोति दशसु मासूत्तिष्ठन्नृध्नोति द्वादशसु य एवं वेद ।

என்பது.

உரை

இவ்விருவகைகளையும் உணர்ந்து, பத்து, அல்லது, பன்னிரண்டுமாதங்கள் இதை அநுட்டிக்கின்றவன் அதற்குரிய பயனை அடைகின்றான் என்பது.

பன்னிரண்டுமாதம் வரை அநுட்டிக்கில் அநுட்டானம் உள்ளவாறு முடிந்ததால் பயன் உண்டாதக. பத்துமாதம் என்பதில் பயன் உண்டாதல் எவ்வாறு? என்றசங்கித்துப் பொருத்திக் காட்டுகின்றது.

பிராமணம் 4

पदेन खलु वा एते यन्ति विन्दति खलु वै पदेन यन् ।

என்பது

உரை

பத்துமாதம் அநுட்டிக்கின்றவர்களும், காலங்குறைவாயினும் சாத்திரமுறைப்படியே அநுட்டிக்கின்றார்கள். உலகிலும், இராசபாட்டையிற் போகின்றவன் சிறிது பழுதடையினும் கிராமத்தையடைந்து விடுகின்றான் அதுபோல் இதிலும் பயன் உண்டு என்பது.

அமைத்துக் காட்டிய இரண்டு பக்ஷங்களையும் முடிக்கின்றது.

பிராமணம் 5

तद्वा एतद्दृमयनं तस्मादेतद्गोसनि ।

என்பது.

உரை

கவாமயனம் என்னும் இந்தயாகம் பத்துமாதம் அநுட்டிக்கினும் பன்னிரண்டு மாதம் அநுட்டிக்கினும் பயனைக் கொடுக்கின்றது இது லோகங்களுக்குப் பயனை அளிக்குமானால், அறிவுமிகுந்த அந்தணர்கள் அநுட்டிக்கில் அவர்கட்கு என் சொல்லவேண்டும்? என்பது.

இரண்டாமநுவாகம்

முற்றிற்று.

ஏழாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

மூன்றாவது அநுவாகம்

ஒரு பஞ்சாதிக்குமேல் முப்பத்துநான்கு பதங்களைக்கொண்டது.

பிருஷ்டிய ஆறுநாட்களைப்பற்றிய விகற்பங்களைக் கூறும் பிராமணங்கள்

प्रथमे मासि पृष्ठान्युप यन्ति मध्यम उपयन्त्युत्तम उप यन्ति
तदाहुर्या वै त्रिरेकस्याह्न उपसीदन्ति दह्रं वै साऽपराभ्यां दोहाभ्यां
दुहेऽथकुतः सा धोक्ष्यते यां द्वादश कृत्व उपसीदन्तीति संवत्सरꣳ-
संपाद्योत्तमे मासि सकृत्पृष्ठान्युपेयुस्तद्यजमाना यज्ञं पशूनव रुन्धते
समुद्रं वै ॥ ९ ॥ एतेऽनवारमपारं प्र प्लवन्ते ये संवत्सरमुपयन्ति
यद्बृहद्रथंतरे अन्वर्जेयुर्यथा मध्ये समुद्रस्य प्लवमन्वर्जेयुस्तादृक्तदनु
त्सर्गं बृहद्रथंतराभ्यामित्वा प्रतिष्ठां गच्छन्ति सर्वेभ्यो वै कामेभ्यः
संधिर्दुहेतद्यजमानास्सर्वान्कामानव रुन्धते ॥ १० ॥ समुद्रं वै
चतुस्त्रिꣳशच्च ॥ ३ ॥

இதில், பிருஷ்டிய ஆறுநாட்களைப்பற்றிய விகற்பங் கூறப்படுகின்றது.

முன், 'மாதம் மாதம் பிருஷ்டியங்கள், என்றதில் மற்றொரு பக்ஷத்தை விதிக்கின்றது

பிராமணம் 1

प्रथमे मासि पृष्ठान्युप यन्ति मध्यम उपयन्त्युत्तम उप यन्ति ।

என்பது

உரை

எல்லாமாதங்களிலும் பிருஷ்டிய ஆறுநாள் இல்லை. மற்றோ, முதல்மாதம் நடுமாதம், கடைமாதம் என்னு மூன்றிலும் அநுட்டித்தல் வேண்டும் என்பது ஒரு பக்ஷமாம் என்பது.

மீண்டும் மற்றொரு பக்ஷத்தை விதிக்கின்றது

பிராமணம் 2

तदाहुर्या वै त्रिरेकस्याह्न उपसीदन्ति दह्रं वै साऽपराभ्यां दोहाभ्यां दुहेऽथ कुतस्सा धोक्ष्यते यां द्वादश कृत्व उपसीदन्तीति संवत्सरं संपाद्योत्तमे मासि सकृत्पृष्ठान्युपेयुस्तद्यजमाना यज्ञं पशूनव रुन्धते ।

என்பது.

உரை

உலகில், பால் கறக்கும் ஒரு பசுவில் மும்முறை பால்கறக்கவிரும்பில் முதன்முறை மிகுதியாயப் பால்கொடுக்கின்றது. இரண்டாமுறை சிறிதளவு குறைவாய்க் கொடுக்கின்றது. மூன்றுமுறையோ. மிகச்சிறிதளவே கொடுக்கின்றது. இவ்வாறிருக்கும்போது ஒருநாளில் பன்னிரண்டுமுறை பால் கறக்கும்போது எவ்வாறு பால்கொடுக்கும்? பிருஷ்டிய ஆறுநாள் ஒரு கோவாம் அதில் மும்முறை பால் கறத்தல் எவ்வாறும் ! பன்னிரண்டு முறை கறக்கிலோ, சொல்லவேண்டியதே இல்லை என்று பிருஷ்டிய ஆறுநாளை யுணர்ந்தவர்கள் கூறுகின்றார்கள். ஆதலின், ஒருவருடம் சத்திரத்தை யநுட்டித்து விட்டு கடைமாதத்தில் ஒருமுறையே பிருஷ்டிய ஆறுநாளை அநுட்டித்தல் வேண்டும். அநுட்டிக்கில், பிருஷ்டிய ஆறுநாள் சாரமுடையதால் எக்ஞம் முடிவு பெறுகின்றது என்பது.

முன், சமம் சமானம் என விதித்ததை இப்போது சிறப்பாய் விதிக்கின்றது.

பிராமணம் 3

समुद्रं वा एतेऽनवारमपारं प्र प्लवन्ते ये संवत्सरमुपयन्ति यद्बृहद्रथंतरे अन्वर्जेयुर्यथा मध्ये समुद्रस्य प्लवमन्वर्जेयुस्तादृक्तदनुत्सर्गं बृहद्रथंतराभ्यामित्वा प्रतिष्ठां गच्छन्ति सर्वेभ्यो वै कामेभ्यः संधिर्दुहे तद्यजमानास्सर्वान्कामानव रुन्धते ।

என்பது

உத்தரபக்ஷம்)

உரை

வருடசத்திரயாகத்தை அநுட்டிக்கின்ற எசமானர்கள் இருகரைகளுமின்றிய கடலைக் கையால் நீந்த எழுந்தவர்களாவர். அது முடியாத காரியமாம். ஆகையால் பிருஷ்டியத் துதியில், பிருகத், ரதந்தரமென்னும் கரைபோன்ற இரண்டையுஞ் சம்பாதிப்பார்களாக. சம்பாதிக்கில், கடலில் நடுவில் நீந்துவதற்கு தெப்பமுதலான சாதனத்தைத் தேடியவர்களாவர். ஆதலின், பிருகத் ரதந்தரங்களுடன் கூடவே பிருஷ்டியத்துதிகளையும் அநுட்டித்து எக்ஞத்தை முடிப்பார்களாக. மற்றொரு கன்றைக்கொண்டு பால் கறக்கும் பசு வேண்டும் போதெல்லாம் பால் கறப்பதுபோல் பிரகிருதியிலுள்ளதும் வேறுமாகிய பிருகத் ரதந்தரமெனனும் சாமத்தால் அந்நாளில் அநுட்டானஞ் செய்யில் எல்லா விருப்பங்களையும் அடைகின்றார்கள் என்பது.

மூன்றுமநுவாகம்

முற்றிற்று.

ஏழாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

நான்காவது அநுவாகம்

இரண்டு பஞ்சாதிக்குமேல் இரண்டு பதங்களைக் கொண்டது.

உத்தரபக்ஷங்களை விதிக்கும் பிராமணங்கள்.

समान्य ऋचो भवन्ति मनुष्यलोको वा ऋचो मनुष्यलोकादेव न यन्त्यन्यदन्यत्साम भवति देवलोकोवै साम देवलोकादेवान्यमन्यं मनुष्यलोकं प्रत्यवरोहन्तो यन्ति जगतीमग्र उप यन्ति जगतीं वै छन्दांसि प्रत्यवरोहन्त्याग्रयणं ग्रहा बृहत्पृष्ठानि त्रयस्त्रिंशं स्तोमास्तस्माज्ज्यायांसं कनीयान्प्रत्यवरोहति वैश्वकर्मणो गृह्यते विश्वान्येव तेन कर्माणि यजमाना अव रुन्धत आदित्यः ॥११॥ गृह्यत इयं वा अदितिरस्यामेव प्रति तिष्ठन्त्यन्योन्यो गृह्येते मिथुनत्वाय प्रजात्या अवान्तरं दशरात्रेण प्रजापतिः प्रजा असृजत

यद्दशरात्रो भवति प्रजा एव तद्यजमानाः सृजन्त एताᳪ ह वा
उदङ्कः शौल्बायनः सत्रस्यर्धिमुवाच यद्दशरात्रो यद्दशरात्रो भवति
सत्रस्यर्ध्या अथो यदेव पूर्वेष्वहस्सु विलोम क्रियते तस्यैवैषा शान्तिः
॥१२॥ आदित्यस्तस्यैव द्वे च ॥४॥

இதில், உத்தரபக்ஷத்தின் விசேடங்கள் விதிக்கப்படுகின்றன. அதாவது, வருடசத்திரயாகத்திற்கு இரண்டு பக்ஷங்கள் உள இதை பிறவிடத்திற் காண்க. அவற்றுள், முதலாவது ஆறுமாதமாகிய முதல் பக்ஷத்திற்கு சாமம் ஒன்றென்பதும், இருக்குக்கள் அநேகம் என்பதும் முன் கூறப்பட்டன. இப்போது, அதற்கு மாறாக இரண்டாவது ஆறுமாதமாகிய இரண்டாம் பக்ஷத்திற்கு இருக்கு ஒன்றும், சாமம் அநேகமாமென்பதும் விதிக்கப்படுகின்றது. அவற்றுள்,

இருக்கு ஒன்றென்பது விதிக்கப்படுகின்றது

பிராமணம் 1

समान्य ऋचो भवन्ति मनुष्यलोको वा ऋचो मनुष्यलोकादेव नयन्ति ।

என்பது

உரை

மனிதவுலகில் கருமத்தைச் செய்து பிறகு தேவலோகத்தையடைகின்றார்கள். இவ்வாறே ஆதாரமாகிய இருக்கை வரப்படுத்தி அதில் சாமப்பாடலைப் பாடுகின்றார்கள். ஆதலின், இருக்கு மனிதவுலகவடிவாம். அது பொதுவாக ஒன்றாகவே இருத்தல்வேண்டும். ஒருநாளில் உள்ள ஒரு இருக்கையே வேறிடத்திலும் பிரயோகித்தல் வேண்டும். இவ்வாறு செய்யில் சந்தானம் (தொடர்பு) கெடாமையின் மனிதவுலகத்தைவிட்டு நீங்கார்கள் என்பது.

சாமம் அநேகம் என்பதை விதிக்கின்றது

பிராமணம் 2

अन्यदन्यत्साम भवति देवलोको वै साम देवलोकादेवान्यमन्यं मनुष्य-
लोकं प्रत्यवरोहन्तो यन्ति ।

என்பது

உத்தாபக்ஷம்)

உரை

சாமம் பிறகு உண்டாகும் ஒப்புமையால் தேவலோகமாம். அத்தகைய, சாமம் முதல்நாளிலிருந்தது எதுவோ, அதை விட வேறுசாமம் மறுநாளில் செய்தல் வேண்டும். உலகியலிலும், தேவலோகத்திலிருந்து கிளம்பியவன் வெவ்வேறு மனிதவுலகை யடைகின்றான். அல்லது, அன்யம் என்பதால் ஐந்தாம் வேற்றுமையாம் ஆகவே அன்யத்திலிருந்து அதாவது கருமவிசிக்கிரத்தால் பல்வகைப்பட்ட தேவலோகங்களிலிருந்து வந்து மனிதவுலகையடைகின்றான் என்பது.

மற்றொரு விசேடத்தை விதிக்கின்றது

பிராமணம் 3

जगतीमग्र उप यन्ति जगतीं वै छन्दा॑ꣳसि प्रत्यवरोहन्ति ।

என்பது

உரை

முதலாம் பக்ஷத்தில் முதலில் காயத்திரி அநுட்டிக்கப்பட்டது. இரண்டாம் பக்ஷத்தில் சகதி முதலில் அநுட்டித்தல் வேண்டும். அநுட்டிக்கில் சகதியினும் வேறான அனைத்தும் அவரோகணமாகின்றன என்பது.

மீண்டும், முறையே மூன்றுவிசேடங்கள் விதிக்கப்படுகின்றன

பிராமணம் 4

आग्रयणं ग्रहाबृहत्पृष्ठानि त्रयस्त्रिꣳशꣳ स्तोमास्तस्माज्ज्यायाꣳसं कनीयान्प्रत्यवरोहति ।

என்பது.

உரை

பூர்வபக்ஷத்திலிருந்து உத்தரபக்ஷத்தில் காயத்திரி முதலியவற்றை மாறாக அநுட்டிப்பதுபோல் கிரகங்களின் சாமங்களும் மாறுமென்பதையுணர்க. மற்றும், ஆக்ரயணம் அங்குக் கடைசியில் கிரகித்தல் வேண்டும் இங்கோ, ஆதியில் கிரகித்தல் வேண்டும். கிரகிக்கவே, கிரகங்கள் கீழிறங்கி வருகின்றன. அவ்வாறே, அதில் ரதந்தரம் பிருஷ்டம் முதல்நாளில் அநுட்டானம் இதில் பிருகத் பிருஷ்டம் முதல் நாள் அநுட்டிக்கும்போது எல்லாப் பிருஷ்டத்துதிகளும் கீழிறங்கி வருகின்றன. அங்ஙனமே, முப்பத்துமூன்று ஸ்தோமங்

கள் கடைசியில் அநுட்டானம் இக்கு முதலில் அநுட்டானம். அநுட்டிக்கவே எல்லா ஸ்தோமங்களும் கீழாய் ஆகின்றன. இவ்வாறு, அதில் பெரிதான முப்பத்துமூன்று ஸ்தோமங்கள் முன் ஆகின்றன. இதில், இருபத்தேழு; இருபத்தொன்பது முதலாயின பிறகு வருகின்றன. ஆதலின் உலகிலும், பெரியோரான தந்தை பாட்டன் மார்களை புத்திரன் பேரன்மார்கள் வாகனங்களிலிருந்தும் குதிரைகளிலிருந்தும் கீழே இறக்கிவிடுகின்றார்கள் என்பது.

இரண்டு அதிக்கிராகியங்களை விதிக்கின்றது

பிராமணம் 5

वैश्वकर्मणो गृह्यते विश्वान्येव तेन कर्माणि यजमाना अव रुन्धत आदित्यो गृह्यत इयं वा अदितिरस्यामेव प्रति तिष्ठन्ति ।

என்பது

உரை

"வாசஸ்பதிம்" என்பது முதலிய மந்திரத்தால் கிரகிக்கப்படும் அதிக் கிராகியம் வைசுவகருமமாம். அதனுல், எசமானன், எல்லாக் கருமங்களையு மடைகின்றான். 'மஹீமூஷு', என்பது முதலியதால் கிரகிக்கப்படும் அதிக் கிராகியம் ஆதித்யமாம். பூமி அதிதியாமாதலின், அதனுல் பூமியில் பெரு மையை யடைகின்றான் என்பது.

அவ்விரண்டின் வேறுபாட்டை விதிக்கின்றது

பிராமணம் 6

अन्योन्यो गृह्येते मिथुनत्वाय प्रजात्यै ।

என்பது

உரை

ஒன்று ஒன்று கிரகித்தல் வேண்டும். அதாவது வைசுவகருமம் கிரகிக் கும் நாளுக்கு அடுத்தநாள் ஆதித்யம் கிரகித்தல் வேண்டும். பிறகு அதற் கடுத்த நாள் வைசுவகருமம். மறுநாள் ஆதித்யம் என்றிவ்வாறு மகாவிரதம் வரை கிரகிக்கில் இரண்டு இரண்டாதல் புணர்ச்சி வடிவமாதலின் இது பிரசை உற்பத்தியின் பொருட்டாம் என்பது.

பன்னிரண்டு நாட்களிலுள்ள பத்துநாளை விதிக்கின்றது

பிராமணம் 7

अवान्तरं वै दशरात्रेण प्रजापतिः प्रजा असृजत यद्दशरात्रो भवति प्रजा एव तद्यजमानाः सृजन्त एता॑ँ ह वा उदङ्कः शौल्बायनः सत्रस्यर्धिमुवाच यद्दशरात्रो यद्दशरात्रो भवति सत्रस्यर्ध्या अथो यदेव पूर्वेष्वहस्सु विलोम क्रियते तस्यैवैषा शान्तिः ।

என்பது

உரை

பன்னிரு நாட்களுக்கு இடையிலுள்ள பத்து இரவால் முன் பிரமன் உயிர்களைப்படைத்தனன். ஆதலின், அத்தகைய பத்து இரவுகளால் எசமானனும் பிரசைகளையுண்டாக்குகின்றான். சுல்பாயனருடைய புத்திரராகிய உதங்கமுனிவர், இதனால் எல்லாச் சத்திரபலன்களுங் கிடைக்கின்றன என்கின்றனர். இது முழுச்சம்பத்தையும் உண்டாக்குகிறது. அதாவது குறைவையும்நிறைவாக்கும் என்பது.

நான்காமநுவாகம்

முற்றிற்று

ஏழாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

ஐந்தாவது அநுவாகம்

இரண்டு பஞ்சாதிக்குமேல் பத்தொன்பது பதங்களைக் கொண்டது.

பொறுமையாற் செய்யும் கவாமயனத்தை விதிக்கும் பிராமணங்கள்

यदि सोमौ सꣳसुतौ स्यातां महति रात्रियै प्रातरनुवाकमुपाकुर्या त्पूर्वोवाचं पूर्वा देवताः पूर्वश्छन्दाꣳसि वृङ्क्ते वृषण्वतीं प्रतिपदं कुर्यात्प्रातस्सवनादेवैषामिन्द्रं वृङ्क्तेऽथो खल्वाहुः सवनमुखेसवनमुखे कार्येति सवनमुखात्सवनमुखादेवैषामिन्द्रं वृङ्क्ते संवेशायोपवेशाय गायत्रियास्त्रिष्टुभो जगत्या अनुष्टुभः पङ्क्तात्य अभिभूत्यै

स्वाहा छन्दाꣳसि वै संवेश उपवेशश्छन्दोभिरेवैषाम् ॥ १३ ॥ छन्दाꣳसि वृङ्क्ते सजनीयꣳ शस्यं विहव्यꣳ शस्यमगस्त्यस्य कयाशुभीयꣳ शस्यमेतावद्वा अस्ति यावदेतद्यावदेवास्ति तदेषां वृङ्क्ते यदि प्रातस्सवने कलशो दीर्येत वैष्णवीषु शिपिविष्टवतीषु स्तुवीरन्यद्वै यज्ञस्यातिरिच्यते विष्णुं तच्छिपिविष्टमभ्यति रिच्यते तद्विष्णुः शिपिविष्टोऽतिरिक्त एवातिरिक्तं दधात्यथो अतिरिक्तेनैवातिरिक्तमाप्त्वाऽव रुन्धते यदि मध्यंदिने दीर्येत वषट्कारनिधनꣳ साम कुर्युर्वषट्कारो वै यज्ञस्य प्रतिष्ठा प्रतिष्ठामेवैनद्गमयन्ति यदि तृतीयसवन एतदेव ॥ १४ ॥ छन्दोभिरेवैषामेकान्नविꣳशतिश्च ॥ ५ ॥

இதில், பொறுமையாற் செய்யப்படும் இரண்டு கவாமயனங்களின் விசேடத்தைக் கூறுகின்றது.

அதை விதிக்கிறது

பிராமணம் 1

यदि सोमौ सꣳसुतौ स्यातां महति रात्रियै प्रातरनुवाकमुपाकुर्यात्पूर्वो वाचं पूर्वो देवताः पूर्वश्छन्दाꣳसि वृङ्क्ते ।

என்பது

உரை

பொறுமையால் இரண்டு வேள்வித் தலைவர்களின் கூட்டம் ஒன்றுகூடிச் சோமரசம் பிழியில் அதிகாலையில் எழுந்து பிராதரநுவாக சஸ்திரத்தை உபாகரணஞ் செய்தல் வேண்டும். அதாவது, "பிராதர்யாவப்போதேவேப்ய:" என்பது முதலிய பிரேஷையை அத்துவர்யு ஓதல் வேண்டும். ஈண்டு, எவ்வெசமானனுடைய கூட்டம் முதலிற்றொடங்கி உபாகரணஞ் செய்கின்றார்களோ, அவர்கள், ஏனையகூட்டத்தின் வாக்கு முதலானவைகளை இழுத்துக் கொள்கின்றார்கள் என்பது.

பேர்றமைக் கவர்மயனம்)

பிராதரநுவர்க்கத்திற்கு இருக்கு விசேடங்களை விதிக்கின்றது

பிராமணம் 2

वृषण्वतीं प्रतिपदं कुर्यात्प्रातस्सवनादेवैषामिन्द्रं वृङ्क्ते ।

என்பது

உரை

பிரகிருதியில், "ஆபோரேவதி:, என்பது முதலியது முதலாவதாம். இங்கு, அதை விடடுவிட்டு, விருஷன் என்னுஞ் சொல்லையுடைய வேறொரு இருக்கை முதலாவதாகச் செய்தல் வேண்டும். செய்யில், அன்னிய எசமானர்களுக்கு இந்திரதேவதை காலைச்சவனத்திலிருந்து நழுகிவிடுகின்றது என்பது.

மற்றொரு பக்ஷத்தை விதிக்கின்றது

பிராமணம் 3

अथो खल्वाहुस्सवनमुखेसवनमुखे कार्येति सवनमुखात्सवनमुखादेवैषा-मिन्द्रं वृङ्क्ते ।

என்பது

உரை

ஒவ்வொரு வேளையுஞ் சோமரசம் பிழிதலிலும், அதாவது மூன்று சவனத்திலும், 'விருஷன், என்னுஞ் சொல்லையுடைய இருக்கையே ஓதல் வேண்டுமென்கின்றனர் சிலர். இதனால், ஒவ்வொரு சவனத்திலிருந்தும் இந்திரன் நீக்கப்படுகின்றான் என்பது.

அபிபூதி ஹோம மந்திரங்களைக் கூறுகின்றது

மந்திரங்கள் 1 - 5

संवेशायोपवेशाय गायत्रियास्त्रिष्टुभो जगत्या अनुष्टुभः पङ्क्त्या अभिभूत्यै स्वाहा ।

என்பது

உரை

காயத்திரி முதலான சந்தங்கள் தனது எக்ஞத்தில் நன்கு பிரவேசித்தற் பொருட்டும், புகுந்த அதிலேயே நிலைத்திருத்தற் பொருட்டும் பிறருடைய காயத்திரியானது சந்தத்தால் குறைவையடைதற் பொருட்டும் இவ்வாகுதி

அர்ப்பணமாகுக. இவ்வாறே, திரிஷ்டுப், சகதி, அநுஷ்டுப், பங்தி என்னுஞ் சந்தங்கட்கும் ஸ்வாஹா என்பதை முடிவில் சேர்த்து உரைத்துக் கொள்க என்பது.

மந்திரங்களின் கருத்தைக் கூறுகின்றது

பிரமாணம் 4

छन्दा॑ꣳसि वै संवेश उपवेशश्छन्दोभिरेवैषां छन्दा॑ꣳसि वृङ्क्ते ।

என்பது.

உரை

பிரவேசிக்கல் நிலைத்திருக்கல் என்னும் இரண்டும் சந்தவிடயமாமாதலின் சந்தமேயாம். இதனால் தனது சந்தங்களால் பிறருடைய சந்தங்கள் நாசமாகின்றன என்பது.

சஸ்திர விசேடத்தை விதிக்கின்றது

பிராமணம் 5

सजनीय॑ꣳ शस्यं विहव्य॑ꣳ शस्यमगस्त्यस्य कयाशुभीय॑ꣳ शस्यमेतावद्वा अस्ति यावदेतद्यावदेवास्ति तदेषां वृङ्क्ते ।

என்பது

உரை

நிஷ்கேவல்ய சஸ்திரத்தில், "இந்திரஸ்யவீர்யாணி,, என்னுமிடத்தில் மனஸ்வான் என்பதிலுள்ள 'ஸசநாஸ இந்திர, என்னும் சஜனீயச சூக்தத்தை ஓதல் வேண்டும். "மமாக்னே, என்னுஞ் சூக்தத்தில் உள்ள விஹவ்ய சூக்தத்தை மஹாவைசுவதேவசஸ்திரத்தில் "ஆநோபத்ரா, என்னுமிடத்தில் ஓதல் வேண்டும். "கயா சுபா,, என்னும் அகஸ்திய சூக்தத்தை, மருத்வதீய சஸ்திரத்தில் ஜனிஷ்டா உக்ர என்னுமிடத்தில் ஓதல் வேண்டும். அல்லது, அவ் வச்சஸ்திரத்தின் முதலில் கூறியபடி சூக்தக் கூட்டத்தை ஓதல் வேண்டும். மூன்று சூக்தத்தின் சாரமிதுவாம். இவ்வாறு படித்தலால் பிறருருடைய சாரங்களைத்தாங் கெட்டு விடுகின்றது என்பது.

நைமித்திக துதி விசேடத்தை விதிக்கின்றது

பிராமணம் 6

यदि प्रातस्सवने कलशो दीर्येत वैष्णवीषु शिपिविष्टवतीषु स्तुवीरन्यद्वै यज्ञस्यातिरिच्यते विष्णुं तच्छिपिविष्टमभ्यति रिच्यते तद्विष्णुश्शिपिविष्टेऽतिरिक्त एवातिरिक्तं दधात्यथो अतिरिक्तेनैवातिरिक्तमाप्त्वाऽव रुन्धते ।

என்பது

உரை

காலையில் சோமரசம் பிழியும்போது துரோணகலசம் உடைந்துவிடில், துதியாளன, விஷ்ணு துதியில், சிபிவிஷ்டன்' என்னுஞ் சொல்லையுடைய துதியைச்செய்தல் வேண்டும். என்னை ? எக்ஞத்தின் அங்கம் சாத்திரமுறையைக் கடந்திருக்கில் அது சிபிவிஷ்டனுகிய விஷ்ணுவைக் குறிக்துப் புறம்பானதாம், சிபி = பசுவாம். அவைகட்கு சுவாமியாந் தன்மையிலுள்ளவன் சிபிவிஷ்டன் என்னும் விஷ்ணுவேயாவன். ஆதலின் அவனைத்துதிக்கில், வேறுபட்ட விஷ்ணுவிற்கு வேறுகிய அங்கத்தை நிறுவுதல் கூடும். மற்றும், வேறுபாடாகிய விஷ்ணுவால் சாத்திரமுறையற்ற அங்கம் அடையப்பெற்று பிறகு அதைச் சாத்திரமுறையுடையதாகச் செய்தும் சாத்திரத்திற் கூறிய பயனையடைகின்றூர்கள் என்பது.

இரண்டாவது மூன்றவது சவன விசேடங்களை விதிக்கின்றது

பிராமணம் 7

यदि मध्यंदिने दीर्येत वषट्कारनिधनꣳ साम कुर्युर्वषट्कारो वै यज्ञस्य प्रतिष्ठा प्रतिष्ठामेवैनद्गमयन्ति यदि तृतीयसवन एतदेव ।

என்பது.

உரை

இரண்டாவது மூன்றுவது சவனங்களில் துரோண கலசம் உடைந்து போய்விடில், வஷட்கார நிதன, மென்னுஞ், சாமத்தைப் பாடல் வேணடும். நிதனம் = முடிவு. அதாவது சாமத்தின் ஐந்தாம் பாகத்தில் வஷட் என்னுஞ்

சொல்வருதலாம். 'வஷட், என்பது அவிகொடுப்பதற்குச் சாதனமாமாதலின் எக்ஞம் முடியுமிடமாம். அதையுடைய சாமப்பாடலைப்பாடலால் சத்திரயாகம் குறைவுபடாமல் முடிந்துவிடும். மூன்றுஞ் சவனத்தில் கலசமுடைபினும் இம் முறையேயாம் என்பது.

ஐந்தாமநுவாகம்

முற்றிற்று.

ஏழாங்காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

ஆறுவது அநுவாகம்

நான்கு பஞ்சாதிக்குமேல் பதினைந்து பதங்களைக் கொண்டது.

உத்சர்க்க நாளை விதிக்கும் பிராமணங்கள்

षडहैर्मासान्त्संपाद्याहरुत्सृजन्ति षडहैर्हि मासान्त्संपश्यन्त्यर्ध-मासैर्मासान्त्संपाद्याहरुत्सृजन्त्यर्धमासैर्हि मासान्त्संपश्यन्त्यमावा-स्यया मासान्त्संपाद्याहरुत्सृजन्त्यमावास्यया हि मासान्त्संपश्य-न्ति पौर्णमास्या मासान्त्संपाद्याहरुत्सृजन्ति पौर्णमास्या हि मासा-न्त्संपश्यन्ति यो वै पूर्णं आसिञ्चति परा स सिञ्चति यः पूर्णादुद-चति ॥ १५ ॥ प्राणमस्मिन्त्मदधाति यत्पौर्णमास्या मासान्त्सं पाद्याहरुत्सृजन्ति संवत्सरायैव तत्प्राणं दधति तदनु सत्रिणः प्राणन्ति यदहर्नोत्सृजेयुर्यथा दृतिरुपनद्धो विपतत्येवꣳ संवत्सरो वि पतेदार्तिमार्छेयुर्यत्पौर्णमास्यामासान्त्संपाद्याहरुत्सृजन्ति संवत्स-रायैव तदुदानं दधति तदनुसत्रिण उत् ॥ १६ ॥ अनन्ति नाऽऽ-र्तिमार्छन्ति पूर्णमासे वै देवानाꣳ सुतो यत्पौर्णमास्या मासान्त्सं-

पाद्याहरुत्सृजन्ति देवानामेव तद्यज्ञेन यज्ञं प्रत्यवरोहन्ति वि वा एतद्यज्ञं छिन्दन्ति यत्षडहसंततꣳ सन्तमथाहरुत्सृजन्ति प्राजापत्यं पशुमा लभन्ते प्रजापतिस्सर्वा देवता देवताभिरेव यज्ञꣳ सं तन्वन्ति यन्ति वा एते सवनाद्येऽहः ॥ १७ ॥ उत्सृजन्ति तुरीयं खलु वा एतत्सवनं यत्सांनाय्यं भवति तेनैव सवनान्न यन्ति समु-पहूय भक्षयन्त्येतत्सोमपीथा ह्येतर्हि यथायतनं वा एतेषाꣳ सवन-भाजो देवता गच्छन्ति येऽहरुत्सृजन्त्यनुसवनं पुरोडाशान्निर्वपन्ति यथायतनादेव सवनभाजो देवता अवरुन्धतेऽष्टाकपालान्प्रातस्सवन एकादशकपालान्माध्यंदिने सवने द्वादशकपालाꣳस्तृतीयसवने छन्दाꣳस्येवाऽऽप्त्वाऽव रुन्धते वैश्वदेवं चरुं तृतीयसवने निर्वपन्ति वैश्वदेवं वै तृतीयसवनं तेनैव तृतीयसवनान्न यन्ति ॥ १८ ॥ उदचत्युद्येऽहराप्त्वा पञ्चदश च ॥ ६ ॥

இதில், கவாமயனத்தின் துணைவிகாரமாகிய நாளை விட்டுவிட்டு வீதியை விதிக்கின்றது. உத்சர்க்கம் = விடுதல்.

பிராமணம் 1

षडहैर्मासान्संपाद्याहरुत्सृजन्ति षडहैर्हि मासान्संपश्यन्ति ।

என்பது

உரை

அபிப்லவ ஆறுநாளை ஐந்து முறை திருப்பி ஒருமாதம் அநுட்டித்துக் கொண்டு மேல் மாதத்தில் முதலிற் செய்யப்படும் சோதி என்னு நாளை விட்டு விடல்வேண்டும். அல்லது, நான்கு அபிப்லவங்களாலும் ஒருபிருஷ்டியத்தாலும் மாதத்தை நிறைவுசெய்து கொண்டு மேல்வரும் நாளைவிட்டுவிடல் வேண்டும். உலகிலும், ஐந்து ஆறுநாட்களை எண்ணி முப்பதுநாள் எனக்கண்டு இது சாவனமாதம் எனத்தெரிந்து கொள்கின்றனர் என்பது.

மற்றேந பக்ஷத்தை விதிக்கின்றது

பிராமணம் 2

अर्धमासैर्मासान्त्संपाद्याहरुत्सृजन्त्यर्धमासैर्हि मासान्त्संपश्यन्ति ।

என்பது.

உரை

முன்பக்ஷத்தில் பிராயணீய ஆரம்பணீய நாட்களிரண்டையும் விட்டு விட்டு மூன்றாநாளில் ஆறுநாள் தொடங்கப்பட்டது. அப்போது, தொடங்கிய முப்பது நாட்கொண்ட சாவனமாதம் போனவிடத்து அதற்குமேல் உள்ள நாள் விட்டுவிடப்பட்டது. இப்போது, பிராயணீயநாள் முதல் பதினைந்து பதினைந்து நாட்களாக மாதத்தை முடித்து அதன்பிறகு செய்யவேண்டிய நாளை விட்டுவிடல் வேண்டும். உலகிலும் பாதிமாதங்களிரண்டால் ஒரு மாதம் கண்டு கொள்ளப்படுகின்றது. இது சாவனமாதக் கருமத்தைப் பற்றிய தாம் என்பது.

இனி, சாந்திரமாதக் கருத்தைப்பற்றி இரண்டு பக்ஷங்கள் உள, அவற்றுள் முதற் பக்ஷங்கூறப்படுகின்றது.

பிராமணம் 3

अमावास्यया मासान्त्संपाद्याहरुत्सृजन्त्यमावास्यया हि मासान्त्संपश्य-
न्ति ।

என்பது.

உரை

சந்திரனைப்பார்க்குஞ் சிலர் அமாவாசையால் மாதமுடிவை உறுதிப் படுத்துகின்றனர். இதிலும் அவ்வாறே மாதத்தை முடித்துக்கொண்டு சுக்கில பக்ஷப்பிரதிபகத்தி(பாட்டிமையி)ல் அநுட்டிக்கவேண்டியநாளை விட்டுவிடல் வேண்டும் என்பது.

சாந்திரமாதத்தைத் தழுவியே மற்றேந பக்ஷத்தை விதிக்கின்றது

பிராமணம் 4

पौर्णमास्या मासान्त्संपाद्याहरुत्सृजन्ति पौर्णमास्या हि मासान्त्संपश्यन्ति ।

என்பது

உத்சர்க்க நாள்)

உரை

சுக்கிலபக்ஷ பிரதிபதந்தொடங்கி அமாவாசை வரை சாந்திரமாதம் என்பது மேலே போனபக்ஷம். கிருஷ்ண பக்ஷந்தொடங்கி பௌர்ணிமிவரை ஒருமாதம் என்பது இப்பட்சமாம். இதில், கிருஷ்ணபக்ஷ பிரதிபதத்தில் வரும் நாளை விட்டுவிடல் வேண்டும் என்பது.

இப்பக்ஷத்தையே புகழ்கின்றது

பிராமணம் 5

यो वै पूर्ण आसिञ्चति परा स सिञ्चति यः पूर्णादुद्चति प्राणमस्मिन्त्स दधाति यत्पौर्णमास्या मासान्त्संपाद्याहरुत्सृजन्ति संवत्सरायैव तत्प्राणं दधति तदनु सत्रिणः प्राणन्ति ।

என்பது.

உரை

உலகில் நெய் பால் முதலியன நிறைந்திருக்கும் பாத்திரத்தில் மேலேயும் அதை வார்க்கின்றனர் அது மண்ணில் வழிந்துவிடுகின்றது. அறிவாளியோ, நிறைய இருப்பதில் சிறிது எடுத்துவிட்டு காற்றுப்படும்படி செய்வான் அதுபோல், எசமானர்கள், அவ்வப்பூரணிமையால் அவ்வம்மாதத்தை நிறைவாக்கிக்கொண்டு கிருஷ்ணபட்ச பிரதிபதத்தில் செய்யும் நாளை விட்டுவிடுகின்றார்கள்; அது, வருடசத்திரமாகிய அத்தினத்தில் ஒருமனிதனுக்கு பிராணவாயுவை நிறுவுகின்றதாம். அதைப்பற்றி, சத்திரயாகஞ் செய்யும் எசமானர்களும் மூச்சடைக்காமல் பிழைத்திருக்கின்றார்கள் என்பது.

எதிர்மறை வாயிலாக அப்பக்ஷத்தையே புகழ்கின்றது

பிராமணம் 6

यद्हनोंत्सृजेयुर्यथा दृतिरुपनद्धो विपतत्येवꣳ संवत्सरो वि पतेदार्तिमार्छे-युर्यत्पौर्णमास्या मासान्त्संपाद्याहरुत्सृजन्ति संवत्सरायैव तदुदानं दधति तदनु सत्रिण उदनन्ति नाऽऽर्तिमार्छन्ति ।

என்பது

உரை

கூறிப் போந்த வகையால் நாளைவிட்டுவிடாமல் செய்யில பால் நிறைந்து கட்டுப்பட்ட பாத்திரம் விரிந்து உடைந்துவிடுவதுபோல் வருட சத்திரயாகங் கெடும். எசமானர்களும் இறந்துவிடுவார்கள். அதை நீக்குதற்பொருட்டு நாளை விட்டுவிடில் சம்வத்சரசத்திரயாகப்பாதுகாப்பின் பொருட்டு பிராணன் அசையும்படி செய்ததாகும். இதனால், சத்திரயாகஞ் செய்தவர்கள் மூச்சுவிடு கின்றனர் ஆதலின் துன்பப்படமாட்டார்கள் என்பது.

மீண்டும் மற்றொருவகையால் இப்பக்ஷத்தையே புகழ்கின்றது

பிராமணம் 7

पूर्णमासे वै देवाना१ सुतो यत्पौर्णमास्या मासान्त्संपाद्याहरुत्सृजन्ति देवानामेव तद्यज्ञेन यज्ञं प्रत्यवरोहन्ति ।

என்பது

உரை

பிரகிருதியில் பூரணிமையில் தேவர்கட்கு சோமரசம் பிழியப்படுகின்றது. இதனால், பௌர்ணமியில் மாதத்தை முடித்துவிட்டு பிந்திய நாளை விட்டுவிடில் தேவர்கள் சம்பந்தமாகிய முன் யாகத்துடன் சேர்ப்பதற்கு இவ் வேள்வியை கீழே இறக்குகின்றார்கள் என்பது.

உத்சர்க்கநாளில் மற்றொன்று செய்தல் வேண்டுமென்று விதிக்கின்றது

பிராமணம் 8

वि वा एतद्यज्ञं छिन्दन्ति यत्षडहसंतत१ सन्तमथाहरुत्सृजन्ति प्राजापत्यं पशुमा लभन्ते प्रजापतिस्सर्वा देवता देवताभिरेव यज्ञ१ सं तन्वन्ति ।

என்பது

உரை

அபிப்லவ ஆறுநாளான பிருஷ்டிய நாட்களால் சந்ததமாய் நடந்துவந்த எக்ஞத்தை விட்டுவிட்டு நாளை உத்சர்ச்சனஞ் செய்யில் எக்ஞம் விடுபட்டதாகின்றது. அதன்பொருட்டு பிரசாபதீயப்பசுவைக் கொன்று வேட்பார்களாக. பிரசாபதி படைப்பவனாதலின் எல்லாத் தேவதைகளின் வடிவனாவன். இதனால், தேவதைகளாலேயே எக்ஞத்தை இடைவிடாது செய்தவர்களாகின்றார்கள் என்பது.

அதில் செய்யவேண்டிய மற்றொன்றை விதிக்கின்றது

பிராமணம் 9

यन्ति वा एते सवनाद्येऽहरुत्सृजन्ति तुरीयं खलु वा एतत्सवनं यत्सांनाय्यं यत्सांनाय्यं भवति तेनैव सवनान्न यन्ति ।

என்பது.

உரை

நாளை உத்சர்க்கஞ் செய்கின்றவர்கள் சவனத்திலிருந்து நழுவி விடுகின்றார்கள். காலைச்சவன முதலியன அநுட்டிக்கப்பட்டமையின் அதற்கு உபாயம் யாதெனின்? சாம்நாய்யம் காலைச் சவன முதலிய மூன்றிற்கும் வேறாய் நான்காவதாமாதலின் அதையநுட்டிக்கில் சவனங்களிலிருந்து விடுபடாதவர்களாவார்கள் என்பது.

சாம்நாய்யத்தின் பரிசேடம், சோமம்போல் ஒருவர்க்கொருவர் தெரிவித்துக் கொண்டு அருந்தத்தக்கது என விதிக்கின்றது.

பிராமணம் 10

समुपहूय भक्षयन्त्येतत्सोमपीथा ह्येतर्हि ।

என்பது

உரை.

விட்டநாளில் முக்கிய சோமம் ஒன்றும் இன்மையின் சோமத்தையும் சாம்நாய்ய சேடத்தையும் அருந்துகின்றனர் என்பது.

மீண்டுமொரு காரியத்தை விதிக்கின்றது

பிராமணம் 11

यथायतनं वा एतेषाᳬ सवनभाजो देवता गच्छन्ति येऽहरुत्सृजन्त्यनुसवनं पुरोडाशान्निर्वपन्ति यथायतनादेव सवनभाजो देवता अव रुन्धते ।

என்பது

உரை

உத்சர்க்கநாளில் அதன் சம்பந்தமான சவனத்தை யருந்துந் தேவர்கள் அதில் விருப்பமற்று தமது இடத்திற்குச் சென்றுவிடுகின்றார்கள் அன்று சவனமின்மையின் என்க. அவ்வாறாகாமையின் பொருட்டு அவ் வச்சவனஞ் செய்யுமிடத்தில் புரோடாசங்களைச் செய்தல் வேண்டும். செய்யின், அங்கங் கிருந்து அவற்றை தேவர்கள் அடைகின்றார்கள என்பது.

அப்புரோடாசங்களிலுள்ள விசேடத்தை விதிக்கின்றது

பிராமணம் 8

अष्टाकपालान्प्रातस्सवन एकादशकपालान्माध्यंदिने सवने द्वादशकपा-लांस्तृतीयसवने छन्दाꣳस्येवाऽऽप्त्वाऽव रुन्धते ।

என்பது

உரை

காலைச் சவனத்தில் எட்டுக் கபாலங்கள், மாத்தியந்தின சவனத்தில் பதினொரு கபாலங்கள், மூன்றுஞ்சவனத்தில் பன்னிரண்டு கபாலங்கள் வைத்தல் வேண்டும். முறையே எண்கள் ஒப்பாமாதலின் இவைகளால் காயத்திரி முதலிய சந்தங்கள் அடையப்படுகின்றன என்பது.

மீண்டுஞ் செய்யவேண்டிய தொன்றை விதிக்கின்றது

பிராமணம் 9

वैश्वदेवं चरुं तृतीयसवने निर्वपन्ति वैश्वदेवं वै तृतीयसवनं तेनैव तृतीय-सवनान्न यन्ति ।

என்பது

உரை

மூன்றுஞ் சவனம் வைசுவதேவம் என வேறிடத்திற் கூறப்பெற்றிருத்தலின் வைசுவதேவப் பொங்கலைச் செய்யில் மூன்றுஞ் சவனத்திலிருந்தும் நழுகமாட்டார்கள் என்பது.

ஆறுமநுவாகம்

முற்றிற்று.

ஏழாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

ஏழாவது அநுவாகம்

நான்கு பஞ்சாதிக்குமேல் இருபது பதங்களைக் கொண்டது.

முற்கூறிய உத்சர்க்கத்திலேயே சில விசேடங்களைக் கூறும் பிராமணங்கள்

उत्सृज्यां३ नोत्सृज्या३मिति मीमाꣳसन्ते ब्रह्मवादिनस्तद्वा-
हुरुत्सृज्यमेवेत्यमावास्यायां च पौर्णमास्यां चोत्सृज्यमित्याहुरेते
हि यज्ञं वहत इति ते त्वाव नोत्सृज्ये इत्याहुर्ये अवान्तरं यज्ञं
भेजाते इति या प्रथमा व्यष्टका तस्यामुत्सृज्यमित्याहुरेष वै मासो
विशर इति नाऽऽदिष्टम् ॥ १९ ॥ उत्सृजेयुर्यदादिष्टमुत्सृजेयुर्या-
दृशे पुनः पर्याप्लावेमध्ये षडहस्य संपद्येत षडहैर्मासान्त्संपाद्य
यत्सप्तममहस्तस्मिन्नुत्सृजेयुस्तदग्नये वसुमते पुरोडाशमष्टाकपालं
निर्वपेयुरैन्द्रं दधीन्द्राय मरुत्वते पुरोडाशमेकादशकपालं वैश्वदेवं
द्वादशकपालमग्नेर्वै वसुमतः प्रातस्सवनं यदग्नयेवसुमते पुरोडाशमष्टाक
पालंनिर्वपन्ति देवतामेव तद्भागिनीं कुर्वन्ति॥२०॥ सवनमष्टाभिरुप
यन्ति यदैन्द्रं दधि भवतीन्द्रमेव तद्भागधेयान्न च्यावयन्तीन्द्रस्य
वै मरुत्वतो माध्यंदिनꣳ सवनं यदिन्द्राय मरुत्वते पुरोडाशमेका
दशकपालं निर्वपन्ति देवतामेव तद्भागिनीं कुर्वन्ति सवनमेकादश-
भिरुप यन्ति विश्वेषां वै देवानामृभुमतां तृतीयसवनं यद्वैश्वदेवं
द्वादशकपालं निर्वपन्ति देवता एव तद्भागिनीः कुर्वन्ति सवनं
द्वादशभिः ॥ २१ ॥ उप यन्ति प्राजापत्यं पशुमा लभन्ते यज्ञो
वै प्रजापतिर्यज्ञस्यानन्नुसर्गायाभिवर्त इतष्षण्मासो ब्रह्मसाम भवति

ब्रह्म वा अभिवर्तो ब्रह्मणैव तत्सुवर्गं लोकमभिवर्तयन्तो यन्ति प्रति-
कूलमिव हीतस्सुवर्गो लोक इन्द्र क्रतुं न आ भर पिता पुत्रेभ्यो
यथा । शिक्षा नो अस्मिन्पुरुहूत यामनि जीवा ज्योतिरशीमहीत्य-
मुतं आयताꣳ षण्मासो ब्रह्मसामं भवत्ययं वै लोको ज्योतिः प्रजा
ज्योतिरिममेव तल्लोकं पश्यन्तोऽभिवदन्त आ यन्ति ॥ २२ ॥
नाऽऽदिष्टं कुर्वन्ति द्वादशभिरिति विꣳशतिश्च । ॥ ७ ॥

இதிலும் உத்சர்க்க நாள் விசேடம் கூறப்படுகின்றது.

அதை உறுதிப்படுத்தற்பொருட்டு ஒருவிசாரத்தைத் தெரிவிக்கின்றது.

பிராமணம் 1

उत्सृज्यां३ नोत्सृज्या३मिति मीमाꣳसन्ते ब्रह्मवादिनस्तद्वाहुरुत्सृज्य-
मेवेति ।

என்பது.

உரை

நாளை உத்சர்க்கஞ் செய்யும் பக்ஷத்தில் எக்ஞம் கெட்டுப்போகின்றது. உத்சர்க்கஞ் செய்யாவிடில் தலைவன் மூச்சடைக்கின்றது என்பதை மனதில் வைத்துக்கொண்டு பிரமவாதிகள் ஆராச்சிசெய்து, பிரசாபத்திய பசுமுதலானவைகளைக்கொண்டு எக்ஞங் கெடுவதை சமாதானம் பண்ணிக்கொள்ளல் கூடுமாதலின், மூச்சடைப்பதை நீக்குவதற்கு உத்சர்க்கமே செய்தல் வேண்டுமென உறுதிபண்ணினர் என்பது.

அந்தநாளை விதிக்கின்றது

பிராமணம் 2

अमावास्यायां च पौर्णमास्यां चोत्सृज्यमित्याहुरेते हि यज्ञं वहत इति ।

என்பது.

உரை

அமாவாசையும் பௌர்ணமியும் எக்ஞத்தை நடாத்துகின்றவைகளென்பது வெளிப்படை. அவ்விரண்டின் நிலைமையில் எந்த எந்த நாள் வருகின்றதோ, அது விடத்தக்கதேயாம் என்பது.

பிறநுடைய பக்ஷத்தை விதிக்கின்றது

பிராமணம் 3

ते त्वाव नोत्सृज्ये इत्याहुर्ये अवान्तरं यज्ञं मेजाते इति ।

என்பது

உரை

அமாவாசை பௌர்ணமிகட்கு இடையிலுள்ள கருமங்களை உத்சர்க்கஞ் செய்தல் கூடாது. இது, பிரகிருதியாகிய தரிசபூரணமாதத்தை மாத்திரம் உண்டாக்குவதன்று, மற்றோ, அயன முதலியவைகளின் இடையிலுள்ள கருமத்தையும் உண்டாக்குகின்றது. ஆதலின், அவ்விரண்டையும் விட்டுவிடுதல் பொருத்தமுடையதன்று என்பது.

அற்றேல், எந்நாளில் உத்சர்க்கம் ? என்றுசங்கித்து அவைகளின் வாக்கியத்தை விளக்குகின்றது

பிராமணம் 4

या प्रथमा व्यष्टका तस्यामुत्सृज्यमित्याहुरेष वै मासो विशर इति ।

என்பது

உரை

,, கிருஷ்ணபக்ஷ பிரதிபத நாள் உத்சர்க்கஞ் செய்யத்தக்கது. அதாவது கிருஷ்ணபக்ஷ பிரதிபதத்தில் வரும் நாள்விடத்தக்கதாம் என்று கூறுகின்றார்கள். பௌர்ணமியில் முன்மாதம் முடிதலின் இத் தினவிசேடம் விசீர்ண மாதமெனப்படும். இதனால் மாதம் விட்டுப் போதலின்மையின் இது பொருத்தமாம் என்பது.

ஒரு உத்சர்க்கத்தை விளக்குகின்றது

பிராமணம் 5

नाऽऽदिष्टमुत्सृजेयुः ।

என்பது

உரை

விஷுவான் மகாவிரதம் என நாமத்துடன் சிறப்பித்துக் கூறுவது ஆதிஷ்டம் எனப்படும் ; அது விடத்தக்கதன்று ஆறுநாள் வாயிலாக பொதுவாக வந்ததே உத்சர்க்கஞ் செய்யத் தக்கது. அல்லது உத்சர்க்கமில்லாதபக்ஷமே, 'ஏஷவைமாஸ : என்பது முதலியதால் கொள்ளற்பாலதாம்

நாளை விட்டுவிடுவதால் மாதம் நிறையாமையின் மாதம் விசீர்ணமாம். இதனால் நாளைவிட்டுவிடின் மாதம் குறைவுபடுதலின் சாத்திரஞ் சொன்ன நாளை உத்சர்க்கஞ் செய்தல் கூடாது என்னும் பக்ஷத்தைக் கொள்ளவும். இதுவே சூத்திரக்காரர் கருத்துமாம் என்பது.

அத்தகைய இவ்விசேடத்தைக் கூறுவதற்கு உத்சர்க்க பக்ஷத்தை மீண்டும் விதிக்கின்றது.

பிராமணம் 6

यद्यादित्रमुत्सृजेयुर्यदशे पुनः पर्याप्लावे मध्ये षडहस्य संपद्येत षडहैर्मा-
सान्त्संपाद्य यत्सप्तममहस्तस्मिन्नुत्सृजेयुः ।

என்பது

உரை

சாத்திரத்திற்கூறியதையும் விடல் வேண்டுமெனில், சோதி முதலியன ஆவிருத்தி செய்யும்போது உண்டாகும் ஆறுநாளில் நடுவில் வருவதை விட்டுவிடல்வேண்டும். பிரதிபதத்தில் வரும் விஷுமுதலிய நாட்கள் விடத்தக்கவைகளல்ல என்பதை வருவித்துக்கொள்க. அபிப்லவ ஆறுநாள் என்னும் ஆறுநாட்களால் மாதத்தை நிறைவாக்கிக்கொண்டு பிருஷ்டிய ஆறுநாட்கு மேல் வரும் ஏழாம்நாளில் செய்யவேண்டிய சோதியாகத்தை விட்டுவிடல் வேண்டும் என்பது.

இவ்வாறு உத்சர்கத்தை விரித்துக்கூறிவிட்டு அதில் அநுட்டிக்கத்தக்க விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம் 7

तदग्नये वसुमते पुरोडाशमष्टाकपालं निर्वपेयुरैन्द्रं दधीन्द्राय मरुत्वते
पुरोडाशमेकादशकपालं वैश्वदेवं द्वादशकपालम् ।

என்பது

உரை

அத்தினத்தில். வசுமானாகிய அக்கினியின் பொருட்டு எட்டுக்கபாலப் புரோடாசம், இந்திரனுக்குத் தயிர், மருத்துவனாகிய இந்திரனுக்கு பதினொரு கபால புரோடாசம், வைசுவ தேவர்கட்கு பன்னிரண்டு கபாலப் புரோடாசம் என நான்கு அவிகளையுஞ் செய்வார்களாக என்பது.

அவற்றுள் முதலாவது அவியைப் புகழ்கின்றது

பிராமணம் 8

अग्नेर्वै वसुमतः प्रातःसवनं यदग्नये वसुमते पुरोडाशमष्टाकपालं निर्वपन्ति देवतामेव तद्भागिनीं कुर्वन्ति सवनमष्टाभिरुप यन्ति ।

என்பது

உரை

அக்கினி தனமுடையதாம். காலைச் சவனத்தில் வசுமானாகிய அக்கினிக்கு எட்டுக் கபாலங்களை வைத்துப் புரோடாசஞ் செய்கின்றவர்கள் வசுமானாகிய அக்கினியையே பாகமுடையதாகச் செய்கின்றார்கள். இதனால், எட்டெழுத்துக்களையுடைய காயத்திரிவாயிலாகச் சவனத்தையுமடைகின்றார்கள் என்பது.

இரண்டாவது அவியைப் புகழ்கின்றது

பிராமணம் 9

यदैन्द्रं दधि भवतीन्द्रमेव तद्भागधेयान्न च्यावयन्ति ।

என்பது

உரை

இந்திரனுடைய தயிரைச் செய்கின்றவர்கள் அவனுடைய பாகதேயத்தைக் கொடுத்தலால் நழுவிவிடமாட்டார்கள் என்பது.

மூன்றாம் அவியைப் புகழ்கின்றது

பிராமணம் 10

इन्द्रस्य वै मरुत्वतो माध्यंदिनꣳ सवनं यदिन्द्राय मरुत्वते पुरोडाशमेकादशकपालं निर्वपन्ति देवतामेव तद्भागिनीं कुर्वन्ति सवनमेकादशाभिरुप यन्ति ।

என்பது

உரை

மருத்துவானாகிய இந்திரன் மாத்தியந்தின சவனத்திற்குத்தலைவனாவன்; அத்தகைய மருத்துவானாகிய இந்திரனுக்கு பதினொரு கபாலங்களில் புரோடாசஞ் செய்கின்றவர்கள் மருத்துவானாகிய இந்திரனுக்குப் பாகதேயத்தை

யளிக்கின்றார்கள். இதனால், பதினொரு எழுத்துக்களைக் கொண்ட திருஷ்டுப் சந்தவாயிலாக சவனத்தையடைகின்றார்கள் என்பது.

நான்காம் அவியைப் புகழ்கின்றது

பிராமணம் 11

विश्वेषां वै देवानामृभुमनां तृतीयसवनं यद्वैश्वदेवं द्वादशकपालं निर्वप-
न्ति देवता एव तद्भागिनीः कुर्वन्ति सवनं द्वादशभिरुप यन्ति ।

என்பது

உரை

ருபுமான்களான வைசுவதேவர்கள் மூன்றாஞ் சவனத்தின் சுவாமிகள். அவர்கட்கு, பன்னிரண்டுகபாலங்களில் புரோடாசஞ் செய்யில் அவர்களைப் பாகமுடையவர்களாக்குகின்றார்கள். இதனால், பன்னிரண்டு எழுத்துக்களையுடைய சகதிச் சந்தவாயிலாக சவனத்தையடைகிடைகின்றார்கள் என்பது.

முன், அநுவாகத்திற்கூறிய பிரசாபத்தியத்தைப் புகழ்கின்றது.

பிராமணம் 12

प्राजापत्यं पशुमा लभन्ते यज्ञो वै प्रजापतिर्यज्ञस्यानुसर्गाय ।

என்பது

உரை

பிரசாபதிக்குரிய பசுவைக்கொன்று வேட்கில் உத்சர்க்கநாளிலும் பிராசாபத்தியமாதலால் எக்ஞம் விடுபடாததேயாகும் என்பது.

பூர்வபக்ஷத்தில் பிரமசாமத்தை விதிக்கின்றது.

பிராமணம் 13

अभिवर्त इतष्षण्मासो ब्रह्मसामं भवति ब्रह्म वा अभिवर्तो ब्रह्मणैव तत्सु-
वर्गं लोकमभिवर्तयन्तो यन्ति प्रतिकूलमिव हीतस्सुवर्गो लोकः ।

என்பது

உரை

கவாமயனத்தின் விகிருதியாமாதலின் உத்சர்க்கிணமயனத்திற்கும் இரண்டு பக்ஷங்களுண்டு. அவற்றுள் முதல் பக்ஷத்தால் சுவர்க்கமடையப் படுகின்றது இரண்டாவதுபக்ஷத்தால் மீண்டும் பூலோகமடையப்படுகின்றது. இவ்வாறுகும்போது பூலோகச்திலிருந்து சுவர்க்கம் போகின்ற எசமானர் கட்கு அநுகூலமாக முதல் ஆறுமாதங்களும் ஒவ்வொருநாளும் பிரமசாமத் தைப் பாடல்வேண்டும். அபிவர்த்த சாமம் பிரமரூபமாதலின் அதன் வலி யால் சுவர்க்கததை நோக்கிப போகின்றவர்களாய்ச் சுவர்க்கத்தையடைகின் றூர்கள் என்பது.

உத்தரபக்ஷத்திற்கு பிரமசாமத்தை விதிக்கின்றது

பிராமணம் 14

इन्द्र क्रतुं न आ भर पिता पुत्रेभ्यो यथा। शिक्षा नो अस्मिन्पुरुहूत यामनि जीवा ज्योतिरशीमहीत्यमुत आयताꣳ षण्मासो ब्रह्मसामं भवत्ययं वै लोको ज्योतिः प्रजा ज्योतिरिममेव तल्लोकं पश्यन्तोऽभि-वदन्त आ यन्ति।

என்பது

உரை

சுவர்க்கலோகத்திலிருந்து பூலோகத்திற்கு வருகின்ற வேள்வித் தலைவர் களுக்கு அநுகூலமாக உத்தரபக்ஷம் ஆறுமாதமும் நாடோறும் "இந்திரக்ர தும்,, என்பது முதலிய இருக்கிலுண்டாகும் பிரமசாமத்தைப் பாடல்வேண் டும். அதன்பொருள் :— இந்திர ! தந்தை, மக்கட்கு பாகங்கொண்டுவந்து கொடுப்பதுபோல் எமது கிருதுவைப் பெற்றுக்கொள்வாயாக. புருகூத ! அநுட்டிக்கப்படும் இவ்வேள்வி விசேடத்தில் நல்ல உபதேசஞ் செய்வாயாக. யாம் உனது உபதேசத்தால் பிரகாசமாகிய மணிதவுலகை'யடைகின்றோம் என்பது. இத்தகைய சாமப்பிரயோகத்தால் பூலோகத்தை ஒளியால் பார்த் துக் கொண்டும். அடைகின்றோம் என வாயாற் சொல்லிக்கொண்டும் அடை கின்றூர்கள் என்பது

ஏழாமநுவாகம்

முற்றிற்று.

ஏழாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

எட்டாவது அநுவாகம்

ஐந்து பஞ்சாதிக்குமேல் பதினொரு பதங்களைக்கொண்டது

மஹாவிரதத்தில் உள்ள சாம விசேடங்களை விதிக்கும் பிராமணங்கள்.

देवानां वा अन्तं जग्मुषामिन्द्रियं वीर्यमपाक्रामत्तत्क्रोशेनावा-
रुन्धत तत्क्रोशस्य क्रोशत्वं यत्क्रोशेन चात्वालस्यान्ते स्तुवन्ति
यज्ञस्यैवान्तं गत्वेन्द्रियं वीर्यमव रुन्धते सत्रस्यर्ध्याऽऽहवनीयस्या-
न्ते स्तुवन्त्यग्निमेवोपद्रष्टारं कृत्वर्धिमुप यन्ति प्रजापतेर्हृदयेन हवि-
र्धानेऽन्तस्स्तुवन्ति प्रेमाणमेवास्य गच्छन्ति श्लोकेन पुरस्तात्सदसः
॥ २३ ॥ स्तुवन्त्यनुश्लोकेन पश्चाद्यज्ञस्यैवान्तं गत्वा श्लोकभाजो
भवन्ति नवभिरध्वर्युरुद्गायति नव वै पुरुषे प्राणाः प्राणानेव यज-
मानेषु दधाति सर्वा ऐन्द्रियो भवन्ति प्राणेष्वेवेन्द्रियं दधत्यप्रति-
हृताभिरुद्गायति तस्मात्पुरुषः सर्वाण्यन्यानि शीर्ष्णोऽङ्गानि प्रत्यञ्चति
शिर एव न पञ्चदशꣳ रथंतरं भवतीन्द्रियमेवाव रुन्धते सप्तदशम्
॥ २४ ॥ बृहदन्नाद्यस्यावरुद्ध्या अथो प्रैव तेन जायन्त एकविꣳशं
भद्रं द्विपदासु प्रतिष्ठित्यै पत्नय उप गायन्ति मिथुनत्वाय प्रजात्यै
प्रजापतिः प्रजा असृजत सोऽकामयताऽऽसामहꣳ राज्यं परीया-
मिति तासाꣳ राजनेनैव राज्यं पर्यैत्तद्राजनस्य राजनत्वं यद्राजनं
भवति प्रजानामेव तद्यजमाना राज्यं परि यन्ति पञ्चविꣳशं
भवति प्रजापतेः ॥ २५ ॥ आप्त्यै पञ्चभिस्तिष्ठन्तः स्तुवन्ति देव-
लोकमेवाभि जयन्ति पञ्चभिरासीना मनुष्यलोकमेवाभि जयन्ति
दश सं पद्यन्ते दशाक्षरा विराडन्नं विराड्विराजैवान्नाद्यमव रुन्धते
पञ्चधा विनिषद्य स्तुवन्ति पञ्च दिशो दिक्ष्वेव प्रति तिष्ठन्त्यैकैक-

कयाऽस्तुतया समायन्ति दिग्भ्य एवान्नाद्यꣳ सं भरन्ति ताभिरुद्गा-
तोद्गायति दिग्भ्य एवान्नाद्यम् ॥ २६ ॥ संभृत्य तेज आत्मन्दधते
तस्मादेकः प्राणस्सर्वाण्यङ्गान्यवत्यथो यथा सुपर्ण उत्पतिष्य-
ञ्छिर उत्तमं कुरुत एवमेव तद्यजमानाः प्रजानामुत्तमा भवन्त्या-
सन्दीमुद्गाताऽऽरोहति साम्राज्यमेव गच्छन्ति प्लेङ्खꣳ होता ना-
कस्यैव पृष्ठꣳ रोहन्ति कूर्चावध्वर्युर्ब्रध्नस्यैव विष्टपं गच्छन्त्येतावन्तो
वै देवलोकास्तेष्वेव यथापूर्वं प्रति तिष्ठन्त्यथो आक्रमणमेव तत्सेतुं
यजमानाः कुर्वते सुवर्गस्य लोकस्य समष्ट्यै ॥ २७ ॥ सदसः
सप्तदशं प्रजापतेर्गायति दिग्भ्य एवान्नाद्यं प्रत्येकादश च । ॥ ८ ॥

இதில், பிரகிருதியிலுள்ள மகாவிரதத்தின் விசேடங்கள் மூன்று அநுவாகங்களாற் கூறப்படுகின்றன. அவற்றுள், இதிற் சில சாமவிசேடங்கள் கூறப்படுகின்றன.

குரோசம் என்னுஞ் சாமத்தை விதிக்கின்றது

பிராமணம் 1

देवानां वा अन्तं जग्मुषामिन्द्रियं वीर्यमपाक्रामत्तत्क्रोशेनावारुन्धत तत्क्रो-
शस्य क्रोशत्वं यत्क्रोशेन चात्वालस्यान्ते स्तुवन्ति यज्ञस्यैवान्तं गत्वे-
न्द्रियं वीर्यमव रुन्धते ।

என்பது

உரை

முன்னொருகால் சத்திரயாகஞ்செய்து முடிவுபண்ணிய தேவர்களுடைய இந்திரியங்களும் அவற்றின் வன்மையும் போய்விட்டன. அவற்றை, குரோசம் என்னுஞ்சாமப்பாடலால் மீண்டும் பெற்றுக்கொண்டனர். குரோசம் — களிப்பித்தல். அழைத்தற்குச் சாதனமாம். ஆதலின், போய்விட்ட வீரியத்தை மீண்டும் வரவழைத்தலால் இச்சாமப்பாடலுக்கு குரோசம் எனப்பெயர்வந்தது. இச்சாமத்தை மண்ணெடுக்குமிடத்திலிருந்து (சாத்துவாலத்திலிருந்து) பாடுவார்களாக. அதனால் இந்திரியவன்மையுடன் எக்ஞத்தையுமடைவார்கள் என்பது.

சத்திரஸ்யர்தி என்னும் மற்றெரு சாமத்தை விதிக்கின்றது.

பிராமணம் 2

सत्रस्यर्ध्याऽऽहवनीयस्यान्ते स्तुवन्त्यग्निमेवोपद्रष्टारं कृत्वर्धिमुप यन्ति ।

என்பது.

உரை

'சத்திரஸ்யர்தி, என்னுஞ் சாமத்தை ஆகவனீயத்திற் கருகிலிருந்து கொண்டு பாடுவார்களாக பாடில் அக்கினியையே சாட்சியாகவைத்துக் கொண்டுபாடியதாகும். அதனுல் நிறைந்த சம்பத்தையடைகின்றூர்கள் என்பது.

மற்றெரு சாமத்தை விதிக்கின்றது

பிராமணம் 3

प्रजापतेर्हृदयेन हविर्धानेऽन्तस्स्तुवन्ति प्रेमाणमेवास्य गच्छन्ति ।

என்பது

உரை

" பிரசாபதி இருதயம்,, என்னுஞ் சாமத்தை, அவிர்த்தான மண்டத்திற்குள்ளிருந்துகொண்டு பாடுவார்களாக. பாடில், அதனுல் பிரசாபதியினுடைய பிரியத்தையடைகின்றூர்கள் என்பது.

மற்றிரண்டு சாமங்களை விதிக்கின்றது

பிராமணம் 4

श्लोकेन पुरस्तात्सदसस्स्तुवन्त्यनुश्लोकेन पश्चाद्यज्ञस्यैवान्तं गत्वा श्लोक-
भाजो भवन्ति ।

என்பது

உரை

சுலோகம், அநுசுலோகம் என்னும் இரண்டு சாமப்பாடல்களையும் சபையின் இரண்டுபக்கங்களிலிமிருந்து பாடுவார்களாக. அதனுல் எக்ஞம் இனிது முடிவதுடன் கீர்த்தியையும் அடைகின்றூர்கள் என்பது.

ஒரு விசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம் 5

नवभिरध्वर्युरुद्गायति नव वै पुरुषे प्राणाः प्राणानेव यजमानेषु दधाति ।

என்பது

உரை

இச்சாமத்திற்கு ஆதாரமாகிய துதிஇருக்குக்கள் ஒன்பதாம். பாடுகின்றவன் அத்வரியுவாவவன் உக்காதா அல்லன். மனிதனுடைய உடம்பில் ஒன்பது துளைகளிருத்தலின் பிராணனும் ஒன்பதாமாதலின் அவைகளை எசமானனிடத்தில் நிறுவுகின்றான் என்பது.

அந்த இருக்குக்களில் சிலவிசேடத்தை விதிக்கின்றது.

பிராமணம் 6

सर्वा ऐन्द्रियो भवन्ति प्राणेष्वेवेन्द्रियं दधाति ।

என்பது

உரை

இந்திரனையே தேவதையாகவுடைய ஒன்பது இருக்குக்களையும் பாடல் வேண்டும். அதனால் பிராணனிடத்தில் வன்மையை நிறுவுகின்றான் என்பது.

அவ்விருக்குக்களில் "பிரதிஹாரம்,, என்னும்பகுதியை பாடுதல் கூடாதென்கின்றது

பிராமணம் 7

अप्रतिहृताभिरुद्गायति तस्मात्पुरुषस्सर्वाण्यन्यानि शीर्ष्णोऽङ्गानि प्रत्यञ्चति शिर एव न ।

என்பது

உரை

இருக்கில் பாடவேண்டிய சாமத்திற்கு, ஹிங்காரம், பிரஸ்தாவம், உத்கீதம் பிரதிஹாரம், நிதனம் என ஐந்துபாகங்கள் உள. அவற்றுள், பிரதிஹாரம் என்னும் பாகத்தைவிட்டுவிட்டு ஒன்பது இருக்குக்களாலும் பாடல் வேண்டும். ஏனெனின்? தலை யொழிந்த ஏனைய கைகால் முதலான அங்கங்கள் மடக்கவும் நீட்டவும் வருகின்றன. தலையோ, அவ்வாறு வருவதில்லை. அதுபோல் இது தலையாம். அதாவது பிரதிஹாரம் விட்டுவிடத்தக்கது என்பது.

அத்தகைய் பாடலுக்கு பக்கங்களில் இரண்டுஸ்தோமங்களுடன்கூடிய இரண்டு சாமங்களை விதிக்கின்றது.

பிராமணம் 8

पञ्चदश१ रथंतरं भवतीन्द्रियमेवाव रुन्धते सप्तदशं बृहदन्नाद्यस्याव-
रुद्ध्या अथो प्रैव तेन जायन्ते ।

என்பது

உரை

பதினைந்து ஸ்தோமங்களுடன்கூடிய ரதந்தரமென்னும் சாமம் ஒரு பக்கத்தில பாடல் வேண்டும். அதனால் பதினைந்துஸ்தோமம் இந்திரனுடன் உண்டானதால் இந்திரியங்கிடைக்கின்றது. பதினேழு ஸ்தோமத்துடன்கூடிய பிருகத் என்னுஞ் சாமம் மற்றொரு புறத்தில் பாடல் வேண்டும். பதினேழு துதிகள் அன்னம் பிரசை என்பவைகளையடையக் காரணமாதலின் அவைகளால் அவை அடையப்படுகின்றன. பறவைகட்கு இரண்டு சிறகுகள் போன்று இரண்டு பாடல்கள் என்பதை யுணர்க என்பது.

இருக்குவிசேடங்களுள், ஸ்தோமம் சாமம் என்னுமிவற்றின் விசேடங்களை விதிக்கின்றது

பிராமணம் 9

एकविंशं भद्रं द्विपदासु प्रतिष्ठित्यै ।

என்பது

உரை

இருபத்தொன்று ஸ்தோம விசேடம், பத்திரம் ஒரு சாமவிசேடமாம். இரண்டு மாதங்களுடன்கூடிய இருக்கு துவிபதங்கள் எனப்படுகின்றது இதனால் நிலைமையுண்டாகின்றது என்பது.

பத்திரம் என்னுஞ்சாமத்திற்கருகில் பத்நீஸிகானத்தை விதிக்கின்றது.

பிராமணம் 10

पत्नय उप गायन्ति मिथुनत्वाय प्रजात्यै ।

என்பது

உரை

எசமானனுடைய பத்தினிமார்கள், பத்திரம் என்னுஞ் சாமத்தைப் பாடிப்போக அருகிலிருந்து காமும் பாடுவார்களாக. ஆண்பெண் என்னும் இருவருடைய பாடல்களால புணர்ச்சியாம். அதனுல் புத்திரப்பேறு உண்டாகின்றது என்பது.

மற்றொருசாமத்தை விதிக்கின்றது

பிராமணம் 11

प्रजापतिः प्रजा असृजत सोऽकामयताऽऽसामहꣳ राज्यं परीयामिति ता-
साꣳ राजनेनैव राज्यं पर्यैत्तद्राजनस्य राजनत्वं यद्राजनं भवति प्रजा-
नामेव तद्यजमाना राज्यं परि यन्ति ।

என்பது.

உரை

பிரசாபதி பிரசைகளைப்படைத்தனன். படைத்து அவைகளின் இராச்சியத்தையடையவிரும்பி 'ராசனம், என்னும் சாமப்பாடலால் இராச்சியத்தையடைந்தனன். ராச்சியத்தைக் கொடுத்தலால் ராசனம். ஆதலின் ராசனம் என்னுஞ் சாமத்தைப்பாடுகின்றவர்கள் இராச்சியத்தையடைகின்றூர்கள் என்பது.

அதில் ஸ்தோம விசேடத்தை விதிக்கின்றது

பிராமணம் 12

पञ्चविꣳशं भवति प्रजापतेराप्त्यै ।

என்பது.

உரை

இருபத்தைந்து ஸ்தோமங்களாகின்றன. இது பிரசாபதியால் படைத்தலால் இதனுல் பிரசாபதியை யடைகின்றனன் என்பது.

மற்றொரு விசேடத்தை விதிக்கின்றது

பிராமணம் 13

पञ्चभिस्तिष्ठन्तस्स्तुवन्ति देवलोकमेवाभि जयन्ति पञ्चभिरासीना मनुष्यलोकमेवाभि जयन्ति दश सं पद्यन्ते दशाक्षरा विराडन्नं विराड्विराजैवान्नाद्यमव रुन्धते ।

என்பது

உரை

முதலாவது ஐந்து துதிகளை நின்றுகொண்டு படித்தல் வேண்டும். இரண்டாவது ஐந்தை உட்கார்ந்துகொண்டு படித்தல வேண்டும். இதனல் இரண்டுலகமும் அடையப்படுகின்றன. பத்தெழுத்துக்கள் கொண்ட விராட் சந்தமும் அடையப்படுகின்றது என்பது.

உட்கார்ந்து பாடுவதில் ஒரு விசேடத்தை விதிக்கின்றது

பிராமணம் 14

पञ्चधा विनिषद्य स्तुवन्ति पञ्च दिशो दिक्ष्वेव प्रति तिष्ठन्ति ।

என்பது.

உரை

ஐவகையிடங்களிலும் பெருமையையடைகின்றார்கள் என்பது. அதாவது மேல்வெளியுடன் ஐந்து திசைகளிலும் பெருமையை யடைகின்றார்கள் என்பது.

மற்றொரு விசேடத்தை விதிக்கின்றது

பிராமணம் 15

एकैकयाऽस्तुतया समायन्ति दिग्भ्य एवान्नाद्यꣳ सं भरन्ति ।

என்பது

உரை

ஐந்துவகையான இடவிசேடங்களுள் உத்காதா உட்கார்ந்துகொண்டு செய்வானாகில் ஏனையவர்களும் துதியால் அவனிடத்தில் வந்து உட்காருகின்றனர். இவ்வாறு ஒவ்வொரு விடத்திலும் முதலில் உத்காதா உட்காரும் போது அந்த இருக்கின் துதியின் பொருட்டு எல்லாரும் உத்காதாவையடைகின்றார்கள். இவ்வண்ணஞ் செய்யும்போது எல்லாத் திக்குக்களிலும் உணவுப் பொருளைத் தேடியடைகின்றார்கள் என்பது.

அன்னியர்கள் வந்தவுடன் உத்காதா செய்யவேண்டியதை விதிக்கின்றது.

பிராமணம் 16

ताभिरुद्गातोद्गायति दिग्भ्य एवान्नाद्यꣳ संभृत्य तेज आत्मन्दधते तस्मादेकः प्राणः सर्वाण्यङ्गान्यवत्यथो यथा सुपर्ण उत्पतिष्यञ्छिर उत्तमं कुरुत एवमेव तद्यजमानाः प्रजानामुत्तमा भवन्ति ।

என்பது.

உரை

எந்தத் துதியைக் குறித்து உத்காதாவை யடைகின்றார்களோ, அத்துதியால் உத்காதா பாடல் வேண்டும். அவ்வாறுபாடில், திசைகளில் தேடிய அன்னமாகிய ஒளியை அனைவரும் தமதான்மாவின்கண் நிறுவுகின்றனர். எல்லாரும் உட்கார்ந்திருக்கும்போது உத்காதாஒருவனே பாடுகின்றானாதலின் உடம்பின் நடுவில் இருந்துகொண்டு ஒரே பிராணன் எல்லா அங்கங்களையும் பாதுகாக்கின்றது. மற்றும், பறவை விசேடம் வானில் பறந்துபோய் தலையை நிமிர்ப்பதுபோல் உத்காதாவின் பாடலால் பிரசைகளுக்குள் எசமானர்கள் உயர்ந்தவர்களாகின்றனர் என்பது.

மூன்று இருத்துவிக்குக்களின் ஆதாரவிசேடங்களை விதிக்கின்றது.

பிராமணம் 17

असन्दीमुद्गाताऽऽरोहति साम्राज्यमेव गच्छन्ति प्लेङ्खꣳ होता नाकस्यैव पृष्ठꣳ रोहन्ति कूर्चावध्वर्युर्ब्रध्नस्यैव विष्टपं गच्छन्त्येतावन्तो वै देवलोकास्तेष्वेव यथापूर्वं प्रति तिष्ठन्त्यथो आक्रमणमेव तत्सेतुं यजमानाः कुर्वते सुवर्गस्य लोकस्य समष्ट्यै ।

என்பது

உரை

உத்காதா நாற்காலியின்மீது ஏறுதலால் எல்லா எசமானர்களும் சாம்ராச்சியத்தையடைகின்றார்கள். ஹோதா தொட்டில்மீது ஏறில், எல்லோரும் சுவர்க்கத்தையடைகின்றார்கள். அத்வர்யு கூர்ச்சத் (தருப்பைவிசேடத்)தில் ஏறில் அனைவரும் சூரியனுடைய இடத்தையடைகின்றார்கள். இம்மூன்று பதவிகளே தேவலோகத்தில் விருப்புடையவைகளாம் முறையாய் அவைகளை யடைகின்றார்கள். மற்றும், அவ்வாறு ஏறுதலால் சுவர்க்கமாகிய கடலுக்குப் பாலங்கட்டுகின்றதாகும். அது சுவர்க்கத்தையடைவதற்கு உதவியாம் என்பது.

எட்டாநுவாகம்
முற்றிற்று

ஏழாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

ஒன்பதாவது அநுவாகம்

மூன்று பஞ்சாதிக்கு மேல் முப்பது பதங்களைக் கொண்டது.

நூறு கம்பிகளையுடைய வீணை வாசித்தல் முதலியதைக் கூறும் பிராமணங்கள்.

अर्केण वै सहस्रशः प्रजापतिः प्रजा असृजत ताभ्य इलान्देनेरां

लूतामवारुन्ध यदर्क्यं भवति प्रजा एव तद्यजमानाः सृजन्त इला-

न्दं भवति प्रजाभ्य एव सृष्टाभ्य इरां लूतामव रुन्धते तस्माद्याऽ-

समाऽ सत्रऽ समृद्धं क्षोधुकास्ताऽ समां प्रजा इषऽ ह्यासामूर्जमा-

ददते याऽ समां ऽगृद्धमक्षोधुकास्ताऽ समां प्रजाः ॥२८॥ न ह्या-

सामिषमूर्जमाददत उत्क्रोदं कुर्वते यथा बन्धान्मुमुचाना उत्क्रोदं

कुर्वत एवमेव तद्यजमानादेवबन्धान्मुमुचाना उत्क्रोदं कुर्वत इष-

मूर्जमात्मन्दधाना वाणश्शततन्तुर्भवति शतायुः पुरुषः शतेन्द्रिय

आयुष्येवेन्द्रिये प्रति तिष्ठन्त्याजिं धावन्त्यनभिजितस्याभिजित्यै

दुन्दुभीन्त्स माघ्नन्ति परमा वा एषा वाग्या दुन्दुभौ

परमामेव ॥ २९ ॥ वाचमव रुन्धते भूमिदुन्दुभिमा घ्न-

न्ति यैवेमां वाक्प्रविष्टा तामेवाव रुन्धतेऽथो इमामेव जयन्ति सर्वा

वाचो वदन्ति सर्वासां वाचामवरुद्ध्या आर्द्रे चर्मन्व्यायच्छेते

इन्द्रियस्यावरुद्ध्या आऽन्यः क्रोशति प्रान्यः शऽसति य आक्रो-

शति पुनात्येवैनान्त्स यः प्रशऽसति पूतेष्वेवान्नाद्यं दधात्यृषिकृतं

च ॥ ३० ॥ वा एते देवकृतं च पूर्वैर्मासैरव रुन्धते यद्भूतेच्छ-

दाऽ सामानि भवन्त्युभयस्यावरुद्ध्यै यन्ति वा एते मिथुनाद्ये

संवत्सरमुपयन्त्यन्तर्वेदि मिथुनौ सं भवतस्तेनैव मिथुनान्न यन्ति

வீணைவாசித்தல்)

॥ ३१ ॥ व्यृद्धमक्षोधुकास्ताꣳ समां प्रजाः परमामेव च त्रिꣳ-
शच्च । ॥ ९ ॥

இதில், நூறு கம்பிகளையுடைய வீணை வாசித்தல் முதலியன கூறப்படுகின்றன.

அதில் இரண்டு சாமங்களை விதிக்கின்றது.

பிராமணம் 1

अर्क्येण वै सहस्रशः प्रजापतिः प्रजा असृजत ताभ्य इलान्देनेरां लूताम-
वारुन्ध यदर्क्यं भवति प्रजा एव तद्यजमानास्सृजन्त इलान्दं भवति
प्रजाभ्य एव सृष्टाभ्य इरां लूतामव रुन्धते तस्माद्याꣳ समाꣳ सत्रꣳ-
समृद्धं क्षोधुकास्ताꣳ समां प्रजा इषꣳ ह्यासामूर्जमाददते याꣳ समां
व्यृद्धमक्षोधुकास्ताꣳ समां प्रजा न ह्यासामिषमूर्जमाददते ।

என்பது

உரை

முன், பிரசாபதியானவன் அர்க்கியம் என்னும் ஒரு சாம விசேடத்தால் பல்வகையான உயிர்களைப்படைத்தனன். பிறகு,'இலாந்தம்' என்னுஞ் சாமத்தால், உண்டாக்கிய பிரசைகட்குக் கிடைக்காத உணவுப் பொருள்களை மீண்டுந் தேடினன். ஆதலின், அதைப்போல் எசமானர்களும் இவ்விரண்டு சாமங்களால் உயிர்களையுண்டாக்கி அவைகட்கு உணவுப் பொருள்களையுந் தேடுகின்றார்கள். சாமத்தால் அன்னந் தேடப்படுவதாலும், எப்போதும் சத்ரயாகம் சம்பத்துடையதாமாதலானும் அத்தகைய சாமசத்ரயாகத்தைக் குறித்து பசியால் வாடின உயிர்கள் இதில் வந்து சேர்கின்றன. சத்ரயாகஞ் செய்தவர்கள் அவைகட்கு பல்வகையான இரசங்கள் உணவுப் பொருள்களைத் தேடிக்கொடுக்கின்றனர். எவ்வருடத்தில் சம்பத்துநிறைந்த சத்திரயாகத்தைச் செய்யவில்லையோ, அவ்வருடத்தில் பசி மிகுந்தவர்கள் ஒருவரும் வருகின்றிலர். ஆதலின், நெல் முதலிய உணவுப் பொருள்களும் அவ்வருடத்தில் பால் முதலிய இரசமுந்தேடிக் கொடுக்கிறதில்லை என்பது.

அநுட்டிக்கவேண்டிய மற்றொன்றை விதிக்கின்றது

பிராமணம் 2

उत्क्रोदं कुर्वते यथा बन्धान्मुमुचाना उत्क्रोदं कुर्वत एवमेव तद्यजमाना-
देवबन्धान्मुमुचाना उत्क्रोदं कुर्वत इषमूर्जमात्मन्दधानाः ।

என்பது.

உரை

எல்லா எசமானர்களும் சத்ரயாகம் முடிந்ததால் களிப்புற்று பேரிரைச்சலிடல் வேண்டும். எப்படியெனின்? விலங்கு போடப்பட்டு பலகாலம் தன் புற்றுக் கிடந்தவன் அவ்விலங்கு விடுபடில் களிப்புற்று பேரிரைச்சலிடுவது போலென்க. இவ்வாறே, நெடுநாள் சத்ரயாகமாகிய தேவபந்தத்திலிருந்த எசமானர்கள் சத்ரயாகஞ் செய்த வலியால் அன்னத்தையும் இரசத்தையும் தம தான்மாவில் தேடிக்கொள்ளுங் களிப்புமிகுதியால் பேரிரைச்சலிடுகின்றனர் என்பது.

நூறு நூல்கள் கட்டிய வீணையை விதிக்கின்றது.

பிராமணம் 3

वाणश्शततन्तुर्भवति शतायुः पुरुषश्शतेन्द्रिय आयुष्येवेन्द्रिये प्रति तिष्ठन्ति ।

என்பது

உரை

அத்தி மரத்தாற்செய்த வீணைத்தண்டத்தில் பத்துப்பத்தாக நூறு முஞ் சம்புல்லுகளால் திரித்தக்கயிறுகளைப் பரப்பியிழுத்துக் கட்டுதல் சதவாணம் எனப்படும். பத்து இந்திரியங்களும் பத்து நாடிகளின் விருத்தி பேதங் களால் நூறுகின்றன. ஒரு மனிதனுடைய வயதும் நூறும் ஆதலின் நூறு இந்திரியங்களாகிற ஆயுளில் நிலைக்கின்றார்கள் என்பது.

உற்சாகமடைந்த எசமானர்கட்கு ஒரு அளவைக் கற்பித்து அதுவரை ஓடல் வேண்டும் என்பதை விதிக்கின்றது.

பிரமாணம் 4

आजिं धावन्त्यनभिजितस्याभिजित्यै ।

என்பது

உரை

அம்பைவிட்டுக்கொண்டே ஓடுதல் ஆசி தாவனமாம். அது முன் தேடாத பயனையடையும் வரை ஓடுதல் வேண்டும்; அதைத் தேடுதற் பொருட்டே ஓடுதலாம் என்பது.

வீணைவாசித்தல்)

உற்சாகத்தை விளக்கும் மற்றொன்றை விதிக்கின்றது.

பிராமணம் 5

दुन्दुभीन्त्समाघ्नन्ति परमा वा एषा वाग्या दुन्दुभौ परमामेव वाचमव रुन्धते ।

என்பது

உரை

நான்கு திக்குக்களிலும் வைத்திருக்கின்ற துந்துபி என்னும் பறைகளை நன்றாய் அடித்தல் வேண்டும். இவ்வாத்திய வொலி எல்லா ஒலிகட்கும் மேலாகியதால் அதை அடித்தலால் எசமானர்கள் சபையிலுள்ளவர்களை இரமிக்கத் தக்க வாக்கைப் பேசுகின்றவர்களாகின்றார்கள் என்பது.

பூமி துந்துபியை அடித்தல் விதிக்கின்றது

பிராமணம் 6

भूमिदुन्दुभिमा घ्नन्ति यैवेमां वाक्प्रविष्टा तामेवाव रुन्धतेऽथो इमामेव जयन्ति ।

என்பது

உரை.

ஆக்கினீத்ர மண்டபத்திற்கு மேற்கில் பாதி அந்தர் வேதியிலும் பாதி வெளியிலுமாக பள்ளம் கெல்லி மயிர்கள் மேலேயிருக்கும்படி ஈரமாயுள்ள தோலை அப்பள்ளத்தின்மீது விரித்து நாற்புறமும் சிறிய முளைக்குச்சில்களை யடித்துவிட்டு புல்லின் தண்டால் அடித்தல் வேண்டும். இதனால், மட்பொருள்களின் உராஞ்சுதலால் உண்டாகும் ஒலிகளனைத்தும் இவர்களுடைய வசமாகின்றன என்பது.

மாகேந்திர துதியின் உபாகரணத்தின்போது, அபாகாடலி, தும்புந, வீணை, பிச்சேலா என்னும் வாத்தியங்களை பத்தினிகள் முழங்கல் வேண்டுமென்று விதிக்கின்றது.

பிராமணம் 7

सर्वा वाचो वदन्ति सर्वासां वाचामवरुद्ध्यै ।

என்பது

உரை

இதனால். அபாகாடலி முதலிய வாத்தியங்களின் ஒலிகளையும், மனிதர் கோ, குதிரை முதலியவைகளின் ஒலி விசேடங்களனைத்தையுமடைகின்றார் கள் என்பது.

தோல் நிமித்தம் அந்தணன் சூத்திரன் என்பவர்கட்கு கலகத்தை விதிக்கின்றது.

பிராமணம் 8

आर्द्रे चर्मन्व्यायच्छेते इन्द्रियस्यावरुद्ध्यै ।

என்பது

உரை

சூத்திரனும் ஆரியனும் பூமிதுந்ச பிக்கு தோல்போடும்போது கலகஞ் செய்து கொள்கின்றனர். அந்தர்வேதியில் அந்தணன் புகழ்ந்துகொண்டும், வெளிவேதியில் சூத்திரன் பழித்துக்கொண்டும் தோலைப் போடல் வேண்டும். இதனால் இந்திரிய வன்மையுண்டாகின்றது என்பது.

அதில், நிந்தையையும் புகழையும் முறையாய் விதிக்கின்றது.

பிராமணம் 9

**आऽन्यः क्रोशति प्रान्यश्शꣳसति य आक्रोशति पुनात्येवैनान्त्स यः प्र-
शꣳसति पूतेष्वेवान्नाद्यं दधाति ।**

என்பது.

உரை

சத்ரயாகஞ் செய்த இவ்வெசமானர்கள் பொருளைச் செலவிட்டு துர் வியாபாரஞ் செய்து எல்லாவற்றையும் சூன்யமாக்கினர் என்று சூத்திரன் பழித்தல் வேண்டும். இவ்வெசமானர்கள், நல்ல வியாபாரத்தைச் செய்து சம்பத்தையடைந்தார்கள் என்று அந்தணன் புகழ்தல் வேண்டும். இவற் றுள், பழித்தலால் எசமானர்களுடைய பாவநீங்கிப் புனிதர்களாகின்றனர். புகழ்தலால் புநிதமானபோது உணவுப் பொருள் முதலானவைகளைத் தேடு கின்றனர் என்பது.

சிலசாம விசேடங்களை விதிக்கின்றது

பிராமணம் 10

ऋषिकृतं च वा एते देवकृतं च पूर्वैर्मासैरव रुन्धते यद्भूतेच्छदाँ सामानि भवन्त्युभयस्यावरुद्ध्यै ।

என்பது.

உரை

மனிதரால் செய்யப்பட்ட உதவியையும், தேவரால் செய்யப்பட்ட உதவியையும் கவாமயனத்திலுள்ள மகாவிரதத்தில் அநுட்டித்த மாதங்களால் எசமானர்கள் அடைகின்றார்கள். ஆதலின் மகாவிரதத்திலும் அவ்விரு உதவிகளையும் அடைதற்பொருட்டு 'பூதேச்சா' என்னும் பெயர்களையுடைய இருடிகளின் சமபந்தமான, அதாவது அவர்களால் கண்டுபிடித்த சாமங்களைப்பாடல் வேண்டும் என்பது.

பிரமசாரியும், விலைமாதரும் புணர்வதை விதிக்கின்றது.

பிராமணம் 11

यन्ति वा एते मिथुनाद्ये संवत्सरमुपयन्त्यन्तर्वेदि मिथुनौ सं भवतस्तेनैव मिथुनान्न यन्ति ।

என்பது.

உரை

வருடசத்ரயாகத்தை அநுட்டித்த எசமானர்கட்கு நெடுநாள் அநுட்டானத்தால் புணர்ச்சி வன்மை போய்விடுகின்றது. மீண்டும் பெண் புணர்ச்சி வன்மை வருதற் பொருட்டு வேதியின் நடுவில் பிரமசாரியையும் தாசியையும் புணரும்படி செய்தல் வேண்டும். இதனால், எசமானர்கட்கு மாதைப் புணரும் வன்மையுண்டாகின்றது என்பது.

ஒன்பதாமநுவாகம்

முற்றிற்று

ஏழாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

பத்தாவது அநுவாகம்

நாற்பத்தொன்பது பதங்களைக் கொண்டது.

தாசி நடிப்பதைக் கூறும் பிராமணங்கள்.

**चर्माव भिन्दन्ति पाप्मानमेवैषामव भिन्दन्ति माऽप रात्सी-
र्माऽति व्यात्सीरित्याह संप्रत्येवैषां पाप्मानमव भिन्दन्त्युदकुम्भा-
नधिनिधाय दास्यो मार्जालीयं परि नृत्यन्ति पदो निघ्नतीरिदंमधुं
गायन्त्यो मधु वै देवानां परममन्नाद्यं परममेवान्नाद्यमव रुन्धते
पदो नि घ्नन्ति महीयामेवैषु दधाति ॥ ३२ ॥ चर्मैकान्नपञ्चाशत् ।
॥ १० ॥**

இதில், தாசி நடிப்பது கூறப்படுகின்றது.

தோலைத் துளைத்தல்

பிராமணம் 1

चर्माव भिन्दन्ति पाप्मानमेवैषामव भिन्दन्ति ।

என்பது

உரை

ஆக்னீத்ர மண்டபத்திற்கு வடக்கில் பாய்களையாவது, அல்லது தருப்பைகளையாவது குவித்து அதன்மேல் ஈரமாகிய தோலை விரித்து அதை பாணங்களை விட்டுத் துளைத்தல் வேண்டும். இதனால் எசமானர்களுடைய பாவம் நீங்கிவிடுகின்றது என்பது.

துளைப்பதற்கு முன் கவசமணிந்தவர்கட்கு அத்வரியு கற்பித்தல்,

பிராமணம் 2

माऽप रात्सीर्माऽति व्यात्सीरित्याह संप्रत्येवैषां पाप्मानमव भिन्दन्ति ।

என்பது

உரை

கவசமணிந்தோர்களே! தோலைத் துளைப்பதற்கு விடும் பாணத்தை தவறாமல் விடுவீர்களாக. கீழே விழுந்துவிடாமலும் விடுவீர்களாக என்று அத்வரியு கூறுதல் வேண்டும். இவ்வாறு செய்யில் எசமானர்களுடைய பாவத்தையே தொலைக்கின்றார்கள் என்பது.

நாட்டியத்தை விதிக்கின்றது

பிராமணம் 3

उदकुम्भानधिनिधाय दास्यो मार्जालीयं परि नृत्यन्ति पदो निघ्नतीरिदं-मधुं गायन्त्यो मधु वै देवानां परममन्नाद्यं परममेवान्नाद्यमव रुन्धते पदो नि घ्नन्ति महीयामेवैषु दधति ।

என்பது

உரை

மார்ச்சாலீயத்திலுள்ள மேடையைச் சுற்றி எட்டு தாசிப் பெண்கள் தலையில் நீர்க் குடங்களை வைத்துக்கொண்டு, இதம் மது, என்று பாடிக் கொண்டு ஆடல் வேண்டும். மது என்பது தேவர்கட்கு மிகப்பிரியமாகிய அன்னம் அதைப் பாடுதலால் சிறந்த உணவுப் பொருள் கிடைக்கின்றது என்பது

பத்தாமநுவாகம்
முற்றிற்று.

ஏழாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

பதினோராவது அநுவாகம்

இரண்டு பஞ்சாதிக்குமேல் இரண்டு பதங்களைக் கொண்டது.

அன்னஹோம மந்திரங்கள்

पृथिव्यै स्वाहाऽन्तरिक्षाय स्वाहा दिवे स्वाहा संप्लोष्यते स्वाहा संप्लवमानाय स्वाहा संप्लुताय स्वाहा मेघायिष्यते स्वाहा मेघायते स्वाहा मेघिताय स्वाहा मेघाय स्वाहा नीहाराय स्वाहा निहाकायै स्वाहा प्रासचाय स्वाहा प्रचलाकायै स्वाहा विद्योतिष्यते स्वा-

हा॑ विद्योत॑मानाय॒ स्वाहा॑ संविद्योत॑मानाय॒ स्वाहा॑ स्तनयिष्य॒ते स्वा-
हा॑ स्त॒नय॑ते स्वाहो॒ग्रꣳ स्त॒नय॑ते स्वाहा॑ वर्षिष्य॒ते स्वाहा॒ वर्ष॑ते स्वा-
हा॑ऽभिवर्ष॑ते स्वाहा॑ परि॒वर्ष॑ते स्वाहा॑ सं॒वर्ष॑ते ॥ ३३ ॥ स्वाहा॑ऽनु-
वर्ष॑ते स्वाहा॑ शीकायिष्य॒ते स्वाहा॑ शीका॒य॑ते स्वाहा॑ शीकि॒ताय॒ स्वा-
हा॑ प्रोषिष्य॒ते स्वाहा॑ प्रु॒ष्ण॒ते स्वाहा॑ परिप्रु॒ष्ण॒ते स्वाहो॑द्ग्रहीष्य॒ते
स्वाहो॑द्गृह्ण॒ते स्वाहो॑द्गृहीताय॒ स्वाहा॑ विप्लोष्य॒ते स्वाहा॑ वि॒प्लव॑मा-
नाय॒ स्वाहा॒ विप्लु॑ताय॒ स्वाहा॑ऽऽतप्स्य॒ते स्वाहा॒ऽऽतप॑ते स्वाहो॒ग्रमा-
तप॑ते स्वाह॒र्ग्भ्यः स्वाहा॒ यजु॑र्भ्यः स्वाहा॒ साम॑भ्यः स्वाहाऽङ्गि॑रोभ्यः
स्वाहा॒ वेदे॑भ्य॒स्स्वाहा॒ गाथा॑भ्यः स्वाहा॑ नाराश॒ꣳसीभ्यः॒ स्वाहा॒
रैभी॑भ्यः स्वाहा॒ सर्व॑स्मै॒ स्वाहा॑ ॥ ३४ ॥ सं॒वर्ष॑ते रैभी॑भ्यः
स्वाहा॒ द्वे च॑ । ॥११॥

இத்துடன் மகாவிரதம் முடிந்துவிட்டது.

இனிமேல் வரும் அநுவாகங்களில் அசுவமேதத்திற்கு அங்கங்களாகிய மந்திரங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள்ளும், இரண்டு அநுவாகங்களால் அன்னஹோம மந்திரங்கள் கூறப்படுகின்றன. அதில், இதில் முதலநுவாக மந்திரங்கள் கூறப்படுகின்றன.

पृथिव्यै स्वाहाऽन्तरिक्षाय स्वाहा दिवे स्वाहा संप्लोष्यते स्वाहा संप्लवमा-
नाय स्वाहा संप्लुतायस्वाहा मेघायिष्यते स्वाहा मेघायते स्वाहा मेघि-
ताय स्वाहा मेघाय स्वाहा नीहाराय स्वाहा निहाकायै स्वाहा प्रासचाय
स्वाहा प्रचलाकायै स्वाहा वियोतिष्यते स्वाहा वियोतमानाय स्वाहा संवि-
योतमानाय स्वाहा स्तनयिष्यते स्वाहा स्तनयते स्वाहोग्रꣳ स्तनयते स्वा-
हा वर्षिष्यते स्वाहा वर्षते स्वाहाऽभिवर्षते स्वाहा परिवर्षते स्वाहा सं-
वर्षते स्वाहाऽनुवर्षते स्वाहा शीकायिष्यते स्वाहा शीकायते स्वाहा शी-
किताय स्वाहा प्रोषिष्यते स्वाहा प्रुष्णते स्वाहा परिप्रुष्णते स्वाहोद्ग्रही-
ष्यते स्वाहोद्गृह्णते स्वाहोद्गृहीताय स्वाहा विप्लोष्यते स्वाहा विप्लव-

मानाय स्वाहा विप्लुताय स्वाहाऽऽतप्स्यते स्वाहाऽऽतपते स्वाहोग्रमात-
पते स्वाहर्ग्भ्यः स्वाहा यजुर्भ्यस्स्वाहा सामभ्यस्स्वाहाऽङ्गिरोभ्यः स्वा-
हा वेदेभ्यः स्वाहा गाथाभ्यः स्वाहा नाराशꣳसीभ्यः स्वाहा रैभीभ्यः
स्वाहा सर्वस्मै स्वाहा ।

என்பது.

உரை

பூமி, அந்தரிக்ஷம், வான் என்பவைகட்கு இது அர்ப்பணமாகுக. மேகத்தை யுண்டாக்குதற்பொருட்டு உண்டாகும்புகையொளி நீர்வாயுக்களின் சேர்க்கை சம்பலவமாம். அத்தகையசம்பலவம் உண்டானது, உண்டாகின்றது, உண்டாகுவது என்னும் மூன்றிற்கும், உண்டானமேகங்கட்கும், உண்டாகின்றமேகங்கட்கும் உண்டாகும்மேகங்கட்கும், மழைத்துளிகட்கும், மிகுந்ததுளிகளுடன் கூடிய சிறிது இருட்டிற்கும், அக்குளிர்ச்சியாலுண்டாகும் அவயவச் சுருக்கத்திற்கும், அதன் பிறகு ஓடுதலுக்கும், பிறகு உண்டான மின்னலுக்கும். உண்டாகின்ற மின்னலுக்கும், உண்டாகும் மின்னலுக்கும் பிறகு, பெய்த மழைக்கும், பெய்கின்ற மழைக்கும், பெய்யும் மழைக்கும், அதிலும் காற்றால் முகத்திலடிக்க மழைக்கும், நாற்புறமும் மண்டலமாய் வளைத்துக்கொண்டும் பெய்யும் மழைக்கும், நேரே தாரையாய்ப்பெய்யும் மழைக்கும், போகும்போது பின்புறத்திலடிக்கும் மழைக்கும், அம்மழையால் உண்டாகியகுளிருக்கும், உண்டாகின்றகுளிருக்கும், உண்டாகுங்குளிருக்கும், மழை பெய்தவுடன் பூமியிலிருந்தெழும் சூட்டிற்கும், எழுந்த சூட்டிற்கும், எழப்போகுஞ் சூட்டிற்கும், விட்டமழைக்கும், விடுகின்ற மழைக்கும், விடப்போகும் மழைக்கும், கலைந்துபோன மேகத்திற்கும், கலைந்து போகின்ற மேகங்கட்கும், கலைந்து போகப்போகும் மேகங்கட்கும், பிறகு வந்தவெய்யிலுக்கும், வருகின்ற வெய்யிலுக்கும், வரப்போகும் வெய்யிலுக்கும், இருக்கு மந்திரத்திற்கும், எசுர் மந்திரத்திற்கும், சாமத்திற்கும், ஆங்கிரசர்கட்கும், வேதங்கட்கும், தேவதைகளின் கதையாகிய மந்திரங்கட்கும், மனிதர்களின் கதையாகிய நாராசம்சமென்னும் இருக்கிற்கும், அக்கினியைப்பற்றிய ரைப்யமென்னும் இருக்குக்கட்கும் இது அர்ப்பணமாகுக. மற்றும் எல்லாவற்றிற்கும் இது அர்ப்பணமாகுக. இவ்வைம்பது மந்திரங்களாலும் இரவில் அன்னஹோமங்கள் செய்தல்வேண்டும் என்பதாம். குதிரை பிரசாபதி வடிவாமாதலின் இவையெல்லாங் குதிரை வடிவால் ஓமஞ் செய்யப் படுகின்றது என்பதையுணர்க.

பதினோராமநுவாகம்

முற்றிற்று

ஏழாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

பன்னிரண்டாவது அநுவாகம்

இரண்டு புஞ்சாதிக்குமேல் இரண்டு பதங்களைக் கொண்டது
மிச்சமுள்ள அன்னஹோம மந்திரங்கள்.

दत्वते स्वाहाऽदन्तकाय स्वाहा प्राणिने स्वाहाऽप्राणाय स्वाहा
मुखवते स्वाहाऽमुखाय स्वाहा नासिकवते स्वाहाऽनासिकाय
स्वाहाऽक्षण्वते स्वाहाऽनक्षिकाय स्वाहा कर्णिने स्वाहाऽकर्णकाय
स्वाहा शीर्षण्वते स्वाहाऽशीर्षकाय स्वाहा पद्वते स्वाहाऽपादकाय
स्वाहा प्राणते स्वाहाऽप्राणते स्वाहा वदते स्वाहाऽवदते स्वाहा
पश्यते स्वाहाऽपश्यते स्वाहा शृण्वते स्वाहाऽशृण्वते स्वाहा मन-
स्विने स्वाहा ॥ ३५ ॥ अमनसे स्वाहा रेतस्विने स्वाहाऽरेतस्का-
य स्वाहा प्रजाभ्यः स्वाहा प्रजननाय स्वाहा लोमवते स्वाहाऽ-
लोमकाय स्वाहा त्वचे स्वाहाऽत्वक्काय स्वाहा चर्मण्वते स्वाहाऽचर्म-
काय स्वाहा लोहितवते स्वाहाऽलोहिताय स्वाहा मांसन्वते
स्वाहाऽमांसकाय स्वाहा स्नावभ्यः स्वाहाऽस्नावकाय स्वाहाऽस्थ-
न्वते स्वाहाऽनस्थिकाय स्वाहा मज्जन्वते स्वाहाऽमज्जकाय स्वा-
हाऽङ्गिने स्वाहाऽनङ्गाय स्वाहाऽऽत्मने स्वाहाऽनात्मने स्वाहा सर्व-
स्मै स्वाहा ॥३६॥ मनस्विने स्वाहाऽनात्मने स्वाहा द्वे च ॥१२॥

दत्वते स्वाहाऽदन्तकाय स्वाहा प्राणिने स्वाहाऽप्राणाय स्वाहा मुखवते
स्वाहाऽमुखाय स्वाहा नासिकवते स्वाहाऽनासिकाय स्वाहाऽक्षण्वते
स्वाहाऽनक्षिकाय स्वाहा कर्णिने स्वाहाऽकर्णकाय स्वाहा शीर्षण्वते
स्वाहाऽशीर्षकायस्वाहा पद्वते स्वाहाऽपादकाय स्वाहा प्राणते स्वाहाऽ-
प्राणते स्वाहा वदते स्वाहाऽवदते स्वाहा पश्यते स्वाहाऽपश्यते स्वाहा-

எஞ்சிய அன்னஹோமம்)

शृण्वते स्वाहाऽशृण्वते स्वाहा मनस्विने स्वाहाऽमनसे स्वाहा रेत-
स्विने स्वाहाऽरेतस्काय स्वाहा प्रजाभ्यः स्वाहा प्रजननाय स्वाहा लो-
मवते स्वाहाऽलोमकाय स्वाहा त्वचे स्वाहाऽत्वक्काय स्वाहा चर्मण्वते
स्वाहाऽचर्मकाय स्वाहा लोहितवते स्वाहाऽलोहिताय स्वाहा माꣳसन्वते
स्वाहाऽमाꣳसकाय स्वाहा स्नावभ्यः स्वाहाऽस्नावकाय स्वाहाऽस्थन्वते
स्वाहाऽनस्थिकाय स्वाहा मज्जन्वते स्वाहाऽमज्जकाय स्वाहाऽङ्गिने स्वा-
हाऽनङ्गाय स्वाहाऽऽत्मने स्वाहाऽनात्मने स्वाहा सर्वस्मै स्वाहा ।

என்பது.

உரை

பற்களுள்ளவைகட்கும், பற்கள் இல்லாதவைகட்கும், உயிருள்ளவைகட்கும், உயிரில்லாதவைகட்கும், வாயுள்ளவைகட்கும், வாயில்லாதவைகட்கும், மூக்குள்ளவைகட்கும், மூக்கில்லாதவைகட்கும், கண் உள்ளவைகட்கும் கண் இல்லாதவைகட்கும், செவியுள்ளவைகட்கும், செவியில்லாதவைகட்கும், தலையுள்ளவைகட்கும், தலையில்லாதவைகட்கும், கால் உள்ளவைகட்கும், கால் இல்லாதவைகட்கும், பிராணன் உள்ளவைகட்கும், பிராணன் இல்லாதவைகட்கும், பார்க்கின்றவைகட்கும், பார்வையில்லாதவைகட்கும், கேட்கின்றவைகட்கும், கேட்காதவைகட்கும், மனதில்லாதவைகட்கும், மனதுள்ளவைகட்கும் ரேதசு உள்ளவைகட்குப், ரேதசு இல்லாதவைகட்கும், பிறப்பவைகட்கும், பிறக்காதவைகட்கும், மயிருள்ளவைகட்கும், மயிரில்லாதவை, கட்கும், தோல் உள்ளவைகட்கும், தோல் இல்லாதவைகட்கும், சிவந்த நிறமுடையவைகட்கும், சிவப்பில்லாதவைகட்கும், மாமிசமுள்ளவைகட்கும், மாமிசமில்லாதவைகட்கும், நரம்பு உள்ளவைகட்கும், நரம்பில்லாதவைகட்கும், எலும்புள்ளவைகட்கும், எலும்பில்லாதவைகட்கும், கொழுப்புள்ளவைகட்கும், கொழுப்பில்லாத வைகட்கும், அங்கமுள்ளவைகட்கும், அங்கமில்லாதவைகட்கும், ஆன்மா உள்ளவைகட்கும், ஆன்மா இல்லாதவைகட்கும், மற்றும் எல்லாவற்றிற்கும் இவை அருப்பணங்களாகுக. இவைகளாலும் இரவில் அன்னஹோமங்கள் செய்தல் வேண்டும் என்பதாம்.

பன்னிரண்டாமநுவாகம்

முற்றிற்று.

ஏழாங்காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

பதிமூன்றுவது அநுவாகம்

முப்பத்தெட்டுப் பதங்களைக் கொண்டது.

பரிதி மந்திரங்கள்.

कस्त्वा युनक्ति स त्वा युनक्तु विष्णुस्त्वा युनक्त्वस्य यज्ञ-
स्यर्ध्यै मह्यꣳ संनत्या अमुष्मै कामायाऽऽयुषे त्वा प्राणाय त्वा-
ऽपानाय त्वा व्यानाय त्वा व्युष्ट्यै त्वा रय्यै त्वा राधसे त्वा
घोषाय त्वा पोषाय त्वाऽऽराद्घोषाय त्वा प्रच्युत्यैत्वा ॥ ३७ ॥
कोऽष्टात्रिꣳशत् ॥ १३ ॥

இதில் பரிதி மந்திரங்கள் கூறப்படுகின்றன.

कस्त्वा युनक्ति स त्वा युनक्तु विष्णुस्त्वा युनक्त्वस्य यज्ञस्यर्ध्यै मह्यꣳ सं-
नत्या अमुष्मै कामायाऽऽयुषे त्वा प्राणाय त्वाऽपानाय त्वा व्यानाय त्वा
व्युष्ट्यै त्वा रय्यै त्वा राधसे त्वा घोषाय त्वा पोषाय त्वाऽऽराद्घोषाय
त्वा प्रच्युत्यै त्वा ।

என்பது

உரை

நடுப்பரிதியே! (விறகே!) பிரசாபதி, உன்னை, தீக்கருகிற் சேர்த்து வைக்கின்றார். தெற்குப் பரிதியே! உன்னை, அந்தப் பிரசாபதியே அக்கினிக் கருகிற் சேர்ப்பாராக. வடக்குப்பரிதியே! உன்னை, விஷ்ணு, தீக்கருகில் சேர்த்துவைப்பாராக. எதன் பொருட்டெனின்? இவ்வேள்வி இனிது நிறைவேறுதற் பொருட்டென்க. அங்ஙனமே, எல்லாப் பிராணிகளும் எனக்குப் பணிதற்பொருட்டும், பிரசையுண்டாக வேண்டுமென்னும் இச்சையின் பொருட்டும், ஆயுள் வளருதற் பொருட்டும், உன்னை, யான் அக்கினிக்கருகில் வைக்கின்றேன். மற்றும், பிராணன் பொருட்டும், அபானன் பொருட்டும், விடியற்காலத்தின் பொருட்டும், தனத்தின் பொருட்டும், அன்னத்தின் பொருட்டும், கீர்த்தியின் பொருட்டும், பசு முதலியவைகளின் புஷ்டியின் பொருட்டும், தூரசப்தவாச்சியத்தின்பொருட்டும். எல்லாத்துன்ப நீக்கத்தின் பொருட்டும் உன்னை அக்கினிக்கருகில் வைக்கின்றேன். ஈண்டு உன்னை நான் வைக்கின்றேன் என்பதை எங்குஞ் சேர்த்துக் கொள்க என்பது.

ஏழாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

பதினைந்காவது அநுவாகம்

ஒரு பஞ்சாதிக்குமேல் நாற்பத்தேழு பதங்களைக் கொண்டது.

சருவ பிருஷ்ட இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்

अग्नये॑ गाय॒त्राय॑ त्रि॒वृते॒ राथं॑तराय वास॒न्ताया॒ष्टाक॑पाल॒ इन्द्रा॑य त्रैष्टु॑भाय पञ्च॒द॒शाय॑ बार्ह॑ताय ग्रैष्मा॒यैका॑दशकपालो॒ विश्वे॑भ्यो दे॒वेभ्यो॑ जाग॑तेभ्यस्सप्तद॒शेभ्यो॑ वैरू॒पेभ्यो॑ वार्षि॑केभ्यो॒ द्वाद॑शकपालो मि॒त्रावरु॑णाभ्या॒मानु॑ष्टुभाभ्यामेकवि॒ꣳशाभ्यां॑ वैरा॒जाभ्या॑ꣳ शार॒दाभ्यां॑ पय॒स्या॑ बृह॒स्पत॑ये॒ पाङ्क्ता॑य त्रिण॒वाय॑ शाक्व॒राय॒ हैम॑न्तिकाय च॒रुस्स॑वि॒त्र आ॑तिच्छन्द॒साय॑ त्रयस्त्रि॒ꣳशाय॑ रैव॒ताय॑ शैशि॒राय॒ द्वाद॑शकपा॒लोऽदि॑त्यै॒ विष्णु॑पत्न्यै च॒रुर॒ग्नये॑ वैश्वान॒राय॒ द्वाद॑शकपा॒लोऽनु॑मत्यै च॒रुः काय॒ एक॑कपालः ॥ ३८ ॥ अग्नये॑ गाय॒त्राया॒दि॑त्या अनु॑मत्यै च॒रुस्स॒प्तच॑त्वारिꣳशत् । ॥ १४ ॥

இதில் பத்து அவிகளையுடைய சர்வபிருஷ்டத்திற்கு நெல்லெடுத்தல் கூறப்படுகின்றது.

अग्नये गायत्राय त्रिवृते राथंतराय वासन्तायाष्टाकपाल इन्द्राय त्रैष्टुभाय पञ्चदशाय बार्हताय ग्रैष्मायैकादशकपालो विश्वेभ्यो देवेभ्यो जागतेभ्यस्सप्तदशेभ्यो वैरूपेभ्यो वार्षिकेभ्यो द्वादशकपालो मित्रावरुणाभ्यामानुष्टुभाभ्यामेकविꣳशाभ्यां वैराजाभ्याꣳ शारदाभ्यां पयस्या बृहस्पतये पाङ्क्ताय त्रिणवाय शाक्वराय हैमन्तिकाय चरुस्सवित्र आतिच्छन्दसाय त्रयस्त्रिꣳशाय रैवताय शैशिराय द्वादशकपालोऽदित्यै विष्णुपत्न्यै चरुरग्नये वैश्वानराय द्वादशकपालोऽनुमत्यै चरुः काय एककपालः ।

உரை

காயத்திரி, திரிவிருத் ஸ்தோமம் ரதந்தரம், வசந்தம் என்பவைகளுடன் கூடிய அக்கினியின்பொருட்டு எட்டுக்கபாலபுரோடாசத்திற்கும், திரிஷ்டுப், பதினைந்துஸ்தோமம், பிருகத், கிரீஷ்ம (வெய்யிற்கால)ம் என்பவைகளுடன் கூடிய இந்திரன் பொருட்டும் பதினொருகபால புரோடாசத்தின் பொருட்டும், சகதி, பதினேழு ஸ்தோமம், வைரூபம், வருஷாரிது என்பவைகளுடன் கூடிய விசுவதேவர்களின் பொருட்டு பன்னிரண்டு கபாலப் புரோடாசத்திற்கும் நெல் எடுப்பார்களாக. அநுஷ்டுப், இருபத்தொரு ஸ்தோமம், வைராசம், சரத் ரிது என்பவைகளுடன் கூடியமித்திராவருணர்களின் பொருட்டும் ஆமிக்ஷையைச் செய்வாககளாக. பந்தி, இருபத்தேழு ஸ்தோமம், சாக்வரம், ஹேமந்த ரிது (பனிக்காலம்) என்பவைகளுடன் கூடிய பிருகற்பதிக்குப் பொங்கல் செய்வார்களாக. அதிச்சந்தம், முப்பத்துமூன்று ஸ்தோமம், ரைவதம், சிசிர ரிது (குளிர்காலம்) என்பவைகளுடன் கூடிய சவிதாவின் பொருட்டு பன்னிரண்டு கபால புரோடாசத்திற்கு நெல் எடுப்பார்களாக. விஷ்ணு பத்தினியாகிய அதிதிக்கு பொஙகல் செய்வார்களாக. வைசுவா நராக்கினிக்கு பன்னிரண்டு கபாலப் புரோடாசத்திற்கு நெல் எடுப்பார்களாக, அநுமதிக்கு பொங்கல் செய்வார்களாக. பிரசாபதிக்கு ஒரு கபால புரோடாசஞ் செய்வார்களாக என்பது. இதில், சந்தம், ஸ்தோமம், சாமம், ரிது என்பவைகள் தேவதைக்கட்கு விசேடணங்கள்.

பதினன்காமநுவாகம்
முற்றிற்று.

ஏழாங்காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

பதினைந்தாவது அநுவாகம்

இரண்டு பஞ்சாதிக்குமேல் நாற்பத்தொரு பதங்களைக் கொண்டது.

மேற்கூறிய அவிகளின் உற்பததியைக் கூறும் பிராமணங்கள்.

यो वा अग्नावग्निः प्रह्रियते यश्च सोमो राजा तयोरेष आतिथ्यं यदग्नीषोमीयोऽथैष रुद्रो यश्चीयते यत्संचितेऽग्नावेतानि हवींषि न निर्वपेदेष एव रुद्रोऽशान्त उपोत्थाय प्रजां पशून्यजमानस्याभि मन्येत यत्संचितेऽग्नावेतानि हवींषि निर्वपति भागधेयेनैवैनꣳ शम-

यति नास्य रुद्रोऽशान्तः ॥ ३९ ॥ उपोत्थाय प्रजां पशूनभि म-
न्यते दश हवीꣳषि भवन्ति नव वै पुरुषे प्राणा नाभिर्दशमी प्राणा-
नेव यजमाने दधात्यथो दशाक्षरा विराडन्नं विराड्विराज्येवान्नाद्ये
प्रति तिष्ठत्यृतुभिर्वा एष छन्दोभिः स्तोमैः पृष्ठैश्चेतव्य इत्याहुर्य-
देतानि हवीꣳषि निर्वपत्यृतुभिरेवैनं छन्दोभिः स्तोमैः पृष्ठैश्चिनुते
दिशः सुषुवाणेन ॥ ४० ॥ अभिजित्या इत्याहुर्यदेतानि हवीꣳषि
निर्वपति दिशामभिजित्या एतया वा इन्द्रं देवा अयाजयन्तस्मा-
दिन्द्रसव एतया मनुं मनुष्यास्तस्मान्मनुसवो यथेन्द्रो देवानां य-
था मनुर्मनुष्याणामेवं भवति य एवं विद्वानेतयेष्ट्या यजते दिग्वतीः
पुरोनुवाक्या भवन्ति सर्वासां दिशामभिजित्यै ॥ ४१ ॥ अशान्तः
सुषुवाणेनैकचत्वारिꣳशच्च । ॥ १५ ॥

அவிகளின் உற்பத்தியைக் கூறிவிட்டு இப்போது பிரயோகத்தை விதிக்கின்றது.

பிராமணம் 1

यो वा अग्नावग्निः प्रहियते यश्च सोमो राजा तयोरेष आतिथ्यं यदग्नीषो-
मीयोऽथैष रुद्रो यश्चीयते यत्संचितेऽग्नावेतानि हवीꣳषि न निर्वपेदेष
एव रुद्रोऽशान्त उपोत्थाय प्रजां पशून्यजमानस्याभि मन्येत यत्संचितेऽ-
ग्नावेतानि हवीꣳषि निर्वपति भागधेयेनैवैनꣳ शमयति नास्य रुद्रोऽशा-
न्त उपोत्थाय प्रजां पशूनभि मन्यते ।

என்பது

உரை

ஆதானஞ் செய்துள்ள அக்கினியில் இப்போது கலைந்தெடுக்கத் தீ சேர்க்கப்படுகின்றது. சோமக் கொடி வைக்கப்பட்டிருக்கின்றது. இந்த அக்கினி சோமம் என்னுமிருவருக்கும் உரிய பசுவால் அதிதிபூசை செய்யில் இருவரும் களிப்படைகின்றனர். சயனத்தால் (செங்கலடுக்குக்களால்) உண்டாகிய அக்கினி உருத்திரனும். ஆதலின், அத்தகைய சயனக்கினிக்கு, கூறிய அவிகளைச் செய்யாவிட்டால் மிகுந்த குரோதமுடையதாய் அருகில் வந்து எச

மானனுடைய பிரசைகளையும் பசுக்களையுங் கொன்றுவிடும் ஆதலின் நெல் லெடுத்து அவிகளைச் செய்யில் தனது பாகத்தையடைந்து களித்ததால் கொல்லமாட்டாது என்பது.

பாடமுறையில் வந்த அவிகளின் எண் புகழப்படுகின்றது

பிராமணம் 2

दश हवीꣳषि भवन्ति नव वै पुरुषे प्राणा नाभिर्दशमी प्राणानेव यजमाने दधात्यथो दशाक्षरा विराडन्नं विराड्विराज्येवान्नाद्ये प्रति तिष्ठति ।

என்பது

உரை

பத்து அவிகளாகின்றன. ஒருவனுக்கு பிராணன்கள் ஒன்பது நாபியுடன் சேர்த்தோ, பத்தாம். ஆதலின், எசமானனிடத்தில் பிராணன்களைக் கொடுக்கின்றது. மற்றும், பத்து எழுத்துக்கள் கொண்ட விராட்சந்தம் அன்னமாதலின் விராட் சந்தத்தால் அன்ன முதலானவைகளில் நிலைக்கின்றார்கள் என்பது.

தேவதைகளின் விசேடணங்களைத் துதிக்கின்றது

பிராமணம் 3

ऋतुभिर्वा एष छन्दोभिः स्तोमैः पृष्ठैश्चेतव्य इत्याहुर्यदेतानि हवीꣳषि निर्वपत्यृतुभिरेवैनं छन्दोभिः स्तोमैः पृष्ठैश्चिनुते ।

என்பது

உரை

இருதுக்கள், சந்தங்கள், ஸ்தோமங்கள், பிருஷ்டியங்கள் என்பவைகளுடன் அக்கினி சயனஞ் செய்தல் வேண்டும் என்று கூறுகின்றார்கள். ஆதலின் இந்த அவிகளைச் செய்கின்றவர்கள், வசந்த முதலிய இருதுக்கள், காயத்திரி முதலிய சந்தங்கள், திரிவிருத் முதலிய ஸ்தோமங்கள், ரதந்தர முதலிய பிருஷ்டங்கள் என்னுமிவைகளால் அக்கினி சயனஞ் செய்தவர்களாகின்றார்கள் என்பது.

அவிகளைப் புகழ்கின்றது

பிராமணம் 4

दिशस्सुषुवाणेनाऽभिजित्या इत्याहुर्यदेतानि हवींषि निर्वपति दिशाम-भिजित्यै।

என்பது

உரை

சோமம் பிழிகின்றவனால் திசைகள் செயிக்கப்படல் வேண்டும் என்று கூறுகின்றார்கள், ஆதலின், இத்தகைய பத்து அவிகளைச் செய்கின்றவன் பத்துத் திக்கையும் வெல்கின்றான் என்பது.

பத்து அவிகளின் கூட்டமுடைய சநவபிநஷ்ட இஷ்டியைப் புகழ்கின்றது

பிராமணம் 5

एतया वा इन्द्रं देवा अयाजयन्तस्मादिन्द्रसव एतया मनुं मनुष्यास्तस्मा-न्मनुसवो यथेन्द्रो देवानां यथा मनुर्मनुष्याणामेवं भवति य एवं विद्वा-नेतयेष्ट्या यजते।

என்பது

உரை

தேவர்கள் இவ்விஷ்டியால் ஆராதித்து ஐசுவரியத்தையடைந்தார்கள். ஆதலின் இதற்கு 'இந்திரசவம்' எனப் பெயர் வந்தது. இவ்விஷ்டியால் மநுவும் ஐசுவரியத்தையடைந்தாராதலின் 'மநுசவம்' எனப்பெயரும் வந்தது. இதையுணர்ந்து இவ்விஷ்டியைச்செய்கின்றவன், தேவர்களுள் இந்திரனைப் போலும்மனிதர்களுள் மநுவைப்போலும் இவ்விரண்டாலும் நிறைந்த ஐசுவரியத்தையடைகின்றான் என்பது.

இப்பத்துஅவிகட்கும், "சமித்திசாமாசயா ந:" என்னும் அநுவாகத்திற் கூறிய 'திக்' என்னுஞ் சொல்லைக் கொண்ட புரோநு வர்க்கியங்களைக் கூறுகின்றது.

பிராமணம் 6

दिग्वतीः पुरोनुवाक्या भवन्ति सर्वासां दिशामभिजित्यै।

என்பது.

உரை

'திக், என்னுஞ் சொல்லுடன் கூடியவைகள் இவைகட்குப் புரோநு வாக்கியங்களாகின்றன. இதனுல் எல்லாத் திக்குக்களும் வெற்றி பெறப் படுகின்றன என்பது.

பதினைந்தாம் அநுவாகம்
முற்றிற்று

ஏழாங்காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

பதினாறுவது அநுவாகம்

முப்பத்தெட்டு பதங்களைக் கொண்டது.

முதல் மகிமை மந்திரங்கள்.

यः प्राणतो निमिषतो महित्वैक इद्राजा जगतो बभूव । य ईशे अस्य द्विपदश्चतुष्पदः कस्मै देवाय हविषा विधेम । उपयामगृहीतोऽसि प्रजापतये त्वा जुष्टं गृह्णामि तस्य ते द्यौर्महिमा नक्षत्राणि रूपमादित्यस्ते तेजस्तस्मै त्वा महिम्ने प्रजापतये स्वाहा ॥ ४२ ॥

यः प्राणतो द्यौरादित्योऽष्टात्रिंशत् ॥ १६ ॥

இதில், மகிமை என்னும் வெள்ளிக்கிண்ணத்தில் சோமரசம் பிடித்து ஓமஞ் செய்தல் கூறப்படுகின்றது.

यः प्राणतो निमिषतो महित्वैक इद्राजा जगतो बभूव । य ईशे अस्य द्विपदश्चतुष्पदः कस्मै देवाय हविषा विधेम । उपयामगृहीतोऽसि प्रजापतये त्वा जुष्टं गृह्णामि तस्य ते द्यौर्महिमा नक्षत्राणि रूपमादित्यस्ते तेजस्तस्मै त्वा महिम्ने प्रजापतये स्वाहा ।

என்பது.

உரை

எப் பிரசாபதி ஒருவனே பிராணனையுடையவைகளும், கண்ணிமைக்கின்றவைகளுமான உலகிற்கு தனது மகிமையால் அரசனுயினனே, மற்றும், எவன், இருகாற் பிராணிகள், நாற்காற் பிராணிகள் என்னும் மக்கட்கும் விலங்கிற்கும் இறைவனே, உலகியல் மனிதர்களால் இவ்வண்ணத் தன் என்று உறுதிப்படுத்த முடியாத அத்தகைய பிரசாபதியாகிய தேவனுக்கு இந்த அவி

மகிமை மந்திரம்)

யால் வழிபாடு செய்கின்றோம். இனி அத்தகைய பிரசாபதியே! உனது விண்ணுலக மகிமையே இப்பாத்திரமாம். காணப்படும் நட்சத்திரங்கள் உனது வடிவாம், சூரியன், உனது ஒளியாவன். கிரகபாத்திரமே! அதாவது வெள்ளிக் கிண்ணத்திலிருக்கும் சோமரசமே! உன்னை, அத்தகைய மகிமையுடைய பிரசாபதியின் பொருட்டு ஹோமஞ் செய்கின்றேன் என்பது.

பதினாறுவது அநுவாகம்
முற்றிற்று.

ஏழாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

பதினேழாவது அநுவாகம்

முப்பத்தொன்பது பதங்களைக் கொண்டது.

இரண்டாவது மகிமை மந்திரம்

य आ॑त्म॒दा ब॑ल॒दा यस्य॒ विश्व॑ उ॒पास॑ते प्र॒शिषं॒ यस्य॑ दे॒वाः । यस्य॑ छा॒याऽमृतं॒ यस्य॑ मृ॒त्युः कस्मै॑ दे॒वाय॑ ह॒विषा॑ विधेम । उ॒प॒या॒मगृ॑हीतोऽसि प्र॒जाप॑तये त्वा॒ जुष्टं॑ गृह्णा॒मि तस्य॑ ते पृ॒थि॒वी म॑हि॒मौष॑धयो॒ वन॒स्पत॑यो रू॒पम॒ग्निस्ते॒ तेज॒स्तस्मै॑ त्वा महि॒म्ने प्र॒जाप॑तये॒ स्वाहा॑ ॥ ४२ ॥ य आ॑त्म॒दाः पृ॑थि॒व्य॑ग्निरेका॑न्नच॒त्वारि॒ꣳशत् ॥ १७ ॥

இதில், பொன் கிண்ணத்தில் சோமரசம் பிடித்து ஹோமஞ் செய்தல் கூறப்படுகின்றது.

य आत्मदा बलदा यस्य विश्व उपासते प्रशिषं यस्य देवाः। यस्य छायाऽमृतं यस्य मृत्युः कस्मै देवाय हविषा विधेम। उपयामगृहीतोऽसि प्रजापतये त्वा जुष्टं गृह्णामि तस्य ते पृथिवी महिमौषधयो वनस्पतयो रूपमग्निस्ते तेजस्तस्मै त्वा महिम्ने प्रजापतये स्वाहा।

என்பது,

உரை

எந்தப் பிரசாபதி எல்லாவுயிர்கட்கும் உடம்புகளைக் கொடுக்கின்றாரோ, அவ்வுடம்புகட்கு வலுவையுங் கொடுக்கின்றாரோ, எவனுடைய நலந்தரும் ஆக்ஞையை எல்லோருங்கொண்டாடுகின்றார்களோ, தேவர்களும் எவனுடைய ஆக்ஞைப்படி நடக்கின்றார்களோ, எவனுடைய நிழல் அமுதமோ, உயிர்களின் மிருத்தும் எவனுடைய வசமாயிருக்கின்றதோ, பிறரால் இன்னானென்று உணரமுடியாத அத்தகைய பிரசாபதியை இந்த அவியால் வழிபடுகின்றேன். கிரகமே! நீ மண் விகாரமாகிய பொன் பாத்திரத்திற் கிரகிக்கப் பெற்றிருக்கின்றாய். பிரசாபதியின் பொருட்டு உன்னைக் கிரகிக்கின்றேன். அத்தகைய மகிமையென்னும்கிரகம் பிருதிவிவடிவாம். கொடிசெடிகளும் வனஸ்பதிகளும் உன்னுடைய சித்திவடிவாம். அக்கினி உனது ஒளியாம். கிரகமே! அத்தகைய பிரசாபதியின்பொருட்டு உன்னை ஹோமஞ் செய்கின்றேன் என்பது.

பதினேழாவது அநுவாகம்

முற்றிற்று.

ஏழாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

பதினெட்டாவது அநுவாகம்

பிரமவர்ச்சஸ் ஹோம மந்திரங்கள்

आ ब्रह्मन्ब्राह्मणो ब्रह्मवर्चसी जायतामाऽस्मिन्राष्ट्रे राजन्य इषव्यः शूरो महारथो जायतां दोग्ध्री धेनुर्वोढाऽनड्वानाशुः सप्तिः पुरन्धिर्योषा जिष्णू रथेष्ठास्सभेयो युवाऽस्य यजमानस्य वीरो जायतां निकामेनिकामे नः पर्जन्यो वर्षतु फलिन्यो न ओषधयः पच्यन्तां योगक्षेमो नः कल्पताम् ॥ ४४ ॥ आ ब्रह्मन्नेकचत्वारिंशत् ॥ १८ ॥

இதில் பிரமவர்ச்சசின் ஹோமங்கள் கூறப்படுகின்றன.

आ ब्रह्मन्ब्राह्मणो ब्रह्मवर्चसी जायतामाऽस्मिन्राष्ट्रे राजन्य इषव्यश्शूरो महारथो जायतां दोग्ध्री धेनुर्वोढाऽनड्वानाशुः सप्तिः पुरन्धिर्योषा जिष्णू

रथेष्ठास्समेयो युवाऽस्य यजमानस्य वीरो जायतां निकामेनिकामे नः
पर्जन्यो वर्षतु फलिन्यो न ओषधयः पच्यन्तां योगक्षेमो नः कल्पताम् ।

என்பது

உரை

பிராமண குலத்திற்கு, பிரமவொளி, அதாவது மறையோதல் முதலிய சம்பத்து உண்டாகுக. இவ்விராச்சியத்தில் அரசர்கட்கு பாணம் விடுதல் முதலான செயல்களில் வல்லுநத் தன்மையும், மகாவிரதமும் உண்டாகுக. மற்றும், பால் நிறையக் கறக்கும் பசுக்களும், முழுப்பாரத்தை யிழுக்குங் காளைகளும், விரைவாய் ஓடுங் குதிரைகளும், அழகிய மனைவிகளும், வெற்றி, தேரூர்தல், சபையில் முதலாவதாந் தன்மையும், தருணப்பருவத்தன்மையை யுமுடைய வீர புத்திரன் உண்டாகுக. வேண்டும்போது மழை பெய்க. கொடி செடிகள் நிறையப்பழமுடையவைகளாகுக. யோகமும் க்ஷேமமும் சம்பத்தும் எமக்கு உண்டாகுக என்பது. இப்பத்து மந்திரங்களாலும் பிரமவர்ச்சசம் என்னும் ஹோமங்களைச் செய்தல் வேண்டும் என்பதாம்.

பத்தொன்பதாமநுவாகம்

முற்றிற்று

ஏழாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

பத்தொன்பதாவது அநுவாகம்

ஒரு பஞ்சாதிக்குமேல் நாற்பத்துமூன்று பதங்களைக் கொண்டது.

குதிரையைப் போற்றும் மந்திரங்கள்.

आऽक्रान्वाजी पृथिवीमग्निं युजमकृत वाज्यर्वाऽक्रान्वाजन्त-
रिक्षं वायुं युजमकृत वाज्यर्वा द्यां वाज्याऽक्रंस्त सूर्यं युजमकृत
वाज्यर्वाऽग्निस्ते वाजिन्युङ्ङनु त्वा रंभे स्वस्ति मा सं पारयवायु-
स्ते वाजिन्युङ्ङनु त्वाऽऽरंभे स्वस्ति मासम् ॥ ४५ ॥ पारयाऽऽदि-
त्यस्ते वाजिन्युङ्ङनु त्वाऽऽरंभे स्वस्ति मा सं पारय प्राणधृगसि
प्राणं मे दृंह व्यानधृगसि व्यानं मे दृंहापानधृगस्यपानं मे
दृंह चक्षुरसि चक्षुर्मयि धेहि श्रोत्रमसि श्रोत्रं मयि धेह्यायुरस्या-

युर्मयि धेहि ॥ ४६ ॥ वायुस्ते वाजिन्युङ्क्तु त्वाऽऽरभे स्वस्ति मा सं त्रिचत्वारिꣳशच्च ॥ १९ ॥

இதில், குதிரையைப் போற்றும் மந்திரங்கள் கூறப்படுகின்றன.

आऽक्रान्वाजी पृथिवीमग्निं युजमकृत वाज्यर्वाऽक्रान्वाज्यन्तरिक्षं वायुर्युजमकृत वाज्यर्वा द्यां वाज्याऽक्रꣳस्त सूर्यं युजमकृत वाज्यर्वाऽग्निस्ते वाजिन्युङ्क्तु त्वाऽऽ रभे स्वस्ति मा सं पारय वायुस्ते वाजिन्युङ्क्तु त्वाऽऽ रभे स्वस्ति मा सं पारयाऽऽदित्यस्ते वाजिन्युङ्क्तु त्वाऽऽ रभे स्वस्ति मा सं पारय प्राणधृगसि प्राणं मे दृꣳह व्यानधृगसि व्यानं मे दृꣳहापानधृगस्यपानं मे दृꣳह चक्षुरसि चक्षुर्मयि धेहि श्रोत्रमसि श्रोत्रं मयि धेह्यायुरस्यायुर्मयि धेहि ।

என்பது

உரை

வேகமுடைய இக்குதிரை, இப்பூமியை ஆக்கிரமித்துக் கொண்டது. செயலை நடாத்துவதாக அக்கினியைச் செய்தது. அங்ஙனமே, இக்குதிரை அந்தரிக்ஷத்தை ஆக்கிரமித்துக்கொண்டது. செயலை நடாத்துவதாக வாயுவைச் செய்தது. இக்குதிரை, விண்ணை ஆக்கிரமித்துக் கொண்டது. தொழிலை நடாத்துவதாக சூரியனைச் செய்தது குதிரையே! உனக்கு, அக்கினி உதவியாம். ஆதலின் உன்னைத் தொடங்குகின்றேன். நீ கெடாததாயிருந்து எனது வேள்விக் கருமத்தை முடித்துவைப்பாயாக. ஆதித்தன் உனது உதவியாவன் ஆதலின் உன்னைத் தொடங்குகின்றேன். நீ கேடடையாமல் எனது வேள்விக் கருமத்தை முடித்துவைப்பாயாக. நீ பிராணனை வலுப்படுத்துவதாயிருக்கின்றாய். இத்தகைய குதிரையே! நீ எமது பிராணனை வலுப்படுத்துவாயாக. மற்றும், வியானனை வலுப்படுத்துவதாயிருக்கின்றாய். அத்தகைய நீ எமது வியானனை உறுதிப்படுத்துவாயாக. மற்றும், குதிரையே! நீ, அபானனை உறுதிப்படுத்துவதாயிருக்கின்றாய். அத்தகைய நீ எமது அபானனை வலுப்படுத்துவாயாக. குதிரையே! நீ கண்ணாக இருக்கின்றாய் ஆதலின் எமது கண்களை வலுப்படுத்துவாயாக. ஆயுளாக இருக்கின்றாய் எமக்கு நிறைந்த ஆயுளைக் கொடுப்பாயாக என்பது.

பத்தொன்பதாமநுவாகம்

முற்றிற்று

ஏழாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

இருபதாவது அநுவாகம்

முப்பத்தொரு பதங்களைக் கொண்டது.

மிச்சமுள்ள அன்னஹோம மந்திரங்கள்.

जञ्जि बीजं वर्ष्टा पर्जन्यः पक्ता सस्यꣳ सुपिप्पला ओषधयः स्वधिचरणेयꣳ सूपसदनोऽग्निः स्वध्यक्षमन्तरिक्षꣳ सुपावः पवमानः सूपस्थाना द्यौः शिवमसौ तपन्यथापूर्वमहोरात्रे पञ्चदशिनोऽर्धमासास्त्रिꣳशिनो मासाः क्लृप्ता ऋतवः शान्तः संवत्सरः ॥ ४७ ॥

जञ्ज्येकत्रिꣳशत् ॥ २० ॥

இதில் எஞ்சிய அன்னஹோமங்கள் கூறப்படுகின்றன

जञ्जि वीजं वर्ष्टा पर्जन्यः पक्ता सस्यꣳ सुपिप्पला ओषधयः स्वधिचरणेयꣳ सूपसदनोऽग्निः स्वध्यक्षमन्तरिक्षꣳ सुपावः पवमानः सूपस्थाना द्यौः शिवमसौ तपन्यथापूर्वमहोरात्रे पञ्चदशिनोऽर्धमासास्त्रिꣳशिनो मासाः क्लृप्ता ऋतवः शान्तः संवत्सरः ।

என்பது

உரை

நெல் விதை முதலிய வித்துக்கள் முளைக்குந் தன்மையையுடையனவாகுக. மழை பெய்வதாகுக. பயிர்கள் விளைவனவாகுக. கொடி செடிகள் பலமுடையவைகளாகுக. இப்பூமி, அதிஷ்டானமாயிருந்து ஆசரிக்கத்தக்கதாகுக. அக்கினி, புகைச்சின்ன முதலியவைகளின்றியதாகுக. வான், தெய்வீகமாகிய பீடைகளின்றியதாகுக. சூரியன் மங்களமாய் வெயிலெறித்துக் கொண்டிருக்குக. பகல் இரவுகள் கற்பமுதலில் எப்படியிருந்தனவோ, அப்படியே இப்போதும் செல்வனவாகுக. பதினைந்து நாட்கள் கொண்ட பாதி மாதமு(பட்சமு)ம், முப்பது நாட்கள்கொண்ட முழு மாதமும் இயற்கையில் மாறுதலைவகளாகுக. வருடம், பிரஜைகளின் பீடைகளின்றியதாகுக என்பது.

இருபதாமநுவாகம்

முற்றிற்று.

ஏழாங்காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

இருபத்தோராவது அநுவாகம்

இருபத்துநான்கு பதங்களைக் கொண்டது.

பிராயச்சித்த இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்.

आग्नेयोऽष्टाकपालः सौम्यश्चरुः सावित्रोऽष्टाकपालः पौष्णश्चरू-
रौद्रश्चरुरग्नये वैश्वानराय द्वादशकपालो मृगाखरे यदि नाऽऽगच्छे-
दग्नयेऽꣳहोमुचेऽष्टाकपालः सौर्यं पयो वायव्य आज्यभागः ॥४८॥
आग्नेयश्चतुर्विꣳशतिः ॥ २१ ॥

இதில் பிராயச்சித்த இஷ்டிகள் கூறப்படுகின்றன

आग्नेयोऽष्टाकपालः सौम्यश्चरुः सावित्रोऽष्टाकपालः पौष्णश्चरू रौद्रश्चरुर-
ग्नये वैश्वानराय द्वादशकपालो मृगाखरे यदि नाऽऽगच्छेदग्नयेऽꣳहो-
मुचेऽष्टाकपालः सौर्यं पयो वायव्य आज्यभागः ।

என்பது

உரை

குதிரை நோய் முதலியவைகளால் வாட்டமடைந்திருக்கில், அக்கினிக்கு எட்டுக் கபால புரோடாசமும், சோமனுக்குப் பொங்கலும், சவிதாவுக்கு எட்டுக் கபாலப் புரோடாசமும், பூஷாவிற்குப் பொங்கலும், உருத்திரனுக்குப் பொங்கலும், வைசுவானராக்கினிக்கு, பன்னிரண்டு கபாலப் புரோடாசமுஞ் செய்தல் வேண்டும். கட்டியிருந்த இடத்திற்கு வராவிடில், அம் ஹோமுக் என்னும் அக்கினிக்கு எட்டுக்கபாலப் புரோடாசமும், சூரியனுக்குப் பாலும், வாயுவிற்கு ஆச்சரிப யாகமுஞ் செய்தல் வேண்டும் என்பது.

ஈண்டு இவ்வொன்பது அவிகளும் பிராயச்சித்த அவிகள். ஏனையவைகளைப் பிராமணத்திற் கண்டுகொள்க.

இருபத்தோராமநுவாகம்

முற்றிற்று

ஏழாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

இருபத்திரண்டாவது அநுவாகம்

முப்பது பதங்களைக் கொண்டது.

பத்து அவிகளைக் கொண்ட மிருகார இஷ்டியை விதிக்கும் பிராமணங்கள்

अग्नये॒ऽꣳहोमुचेऽष्टाकपालइन्द्रायाꣳहोमुचएकादशकपालो मित्रा-
वरुणाभ्यामागोमुग्भ्यां पयस्या वायोसावित्र आगोमुग्भ्यां
चरुरश्विभ्यामागोमुग्भ्यां धाना मरुद्भ्य एनोमुग्भ्यस्सप्तकपालो
विश्वेभ्यो देवेभ्य एनोमुग्भ्यो द्वादशकपालोऽनुमत्यै चरुरग्नये
वैश्वानराय द्वादशकपालो द्यावापृथिवीभ्यामꣳहोमुग्भ्यां द्विकपालः
॥ ४९ ॥ अग्नयेꣳहोमुचे त्रिꣳशत् ॥ २२ ॥

இதில் பத்து அவிகளைக்கொண்ட மிருகாரேஷ்டி கூறப்படுகின்றது.

अग्नयेऽꣳहोमुचेऽष्टाकपाल इन्द्रायाꣳहोमुच एकादशकपालो मित्रावरुणाभ्यामागोमुग्भ्यां पयस्या वायोसवित्र आगोमुग्भ्यां चरुरश्विभ्यामागोमुग्भ्यां धाना मरुद्भ्य एनोमुग्भ्यः सप्तकपालो विश्वेभ्यो देवेभ्य एनोमुग्भ्यो द्वादशकपालोऽनुमत्यै चरुरग्नये वैश्वानराय द्वादशकपालो द्यावापृथिवीभ्यामꣳहोमुग्भ्यां द्विकपालः ।

என்பது

உரை

பாவத்தைப் போக்கும் அக்கினிக்கு எட்டுக் கபால புரோடாசமும், பாவத்தைப் போக்கும் இந்திரன் பொருட்டு பதினொரு கபாலப் புரோடாசமும்; பாவத்தைப் போக்கும் மித்திரவருணர்களுக்கு ஆமிக்ஷையும், பாவத்தைப் போக்கும் அசுவினிகளுக்கு அரிசிப்பொரியும், பாவத்தைப் போக்கும் மருத்துக்கட்கு ஏழு கபாலப் புரோடாசமும், பாவத்தைப் போக்கும் விசுவே தேவர்கட்கு பன்னிரண்டு கபாலப் புரோடாசமும், அநுமதிதேவதைக்குப் பொங்கலும், வைசுவானராக்கினிக்கு பன்னிரண்டு கபாலப் புரோடாசமும், பாவத்தைப் போக்கும் வானுக்கும் மண்ணுக்கும் இரண்டு கபாலப் புரோடாசமும் செய்தல் வேண்டும் என்பதாம்.

ஏழாங்காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

இருபத்துமூன்றுவது அநுவாகம்

இரண்டு பஞ்சாதிக்குமேல் நான்கு பதங்களைக் கொண்டது.

சம்நதி மந்திரங்கள்

अग्नये समनमत्पृथिव्यै समनमद्यथाऽग्निः पृथिव्या समनमदेवं मह्यं
भद्राः संनतयः सं नमन्तु वायवे समनमदन्तरिक्षाय समनमद्यथा
वायुरन्तरिक्षेण सूर्याय समनमद्दिवे समनमद्यथा सूर्यो दिवा चन्द्र-
मसे समनमन्नक्षत्रेभ्यः समनमद्यथा चन्द्रमा नक्षत्रैर्वरुणाय समन-
मदद्भ्यः समनमद्यथा ॥ ५० ॥ वरुणोऽद्भिः साम्ने समनमदृचे
समनमद्यथा सामर्चा ब्रह्मणे समनमत्क्षत्राय समनमद्यथा ब्रह्म
क्षत्रेण राज्ञे समनमद्विशे समनमद्यथा राजा विशा रथाय समनम
दश्वेभ्यः समनमद्यथा रथोऽश्वैः प्रजापतये समनमद्भूतेभ्यः समनम-
द्यथा प्रजापतिर्भूतैः समनमदेवं मह्यं भद्राः संनतयः सं नमन्तु
॥ ५१ ॥ अद्भ्यः समनमद्यथा मह्यं चत्वारि च ॥२३॥

இதில் சம்நதி (சேவை) ஹோமங்கள் கூறப்படுகின்றன.

பிராமணம் 4

अग्नये समनमत्पृथिव्यै समनमद्यथाऽग्निः पृथिव्या समनमदेवं मह्यं भद्राः संनतयः सं नमन्तु वायवे समनमदन्तरिक्षाय समनमद्यथा वायुरन्तरिक्षेण सूर्याय समनमद्दिवे समनमद्यथा सूर्यो दिवा चन्द्रमसे समनमन्नक्षत्रेभ्यः समनमद्यथा चन्द्रमा नक्षत्रैर्वरुणाय समनमदद्भ्यः समनमद्यथा वरुणोऽद्भिः साम्ने समनमदृचे समनमद्यथा सामर्चा ब्रह्मणे समनमत्क्षत्राय समनमद्यथा ब्रह्म क्षत्रेण राज्ञे समनमद्विशे समनमद्यथा राजा विशा रथाय समनमदश्वेभ्यः समनमद्यथा रथोऽश्वैः प्रजापतये समनमद्भूतेभ्यः समनमद्यथा प्रजापतिर्भूतैः समनमदेवं मह्यं भद्राः संनतयस्सं नमन्तु ।

எசமான மந்திரம்)

உரை

எல்லா எசமானர்களும் அக்கினிக்கு பணி செய்வார்களாக. பிருதிவிக்குப் பணி செய்வார்களாக. பிருதிவியுடன்கூடிய அக்கினிக்குப் பணி செய்வார்களாக. எசமானனுக்கு உபகாரஞ் செய்ததுபோல் எமக்கும் தேவர்கள் செய்யும் மங்களமான உதவிகள் கிடைக்குக. வாயுவிற்கும், அந்தரிட்சத்திற்கும், வாயு அந்தரிக்ஷத்துடன் கூடிய சூரியனுக்கும், வானுக்கும், வானுடன் கூடிய சூரிய சந்திரர்களுக்கும், நக்ஷத்திரங்கட்கும், சந்திரன் நக்ஷத்திரங்களுடன் கூடிய வருணனுக்கும், நீருக்கும், நீருடன் கூடிய வருணனுக்கும், சாமத்திற்கும், இருக்கிற்கும், சாமம் இருக்குக்களுடன்கூடிய பிராமணனுக்கும், க்ஷத்திரியனுக்கும், பிராமண க்ஷத்திரியர்களுடன்கூடின அரசர்களின் சம்பந்தமுடையவர்கட்கும், வணிகருக்கும், அரசன் வணிகன் இரதத்திற்கும், குதிரைகட்கும், குதிரைகளுடன்கூடிய இரதத்திற்கும் பிரசாபதிக்கும், பூதங்கட்கும், பூதங்களுடன்கூடிய பிரசாபதிக்கும் பணி செய்வார்களாக. இவ்வாறே எமக்கும் நல்ல உதவிப்பணி செய்வார்களாக என்பது.

இப் பத்து மந்திரங்களாலும் சம்நதி என்னும் ஹோமங்களைச் செய்தல் வேண்டும்.

இருபத்துமூன்றுமநுவாகம்

முற்றிற்று

ஏழாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம

இருபத்துநான்காவது அநுவாகம்

நாற்பத்து நான்கு பதங்களைக் கொண்டது.

எசமானனுக்கு ஓதிவைக்கவேண்டிய மந்திரங்கள்.

ये ते पन्थानः सवितः पूर्व्यासोऽरेणवो वितता अन्तरिक्षे। तेभिर्नो अद्य पथिभिः सुगेभीरक्षा च नो अधि च देव ब्रूहि। नमोऽग्नये पृथिविक्षिते लोकस्पृते लोकमस्मै यजमानाय देहि नमो वायवेऽन्तरिक्षक्षिते लोकस्पृते लोकमस्मै यजमानाय देहि नमस्सूर्याय दिवि-

क्षिते लोकस्पृते लोकमस्मै यजमानाय देहि ॥५२॥ ये ते चतु-
श्चत्वारिंशत् ॥ २४ ॥

இதில், எசமானனுக்கு ஓதுவிக்கவேண்டிய மந்திரங்கள் கூறப்படுகின்றன.

மந்திரம் 1

ये ते पन्थानः सवितः पूर्व्यासोऽरेणवो वितता अन्तरिक्षे । तेभिर्नो अद्य
पथिभिः सुगेभी रक्षा च नो अधि च देवव ब्रूहि ।

என்பது

உரை

சவிதாதேவ! பூர்வத்தில் சித்தித்தவைகளும், அந்தரிக்ஷத்தில் பரந்திருக்கின்றவைகளும், இனிது செல்லத்தக்கவைகளுமான உனது மார்க்கங்களால் வந்து இவ்வேள்விக் கருமத்தில் எம்மைப் பாதுகாப்பாயாக. மற்றும், தேவர்களிடத்தில், இவ்வெசமானன் சிறந்தவன் என்று சொல்வாயாக என்பது.

ஆகவனீயத்தைப் போற்றும் மந்திரங்கள்

மந்திரங்கள் 3-4

नमोऽग्नये पृथिविक्षिते लोकस्पृते लोकमस्मै यजमानाय देहि नमो वाय-
वेऽन्तरिक्षक्षिते लोकस्पृते लोकमस्मै यजमानाय देहि नमः सूर्याय दिवि-
क्षिते लोकस्पृते लोकमस्मै यजमानाय देहि ।

என்பது.

உரை

அக்கினியே! உனக்கு வணக்கம். மண்ணுலகில் வாழ்கின்றவனும், உலகைப் பிரியப்படுத்துகின்றவனுமாகிய இவ்வெசமானனுக்கு சிறந்த இடத்தைக் கொடுத்தருள்வாயாக. வாயுவே! உனக்கு வணக்கம், நீ, அந்தரிக்ஷத்தில் வாழ்கின்றவனும், உலகைப் பிரியப்படுத்துகின்றவனுமாகிய இவ்வெசமான

குதிரையின் துதி)

னுக்கு சிறந்த இடத்தையளித்தருள்வாயாக. சூரிய! உனக்கு வணக்கம் வானுலகில் வாழ்கின்றவனும், உலகிற்குப் பிரியத்தைச் செய்கின்றவனுமாகிய இவ்வெசமானனுக்கு சிறந்த இடத்தையளித்தருள்வாயாக என்பது. இம் மூன்று மந்திரங்களால் ஆகவனீயத்தைப் போற்றல் வேண்டும் என்க.

இருபத்துநான்காவது அநுவாகம்

முற்றிற்று.

ஏழாங் காண்டம் ஐந்தாம் பிரபாடகம்

இருபத்தைந்தாவது அநுவாகம்

இரண்டு பஞ்சாதிக்குமேல் பன்னிரண்டு பதங்களைக் கொண்டது.

குதிரையின் துதிப் பிராமணங்கள்.

यो वा अश्वस्य मेध्यस्य शिरो वेद शीर्षण्वान्मेध्यो भवत्युषा
वा अश्वस्य मेध्यस्य शिरः सूर्यश्चक्षुर्वातः प्राणश्चन्द्रमाः श्रोत्रं दिशः
पादा अवान्तरदिशाः पर्शवोऽहोरात्रे निमेषोऽर्धमासाः पर्वाणि
मासाः संधानान्यृतवोऽङ्गानि संवत्सर आत्मा रश्मयः केशा नक्ष-
त्राणि रूपं तारका अस्थानि नभो मांसान्योषधयो लोमानि वन-
स्पतयो वाला अग्निर्मुखं वैश्वानरो व्यात्तम् ॥ ५३ ॥ समुद्र उदर-
मन्तरिक्षं पायुर्द्यावापृथिवी आण्डौ ग्रावा शेपः सोमो रेतो यज्जं-
जभ्यते तद्वि द्योतते यद्विधूनुते तत्स्तनयति यन्मेहति तद्वर्षति
वागेवास्य वागह्वा अश्वस्य जायमानस्य महिमा पुरस्ताज्जायते
रात्रिरेनं महिमा पश्चादनु जायत एतौ वै महिमानावश्वमभितः सं
बभूवतुर्हयो देवानवहदर्वाऽसुरान्वाजी गन्धर्वानश्वो मनुष्यान्त्समु-
द्रो वा अश्वस्य योनिः समुद्रो बन्धुः ॥ ५४ ॥ व्यात्तमवहद्द्वादश
च ॥ २५ ॥

இப்பிரபாடகத்தின் அநுவாக எண்களைக் காட்டுந் தலைப்புச் சொற்கள்:—

गावो गावः सिषासन्तीः प्रथमेमासि संमान्यो यदि सोमैषडहैरु-
त्सृज्यां३देवानामर्क्येणचर्माव पृथिव्यै दत्वते कस्त्वाऽग्नये योवै यः
प्राणतो य आत्मदा आब्रह्मन्नाऽक्रान्वाजी जज्ञिबीजमाग्नेयोऽष्टा
कपालोऽग्नेयऽंहोमुचेऽष्टाकपालोऽग्नये समनमग्ने तेपन्थानोयो वा
अश्वस्य मेध्यस्य शिरः पञ्चविंशतिः ॥ २५ ॥

பஞ்சாதிகளின் எண்களைக் காட்டுந் தலைப்புச் சொற்கள்:—

गावः समान्यः सवनमष्टाभिर्वा एते देवकृतं चाभिजित्या इत्याहु-
र्वरुणोऽद्भिः साम्ने चतुः पञ्चाशत् ॥ ५ ॥

இதில், குதிரை எல்லா உலகவடிவமாகத் துதிக்கப்படுகின்றது. அல்லது, விராட் வடிவாக குதிரையுபாசனை கூறப்படுகின்றது. இது சிறந்த அநுவாகம் என்பதை உபநிடத முதலியவைகளிற் காண்க. இதுபற்றியே இவ்வநுவாகத்திற்கூறிய பொருளை எடுத்துரைக்கும் பிராமணத்தை வாசசனேய சாகைக்காரர்கள் உபநிடதமுதலியவைகளிற் படிக்கின்றனர்.

பிராமணம் 1

यो वा अश्वस्य मेध्यस्य शिरो वेद शीर्षण्वान्मेध्यो भवत्युषा वा अश्वस्य
मेध्यस्य शिरः सूर्यश्चक्षुर्वातः प्राणश्चन्द्रमाः श्रोत्रं दिशः पादा अवान्त-
रदिशाः पर्शवोऽहोरात्रे निमेषोऽर्धमासाः पर्वाणि मासाः संधानान्यृत-
वोऽङ्गानि संवत्सर आत्मा रश्मयः केशा नक्षत्राणि रूपं तारका अस्था-
नि नभो मांसान्योषधयो लोमानि वनस्पतयो वाला अग्निर्मुखं वैश्वा-
नरो व्यात्तं समुद्र उदरमन्तरिक्षं पायुर्द्यावापृथिवी आण्डौ ग्रावा शेपः
सोमो रेतो यज्जंजभ्यते तद्वि द्योतते यद्विधूनुते तत्स्तनयति यन्मेहति

तद्वर्षति वागेवास्य वागहर्वा अश्वस्य जायमानस्य महिमा पुरस्ताज्जायते रात्रिरेनं महिमा पश्चादनु जायत एतौ वै महिमानावश्वमभितः सं बभूवतुर्हयो देवानवहदर्वाऽसुरान्वाजी गन्धर्वानश्वो मनुष्यान्त्समुद्रो वा अश्वस्य योनिः समुद्रो बन्धुः ।

என்பது

உரை

யாகத்திற்குரிய குதிரையின் தலைமுதலிய அவயவங்களை விராட்டின் அவயவமாகிய உஷாக்கால முதலானவைகளாக உணர்ந்து உபாசிக்கின்றவன் அசுவமேத யாகபயனை அநுபவித்தற்குரியவனாகின்றான். யாகத்திற்கும், உபாசனைக்கும் பயன் ஒன்றேயாம். அது வருமாறு :- குதிரையின் தலை உஷாக்காலமாம். கண்கள் சூரியனும், பிராணன் வாயுவாம், செவிகள் சந்திரனும், கால்கள் திசைகளாம், பக்கத்திலுள்ள எலும்புகள், ஆக்னேய முதலிய இடையிலுள்ள திசைகளாம். கண்களை மூடுதல் விழித்தல் இரவுபகல்களாம், கால்களின் கணுக்கள் பட்சங்களாம்.(பாதிமாதங்கள்) கணுக்களின் சந்திகள் சித்திரைமுதலான மாதங்களாம். குளம்புமுதலியவைகள் வசந்தமுதலிய இருதுக்களாம். உள்ளிருக்கும் ஆன்மா வருடமாம். மயிர்கள் உரிய கிரணங்களாம். வெண்மை நிறம் நட்கத்திரங்களாம். மற்றுமுள்ள எலும்புகள் பிருகற்பதி சுக்கிரன் முதலான பெரிய நட்சத்திரங்களாம். அங்கங்குள்ள மாமிசங்கள் ஆகாயமாம். சிறிய மயிர்கள் கொடிசெடிகளாம், வாலிலுள்ள நீளமயிர்கள் வனஸ்பதிகளாம், முகம் அக்கினியாம், வாயைத்திறத்தல் வைசுவாநரன் என்னுந் தேவதையாம், வயிறு கடலாம், பாயு அந்தரிட்சமாம், அண்டம் வானும் கண்கள் ஆண்குறி சோமரசமிடிக்குங் கற்களாம், சுக்கிலம் சோமரசமாம், உடம்பைக் குலுக்கல் மின்னலாம், அதனாலெழுஞ் சத்தம் கர்ச்சித்தலாம், மூத்திரம் பெய்தல் மழையாம், கனைத்தல் வேதவாக்காம். இதைக்கொல்லுமுன் சோமரசம் பிடித்த வெள்ளிக் கிண்ணம் பகலாம், கொன்றபின் சோமரசம் பிடித்த பொற்கிண்ணம் இரவாம். இவ்விரண்டும் குதிரையின் மகிமைகள் குதிரையின் சந்திபேதமான 'ஹரீ,என்பது, தேவர்களையும், 'அர்வா, என்பது அசுரர்களையும், 'வாஜி, என்பது கந்தருவர்களையும் அசுவம் என்பது மனிதர்களையுந் தாங்கிக்கொண்டு செல்வனவாம். இதற்குக் காரணம் பரமான்மாவாம் இதுவே இதனுடைய நிலைமையாம். இவ்வாறு உபாசிக்கின்றவன் பாவம் நீங்கும் வாயிலாக விராட் வடிவை அடைகின்றான். விராட் வடிவை அடைதலும் கிரமமாய் அடையு முத்திக்குக் காரணமாம். என்னை ? அங்கு ஞான முதிர்த்தவுடன் விராட் புருடனுடன் உண்மை முத்தியையடைதலின் என்க என்பது.

மூல முறைப்படி முதலிலிருந்து காண்டம் ஏழு, பிரபாடகம் நாற்பத்து நான்கு, அநுவாகம் அறுநூற்றைம்பத்தொன்றும். பாடியப்படியோ, காண்டம் ஏழும் பிரபாடகம் நாற்பத்துநான்கும் அநுவாகம் அறுநூற்று நாற்பத்தைந்துமாம் என்பதையுணர்க.

இருபத்தைந்தாம் அநுவாகம்

முற்றிற்று

ஏழாங் காண்டம் முடிந்தது.

கிருஷ்ண எசுர்வேத தைத்திரீய சங்கிதையும்

முடிந்தது.

சாயணபாடியத்தைத் தழுவிய தமிழுரையும் முற்றுப்பெற்றது.

சுப்ரமண்யோம் ! சுப்ரமண்யோம் !! சுப்ரமண்யோம் !!!